

உன்னிடம்
மயங்குகிறேன்...
அருணா ஹரி

# உன்னிடம் மயங்குகிறேன்...

அருணா ஹரி

**பிரியா நிலையம்**

புதிய எண். 16, முத்து முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

# உன்னிடம் மயங்குகிறேன்...

## 1

சுற்றியிருப்பவர்களை விழி விரித்து பார்த்தாள் மதுமதி. ‘அப்பா! எவ்வளவு கூட்டம்?’.

இன்ஜினியரிங் காலேஜ் சேர்க்கைக்கான நேர்காணலுக்கு வித விதமான மாணவர்கள் வந்திருந்தனர். மதுமதி கலந்தாய்விற்கு தன் பாட்டியுடன் வந்திருந்தாள். வாகனங்கள் எங்கும் நிறைந்து இருந்தன; அதில் எத்தனை விதமான கார்கள்!

எதிர்பார்ப்பும், ஆர்வமுமாய் சிலரும், கேட்ட துறையும், இடமும் கிடைக்குமா? என கவலையில் பலரும், எங்களால் எதையும் வாங்க முடியும் என்ற நிமிர்வில் ஓர் சிலரும் ஆங்காங்கே பல்கலைக்கழக வளாகத்தில் குழுமியிருந் தனர். கலந்தாய்விற்கு எங்கே செல்ல வேண்டுமென நோட்டீஸ் போர்டில் ஒட்டப்பட்டிருந்தது. சமவாய்ப்பு எண்

பெற்றிருந்தாள். அவளுக்கு தகுதி பட்டியலில் இருபத்து நான்காவது இடம் கிடைத்திருந்தது.

''அம்மம்மா! 'சி' பிளாக்கிற்கு நாம் போக வேண்டும்'' என தன் பாட்டியை அழைத்துக் கொண்டு மதுமதி நடந்தாள். அவளை கடந்து ஓர் 'டாடா இண்டிகா' சென்றது. மரத்தடியில் ஓர் ஓரமாய் நிறுத்தினான் ரிஷி. வருண் இறங்கி கார் கதவை திறந்து விட பாவ்னாவும், மாலினியும் இறங்கினர். ''மாலினி சர்ட்டிபிகேட் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்.''

''பயணக்களைப்பு போக எங்காவது ஓய்வு எடுத்துக்கொண்டு போகலாம் என்றால்... இந்த அண்ணன் ரொம்ப மோசம்... வா, வா என இழுத்து வந்து விட்டான்;'' பாவ்னாவின் காதில் முணுமுணுத்தாள் மாலினி.

''சே, சே! அப்படி ஒன்றுமில்லை. பத்துமணிக்கு இங்கு இருக்க வேண்டும். அதுவும் வருண் நேற்று காலையில் தானே டெல்லியில் இருந்து வந்தார்.''

''அண்ணி, அண்ணாவை விட்டுக் கொடுக்க மாட்டியே?''

''என்ன மாலினி, வழக்கம் போல் உன் புகாரை ஆரம்பித்து விட்டாயா? திருப்பூரிலிருந்து நேற்றிரவு பாவ்னா வீட்டிற்கு வந்து தங்கியிருந்து விட்டு தானே இங்கே வந்திருக்கிறோம்.''

''ஆகா! உன் காதில் நான் சொன்னது விழுந்து விட்டதா?''

''வருண், உன் கவனமெல்லாம் பாவ்னா மேல் இருப்பதை இப்படிக் காட்டிக் கொள்ள வேண்டாம்.''



''என்ன தான் இருந்தாலும் புது மனைவியை கண்டுக்காமல் இருக்க முடியுமா? அண்ணன் நீ வேறு பக்கத்தில் இருக்கிறாய். அப்புறம் தங்கையை மாப்பிள்ளை தங்கமாய் தாங்குகிறார்னு பெருமைப்பட மாட்டாயா?''

''ஒரே மாதத்தில் அந்த பெருமைப்பட்டுவிட முடியாது.''

''எங்கள் அறுபதாம் கல்யாணத்தில் தான் பெருமை படுவாயாக்கும்?''

''ஆயிரம் பிறை கண்ட விழாவை விட்டுவிட்டாயே?''

''அம்பேல்! ஆளைவிடப்பா. ஆயுசுக்கும் உன் தங்கையை அருமையாய் பார்த்துக்கொள்கிறேன்.''

''இது சரி!'' என்று சிரித்தவன் நோட்டீஸ் போர்டை நோக்கிச் சென்றான்.

மாலினி அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். திருப்பூரில் பின்னலாடை தொழில் செய்து கொண்டிருந்த அவர்களது குடும்பத்திற்கு புது வரவு பாவ்னா. சென்னையில் மிகப் பெரிய தொழிலதிபர் வீட்டுப் பெண். ரிஷி அந்த வீட்டின் ஏகபோக சொத்திற்கு ஒரே வாரிசு. திருப்பூரில் வருண் வீடே அரண்மனை போலிருக்கும். அந்த வீட்டிலிருந்து வந்திருந்த மாலினியே ரிஷி வீட்டைப் பார்த்து அயர்ந்து போய்விட்டாள்.

வீடு மட்டுமா பிடித்தது? அந்த வீட்டு அருமைப் பிள்ளையை முதல் பார்வையிலேயே பிடித்துப் போனது. அவன் கோபிகையர் கூட்டம் சுற்றி வரக்கூடிய கண்ணன் ஆக அல்லவா இருந்தான்! எந்தப் பெண்ணும் அவனைப் பார்த்த உடன் ஆசைப்படுவாள்; பழகினாலோ சொல்லவே [illegible] இருக்கையில் மாலினி மட்டும்

'ஆமாம், நீங்க தான் யுனிவர்ஸிட்டி வைஸ்சான்ஸிலர்! யாராவது கேட்டார்களாக்கும் எங்கே இடம் கிடைக்கும் என்று? இவளுக்கு இங்கே இடம் கிடைக்கக் கூடாது! சே! இவள் எனக்கு போட்டியா?' என மாலினி எண்ணிக் கொண்டாள்.

"இல்லேம்மா; நாங்கள்...." என ஆரம்பிக்கும் பொழுது "பாவ்னா" என்ற குரல் கேட்டு திரும்பினாள்; அழைத்தது வருண். அவனும், ரிஷியும் வர பாவ்னா எழுந்து சென்றாள்.

"அண்ணா! சட்டென திரும்பாமல் மெதுவாய் திரும்பிப் பாரேன்" என மெல்லிய குரலில் கூறினாள்.

"ஏன்? என்ன விஷயம்?"

"சூ! சத்தமாய் பேசாதே. அவர்கள் காதில் விழுந்து விடப் போகிறது."

"நீ பேசியதும் அப்படித்தான் இருந்தது" என வருண் இடையில் நுழைய. அதற்குள் 'மதுமதி' என அழைப்பு வர அவள் எழுந்தாள். அவள் மடியிலிருந்து பேனா கீழே உருண்டது.

"சீக்கிரம் பார் அண்ணா! அவள் போய்விடப் போகிறாள். எத்தனை அழகாய் இருக்கிறாள் அந்தப் பெண்!"

"அண்ணன் சைட் அடிக்க தங்கச்சியே தூண்டுகிறாள்! ம்!"

"ஏய் சும்மாயிருப்பா! அவள் ரசித்ததை என்னிடம் பகிர்ந்து கொள்கிறாள்."

"ஆகா! இவ்வளவு நேரம் அவள் பக்கத்தில் தான் இருந்தேன். என்னிடம் இம்மி அளவு கூட மூச்சுவிட வில்லை."



"கணவனிடம் அடுத்தப் பெண்ணின் அழகை முட்டாள் பெண் கூட பேச மாட்டாள்."

"எப்படியோ! என் சரிபாதி புத்திசாலி என நிருபித்து விட்டாள்."

பேனாவை மதுமதி தேட...

"ஐயோ! சீக்கிரம் பாரேன். அவள் உள்ளே போய் விடப் போகிறாள்."

சட்டென மாலினி இருக்கையிலிருந்து அவளை மறைத்தாற் போல் எழ மதுவின் ஹீரோ பேனா மாலினியின் காலில் மிதிப்பிட்டு நொறுங்கியது மதுமதியின் மனசைப் போல.

"வாம்மா! உள்ளே போகலாம்."

"அம்மம்மா! என்... பேனா...."

அவள் கண்கள் இலேசாய் கலங்கி விட்டன. "போனால் போகிறது விடு. இன்னொரு ராசிப்பேனா நான் வாங்கித் தருகிறேன்."

அவர்கள் உள்ளே நுழைந்தனர்.

"போ! அண்ணா, அவர்கள் உள்ளே சென்றுவிட்டனர்."

"வருத்தப்படாதே! அவர்கள் வெளியில் வரும் பொழுது 'கப்' பென்று பிடித்து உன் அண்ணன் முன் நிறுத்தி விடலாம்."

"இது என்ன? உடைந்த பேனா இங்கே கிடைக்கிறது?" என வருண் கூற, பாவ்னா "யார் காலிலாவது குத்திவிடப் போகிறது" என்றவாறே குனிந்து அவற்றை பொறுக்கினாள்.

''யார் இங்கே இப்படி போட்டு விட்டு போனது? இது... அந்தப் பெண் மதுமதியின் பேனா அல்லவா?'' வருண் கேட்க,

''ஆமாம்; ராசியான பேனா என்று கூட சொன்னாள். எப்படி இது உடைந்தது?'' என பாவ்னா மாலினியைப் பார்க்க வினாடியில் அவள் முகத்தில் தோன்றி மறைந்த உணர்ச்சியை உணர்ந்தாள்.

''எப்படி உடைந்தது?'' என வருணும் கேட்க,

''எப்படியோ உடைந்தது? அவள் கால்பட்டோ? யார் கால் பட்டோ? உடைந்தது; இப்பொழுது அது தானா முக்கியம்? அண்ணா, என் அட்மிஷனைப் பற்றி யோசி.''

''எந்த காலேஜில் சேர கேட்கப் போகிறீர்கள்?''

''கோயம்புத்தூர் கல்லூரியைத் தான் முடிவு செய்திருக் கிறோம்.'' மாலினியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்து. ''ம்ஹும்! எனக்கு சென்னையில் படிக்கத்தான் ஆசை.''

''பார்க்கலாம்! உனக்கு அதிர்ஷ்டமிருந்தால் கிடைக் கட்டும்!''

''மனமிருந்தால் வழியுண்டு. அதிர்ஷ்டம் எல்லாம் சும்மா.''

''இப்பொழுது விவாதம் எதற்கு? அடுத்து நாம் தான் செல்ல வேண்டும்.''

''எனக்கு கூட கோயம்புத்தூரில் தொழில் விஷயமாய் வேலை இருக்கிறது. தொழில்துறை கண்காட்சி நடக்க



அங்கே ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல இடம் பார்க்க வேண்டும்.''

''பீளமேடு கொடிசியா வளாகம் கண்காட்சிக்கும், தொழில் சம்பந்தமான மாநாட்டிற்கும் ஏற்ற இடம் ரிஷி! வந்து பார்த்து முடிவு செய்.''

''வருகிறேன் வருண். அப்படி அந்த இடம் முடிவானால் அங்கேயே தங்கி வேலை பார்க்க நேரிடும்.''

''என்ன அண்ணா திடீர் முடிவு? தொழிற்துறை சம்பந்தமான நிகழ்ச்சிக்கு கோவையை தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள்? எப்பொழுதும் வட மாநிலங்களில் தானே நடக்கும். எப்படியும் எனக்கு ரொம்ப சந்தோஷம்; நீ என் அருகிலேயே இருப்பாய் அல்லவா?''

''யோசனை தானம்மா! இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.''

''உனக்கு ஏதாவது உதவி வேண்டுமானால் தயங்காமல் கேள் ரிஷி.''

''கண்டிப்பாக வருண்!''

அடுத்து மாலினிக்கு அழைப்பு வர, மாணவருடன் ஒருவர் மட்டுமே உடன் செல்லலாம். எனவே வருண் மட்டும் அவளுடன் உள்ளே சென்றான்.

ரிஷியும், பாவ்னாவும் பேசிக்கொண்டே வெளியேற, மதுமதியும் அவள் பாட்டியும் கலந்தாய்வு முடிந்து அறையிலிருந்து வந்தனர். பாட்டி அவளை நெட்டி முறித்து ''என் கண்ணே! ஊர் கண் படாமல் நல்லா படிச்சு, வாழ்க்கையில் ஜெயிக்கணும்; உலகம் போற்ற உயரணும்'' என்று திருஷ்டி கழிக்க,

''யார் இங்கே இப்படி போட்டு விட்டு போனது? இது... அந்தப் பெண் மதுமதியின் பேனா அல்லவா?'' வருண் கேட்க,

''ஆமாம்; ராசியான பேனா என்று கூட சொன்னாள். எப்படி இது உடைந்தது?'' என பாவ்னா மாலினியைப் பார்க்க் வினாடியில் அவள் முகத்தில் தோன்றி மறைந்த உணர்ச்சியை உணர்ந்தாள்.

''எப்படி உடைந்தது?'' என வருணும் கேட்க,

''எப்படியோ உடைந்தது? அவள் கால்பட்டோ? யார் கால் பட்டோ? உடைந்தது; இப்பொழுது அது தானா முக்கியம்? அண்ணா, என் அட்மிஷனைப் பற்றி யோசி.''

''எந்த காலேஜில் சேர கேட்கப் போகிறீர்கள்?''

''கோயம்புத்தூர் கல்லூரியைத் தான் முடிவு செய்திருக் கிறோம்.'' மாலினியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்து. ''ம்ஹூம்! எனக்கு சென்னையில் படிக்கத்தான் ஆசை.''

''பார்க்கலாம்! உனக்கு அதிர்ஷ்டமிருந்தால் கிடைக் கட்டும்!''

''மனமிருந்தால் வழியுண்டு. அதிர்ஷ்டம் எல்லாம் சும்மா.''

''இப்பொழுது விவாதம் எதற்கு? அடுத்து நாம் தான் செல்ல வேண்டும்.''

''எனக்கு கூட கோயம்புத்தூரில் தொழில் விஷயமாய் வேலை இருக்கிறது. தொழில்துறை கண்காட்சி நடக்க



அங்கே ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல இடம் பார்க்க வேண்டும்.''

''பீளமேடு கொடிசியா வளாகம் கண்காட்சிக்கும், தொழில் சம்பந்தமான மாநாட்டிற்கும் ஏற்ற இடம் ரிஷி! வந்து பார்த்து முடிவு செய்.''

''வருகிறேன் வருண். அப்படி அந்த இடம் முடிவானால் அங்கேயே தங்கி வேலை பார்க்க நேரிடும்.''

''என்ன அண்ணா திடீர் முடிவு? தொழிற்துறை சம்பந்தமான நிகழ்ச்சிக்கு கோவையை தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள்? எப்பொழுதும் வட மாநிலங்களில் தானே நடக்கும். எப்படியும் எனக்கு ரொம்ப சந்தோஷம்; நீ என் அருகிலேயே இருப்பாய் அல்லவா?''

''யோசனை தானம்மா! இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.''

''உனக்கு ஏதாவது உதவி வேண்டுமானால் தயங்காமல் கேள் ரிஷி.''

''கண்டிப்பாக வருண்!''

அடுத்து மாலினிக்கு அழைப்பு வர, மாணவருடன் ஒருவர் மட்டுமே உடன் செல்லலாம். எனவே வருண் மட்டும் அவளுடன் உள்ளே சென்றான்.

ரிஷியும், பாவ்னாவும் பேசிக்கொண்டே வெளியேற, மதுமதியும் அவள் பாட்டியும் கலந்தாய்வு முடிந்து அறையிலிருந்து வந்தனர். பாட்டி அவளை நெட்டி முறித்து ''என் கண்ணே! ஊர் கண் படாமல் நல்லா படிச்சு, வாழ்க்கையில் ஜெயிக்கணும்; உலகம் போற்ற உயரணும்'' என்று திருஷ்டி கழிக்க,

பாட்டியை தோளோடு கட்டி அணைத்துக் கொண்டாள்.

''உன்னை கல்யாணம் பண்ணிக் கொள்ள எந்த ராஜகுமாரன் குதிரையில் வரப் போகிறானோ?''

''இப்ப எல்லாம் இராஜகுமாரன் காரில் தான் வருகிறான்.''

குரல் கேட்டுத் திரும்பினர். பாவ்னா புன்னகையுடன் நின்றிருந்தாள்.

''இராஜகுமாரனோ! ரிஷி குமாரனோ! என் பேத்தியை புத்தம் புது ரோஜாவாய் பொத்தி பாதுகாக்கிறவன் தான் வேண்டும்.''

''போங்க அம்மம்மா! உங்களுக்கு வேறு வேலையே இல்லை. நான் நிறைய படிக்கணும். டோபல், ஜிமேட் டெஸ்ட் எல்லாம் எழுதி அமெரிக்கா போய் படிக்கணும். என் அம்மம்மாவை கண்ணுக்குள் வச்சு பார்த்துக்கணும். என் முதல் சம்பளத்தில் உங்களுக்கு அருமையான பட்டுப் புடவை வாங்கிக் கொடுக்கணும். எப்பொழுதும் இப்படியே கல்யாணம், மாப்பிள்ளை என்று பேசிக் கொண்டிருக் கிறீர்கள்.''

''உன்னை நல்லவர்கள் வசத்தில் ஒப்படைக்கும் வரை எனக்கு ஆயுளைக் கொடு என்று தான் கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறேன். நீ ஆசைப்பட்டால் கல்யாணத்திற்கு பிறகும் படி.''

அவர்கள் பேச்சை கேட்டுக் கொண்டிருந்த பாவ்னா, ''நீங்க இரட்டை சதம் அடிக்கப் போகிறீர்கள்; கவலையே படாதீர்கள்!''

''ரொம்ப பேராசை படக்கூடாது; முக்கால் சதத்தை எப்பவோ கடந்தாகிவிட்டது. மதுவின்



என்னை இன்னும் ஊசலாடிக் கொண்டிருக்க வைக்கிறது. மதும்மா! நான் இப்படியே கொஞ்ச நேரம் உட்காரட்டுமா? கேண்டீனில் ஒரு கப் காபி வாங்கி வருகிறாயா?''

''ஒரு நிமிடம் இவர்களுடன் பேசிக் கொண்டிருங்கள். நான் போய் வந்து விடுகிறேன்.''

சட்டென விரைந்தாள். ஓடிய அவசரத்தில் எதிரே வந்த பெண் மீது முட்டிக் கொண்டாள்.

கையிலிருந்த பைல் கீழே விழுந்தது. சிதறிய தாள்கள் காற்றில் பறக்க பாய்ந்து எடுத்தாள். அதிலிருந்து போட்டோ ஒன்று காற்றிலடித்துச் சென்றதை அவள் கவனிக்கவே இல்லை; காபி வாங்கிக் கொண்டு சென்று விட... தெரிந்தவர் ஒருவருடன் பேசிக்கொண்டே அங்கே காபி குடிக்க வந்த ரிஷியின் கால்களில் அந்தப் போட்டோ பட்டது. குனிந்து எடுத்தான்.

''வாவ்!''

எடுத்தவன் விழிகள் விரிந்தன.

## 2

வீட்டிற்கு திரும்பியதும் பாவ்னாவிடம் வருண் ஆச்சரியப்பட்டான். ''சென்னையில் தான் படிப்பேன் என அடம்பிடித்தவள், உள்ளே சென்றதும் மறுப்பேதும் இல்லாமல் கோயம்புத்தூர் கல்லூரியில் மட்டும் தான் இடம் இருக்கிறது என்றதும் ஒப்புக் கொண்டாள்.''

பாவ்னா ஒன்றும் சொல்லவில்லை. உடனே திருப்பூர் திரும்ப வேண்டியிருந்தது மனத்திற்கு சங்கடமாயிருந்தது. கல்யாணமாகி ஒரு மாதத்தில் முதல் அழைப்பிற்கு பிறகு இப்பொழுது தான் வருகிறாள். அம்மா மேல் சாய்ந்து கொண்டு வளவளக்க வேண்டுமென்று மனது ஆசைப் பட்டது. ஆனால் வேலையிருப்பதால் இரவே கிளம்ப வேண்டும் என்று வருண் சொல்லியிருந்தான். இரவு வண்டியோட்டுவதற்காக இப்பொழுது தூங்கி ஓய்வெடுக்க சென்றுவிட ரிஷி அலுவலகம் போய்விட்டான். மாலினி அவள் தோழி ரேஷ்மாவை பார்க்க கிளம்பிவிட்டாள். வீட்டில் ரிஷி இருந்தாலாவது இருக்கலாம்; இந்த அண்ணன் அண்ணி பின்னாலேயே சுற்றி கொண்டிருப் பான் ஜால்ரா இல்லா கையோடு; ரிஷி அம்மாவின் போரடிக்கும் அறிவுரைகள் யாருக்கு வேண்டும்? என்று தான் தோழியைப் பார்க்க கிளம்பிவிட்டாள்.

பாவ்னா அம்மாவைப் போய் உரசிக்கொண்டு அமர்ந்தாள்.

''அம்மா! இன்று ஓர் இனிமையான விஷயம் வைத்திருக்கிறேன்.''

''என்னம்மா?''

''ஓர் அழகான பெண்ணை பார்த்தேன். எனக்கு ரொம்ப பிடிச்சு போயிடுச்சும்மா!''

''நீயும் அழகு தானம்மா!''

''யார் பார்த்தாலும் அசந்து போய்விடும் அழகு அம்மா! ஆனால் அந்தப் பெண்ணிற்கு துளி கூட கர்வம் இல்லை. இயல்பாய், எளிமையாய் இருக்கிறாள். அத்தனை அழகிற்கு



துளி ஆர்ப்பாட்டம் வேண்டுமே? ம்ஹூம். அந்தப் பெண்ணிற்கு அம்மா, அப்பா இல்லை. பாட்டியுடன் கலந்தாய்விற்கு வந்திருந்தாள், அவளது ஒரு வயதில் விபத்தில் தந்தை இறந்து போனாராம். அவளது நான்காம் வயதில் தாயும் விபத்தில் இறந்து போனாராம். பெற்றோர் இல்லாமலே அவள் எவ்வளவு அருமையாய் வளர்ந்து இருக்கிறாள் தெரியுமா? நீங்க விரும்பும் அடக்கம், அறிவு, எளிமை எல்லாம் இருக்கிறது. மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்றிருக்கிறாள். மயக்கும் அந்தப் பெண்ணின் பெயர் என்ன தெரியுமா? மது...மதி ... மதுமதி, மதுமதி.''

''ஏதோ! உனக்கு வரப்போகும் அண்ணியைப் பற்றி கனவு கண்டதைப் போல் வருணிக்கிறாயே?''

''ஆகா! மதுமதியே அண்ணியாய் வந்தால் மிக நன்றாய் தானிருக்கும்.''

''இந்த அளவுக்கு உன் மனதை கொள்ளைக் கொண்ட பெண்ணை எனக்கே பார்க்க வேண்டும் போலிருக்கிறது!'' அவர்கள் அவளைப் பற்றி பேசிக்கொண்டிருந்த நேரத்தில் மதுமதி பாட்டியுடன் திருப்பூரை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தாள்.

''அம்மம்மா! நாம் இனிமேல் இங்கே தான் இருக்க வேண்டுமா?''

''ஏண்டா?''

''எனக்கு என்னவோ நம் ஊரைவிட்டு இங்கு வரவே பிடிக்கவில்லை. கிராமமாய் இருந்தாலும் அதன் அழகும், அமைதியும் அலாதியானது.''

''பாட்டிக்கு வயசாச்சு! இன்னும் எத்தனை நாளைக்கு பூவுலகவாசியாய் கடவுள் முடி போட்டிருக்கார்னு தெரியலை! நீ நல்லா படிச்சு உன் காலில் சுயமாய் நிற்கணும். கல்வி தான் உன்னை காப்பாற்றும். நீ யாருக்கும் சுமையாய் இருக்கக் கூடாது. வரவர உடம்புக்கே முடியலை. உன்னை தனியாய் விட்டுப் போக மனசில்லை. உன் பாதுகாப்புக்குத் தான் என் தங்கை மகன் வீட்டிற்கு செல்கிறோம். எந்த உறவும் வேண்டாம் என்று தான் வாழ்ந்தோம். நானும் இல்லாவிட்டால் உன் கதி...''

மதுமதி தன் பாட்டியின் வாயைப் பொத்தினாள்.

''அம்மம்மா! எதுவும் இசைகேடாக சொல்லாதீர்கள்.''

''அதனால் என்ன கண்ணம்மா? நான் சொர்க்க லோகத்துக்கே போனாலும் நீ ராக்கெட் ஏறி வந்து விட மாட்டாயா?''

''பின்னே? வந்து உங்களை கையுடன் இழுத்து வந்து விடுவேனாக்கும்.''

''உன்னால் முடியும் கண்ணம்மா! நீ சாதிக்கப் பிறந்தவள். உன்னை நான் பொத்தி பொத்தி வளர்த்து விட்டேன். உலகத்தில் நீ புரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. என்னதான் செல்வத்துடன் வந்தாலும் இனி நாம் இருக்கப் போவது அடுத்தவர் வீடு. நம் வீட்டு சௌகரியம் கிடைக்காது. கொஞ்சம் அனுசரித்துப் போக வேண்டும். எதிர்பார்ப்புகள் இல்லாமல் வாழ பழகிக் கொள்ள வேண்டும். எத்தனை இடையூறுகள் வந்தாலும் உன் முன்னேற்றம், உன் வாழ்க்கை பயணம் தடைப் படக்கூடாது.''



''கவலையே படாதீங்க அம்மம்மா! நல்ல கப்பல் வாங்கி அதிலேயே பயணம் செய்கிறேன்.''

''ஏய் வாலு! உன்னை எவன் வந்து மேய்க்க போகிறானோ?''

''மேய்ப்பதற்கு நான் என்ன ஆடா? மாடா?''

''அதுசரி! மதி உள்ளவன் தான் என் மதுக்குட்டியின் மணாளன் ஆக முடியும்'' என்றவர் மனசுக்குள், 'என்றைக்கு அவன் வரப்போகிறானோ? நான் இருந்து பார்ப்பேனோ? என்னவோ,' என நினைத்துக் கொண்டார்.

ரிஷி சாப்பிடும்பொழுது பாவ்னா மெதுவாய் சீண்டினாள்.

''அம்மா! அண்ணனுக்கு மிக மிக பொருத்தமாய் ஒரு பெண் பார்த்திருக்கிறேன். என் அண்ணனுடைய கம்பீரத்துக்கும், வசீகரத்துக்கும் மிக பொருத்தமான பெண் அம்மா; நீங்க பார்த்து இருக்கணுமே! கையுடன் ஆரத்தி காண்பித்து அழைத்து வந்திருப்பீர்கள்!''

''இப்படித்தான் அம்மா, என்னையும் ஏமாற்றினாள். அங்கே பார், இங்கே பார் என்று காண்பித்து கடைசியில் மரத்தில் இருந்த குரங்கைக் காட்டி அழைத்து வந்தாள். இனி அவள் பேச்சை வருண் மட்டும் நம்பி கொள்ளட்டும்.''

''ஆகா! அருமையான ஜோடி!''

''சீக்கிரம் கிளம்ப வேண்டும் என்பதே உங்கள் நினைவில் இல்லையா?'' என மாலினி வெடிக்க,

''வரவர உனக்கு பொறுமையே இல்லாமல் போகிறது மாலினி'' என வருண் மெல்ல கடிந்து கொண்டான். 'எனக்கு பிடிக்காத விஷயத்தைப் பற்றி பேசும் பொழுது பொறுமை

"பாட்டிக்கு வயசாச்சு! இன்னும் எத்தனை நாளைக்கு பூவுலகவாசியாய் கடவுள் முடி போட்டிருக்கார்னு தெரியலை! நீ நல்லா படிச்சு உன் காலில் சுயமாய் நிற்கணும். கல்வி தான் உன்னை காப்பாற்றும். நீ யாருக்கும் சுமையாய் இருக்கக் கூடாது. வரவர உடம்புக்கே முடியலை. உன்னை தனியாய் விட்டுப் போக மனசில்லை. உன் பாதுகாப்புக்குத் தான் என் தங்கை மகன் வீட்டிற்கு செல்கிறோம். எந்த உறவும் வேண்டாம் என்று தான் வாழ்ந்தோம். நானும் இல்லாவிட்டால் உன் கதி..."

மதுமதி தன் பாட்டியின் வாயைப் பொத்தினாள்.

"அம்மம்மா! எதுவும் இசைகேடாக சொல்லாதீர்கள்."

"அதனால் என்ன கண்ணம்மா? நான் சொர்க்க லோகத்துக்கே போனாலும் நீ ராக்கெட் ஏறி வந்து விட மாட்டாயா?"

"பின்னே? வந்து உங்களை கையுடன் இழுத்து வந்து விடுவேனாக்கும்."

"உன்னால் முடியும் கண்ணம்மா! நீ சாதிக்கப் பிறந்தவள். உன்னை நான் பொத்தி பொத்தி வளர்த்து விட்டேன். உலகத்தில் நீ புரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. என்னதான் செல்வத்துடன் வந்தாலும் இனி நாம் இருக்கப் போவது அடுத்தவர் வீடு. நம் வீட்டு சௌகரியம் கிடைக்காது. கொஞ்சம் அனுசரித்துப் போக வேண்டும். எதிர்பார்ப்புகள் இல்லாமல் வாழ பழகிக் கொள்ள வேண்டும். எத்தனை இடையூறுகள் வந்தாலும் உன் முன்னேற்றம், உன் வாழ்க்கை பயணம் தடைப் படக்கூடாது."



"கவலையே படாதீங்க அம்மம்மா! நல்ல கப்பல் வாங்கி அதிலேயே பயணம் செய்கிறேன்."

"ஏய் வாலு! உன்னை எவன் வந்து மேய்க்க போகிறானோ?"

"மேய்ப்பதற்கு நான் என்ன ஆடா? மாடா?"

"அதுசரி! மதி உள்ளவன் தான் என் மதுக்குட்டியின் மணாளன் ஆக முடியும்" என்றவர் மனசுக்குள், 'என்றைக்கு அவன் வரப்போகிறானோ? நான் இருந்து பார்ப்பேனோ? என்னவோ,' என நினைத்துக் கொண்டார்.

ரிஷி சாப்பிடும்பொழுது பாவ்னா மெதுவாய் சீண்டினாள்.

"அம்மா! அண்ணனுக்கு மிக மிக பொருத்தமாய் ஒரு பெண் பார்த்திருக்கிறேன். என் அண்ணனுடைய கம்பீரத்துக்கும், வசீகரத்துக்கும் மிக பொருத்தமான பெண் அம்மா; நீங்க பார்த்து இருக்கணுமே! கையுடன் ஆரத்தி காண்பித்து அழைத்து வந்திருப்பீர்கள்!"

"இப்படித்தான் அம்மா, என்னையும் ஏமாற்றினாள். அங்கே பார், இங்கே பார் என்று காண்பித்து கடைசியில் மரத்தில் இருந்த குரங்கைக் காட்டி அழைத்து வந்தாள். இனி அவள் பேச்சை வருண் மட்டும் நம்பி கொள்ளட்டும்."

"ஆகா! அருமையான ஜோடி!"

"சீக்கிரம் கிளம்ப வேண்டும் என்பதே உங்கள் நினைவில் இல்லையா?" என மாலினி வெடிக்க,

"வரவர உனக்கு பொறுமையே இல்லாமல் போகிறது மாலினி" என வருண் மெல்ல கடிந்து கொண்டான். 'எனக்கு பிடிக்காத விஷயத்தைப் பற்றி பேசும் பொழுது பொறுமை

பொத்துக் கொண்டு வருமாக்கும்’ என பொறுமிக் கொண்டாள்.

‘‘அம்மா, என்றைக்கு மாமா சிங்கப்பூரில் இருந்து வருகிறார்?’’

‘‘அடுத்தவாரம். நீயும், மாப்பிள்ளையும் வருகிறீர்களா?’’

‘‘வேலை இல்லை என்றால் கட்டாயம் வருகிறோம்.’’

‘‘வருண், உனக்கு வேலை இருக்கிறது என்றால் அதைப்பார். எங்களுக்கு மறுப்பு சொல்ல முடியாமல் எதையும் நீ செய்யாதே.’’

‘‘அந்தப் பெண் மதுமதியின் முகவரியை வைத்திருக் கிறாயா?’’ என வருண் மறுபடியும் பழைய விஷயத்தையே ஆரம்பிக்க ‘இந்த அண்ணனுக்கு இப்ப இது தான் முக்கியம்?’

‘‘கேட்காமல் இருப்பேனா? வேறு ஊர் செல்வதால்... சென்றபிறகு தான் முகவரி தெரியும் எனச் சொல்லி விட்டார்கள்.’’

‘‘அடடா! என் அருமை மனைவி ஏமாந்து போனாளாக்கும்?’’

‘‘இல்லையே! அண்ணனின் விசிட்டிங்கார்டை அவர்களிடம் கொடுத்து இருக்கிறேன்.’’

‘‘ஹேய்! முடிவே செய்துவிட்டாயா? இப்படி உடனே யாரையும் நம்பி விடாதே;’’ என ரிஷி கூற.

‘‘ரொம்ப கரெக்ட்’’ என்றாள் மாலினி.

‘‘ம்ஹூம்! எனக்கு அவர்களை தப்பாக எண்ணிப் பார்க்கவே தோன்றவில்லை.’’



‘‘நல்லவர்களுக்கு பார்க்கின்ற எல்லாவற்றையும் நல்லவர்களாக நினைக்கத் தோன்றுமாம்!’’

‘‘உங்க காம்ப்ளிமெண்ட்டுக்கு நன்றி! ஆனாலும் நான் சொல்வது உண்மை தான்.’’

‘‘ஓகே! கண்ணம்மா! நீ இன்றைக்கு சின்னக் குழந்தை ஆகிப் போனாய்! அடம்பிடித்து ஒப்புக் கொள்ள வைக்கும் கஷ்டம் உனக்கு வேண்டாம். உனக்கும் பிடித்த பெண்ணையே நான் கல்யாணம் செய்து கொள்கிறேன்.’’

‘‘போ, அண்ணா! நீ எனக்காக யாரையும் இஷ்டம் இல்லாமல் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாம்.’’

‘‘கல்யாணம் ஆயிரங்காலத்து பயிர் என்று ஏன் சொல்கிறார்கள்? நிறுத்தி, நிதானமாய், யோசித்து செய்ய வேண்டும். அவசரத்தில் கல்யாணம் பண்ணி சாவகாசத்தில் சங்கடப் படக்கூடாது.’’

‘‘என்னம்மா! நீங்களும் அண்ணன் கட்சிக்கு தாவி விட்டீர்கள்?’’

‘‘ஆமாம்டா! நீயே யோசித்துப் பார்! கல்யாணம் செய்து கொள்ள ஒரு பெண்ணிற்கு வெறும் அழகு மட்டும் போதாது. அவள் குணத்திலும், பண்பிலும் உயர்ந்தவளாய், நேர்மையான பெண்ணாய் இருக்க வேண்டும்.’’

‘‘சரி அண்ணா! அவள் அப்படிப்பட்டவளாய் இருந்தால் உனக்கு திருமணம் செய்து கொள்ள சம்மதம் தானே?’’ வருணைப் பார்த்து கண்சிமிட்டி விட்டு,

‘‘பத்திரத்தில் எழுதி தரட்டுமா கண்ணம்மா?’’ என்றான்.

"என் அண்ணன் வார்த்தையே ஆயிரம் பத்திரத்திற்கு சமம்."

மாலினி முகம் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. அவள் கடலுக்குள் இருக்கும் எரிமலையாய் அமைதியாய் வெளியில் தெரியாமல் இருந்தாள். மூவரும் ஊருக்கு கிளம்பினர்.

"வருண் காரை டிரைவர் ஓட்டுவார். நீ அருகிருந்து பார்த்துக் கொள். இரவுப் பயணம்! கவனமாக செல்ல சொல்லி இருக்கிறேன். இருந்தாலும் நீ தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தால் தான் நன்றாக இருக்கும்."

"கவலைப்படாதே! நாங்கள் ஜாக்கிரதையாக செல்கிறோம்."

அவர்கள் சென்றபிறகு அன்றைய அலுவல் வேலைகளை முடித்து. அடுத்த நாள் செய்ய வேண்டியதை வரிசைப்படுத்தி குறித்து வைத்துவிட்டு உறங்குவதற்காக தன் அறைக்குள் சென்றான். சட்டையை கழற்றும் பொழுது தான் அவனுக்கு அது ஞாபகம் வந்தது. கோட்டை எடுத்து அதன் பாக்கெட்டில் கைவிட்டான். கையுடன் வந்தது அந்த அதிசய பொருள்!

"போட்டோ!" - "ஓர் அழகு தேவதையின் போட்டோ" பத்து நிமிடங்கள் கட்டிலில் சாய்ந்து கொண்டு வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

'பெண்ணே நீ எப்படிப்பட்டவள்? உன்னை நான் சந்திக்க வேண்டும். உலகம் உருண்டை என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை! அது உன்னையும், என்னையும் சந்திக்க வைத்துவிடும் என்று என் உள்ளுணர்...



பாவ்னா சொன்ன பெண் உன்னை விட அழகியா? அப்படி இருக்கவே வாய்ப்பு கிடையாது! உன் கண்கள் உண்மை பேசும் கண்களாய் இருக்கின்றன!'

பார்த்துக் கொண்டே இருந்தான். பார்க்க பார்க்க திகட்டவில்லையோ அவனுக்கு?

பின் எழுந்து தன் போட்டோ - ஸ்டாண்ட் பின்புறம் அதை சொருகி வைத்தான்.

## 3

மாமா வீடு சின்னதாக இருந்தாலும் போதுமானதாய், அழகாய் இருந்தது. அத்தை ஒன்றும் அகமலர்ந்து பெரிதாக வரவேற்கவில்லை என்றாலும் முகச்சுளிப்போ, வெறுப்போ காண்பிக்கவில்லை. 'இருந்தால் இரு; போனால் போ' என்ற மனோபாவம். மாமாவிற்கு பெரியம்மாவின் மேல் பாசம் இருந்தது. சின்ன வயதில் ஓடியாடி விளையாடுவதற்கும், விடுமுறையை கழிப்பதற்கும் பெரியம்மாவின் வீடு அடைக்கலமாய் இருந்தது. பெரியம்மாவின் மனதும் விசாலமாய் இருந்ததால் பெற்ற பிள்ளைக்கு ஈடாய் தங்கைப்பிள்ளையும் நினைத்தாள். வேண்டியன செய்தாள்; படிப்பதற்கும், தங்குவதற்கும் ஆலமரமாய் இருந்தாள். அவரவர் வாழ்க்கையில் அனைவரும் மும்முரமாகி விட அதுவும் ஒரே மகளும், மருமகனும் இறந்த பிறகு மதுமதியை வளர்ப்பதிலேயே தீவிரமாகியதால் யாரையும் தேடிச் செல்லவில்லை. இன்று தன் ஆசைப் பேத்தியின் நல்வாழ்விற்காக சொந்த ஊரை, சொந்த வீட்டை விட்டு

விட்டு அறிமுகமில்லா ஊருக்கு வந்து சேர்ந்தார். யாருக்கும் பாரமாய் இருந்துவிடக் கூடாது என்ற கொள்கைப்படி தங்கை மகனிடம் ஐந்து இலட்ச ரூபாய் பணத்தை தந்துவிட்டே தங்க வந்தார். பாட்டிக்கும், பேத்திக்கும் அறையே போதுமானதாய் இருந்தது. அவர்கள் தேவையற்ற பொருள்களை உடைமைகளாக கொண்டு வரவில்லை.

கோவை கல்லூரியில் மதுமதி சேர்ந்துவிட்டாள். ஆவணி அவிட்டம் அன்று மெல்ல சத்தமில்லாமல் நடந்து வந்து பின்புறம் பூ பறித்துக் கொண்டிருந்த பாட்டியைக் கட்டிக் கொண்டாள்.

"என்னடா?"

"என் அம்மம்மா! செல்ல அம்மம்மாவை நான் கட்டிக் கொள்வேன்" என்றவாறு அவர் கன்னத்தில் முத்தமிட்டு "பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்றாள்.

"உன் பாட்டிக்கு எண்பது வயசு பிறந்தாச்சு! குடு குடு கிழவியாகி விட்டேன்."

"இல்லையே! சுறு சுறு அம்மம்மா ஆகி விட்டீர்கள்! இப்ப என்னுடன் கொஞ்சம் ஓடி வாருங்களேன். ஓர் அதிசயம் காட்டுகிறேன்."

உள்ளே அழைத்துச் சென்றாள். கண்ணாடியின் எதிரே அவரை நிற்க வைத்து விட்டு "ஒரு நிமிடம் கண்ணை மூடுங்கள்" என்றாள். நிமிடம் கரைந்தது. "இப்ப திறங்க". கண்ணைத் திறக்க எதிரே இன்னொரு பாட்டி. கண்ணாடியின் தெரிந்த பிம்பம் ஒன்று. ஓவியமாய் மலர்ந்த உருவம் மற்றொன்று.



"ஆகா! எத்தனை தத்ரூபமாய் இருக்கிறது பெரியம்மா வின் ஓவியம்!"

"மாமா! இது நானே வரைஞ்சது! பாட்டிக்கு என் பிறந்தநாள் பரிசு."

"வாழ்த்துக்கள் பெரியம்மா1 உங்களுக்கு என்ன வேண்டும்?"

"நீங்க எல்லாரும் நல்லாயிருக்க வேண்டும்."

வீட்டிலுள்ள அனைவரும் பாட்டியின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொள்ள அத்தை பால்பாயாசம் செய்தாள்.

பாட்டியின் படத்தில் 'உங்கள் இதயத்தில் மது' என மதுமதி கையெழுத்திட்டாள்.

"மது! இந்த ஓவியத்தைக் கொடு. நான் பிரேம் செய்து வாங்கி வருகிறேன்."

மதுமதிக்கு அன்று முழுவதும் உற்சாகமாய் இருந்தது. முதல்நாள் கல்லூரிக்கு செல்கிறாள். படபடப்புடன் கூடிய மகிழ்ச்சி! மிக சீக்கிரமாகவே கிளம்பி விட்டாள். கல்லூரி பேருந்தில் தான் சென்றாள். ஆலிவ் க்ரீன் கலரில் அழகாய் டிசைன் செய்யப்பட்ட சுடிதாரில் பொருத்தமான காதணி, கழுத்தணியுடன் பேருந்திலிருந்து இறங்கினாள்.

முதலடியை கல்லூரியில் வைத்த பொழுது சிலிர்த்தது. ஒரு வினாடி கண்களை மூடி, "அம்மம்மா! நான் நன்றாக படிக்கவேண்டும்; முதல் மாணவியாய் தேறி உங்கள் ஆசைப்படி வாழ்வில் உயரவேண்டும். உங்கள் ஆசி என்றும் எனக்கு இருக்க வேண்டும்!" என வேண்டிக் கொண்டாள்.

"அத பார்றா! ஒரு பச்சக்கிளி! மயங்கிப் போய் நிக்கிது."

கண்களைத் திறந்தவளை விரல் சொடுக்கி அழைத்தன அருகே சென்றாள்.

"பர்ஸ்ட் இயரா? பெரியவங்களுக்கு மரியாதை செலுத் தெரியாதா? சீனியரை பார்த்தால் விஷ் பண்ண மாட்டாயா?"

"ஸாரி அண்ணா! குட்மார்னிங் அண்ணா!"

"ஆகஸ்ட் மாதம் நடந்த மாபெரும் சோகம் என்ன?"

"ஜப்பான் நாட்டு ஹிரோஷிமா, நாகசாகி மே அமெரிக்கா 'லிட்டில்பாய்' என்ற அணுகுண்டு போட்ட தான் ஆகஸ்ட் மாதம் நடந்த மாபெரும் சோகம் அண்ணா!"

"அழகான பொண்ணு அண்ணான்னு கூப்பிடுறதுதான் இந்த ஆகஸ்ட் மாதத்தின் மாபெரும் சோகம்." அவன் மி வருத்தமாய் சொல்ல...

கூட இருந்த அனைவரும் சிரித்தனர்.

"டேய்! சிரிப்பை நிறுத்துங்கடா! அண்ணன்னு கூப்பிட்டதுக்கு தண்டனை கொடுக்க வேண்டாமா?"

"ஓ! ஒரு ஜோக் சொல்லட்டும்."

"சரி அண்ணா!"

"இரும்மா; அவசரப்படாதே! ஏதோ அழகான பெண்ணாய் இருப்பதால் முதல்நாளே பயப்படுத்த வேண்டாம் என்று ஜோக் சொல்லச் சொல்கிறோம். ஆனால் ஒரு கண்டிஷன்."



"என்ன அண்ணா?"

"நீ ஏ ஜோக் சொல்லவேண்டும்."

"ஆகா! ஒரு ஜோக் மட்டும் தான் சொல்வேன். இன்னொன்று கேட்கக் கூடாது."

"தங்கச்சி இப்பதான் பிரீ - கேஜி முடிச்சிட்டு வந்திருக்கு. அதனால் ஒன்றுடன் விட்டு விடலாம். முதல்ல நீ ஜோக்கை சொல்."

"Aக்கும் Bக்கும் போரடிச்சா என்ன செய்யும்?"

"என்ன செய்யும்?" என அவளையே திருப்பிக் கேட்டனர் அவள் குரலிலேயே!

"CD போட்டு பார்க்கும்."

"ஹோ" என கத்தினர்.

"அம்மா தங்கச்சி! நீ போம்மா நல்லா கூழ் காய்ச்சுவாய் போலிருக்கு!"

"நன்றி அண்ணா" என்றவாறு நகர்ந்தாள்.

எதிரே மாலினி வந்தாள். மதுமதியை பாராதது போல் செல்ல,

"ஹலோ!" என அழைத்தாள் மதுமதி. அவள் பேசாமல் 'நீயா?' என அலட்சியமாக பார்த்தாள். "நீங்களும் இந்த காலேஜா?"

"இல்லை! சும்மா சைட் அடிக்க வந்தேன்!" என மாலினி கூற மதுமதி சிரித்தாள்.

"ஓ! ஸாரி! எந்த டிபார்ட்மெண்ட்?"

''கம்ப்யூட்டர் சயின்ஸ். நீ?''

''எலெக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன்.''

''என் ப்ரெண்ட் ரேஷ்மா கூட எலக்ட்ரானிக்ஸ் தான்'' என்றவாறே அவளை அழைத்து மதுமதியிடம் அறிமுகப் படுத்தி வைத்தாள்.

ஆடிட்டோரியத்தில் முதல் வருட மாணவர்களுக்கு வரவேற்பும், அறிமுகப்படலமும் நடத்தப்பட்டன. ஒவ்வொருவரும் தாங்கள் படித்த பள்ளி, பெயர், ஊர் சொல்லி அமர்ந்தனர். ரேஷ்மாவும், மாலினியும் பெருமையாக கொடைக்கானல் புகழ்பெற்ற தனியார் பள்ளி பெயரைச் சொல்லி அமர்ந்தனர்.

''கேர்ள்ஸ் ஹையர் செகண்ட்டரி ஸ்கூல்'' என மதுமதி கூற, ''அரசாங்க பள்ளிக்கூடத்தில் படிச்ச அன்றாடம் காய்ச்சி'' என ரேஷ்மா மாலினியிடம் முகம் சுளித்தாள்.

பேராசிரியர்கள் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு மாணவர்களுக்கு அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்; கல்லூரியின் கட்டுப்பாடுகள் மற்றும் எப்படி படிக்க வேண்டும்? கல்லூரி காலம் பொற்காலம். ஆனால் படிப்பில் கோட்டை விட்டு விடக் கூடாது என்றும் கலந்துரையாடலில் எடுத்துரைத்தனர். முடிவில் மாணவ மாணவியர் சார்பாய் நன்றி தெரிவிக்க யாரையாவது மேடைக்கு வருமாறு அழைத்தனர். ரேஷ்மா எழுந்து சென்றாள். நல்ல ஆங்கிலத்தில் அலட்டலாய் நன்றி தெரிவித்து பேசினாள். படபடவென கைத்தட்டல்களுக் கிடையில் அனைவரை யும் பெருமிதமாய் பார்த்தவாறு தன் இருக்கையில் வந்து அமர்ந்தாள். விழா முடிந்து அனைவரும் கலைந்து வெளியேறினர்.



''நல்லா ஸ்டைலாய் ஆங்கிலத்தில் பேசினீர்கள்'' என மனம்திறந்து மதுமதி பாராட்டினாள்.

''தேங்க் யூ! நானும், மாலினியும் இரட்டைக்குழல் துப்பாக்கி போல. அவள் எங்கள் பள்ளிக்கூட அழகி; நான் அறிவுஜீவி. நாங்கள் இல்லாத போட்டியில்லை. பெறாத வெற்றி இல்லை. அவள் கலைநிகழ்ச்சிகளில் கலக்கினால், நான் கவிதை, பேச்சு, வினாடிவினாவில் வெளுத்துக் கட்டுவேன். எதில் கலந்து கொண்டாலும் எங்களுக்குத் தான் பரிசு. எங்களுக்கு பெரிய ரசிகர் மன்றமே இருந்தது.''

''அப்படியா! வாழ்த்துக்கள்!''

''வாழ்த்துக்களை இன்னும் நிறைய சேகரித்து வைத்துக் கொள்; கூடிய சீக்கிரம் இங்கேயும் எங்களுக்கு ரசிகர் மன்றம் வைப்பார்கள். சரி! வா; காலேஜை சுற்றி பார்க்கலாம்.''

அவளையும் அழைத்துக் கொண்டு வெளியே கிளம்பினர். கேண்டீனுக்குள் நுழைந்தனர். ''காபியா? டீயா?'' எனக் கேட்டாள் ரேஷ்மா மதுமதியை பார்த்து.

''ஈ இருக்கிறதெல்லாம் நான் சாப்பிடறது இல்லை.''

''ஈயா?'' மாலினி விழித்தாள்.

ரேஷ்மா வாய்விட்டு சிரித்தாள்.

''டீ யில் ஒரு E -யும், காபியில் இரண்டு E-யும் உள்ள தால் சாப்பிடமாட்டாளாம்!'' எனக் கூறிவிட்டு மறுபடியும் சிரித்தாள்.

எப்படியோ மூவருக்குள்ளும் நட்பு பூத்தது. மதுமதி எல்லாரிடமும் இயல்பாய், அன்பாய் பழகும் குணம்! யாரையும் சட்டென நம்பி விடும் இயல்பும் உடையவள்.

அந்த பண்பு தான் அவர்களுடனும் நெருங்கி பழக வைத்தது.

கணித பாடவேளை. பேராசிரியர் வகுப்பினுள் நுழைந்தார்.

''வந்துட்டாருய்யா மொக்கராசு'' என பின்னால் இருந்து ஒரு குரல் மெல்ல சொன்னது.

''கணக்கு பாடத்தையே 'மொக்கை' போடுகிறவர் இவர்தான்'' என்றாள் ரேஷ்மா.

''மோகன்ராஜ் சார் திறமைசாலி தான்!''

''போர்! எப்ப பார்த்தாலும் சீரியஸாய் பாடம் நடத்தினால் தூக்கம் தான் வரும்.''

''கணிதத்தில் அடிப்படை அறிவு இருந்தால் இப்பொழுது பாடம் நமக்கு நன்றாகப் புரியும். தப்பை நம்மிடம் வைத்துக்கொண்டு அவர் மேல் குற்றம் சொல்லக் கூடாது.''

''ஆரம்பிச்சிட்டா அவ்வையார் பேத்தி அறிவுரையை! அதுக்கு அவர் அறுவையே தேவலை.''

''ரேஷ்மா! வருத்தப்படாதே. வகுப்பை இப்ப சும்மா ஓட்டிவிடுகிறேன் பார்'' என கிசுகிசுத்தான் கிஷோர்.

''சார், எனக்கொரு சந்தேகம்?''

''என்னப்பா?''

''அறியா பிள்ளைகளான எங்களிடம் கேள்வித்தாளை கொடுத்துவிட்டு எல்லாம் தெரிஞ்ச உங்களிடம் விடைத்தாளை கொடுக்கிறாங்களே இது சரியா சார்?''



''அப்பா மொக்கராசு! நீ உட்காரப்பா'' என அவர் கூற வகுப்பே 'கொல்' என்று சிரித்தது.

''போனவார டெஸ்டில் கேள்விகளுக்கு விடை எழுதாமல் www.கிஷோர்.com-ல் விடையை காண்க என்று எழுதியவன் அல்லவா நீ! கணக்கு பாடம் புரிந்தால் தான் வரும். மனப்பாடம் செய்து எழுத முடியாது. ஒழுங்காய் வகுப்பை கவனி. அடுத்த வாரம் நான் வகுப்பிற்கு வரமாட்டேன்.''

''ஏன் சார்?''

''அமெரிக்காவிற்கு செல்கிறேன்.''

''ஏன் சார்? வெள்ளை மாளிகை வாடகைப் பணம் இன்னும் வந்து சேரலையா? அதை வசூல் பண்ணத்தான் போகிறீர்களா?''

''இதே ரேஞ்சில் நீ இருந்தாயானால் நாலு வருஷம் கழிச்சு ரோட்டில் அரியஸ் கப்போட திரிய வேண்டி இருக்கும்.''

''சார்! கப்பு வாங்க சாபம் கொடுக்காதீங்க சார்! மொக்கராசு சார் கருணை காட்டுங்க, சாபத்தை ரிவர்ஸ் கியரில் திருப்பி வாங்கிடுங்க.''

''என்ன மொக்கராசு... சாரா?''

''மொக்கராசோட சார்னு சொல்ல வந்தேன். கொஞ்சம் வாய் குழறிடுச்சு!''

''பாடம் தான் வரலையேன்னு நினைச்சேன். அடிப் படையே கோளாறு போலிருக்கு.'' என்றவர் தொடர்ந்து,

''அறிவியல் தொழில் நுட்ப கழகம் மாணவர்களுக்கு ஒரு போட்டி அறிவித்து இருக்கிறார்கள். மாணவர்கள்

தங்கள் புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றி வருகி அக்டோபர் மாதத்திற்குள் ப்ராஜெக்ட் மற்றும் மாதி அனுப்ப வேண்டுமாம். இணைய தள முகவரி கல்லு நோட்டீஸ் போர்டில் இருக்கிறது. நிறையபேர் கலந் கொள்ளுங்கள். ஒரு சீனியருடன் - ஜூனியர் ஒருவ இணைந்து செயல்படவேண்டும்.''

அவர் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது இறு ஆண்டு மாணவிகளும், மூன்றாம் ஆண்டு மாணவர்களு சிலர் வகுப்பினுள் நுழைந்தனர்.

''சார், எங்க புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சிக் உதவி செய்ய, யோசனை சொல்ல ஜூனியர்ஸை தே வந்திருக்கிறோம்.''

''இப்பொழுது தான் அதைப்பற்றி சொல்லிக் கொண் ருந்தேன். உங்களுடன் இணைந்து செயல்பட தயாரா இருப்பவரை தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்.''

அவர் அனுமதித்ததும்,

காவ்யா என்ற இறுதியாண்டு மாணவி மதுமதியின் அருகில் வந்தாள்.

''நீ திருப்பூரிலிருந்து தானே வருகிறாய்? நானும் அங் தான் இருக்கிறேன். என்னுடன் இணைந்து செயல்ப உனக்கு விருப்பமா? உன் சான்றிதழ்களை எல்லா பார்த்தேன். எல்லாவற்றிலும் நீ முதலாக இருக்கிறாய். உ உதவி கிடைத்தால் நன்றாக இருக்கும். அதுவும் இருவரு ஒரே ஊராக இருப்பதால் இணைய தளத்தில் தகவ சேகரிக்கவும், கலந்துரையாடவும் எளிதாக இருக்கும். என்ன சொல்கிறாய்?''



மதுமதி சந்தோஷமாய் சம்மதித்தாள்.

''காவ்யா மேடம் 'கோல்' உங்க பக்கம் விழுந்துடுச்சு! பாவம் எங்க ஸ்டீபன்! மெயின் விக்கெட்டையும் பறி கொடுத்துட்டு க்ளீன்போல்டு ஆகி நிற்கிறான்.''

''ஏன்? என்னாச்சு ஸ்டீபன்?''

''அவன் ப்ராக்கெட் போட வந்த ஆளை நீங்க வளைச்சு போட்டுகிட்டீங்களே!'' என அவன் மெல்ல கிசுகிசுத்தான்.

''யார்? மதுமதியா?'' என்றவள்,

மதுமதியைப் பார்த்து,

''மதுமதி! ஸ்டீபன் கூட சேர்ந்து பணி செய்கிறாயா?'' என்றாள்.

''ஸ்டீபன் அண்ணா கூடவா? ரேஷ்மா வெரி ப்ரில்லியண்ட் கேர்ள்; அவளும் ஹாஸ்டல் தான். அவளை கேட்கச் சொல்லுங்கள்.''

''என்ன? ரேஷ்மாவுக்கு என்ன?'' என அவள் அருகில் வர.

''இம்சை அரசி! இந்த அண்ணாவை முதலில் கழட்டி விடு,'' என்று கூறிவிட்டு,

''கனவில் தான் வந்து இம்சை செய்கிறாள் என்றால், நேரில் அண்ணா, அண்ணா என்று இன்னொரு விதமான இம்சை!'' என முணுமுணுத்தது ரேஷ்மாவின் காதில் விழுந்தது.

'இவளுக்கு என்ன தெரியுமென்று அந்த காவ்யா கூப்பிடுகிறாள். ஆங்கிலத்தில் அழகாய் பேசத் தெரியுமா?

அட்லீஸ்ட் ஆங்கிலம் நன்றாக படித்து புரிந்து கொள் வாவது முடியுமா? அவளை தேவலை என் ஆக்கிவிட்டான் இந்த ஸ்டீபன்! அவள் தான் வேண்டுமா கனவிலும் வருகிறாளாம்! சே! சரியான ஜொள்ளு! அவ கேட்பதற்கு முன்னால் என்னை கேட்டிருந்தாலாவது ச என சொல்வேன்; இப்பொழுது அவள் நிராகரித்து என்னிட தள்ளினால்... நான் ஏமாந்து போவேனா? அவன் கேட்டா கண்டிப்பாய் மறுத்துவிட வேண்டும்' என ரேஷ் மனதிற்குள் பொறும,

ஸ்டீபனோ ஒன்றுமே கேளாமல் அங்கிருந் வெளியேறினான். அவனுக்கு உண்மையிலே போட்டியில் பங்குபெறும் எண்ணம் இருந்திருந்தா கேட்டிருப்பானோ? என்னவோ?

## 4

பாவ்னா வருணுடன் சென்னைக்கு வந்திருந்தாள்.

''ரிஷி! என் மனைவிக்கு 'ஹோம்சிக்' வந்துட கூடாதேன்னு அழைத்துக் கொண்டு வந்தேன்.''

''அதெல்லாம் பொய் அண்ணா! அங்கே மட்டு வீட்டில் இல்லாமல் காட்டிலா இருக்கிறேன்? அதுவு அத்தையுடன் இருந்தால் பொழுது போவதே தெரியாது என்னமாய் சமைக்கிறார்கள் தெரியுமா? சப்புக் கொட்டி கொண்டு சாப்பிடலாம். உடம்பு குண்டாகக் கூடாதே என் தினமும் இரண்டு மைல் நடக்கிறேன்.''



''வாவ்! மாமியாரை புகழ்ந்து பேசும் மருமகள்! இந்த நூற்றாண்டில் இணையற்ற அதிசயம். பேட்டி எடுக்க, கூப்பிடுங்கப்பா டி.வி காரங்களை!''

''சும்மாயிருண்ணா! நிஜமாலும் என் மாமியார் அருமையான மனுஷி! அதிர்ந்து பேசாமல் கலைநயத்துடன் அவர் செய்யும் வேலைகள் ஒவ்வொன்றும் மிக அருமை. அவரிடம் நான் நிறைய விஷயங்களை கற்றுக் கொள்ள வேண்டும்.''

''ஆகா! அவ்வளவு தானா உன் புகுந்த வீட்டு புராணம்? இன்னும் மிச்சம் மீதியிருக்கிறதா? உன் வருணைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?''

''அவர் நம் வீட்டுப் பிள்ளை அண்ணா! அத்தை மாதிரி அருமையான பிள்ளை. எந்நேரமும் அவருக்கு நம் வீட்டு புகழ்தான். உன்னைப் பற்றியும், நம் அம்மாவைப் பற்றியும் பெருமிதமாய் பேசுவார். என்னை ராணி மாதிரி உணர வைத்துவிட்டார்.

''மச்சான்! நான் கவிழ்ந்துவிட்டேன்.'' இருவரும் நகைக்க அவர்கள் பேச்சரவம் கேட்டு சரஸ்வதி வந்தார்.

''ரிஷி! டாக்டர் கிட்டே முன் அனுமதி வாங்கப்பா.''

''யாருக்கு அம்மா? என்ன உடம்பு?''

''எல்லாம் நல்ல விஷயம் தான். நீ மாமா ஆகப் போகிறாய்!''

''ஹேய் வருண்! வாழ்த்துக்கள்! நீ சொல்லவே இல்லையே?''

''உனக்கு கொஞ்சம் சஸ்பென்ஸ் கொடுக்கலாம் என்று இருந்தோம்.''

''எனக்கு மருமகள் தான் வேண்டும்.''

''உன் ஆசையை கடவுளிடம் சொல்; கிடைத்தால் உன் அதிர்ஷ்டம் என்று வைத்துக் கொள்கிறோம்.''

''அம்மா! நான் இன்றிரவு 'குஜராத்' கிளம்ப வேண்டும். திரும்பி வர கொஞ்சம் தாமதமாகும்; ஒன்றிரண்டு மாதங்கள் ஆகலாம். தொழிற்சாலையில் புது யூனிட் தொடங்க வேண்டியிருக்கிறது.''

''நீ போயிட்டு வாப்பா! இங்கே எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''என் அம்மாவின் திறமைப்பற்றி எனக்குத் தெரியாதா?''

அவன் பேசிக்கொண்டு இருந்த பொழுது கைப்பேசி ஒலித்தது. எடுத்து கேட்டவன் சட்டென அணைத்தான்.

''என்ன அண்ணா?''

''யாரோ ஒரு முட்டாள் பெண்; பித்தம் தலைக்கேறி ஏதோ பிதற்றுகிறாள்.''

''உன் பர்ஸனல் நம்பர் அவளுக்கு எப்படித் தெரிந்தது?''

''நமக்கு வேண்டியப்பட்டவங்க, நெருக்கமானவங்க வீட்டுப் பெண்ணோ? என்னவோ?''

''இருக்கலாம்! என் அண்ணா விரும்பத்தகுந்த ஆண்மகனாய் இருக்கும் பொழுது கோபிகளைகளுக்கா பஞ்சம்?''



''உஷ்! உன் அண்ணன் பேருக்கேற்றாற் போல் ரிஷியாய் இருக்கக் கூடாது.''

''ஆனாலும்....'' என பாவ்னா ஆரம்பிக்கும் பொழுது.

வீட்டில் வேலை செய்யும் செல்வம் கையில் பையுடன் வந்து நின்றான்.

''என்ன செல்வம்?''

''ஐயா! எனக்கு அவசரமாய் கொஞ்சம் பணம் வேண்டும்.''

''எதற்கு? எவ்வளவு? அம்மாவிடம் வாங்கிக் கொள்ளேன்.''

''ஒரு... ஐம்பது ஆயிரம் ரூபாய்... வேண்டும்.''

''ஐம்பது ஆயிரமா? ஐந்நூறு ரூபாய் கேட்பது போல கேட்கிறாய்?'' என்றான் வருண்.

எந்த உணர்ச்சியும் காட்டிக் கொள்ளாமல் ரிஷி அவனை பார்க்க,

''அவ்வளவு பணம் எதற்கு? யாருக்கு உடல்நல மில்லை?'' என பாவ்னா வினவினாள்.

''அது வந்துக்கா... என்னை நம்பி ஒரு பொண்ணு வந்துட்டா....'' என இழுக்க,

''பொண்ணு வந்துட்டாளா? ஓடி வந்துவிட்டாளா? நீ கூட்டி வந்து விட்டாயா?'' என வருண் கேட்க.

''அதுவா தான் இஷ்டப்பட்டு வந்துச்சு. நாங்க கல்யாணம் பண்ணிக்க போறோம்.''

''உன் வயசு என்ன? இருபத்து இரண்டு இருக்குமா?''

''இருபது வயசு முடிஞ்சுடுச்சு அக்கா.''

''பொண்ணு என்ன பண்ணுது?''

''பத்தாம் க்ளாஸ் இங்கிலீஸ் பள்ளிக்கூடத்தில் படிச்சுக்கிட்டு இருக்கு அக்கா.''

''எங்கே அந்தப் பெண்?'' என ரிஷி கேட்டான்.

''வெளியிலே நின்னுகிட்டு இருக்கு ஐயா!''

''உள்ளே அழைத்து வா.''

அவன் வெளியே செல்ல,

''மைனர் பெண்ணை இழுத்துக் கொண்டு வந்திருக் கிறான். பெரிய பிரச்சனை வரப்போகிறது ரிஷி.''

''அதைப் பிறகு பார்க்கலாம். முதலில் செல்வத்தின் அம்மாவையும், அந்தப் பெண்ணின் உறவினரையும் அழைத்து வரவேண்டும்'' என்றவன் வருணிடம் ஏதோ மெல்லக் கூற அவன் பாவ்னாவுடன் அங்கிருந்து நகர்ந்தான்.

அந்தப் பெண்ணுடன் செல்வம் உள்ளே நுழைந்தான். உள்ளே வந்த பெண்ணை நிமிடத்தில் எடைப் போட்டான் ரிஷி.

மிடியும், டாப்ஸும் ப்ளாட்டின காதணி, கையணி, கழுத்தணியில் மினுமினுத்த உடல் அவள் வசதி வாய்ப்பை பறைச்சாற்றின. சற்றே வாடியிருந்த முகத்தைப் பார்த்து ''சாப்பிட்டாயா?'' என்றான்.

''இல்லை'' என்பது போல் தலையசைத்தாள். ''ஏன்?''

''காலையில் வீட்டிலிருந்து கிளம்பிய அவசரத்தில் சாப்பிடலை.''



''வீட்டிலே என்ன சொல்லிவிட்டு கிளம்பினாய்?''

''என் தோழியின் பிறந்தநாள் விழாவிற்கு செல்வதாக சொல்லி விட்டு வந்தேன்.''

''இனி என்ன செய்யப் போகிறாய்?''

''இனியா?... நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம்.''

''நீ சட்டப்படி இன்னும் மேஜர் ஆகலையே! பின் எப்படி கல்யாணம் செய்து கொள்ள முடியும்? மீறி செய்து கொண்டால் போலீஸ் பிடித்து உள்ளே தள்ளி விடுவார்களே!''

''ஐயோ! என்ன இவர் இப்படி சொல்கிறார் செல்வா? இப்ப என்ன செய்யறது?''

''அதுக்கு தான் ஐம்பது ஆயிரம் ரூபாய் கேட்டேன். கொடுக்க வேண்டியவங்களுக்கு பணத்தை அழுத்தி போலீஸ் கேஸில் மாட்டாமல் தப்பிச்சுடலாம். பின் எங்காவது தொலை தூரம் ஓடிபோய்விடலாம்.''

அவனிடம் எதுவும் கேளாமல்,

''உன் பேர் என்னம்மா?'' என அவளிடம் கேட்டான் ரிஷி.

''கீதா.''

''இங்க பார் கீதா! கோர்ட்டில் ஆள்மீட்பு கொணர்வு வழக்குப் போட்டால் நீங்கள் எங்கிருந்தாலும் உன்னைப் பிடித்து போலீஸ்காரர் கோர்ட்டில் ஒப்படைத்து ஆக வேண்டும்.''

''ம்ஹூம்! நான் எங்க வீட்டிற்கு போக மாட்டேன். அங்கே யாருக்கும் என்மேல் அக்கறையில்லை. செல்வா மட்டும்

இல்லாவிட்டால் நான் கவலையிலேயே இறந்து போயிருப்பேன்.''

''உன் அப்பா என்ன செய்கிறார்?''

''அப்பா ஃபாரின்லே இருக்கிறார். அம்மா என்னை கவனிக்கவே நேரம் இல்லாதபடி ஆபீஸ் வேலையில் பிஸி நானும், பாட்டியும்தான் வீட்டில் ஒருத்தர் முகத்தை ஒருத்த பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும். எனக்கு எல்லாம் வெறுப்பாய் இருக்கிறது.''

''சரி, செல்வா உன்னை எப்படி காப்பாற்றப் போகிறார் எங்காவது கொள்ளை கிள்ளை அடிக்கப் போகிறாரா?''

''ஐயா.....''

''உஷ்! குறுக்க பேசாதே! உன் செல்வா என்ன வேலை பார்க்கிறார்? அவர் குடும்ப பின்னணி என்ன? அவர் சம்பளம் எவ்வளவுன்னு? ஏதாவது உனக்குத் தெரியுமா?''

''நான் சொல்கிறேன் ஐயா!'' என்று சொல்லிக்கொண்டே ஒரு நடுத்தர வயது பெண்மணி உள்ளே வந்தார்.

''அம்மா'' என்றான் செல்வம்.

''என்ன காரியத்தை செஞ்சிருக்கடா! உன்னை நம்பி ரெண்டு தங்கச்சி இருக்கு. மாசம் மூவாயிரம் ரூபாய் சம்பளத்தில் குடும்பத்தை ஓட்டுவது எவ்வளவு கஷ்டமாய் இருக்கிறது? இதிலே பணக்கார வீட்டுப் பெண்ணை இழுத்துக்கிட்டு வந்திருக்கிறாயா? இது நமக்கு சரிப்படுமா?''

''என்னது? மாச சம்பளம் மூவாயிரம் ரூபாய் தானா? என்னோட பாக்கெட் மணியே பைவ் தௌசண்ட் ருபிஸ்! என்ன செல்வா இவங்க சொல்றது உண்மையா?''



''அது.... வந்து கீது, உன்னை என்னால் நல்லா வச்சு காப்பாத்த முடியும்!''

''இந்த கீத்து... பனையோலை எல்லாம் நமக்கு சரிப்படாது. உன்னையே ஐயா காப்பாத்திக்கிட்டு இருக்கிறார். குடியிருக்கக் கூட சரியான வீடில்லாத நமக்கு ஆடம்பரக் கார் சரிப்படுமா? பொத்தல் குடிசையில் கூழுக்கு வழியில்லாதவன் கனவிலே இராசாவாகி கஞ்சிப்பானையை எட்டி உதைச்சானாம். வேண்டாம் அப்பா! இந்த நெனப்பு.''

''அம்மா கீதுவை கல்யாணம் பண்ணிக்கிட்டால் அவங்க வீட்டு சொத்துக்கு நான் வாரிசாயிடுவேன். அப்புறம் ஆயுசுக்கும் கவலையில்லாமல் உட்கார்ந்தே சாப்பிடலாம்.''

''தூ! உழைக்காமல் ஒரு பொண்ணை ஏமாத்தி வாழணும்னு நினைக்கிறதுக்கு உனக்கு எப்படிடா தைரியம் வந்தது? அம்மா! உனக்கு ஒண்ணு சொல்வேன் கேளு தாயி! இவனை நம்பி ஏமாந்து போகாதே.''

''செல்வா! இது உன் வீடில்லையா?''

''அடி செருப்பால! இவன் இதை அவன் வீடுன்னு சொன்னானா? பொய் சொல்ற வாய் புழுபுழுத்து போய்விடும். அம்மாடி, உங்க வீட்டிற்கு போய்விடு. உனக்கு தனியா போக ஒரு மாதிரி இருந்தால் சொல்லு! நான் கொண்டு வந்து விடுகிறேன்.''

''அம்மா! சும்மாயிரு! என் வாழ்க்கையில் தலையிடாதே; நான் இங்க வந்ததே தப்பு! இவளை கூட்டிக்கிட்டு எங்காவது போயிருக்கணும்.''

''போய் என்னடா செய்வாய்? அவள் கை, காது, கழுத்தில் இருப்பதை விற்று எத்தனை நாளைக்கு சாப்பிடுவாய்? பின் திரும்பி இங்கு தான் வரணும்.''

"எங்களைப் பிரித்தால் நான் செத்துப் போயிடுவேன்."

"போய்யேன்! ஒரு பொண்ணு வாழ்க்கையை கெடுப்பதை விட அது தேவலை..." ரிஷி இடையிட்டான்.

"பாரம்மா கீதா! நீ போட்டு இருக்கிற பிளாட்டின இயர் ரிங் என்ன விலைன்னு தெரியுமா? ரூபாய் 64,000. நெக்லஸ் ரூ 1,90,000 பிரேஸ்லெட் ரூ1,05,000. இதெல்லாம் உனக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் உன் டிரஸோட விலை பத்தாயிரம் ரூபாய் என்று உனக்கேத் தெரியும். ஏசி ரூமில் தூங்கி பீட்ஸா, பர்கர் நினைச்சப்போ ஆர்டர் பண்ணி சாப்பிட்டு வாழ்ந்த உன்னால் செல்வத்துடன் எப்படி வாழ முடியும்? உன் அம்மாவும், அப்பாவும் உனக்காக, நீ நன்றாக வசதியாக வாழ்வதற்கு தானே ஓடி ஓடி சம்பாதிக்கிறார்கள்? பதினாறு, பதினைந்து வயதில் உனக்கு உலகம் புரிந்து விடுமா? உன்னைப் பெற்று அருமையாய் வளர்த்தவர்களுக்கு உனக்கொரு அருமையான துணையைத் தேடித்தர தெரியாதா? அம்மா என்னை கவனிக்கலை, அப்பா என்னை கண்டுக்கறதில்லை; அவங்களுக்கு பாசமே இல்லை என்று புலம்புகிற நீங்க செய்தித்தாள் படிப்பதில்லையா? எத்தனை பொண்ணுங்களும், பசங்களும் பெத்தவங்க சரியில்லாமல் வறுமையில் வாடி ஆதரவில்லாமல் கஷ்டப்பட்டு வேலை செய்து படித்து நல்ல மதிப்பெண்கள் வாங்கி சாதனை செய்கிறார்கள்! உங்களுக்கு சொகுசான வாழ்க்கையை கொடுத்தும் கல்வியில் கவனத்தை செலுத்தாமல் உங்கள் வாழ்க்கையை தவறான நட்பால் குடி போதை மருந்து, காதல்னு அழித்துக் கொள்கிறீர்களே? இது சரியா? நீங்கள் வாழ்க்கையில் சாதிக்காவிட்டாலும் பரவாயில்லை. பெத்தவங்களை சோதிக்காதீங்க."



வாசலில் கார் வந்து நின்றது. போலீஸ்காரருடன், வருண் மற்றும் இன்னொரு பெண்மணியும் வந்தனர்.

"பார்த்துக் கொள்ளம்மா உன் பெண்ணை! என் பெண்ணுக்கு காதல், கீதல் எல்லாம் இருக்காது. அவள் ஒன்றுமறியா குழந்தை, டெட்டிபியரோடு விளையாடும் சிறுமி என்று சான்றிதழ் வழங்கினாயே? இப்ப பார்! தரமறியாமல் வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிறாள். பொண்ணுங்களுக்கு செல்லத்தை மட்டும் கொடுக்காதீங்க! உலகத்தையும் சொல்லிக் கொடுத்து வளருங்கள்."

"கீது! செல்லமே!" என அம்மா அழ.

கீதா ஓடிப் போய் அம்மாவை கட்டிக் கொண்டாள்.

"இது காதலிக்கும் வயசு இல்லை. முதலில் நல்லா படி. காலேஜ் முடிச்ச பிறகும் செல்வத்தை கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டாய் என்றால் அப்போது என்னிடம் வா."

ரிஷி சொல்ல,

"வரேன் செல்வா" என கூறிவிட்டு அவள் கிளம்பி விட்டாள். செல்வம் கோபம், எரிச்சல், ஏமாற்றம், பரிதாபம், ஆத்திரம், இயலாமை இவற்றின் மொத்தக் கலவையாய் நின்றிருந்தான்.

"பார்ப்பதற்கு ஆள் கொஞ்சம் நன்றாக இருந்தால் பணக்கார வீட்டு பொண்ணுங்களை எல்லாம் கடத்திக் கிட்டு வந்துடுவியா?" என போலீஸ்காரர் அதட்டினார்.

"நான் கடத்தலீங்க! அதுவா தான் இஷ்டப்பட்டு வந்தது."

''எதுவும் பேசாதடா! வாயிலேயே போடுவேன். நீங்
ரோட்டோரம் நடந்து போயிட்டு இருந்தீங்க, அந்த
பொண்ணு உங்களைப் பார்த்து தானாய் மயங்கி ஓ
வந்துச்சாக்கும்? முதலில் பொண்ணுங்களை நோட்ட
பார்ப்பீங்க. அவங்க யாரு என்னன்னு தெரிஞ்சதுக்
அப்புறம் அவங்க மனசுக்கு ஏத்த மாதிரி பே
கவிழ்த்திடுவீங்க; பிள்ளைங்க என்ன செய்றாங்கன்
அம்மாவும், அப்பாவும் ஆரம்பத்தில் கவனிக்கிற
இல்லை. கடைசியில் குத்துதே குடையுதேன்
புலம்புவாங்க. ஏதோ சார் முகத்திற்காக உன்னை சும்
விட்டுட்டு போறேன். இல்லை என்றால் மை
பெண்ணை கடத்தினதுக்கு உன்னை உள்
தள்ளிடுவேன் தெரியுமா?''

அவர் சென்ற பிறகு,

''இங்க பார் செல்வம்! உன்னை காப்பாற்றிக் கொள்ளவே
இன்னும் உனக்கு நிலையான வருமானம் வரவை
'செல்லமே' என்ற ஒரு வார்த்தையில் அந்த பெண் அவ
அம்மாவுடன் சென்றுவிட்டாள் பார்த்தாயா? இதுக்கு பே
'காதல்' இல்லை. வீட்டில் கிடைக்காதா என்று நினை
அங்கீகாரம் உன்னிடம் கிடைத்ததால் ஏற்பட்ட ஈர்ப்
முதலில் நீ உன்னையும், உன் தகுதியையும் உயர்த்தி
கொள். உன்னைத் தேடி ஆயிரம் பொண்ணுங்
வருவாங்க.''

அவன் பேசாமல் நிற்க,

''இப்ப என் மேல் உனக்கு கடும் கோபம் இருக்கும். அ
தப்பில்லை. யோசி! ஒரு தப்பை மறைக்க ஓராயிரம் த
செய்ய வேண்டியிருக்கும். ஒருநாள் பணத்தைக் கொடுத்



தப்பிக்கலாம். எல்லாம் நாளும் அப்படி முடியாது. வருமானம் இல்லாமல் என்ன செய்வாய்? அந்த பெண்ணால் உன்னுடன் தொடர்ந்து வாழ முடியாது. அவர்கள் வீட்டிலிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை என்றால் நீங்கள் எப்படி வாழ்வீர்கள்? முடிவு என்னாகும்? அதை நான் உனக்கு சொல்ல வேண்டியதில்லை. உனக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய் தருகிறேன். அதை வைத்து நேர்மையான தொழில் ஏதாவது செய்து பிழைத்துக் கொள். அதில் ஜெயித்து வாழ். இனி நீ இங்கு வேலைக்கு வர வேண்டாம்.''

பாவ்னா ரிஷி சொன்ன பணத்தை கொண்டு வந்து கொடுக்க பணத்துடன் தலையை தொங்க போட்டுக் கொண்டு செல்வம் கிளம்பினான்.

''பையன் மேல் குருட்டு நம்பிக்கை வைக்காதீங்க! அவன் என்ன செய்யறான்னு கவனிங்க அம்மா. மெதுவாய் பேசி அவன் மனத்தை மாற்றுங்கள்.''

''சரிங்க ஐயா!'' அவன் தாயும் கிளம்பினாள்.

''செல்வம் கையிலிருந்த பையில் ஸ்கூல் யூனி ஃபார்ம் டிரஸ் இருந்ததை எப்படி கண்டுபிடித்தாய் அண்ணா? ஐ.டி. கார்டில் இருந்து போன் நம்பர் எடுத்து அவங்க அம்மாவை கூப்பிட்டு... கம்ப்யூட்டர் வேகம் தான் உன் செயல்.''

''துணிச்சலான, சரியான முடிவை வேகமாய் எடுத்தால் தானம்மா தொழில் போட்டியில் ஜெயிக்க முடியும்,''

''நம்மால் முடியாது என்பதை உலகில் யாரோ ஒருவர் செய்து கொண்டிருக்கிறார் என்று அம்மா கூறுவதைப் போலவே நம்பிக்கையுடன் செயல்படுகிறாய்.''

"தாயைப் போல பிள்ளை."

"ஆமாம்! என் அம்மா போல் வருமா? அதனால் தா
பெற்றவர்களை ஏமாற்றி தவிக்க விட்டு ஓடிப்போகு
பெண்களை எனக்கு பிடிப்பதில்லை" என்றான் ரிஷி.

## 5

வெளிர் நீலத்தில் சின்னதாய் பூக்கள் பூத்திருப்ப
போல் எம்ப்ராய்டரி சேலையில் வெளிப்பட்ட அத்தையை
பார்த்தாள் மதுமதி.

"வாவ்! உங்க புடவை ரொம்ப அழகாய் இருக்கு அத்தை
நல்ல ரசனையுடன் மாமா புடவை வாங்கி தந்திருக்கிறா

"என்னது! மாமா ரசனையுடன் வாங்கி தந்ததா? அவ
இதுவரைக்கும் ஒரு புடவை கூட அவராக வாங்கி தந்த
இல்லை. எல்லாம் நான் வாங்குவது தான். கடமையே என்
பணத்தை மட்டும் தந்துவிடுவார். அவருக்கு என்னை
பற்றிய நினைப்பே இருக்குமோ? இல்லையோ? என்று கூ
சந்தேகம் வருவதுண்டு." அவர்கள் பேச்சை கேட்டு
கொண்டே பாட்டி அருகே வந்தார்.

"கணேசன் உன்னை கவனிக்காமல் அப்படி என்ன
வேலை செய்கிறான்? குழந்தைகளைப் பார்த்து அடிக்கடி
ஏக்கப் பெருமூச்சு விடுவதைப் பார்க்கிறேன். ஏம்மா ரெண்
பேரும் டாக்டர்கிட்டே போனீங்களா?"

"நீங்களாவது உங்க மகனுக்கு சொல்லுங்கள். குழந்



அவருக்கு இல்லை. எத்தனையோ தடவை சொல்லி அழுது புலம்பி பார்த்தாச்சு அவர் வரமாட்டேங்கிறார். எனக்குன்னு உறவுகாரங்க இருந்தால் அவரை கேள்வி கேட்பாங்க."

"வருத்தப்படாதே கற்பகம்! கடவுள் கண் திறப்பார்."

"அதுதான் கோயிலுக்கு போகலாம்னு கிளம்பினேன்."

"போயிட்டு வா அம்மா!" அவள் செல்ல.

"மதும்மா! உன் சுடிதாரை எடுத்துக்கிட்டு வா! அதிலே ஒரு சின்ன கைவேலை பாக்கி இருக்கு."

"பேசாமல் ஓய்வு எடுங்க அம்மம்மா!"

"சும்மா இருக்கும் மனம் சாத்தானின் களம் என்பார்கள். என்னால் வேலை செய்யாமல் இருக்க முடியாது."

"ரொம்ப வேலை செய்யாதீங்க! இராத்திரி முழுசும் கை, கால் வலியில் நீங்க தூக்கம் வராமல் புரள்வது எனக்கு நன்றாகத் தெரியும்."

"தூக்கம் வராததற்கு காரணம் வலியில்லை. நான் நல்லபடியாக இருக்கும் பொழுதே உன்னை ஒருவனிடம் ஒப்படைக்க வேண்டும்."

"சூ! எதுவும் பேசக்கூடாது. வாங்க உட்கார்ந்து டி.வி பாருங்க."

தன் பாட்டியை ஏறக்குறைய இழுக்காத குறையாய் அழைத்துவந்து டி.வி முன் அமர வைத்தாள். ரிமோட்டில் டி.வியை இயக்க..

"ஹாய் மது". சத்தம் கேட்டு வெளியே வந்தாள் மதுமதி. "வாங்க காவ்யா" அவளை உள்ளே அழைத்து வந்து தன் பாட்டியிடம் அறிமுகப்படுத்தினாள்.

''அம்மம்மா! இவங்க நான் அன்றைக்கு சொன்னேனே அந்த சீனியர் மாணவி. 'டெக்னிக்கல் திருவிழா' கல்லூரி களுக்கிடையில் நடக்கப் போகிறது. நானும், இவங்களும் சேர்ந்து தான் ஒரு புராஜெக்ட் செய்யப் போகிறோம்.''

''வாம்மா உட்கார்! டீ சாப்பிடுகிறாயா?''

''இருக்கட்டும் பாட்டி! நீங்க சீரியல் பாருங்கள்.''

''சீரியல் பார்க்கும் ஆசை இல்லை. என் பேத்திக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறேன்.''

''ஆகா! மாப்பிள்ளையை டி.வியில் தேடுகிறீர்களா? யா வேண்டும் மது? ஷாருக்கானா? அமீர்கானா?'' என மதுவை பார்த்து கண்சிமிட்டினாள் காவ்யா.

''சே! சே! கல்யாணமானவங்க எல்லாம் என் கண்மணிக்கு வேண்டாம்.''

அவர் சொல்லிக்கொண்டு இருக்கும் பொழுது பொதிகையில் தொழிலதிபருடன் நேர்காணல் ஆரம்பித் தது.

''மதும்மா! சீக்கிரம் பாரேன்; இந்த பையனை உனக்கு பிடித்திருக்கிறதா?''

மதுமதியும், காவ்யாவும் ஆர்வமுடன் எட்டிப் பார்த்தன டி.வியில் ரிஷியின் பேட்டி ஒலிபரப்பாகிக் கொண்டி ருந்தது. ''வாரே வா! பாட்டி உனக்கு சூப்பராய்தான் ஆளை செலக்ட் பண்ணி இருக்காங்க.''

''போங்க காவ்யா! வாராதீங்க!''

''ஹேய், கன்னமெல்லாம் பூத்துப்போச்சு! நிஜமா சொல்லு, இவரை உனக்கு பிடிக்கலேன்னு?''



''சூ! வாங்க நம்ம வேலையைப் பார்க்கலாம்.''

''ஏய் பேச்சை மாத்தாதே! இந்தியாவில் டாப்டென் பணக்காரர்களில் இவரும் ஒருவர். இவர் எலிஜிபுல் பேச்சிலர் வேறு: இவர் கிடைத்தால் உனக்கு அதிர்ஷ்டம் தான்.''

''என் பேத்திக்கு இராஜகுமாரனே வருவான். பெரிய பணக்காரன் தான் வரமாட்டானா?''

''உஷ்! பேட்டியை கவனிங்க'' - மது சொன்னவுடன் அனைவர் கவனமும் அதில் சென்றது.

''எல்லாரும் வெளி மாநிலத்திற்கும், வெளி நாட்டுக்கும் வேலைக்குத் தான் போவாங்க. நீங்க மட்டும் எப்படி தொழிற்துறையை தேர்ந்து எடுத்தீங்க?''

''தமிழர்கள் அறிவிலும், பண்பாட்டிலும் கலையிலும், நாகரீகத்திலும் ரொம்ப காலத்திற்கு முன்னரே சிறந்து விளங்கி இருக்காங்க. சங்க காலத்திலேயே ரோம், கிரேக்க தேசத்துடன் வாணிகம் செய்து இருக்காங்க. தமிழ் மன்னர்களின் ஆட்சி இல்லாததால் கல்வி வளர்ச்சி நின்று போய் பதினாலாம் நூற்றாண்டிற்கு பிறகு தமிழர்களுடைய வளர்ச்சியும் நின்று போய்விட்டது. இங்கு நடந்திருக்க வேண்டிய தொழிற்புரட்சி நடைபெறாமல் போய்விட்டது. நிறைய வருடங்கள் மற்றவர்களின் ஆதிக்கத்திலேயே இருந்ததால் நாம் தொழில் செய்ய முயற்சிப்பது இல்லை. எதற்கு 'ரிஸ்க்' என்று பின்வாங்கி விடுகிறோம். தனிமனித ஒழுக்கமும், நேர்மையும் தொழிலிலும் இருக்க வேண்டும். நாம் நிறைய பேர் தொழில் செய்ய முன்வர வேண்டும். எனக்கு ரோல்மாடல் என் பெற்றோர்கள் தான். அவர்கள்

தொழில் பண்பை அடுத்த தலைமுறைக்கு சரியாய் விளங்க வைத்திருக்கிறார்கள். நம்முடைய உயர்வையும், பெருமையையும் நாம் முதலில் உணர வேண்டும். நம்மை துச்சமாக எண்ணி எதிலும் இறங்க சுணங்கக் கூடாது.''

அவன் பேசிக்கொண்டே மதுவின் இதயத்தை தொட்டானோ? என்னவோ?

அவள் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள், காவ்யா அவளை மெல்லத் தொட்டாள். அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ''ஆள் உள்ளே போயாச்சா? அங்க ஒருத்தன் ஏற்கனவே கிறங்கிப் போய் கிடக்கிறான்!'' என்றவாறே அவளை உலுக்க...

''என்ன சொன்னீங்க?'' என அவள் கேட்க,

''கண் வழியாக இதயத்தில் நுழைந்தாயிற்றா? எனக் கேட்டேன்'' என்றான்.

''போங்க காவ்யா!''

''யாரோ வேலையை பார்க்கலாம் என்று சொன்னதாக நினைவு.''

''நாம் எதைப்பற்றி மாடல் செய்யப் போகிறோம்?''

''மெடிக்கல் சாஃப்ட்வேர் செய்யலாமா?''

''நான் ஒன்று சொல்லட்டுமா?''

''என்ன? தயங்காமல் சொல்.''

''செல்போன் சாஃப்ட்வேர் எழுதினால் என்ன?''

''நல்ல யோசனை! எல்லாரிடமும் செல் இருக்கிறது. அதனால் அது சம்பந்தமாய் எழுதினால் உபயோகமாய்



இருக்கும். ஆனாலும் இன்னும் வேறு ஏதாவது யோசிக்கலாமே?''

''எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?''

''சட்டென எல்லாரையும் கவரக்கூடியதாய், வளரக் கூடிய துறையாய் இருக்க வேண்டும்.''

''ரோபாட்டிக்ஸ் பற்றி செய்யலாமா?''

''வெரிகுட்! இணைய தளத்தில் செய்திகளை டவுன்லோடு செய்ய வேண்டும்.''

அவர்கள் பேசி கொண்டிருக்கும் பொழுதே பாட்டி இடையே நுழைந்தார்.

''மது, இந்த வாரக்கடைசியில் காஞ்சிபுரம் போக வேண்டும். உனக்கு நேரம் இருக்குமா? விடுமுறையில் வேறு எந்த வேலையும் இல்லையே?''

''ஏன் அம்மம்மா?''

''அங்கே கோவிலில் ஒரு பிரார்த்தனை இருக்கிறது. நேர்த்திக் கடனை செலுத்த வேண்டும்.''

''போகலாம்! சனிக்கிழமை கூட இந்த வாரம் வகுப்புகள் இருக்காது என்று சொன்னார்கள்.''

''மது, ஏதோ கம்ப்யூட்டரில் படிக்க வேண்டும் என்று சொன்னாயே! காவ்யாவை கேட்டால் நல்ல இடத்தைப் பற்றி சொல்வாளே!''

''என்ன கோர்ஸ் படிக்கவேண்டும் மது?''

''அவளுக்கு ஓவியம் என்றால் ரொம்ப இஷ்டம். சதா ஏதாவது வரைஞ்சுகிட்டே இருப்பாள், அதான்... அதைப் பற்றி படிக்க ஆசைப்படுகிறாள்.''

''ஆமாம் காவ்யா; எனக்கு அனிமேஷன் கோர்ஸ் படிக் மிகவும் ஆசையாய் இருக்கிறது.''

''கண்டதைக் சற்று பண்டிதன் ஆக ஆசைப்படுகிறா விடு! அவ்வளவு தானே! செஞ்சு முடிச்சிடலாம். இங் முன்னணி அனிமேஷன் கோச்சிங் சென்டர் இருக்கிற அதிலேயே நீ சேர்ந்து கொள்ளலாம். ஆனால் எல் வற்றிலும் கால் நுழைத்து படிப்பில் கோட்டை விட் விடாதே. படிக்கிற நேரம் பாதிக்காமல் நீதான் பார்த் கொள்ள வேண்டும்.''

''அதில் நான் வெகு கவனமாய் இருப்பேன், நேரத் சரியாக பிரித்து திட்டமிட்டு செயல்படுத்தினா பாதிவேலை முடிந்த மாதிரி தான்.''

''நல்லது, நம்பிக்கையுடன் செயல்படு.''

''காவ்யா நீங்க சுஜாதா சாரோட 'இனிய இயந்திர படிச்சிருக்கீங்களா?''

''வாவ்! வொண்டர்ஃபுல் ஸ்டோரி! ஜுனோவை என்னால் மறக்கவே முடியாது.''

''எனக்கு மிகவும் பிடித்த கதை அது. நாம் ஒரு இயந்தி மனிதன் சிறியதாக செய்யலாம். அவனை பேச வைக்கலா சிறு சிறு வேலைகளை செய்ய வைக்கலாம்.''

''சரி வா! உடனே செயலில் இறங்குவோம். இணை தளத்தில் தகவல்களை சேகரிக்கலாம். அப்படியே அனிமேஷன் வகுப்பிலும் நீ சேர்ந்து விடலாம்.''

இருவரும் பாட்டியிடம் சொல்லிவிட்டு கிளம்பின செல்லும் வழியில் ஸ்கூட்டியில் மாலினி எதிர்ப்பட்டாள்



''மாலினீ...'' மதுமதி கூப்பிட,

அவளை அங்கே மாலினி எதிர்பார்க்கவில்லை போலிருக்கிறது. சட்டென இருண்ட முகத்தை சமாளித்துக் கொண்டு இலேசாய் புன்னகைக்க முயற்சித்தாள்.

''ஹாய் எங்கேப்பா போகிறாய்?''

''போன் செய்ய....'' என்றவள் சுதாரித்து, ''என் புது செல்லிற்கு சிம்கார்டு போடப் போகிறேன்'' என்றாள்.

''பக்கத்தில் தான் உன் வீடு இருக்கிறதா?''

''நீ எங்கே இங்கே? அதைச் சொல் முதலில்.''

''பிரௌசிங் சென்டருக்கு வந்தோம்.''

''சரி, சரி. சீக்கிரம் வேலையைப் பார்த்துக் கொண்டு கிளம்பு. நான் புறப்படுகிறேன். எங்க வீட்டிற்கு ப்ரெண்ட்ஸ் யாரும் வருவது பிடிக்காது. அதனால் வருகிறேன் என்று சொல்லி விடாதே'' எனக்கூறி கிளம்பினாள்.

காவ்யா, மதுமதியைப் பார்த்து கேட்டாள்.

''இவளெல்லாம் உனக்கு ப்ரெண்டா? ரொம்ப திமிர்பிடித்தவள் போலிருக்கிறாள். உன்னை விட அவள் எதில் சிறப்பு? இருந்தும் இவ்வளவு ஆணவம் ஏன்? அவள் வீட்டிற்கு போக யாருக்கு அவ்வளவு ஆசை? ஒரு சீனியர் முன்னாலேயே இப்படி பேசிவிட்டுப் போகிறாளே?''

''விடுங்க காவ்யா. அவள் அப்படித்தான்! புல்லுக்கும் பூவிதழ் உண்டு, நெல்லுக்கும் உமியுண்டு. அவள் நிறை குறையோடத்தான் ப்ரெண்டா ஏற்றுக்கொண்டேன். அவள் கொஞ்சம் மூடி டைப்.''

‘‘முட்டாளாய் இருந்தாலும் பரவாயில்லை. ஆனா இப்படி அப்பாவியாய் இருக்காதே! இவளை நம்பாதே அப்புறம் உன் இஷ்டம்’’ எனத் தோளை குலுக்கி கொண்டாள். அதே நேரம் பாட்டி வீட்டிற்கு வந்த தங்க மகளிடம் கற்பகத்தின் ஏக்கத்தையும், வருத்தத்தையு பற்றிச் சொன்னார்.

‘‘கணேசா! கற்பகத்துக்கு குழந்தை இல்லேன்னு ரொம் ஏக்கம்.’’

‘‘அதற்கு கொடுப்பினை வேணும் பெரியம்மா!’’

‘‘அவ விருப்பப்படி டாக்டரை இரண்டு பேரும் போ பார்த்து பரிசோதனை செய்து கொள்ளலாமே!’’

‘‘சூ! விடுங்க பெரியம்மா! அவளை எங்கே காணோம் மதுமதி இன்னும் வீட்டிற்கு வரவில்லையா?’’

‘‘கற்பகம் கோயிலுக்குப் போயிருக்கிறாள். ம கம்ப்யூட்டர் கிளாஸில் சேர சென்றிருக்கிறாள். அவர்க வருவதற்கு முன் உன்கிட்ட பேசத்தான் காத்திருக்கிறே இப்ப மருத்துவம் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது. ஏ தயங்குகிறாய்?’’

‘‘பெரியம்மா, நான் ஏற்கனவே அம்மா வற்புறுத்த தாங்காமல் எல்லா டெஸ்டும் செஞ்சிட்டேன். என்னிட எந்த குறையும் இல்லை. இந்த விஷயம் தெரிஞ் கற்பகத்தின் அத்தை ஓர் உண்மையைச் சொன்னாங்க.’’

‘‘யாரு? கற்பகத்தை வளர்த்தவங்களா?’’

‘‘ஆமாம்; கற்பகத்திற்கு கர்ப்பப்பை சரியான வளர்ச் இல்லை. எதுவும் செய்ய முடியாது என்றும், இது பிற சொன்னா



அதை மறைச்சு கல்யாணம் பண்ணி கொடுத்துட்டாங்க. இந்த விஷயம் அவளுக்கே தெரியாது. யாரோ செய்த தப்பிற்கு அவள் என்ன செய்வாள்? அம்மாவிற்கு கூட இந்த உண்மை தெரியாது. கற்பகத்திடமும் நான் இதைச் சொல்லவில்லை. வாழ்நாள் முழுவதும் அவள் தாழ்வுணர்ச்சியிலேயே வாழ வேண்டியிருக்கும் என்று தான் உண்மையை மறைத்துவிட்டேன்.’’

பாட்டி எதுவும் சொல்லவில்லை. உணர்ச்சிப்பெருக்கில் கண்கள் நிறைய அவன் தலையை ஆதுரத்துடன் வருடி கைகளைப் பற்றி அழுத்தினார்.

கணினி வகுப்பில் அனிமேஷன் கோர்ஸிற்கான விவரப் பட்டியலை வாங்கிக் கொண்டு திரும்பி வரும் பொழுது காவ்யா தான் கவனித்தாள்.

‘‘ஹாய் ஸ்டீபன்! இங்கே எங்கே?’’

‘‘முக்கியமான வேலையாய் வந்தேன்.’’

‘‘வந்த வேலை முடிஞ்சிருச்சா? ஐ மீன்! பார்க்க வந்தவங்களை பார்த்திட்டியா?’’

‘‘ம்! பார்த்து கிட்டே இருக்கேன்.’’

‘‘கல்லூரியில் சுற்றியது போதவில்லையா?’’

‘‘எங்கே? தரிசனம் கிடைக்க திருப்பதிக்கு மேல் காத்திருக்க வேண்டியிருக்கு.’’

‘‘சும்மா! வண்டி எடுத்துக்கிட்டு அலையாதே; நல்லதில்லை. கவனத்தை செமஸ்ட்டரில் வை.’’

மதுமதி தனக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லாதது போல் அவர்கள் பேசுவதில் கவனத்தை செலுத்தாமல்

வழியில் செல்லும் வாகனங்களை சற்று ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஏன் உங்க பார்ட்னர் பேசமாட்டார்களா?''

''இளவரசிக் கூட அவ்வளவு சுலபத்தில் பேச முடியாது.''

''எங்கே இளவரசியைச் சுற்றி ரதகஜப் படைகளைக் காணோம்?''

''அதுதான் நான் இருக்கிறேனே!''

''ஆகா! இது மிக ஆபத்தான விஷயம் ஆயிற்றே?'' என்றவன் வழிவிட்டு ஒதுங்கி நிற்க காவ்யா மதுமதியுடன் கிளம்பினாள். அவர்கள் சென்று மறையும் வரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான். இவள் என்ன செய்தால் தன்னை விரும்புவாள்? எத்தனையோ முறை சுற்றி சுற்றி வந்தாலும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஒதுங்கி ஒதுங்கி ஓடிவிடுகிறாளே! நீ இப்படி இருக்க இருக்கத்தான் எனக்கு ரொம்ப பிடிக்கவே செய்கிறது! என்றெல்லாம் அவன் தனக்குத் தானே பேசிக்கொண்டான்.

## 6

''என்ன ரேஷ்மா, இன்னிக்கு ரொம்ப ஜாலியாய் இருப்பது போல் இருக்கிறது?'' என மாலினியிடம் வினவினாள் மதுமதி.

''அதுவா? அவள் ஊருக்கு போகிறாள்.''



''எங்கே? சென்னைக்கா?''

''ம்ஹூம்! அவள் ஆளைப் பார்க்கச் செல்கிறாள்.''

''என்னப்பா சொல்கிறாய்?''

''ஆமாம்! எங்க ஸ்கூல் மேட்! சீனியர்! பிரபலமான குடும்பம். அப்பவே ரொம்ப டீப் லவ். இரண்டு பேர் வீட்டிற்கும் விஷயம் தெரியாது. அதனால் உள்ளூரில் சந்திக்க மாட்டார்கள். யாருக்கும் தெரியாமல் வெளியூரில் சந்தித்து கொள்வார்கள்.''

''ஏன்? பயந்து பயந்து வாழணும், சந்திக்க வேண்டும்? வீட்டில் சொல்லிட வேண்டியது தானே?''

'நீ என்ன உலகமே புரியாதவளா?' என்பது போல் அவளைப் பார்த்தாள். பின் ''கண்டிப்பாய் இருவர் வீட்டிலும் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இருவரையும் பிரித்து விடுவார்கள். சமயம் பார்த்து அவர்களுக்குத் தெரியாமல் திருமணம் செய்து கொள்ள வேண்டும். பின் தான் தெரிவிக்க வேண்டும்.''

''சே! சே! தப்புப்பா. அம்மா, அப்பாவை ஏமாற்றக் கூடாதப்பா! அவங்க கிட்டே உண்மையைச் சொல்லிட ணும்.''

''அந்த த்ரில்லிங் உனக்குப் புரியாது. நாளை நீ எப்படி என்று நாங்கள் பார்க்கத்தானே போகிறோம்!''

''கண்டிப்பாக பாருங்கள்! நான் வீட்டில் எந்த உண்மையையும் மறைப்பதில்லை.''

''என்ன மறைப்பதில்லை?'' எனக் கேட்டவாறே வந்த ரேஷ்மா மாலினியிடம் ''இவளை எவன் பார்த்தாலும் லிட்டர் கணக்கில் வழிகிறான்'' என்றாள்.

''கல்லூரிக்கு அருகில் ஒரு சென்டர் இருக்கிறது'' என்றவாறே அங்கே ஓட்டினான். உள்ளே சென்ற மதுமதி பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பும் பொழுது....

எதிரில் முட்டுவது போல் ஒருவன் வந்த நின்றான்.

''ஹாய் பியூட்டிஃபுல்! அரைமணிநேரம் நீ இங்கு என்னுடன் இருந்தால் ஆயிரம் ரூபாய் தருகிறேன்.''

''சீ!'' புயல்போல கதவை தள்ளிக்கொண்டு மதுமதி வெளியே வந்தாள். வெளியே நின்ற வாட்ச்மேனிடம் ''உள்ளே ஓர் ஆள் வந்து தப்புதப்பாய் பேசுகிறான்,'' என,

''அப்படி எல்லாம் இருக்காதே!''

அதற்குள் உள்ளிருந்த ஆள் வெளியே வந்து வாட்ச்மேனைப் பார்த்து கண்சிமிட்டி, ''நம்ம ஆளை இன்னும் காணோம். ஓர் அரைமணி நேரம் கம்பெனி கொடுக்கச் சொன்னால் மருண்டு ஓடி வந்து விட்டார்கள். கல்லூரி பெண்ணாய் சகஜமாய் பழக முடியவில்லை'' என்றான்.

''இல்லை....'' அவள் சொல்லி முடிப்பதற்குள் வாட்ச்மேன் குறுக்கிட்டான். ''காலேஜ் பசங்க, ஜாலியாய் கலாய்ப்பாங்க. அதைப் போய் தப்பா எடுத்துக்கிட்டீங்களா! பணம் எடுத்திருந்தால் சீக்கிரம் கிளம்புங்க.''

மதுமதி கோபத்துடன் சென்று ஆட்டோவில் ஏறினாள்.

''என்னடா?'' என பாட்டி கேட்டார்.

மதுமதி நடந்ததைக் கூற,

''கர்மம் பிடிச்சவங்க! ஏ.டி.எம். சென்டர் என்ற பெயரில் [illegible] இடம் தர்றாங்க. அதை



போட்டோ பிடிச்சு வேறு தனியாய் பணம் சம்பாரிக்கிறாங்க,''

''எப்படி? யாரும் இதை தட்டிக் கேட்பது இல்லையா?''

''இது எல்லாம் பெரிய இடத்து விவகாரம்மா!''

''இப்படி எல்லாரும் ஒதுங்கிப் போனால் நாட்டில் நல்லதே நடக்காது.''

''என்னம்மா செய்யறது? யாரு தைரியமாய் புகார் கொடுக்கிறார்கள்? நமக்கு எதுக்கு வம்புன்னு ஒதுங்கி போய்விடுகிறார்கள்.''

''ஆனால் நாங்கள் அப்படி இல்லை! நேராய் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டு! புகார் கொடுக்கிறோம்.''

''பாட்டியம்மா! வயசான காலத்தில் வேண்டாத வேலை உனக்கு எதுக்கு?''

''உண்மையை காப்பாற்ற சிறு முயற்சியும் செய்யாமல் போனால் உலகமே வறண்டு போய்விடும்.''

''அப்ப நீ ரிஸ்க் எடுக்க தயார் ஆகிட்டே?'' என்றவாறே காவல் நிலையத்திற்கு வண்டியை செலுத்தினான். மதுமதியும், அவள் பாட்டியும் உள்ளே நுழைந்த பொழுது பத்திரிகை நிருபர் ஒருவரும் அங்கே வந்தார். அவர்கள் புகாரை கேட்டதும் அந்த நிருபர்,

''இவர்கள் சொல்வது உண்மை தான். காலேஜ் பசங்க தப்பு செய்ய இடம் கொடுத்து அதை கேமராவில் படம் எடுத்து செல்போனிற்கு அனுப்புகிறார்கள்.''

''இந்த விஷயம் இப்பொழுது தான் எங்கள் காதிற்கு வருகிறது. புலனாய்வு பத்திரிகைகள் அவ்வப்போது

சிலவற்றை எங்களுக்கு தெரியப்படுத்துகின்றன. பெரியம்மா, நீங்களும் உங்கள் பேத்தியும், கிளம்புங்க, விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கிறோம்.'' அவர்கள் இருவரும் கிளம்பினர். மறுவார புலனாய்வு பத்திரிகையில் அங்கு நடந்த நிகழ்ச்சியும், எடுக்கப்பட்ட நடவடிக்கையும் கட்டுரையாக வந்திருந்தது. சிலர் கைது செய்யப்பட்டு முகத்தை மறைத்தவாறு புகைப்படத்தில் நின்றிருந்தனர்.

நடந்த நிகழ்ச்சியை மதுமதி மாலினியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். ரேஷ்மா சுரத்தில்லாமல் மேசையில் தலை சாய்த்து இருந்தாள்.

''என்ன ரேஷ்மா லிப்ஸ்டிக்கிற்கு பதிலாக ஃபெவிஸ்டிக் போட்டுக்கிட்டு வந்திட்டியா?'' என கிஷோர் கிண்டலடித்தான்.

''ஹேய் என்னாச்சுப்பா? ஏன் டல்லடிக்கிறாய்? உடம்பு சரியில்லையா?'' மதுமதி கேட்டாள்.

அவள் பதில் எதுவும் சொல்லவில்லை. கண்கள் சிவந்திருந்தன.

''அழுதியா?''

''இல்லை ஏதோ அலர்ஜி.''

அப்போது காவ்யா அங்கே வந்தாள்.

''வாங்க வணக்கம்! உங்க பேட்ச் அண்ணாச்சி ஒருத்தர் ஐ.சி.யூவிலே இருக்கிறாராமே? என்ன ஆச்சு?''

''ஆல் இண்டியா ரேடியோன்னு உன்னை சீனியர்ஸ் சொல்றது சரியாய் தான் இருக்கிறது கிஷோர்.''



''என்னை விடுங்க விஷயத்தை சொல்லுங்க.''

''லவ் பெய்லியர். பாய்சன் எடுத்துட்டான்.''

''எல்லாம் முட்டாள் பசங்க. சாகிறதுதானா எல்லாத்துக்கும் வழி? யோசிக்கவே மாட்டாங்களா?''

''சே!சே! பொண்ணுங்க எல்லாம் சுத்த மோசம். இதயமே இருக்கிறது ஒண்ணே ஒண்ணு. அதைப் போய் உடைச்சுடறாங்களே! வேண்டுமானால் 206 எலும்பில் ஏதாவது ஒன்றை உடைச்சுக்கலாம்ல?'' கிஷோர் பேச,

சீரியஸான சூழ்நிலை மாறி கலகலப்பானது அப்போது தான் காவ்யாவின் கையில் இருந்த பத்திரிகையை மதுமதி பார்த்தாள். அது ஒரு புகழ்பெற்ற பிஸினஸ் பத்திரிகை. அட்டைப் படத்தில் ரிஷி வசீகரித்துக் கொண்டிருந்தான்.

''உன் ஆளை பார்த்தியா! நீ கனவு காண உள்ளே நிறைய விஷயம் இருக்கு! படிச்சிட்டு மயங்கிடாதே. நம்ம ப்ராஜெக்ட்டை கொஞ்சம் பாரு.''

மதுமதியின் கண்ணும் முகமும் அவளறியாமல் மலர்ந்து போயின. அலாதியாய் ஜொலித்த முகத்தை அங்கிருந்த அனைவரும் பார்த்து ஒரு வினாடி மெய்மறந்து போயினர்.

மனசு மலர்ந்தால் முகம் இத்தனை அழகாகுமா? ஏற்கனவே இருந்த அபரிதமான பேரழகு இன்னும் கூடி போயிற்று! அவளைப் பார்த்த எந்த மனமும் தளும்பித் தான் போகும். எதேச்சையாகவோ அல்லது காரணத்தோடவோ வந்த ஸ்டீபன் அவளைப் பார்த்து அப்படியே திகைத்து நின்றான்.

# 7

மந்திரக்கயிற்றால் கட்டப்பட்டவன் போல் ஸ்டீபன் மதுமதி இருக்குமிடம் எல்லாம் சுற்றி சுற்றி வந்தான். ஆரம்பத்தில் பெரிதாக எடுத்துக்கொள்ளாத மதுமதி வருத்தப்பட சங்கடப்பட ஆரம்பித்தாள்.

''ஐயோ கடவுளே! இந்த தொந்தரவில் இருந்து காப்பாற்று''என தன்னையறியாமல் வாய்விட்டே சொல்லி

அருகில் இருந்த மாலினி கேட்டாள்.

''ஏன் மது? அவனை உனக்கு பிடிக்கவில்லையா?''

''எனக்கு எதற்கு பிடிக்க வேண்டும்? இப்படி எங்கு சென்றாலும் பின்னால் வருவது எரிச்சலாய் இருக்கிறது. என் சுதந்திரத்தை, சுவாசத்தை தடுப்பது போல் இருக்கிறது.''

''அதை அவனிடமே சொல்லிவிட வேண்டியது தானே?''

''சொன்னால் பலன் இருக்குமா? என்று தெரியவில்லை. காவ்யாவிடம் சொல்லித்தான் இதை தடுக்க வேண்டும்.''

'உனக்கென்று இருப்பவனை விட்டு என் வாழ்வில் ஏனடி உன் மூக்கை நுழைக்கிறாய்? ஆனால் நான் சும்மா இருக்க மாட்டேன். நீ மட்டும் என் வழியில் குறுக்கிட்டால்.... மிகவும் கஷ்டப்பட்டு கதறுவாய்.''

''ஏய் மாலினி! எந்த உலகத்தில் இருக்கிறாய்?'' என மதுமதி அவளை உலுக்கினாள்.



''ஒன்றுமில்லை! ரேஷ்மா ரொம்ப அப்செட்டாய் இருக்கிறாள். என்னவென்று தெரியவில்லை. அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''ஆமாம்! யாருடனும் சரியாய் பேசுவதில்லை. நீங்க இரண்டு பேரும் சின்ன வயதிலிருந்து தோழிகள் தானே? விடுதிக்கு சென்று அவளைப் பார்த்து பேசி பார்க்க வேண்டியது தானே?''

''என்ன அவள் பாய் பிரெண்டை பார்க்க முடியாமல் போயிருக்கும். அதனால் மூடு அவுட் ஆகியிருப்பாள். இரண்டு நாட்களில் சரியாகி விடுவாள்.''

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது,

ரேஷ்மாவுடன் கிஷோர் வந்தான். அவன் தான் வளவள என்று பேசிக்கொண்டு இருந்தான்.

''என்ன கிஷோர்? ரொம்ப ரேஷ்மாவை துதிபாடி கொண்டு வருகிறாயா?''

''எங்கே? என்ன தான் ஐஸ் வைத்தாலும் செமஸ்டர் எக்ஸாம்ல முன்னால் உட்கார்ந்து இருக்கிற ரேஷ்மா ஒரு அடிஷனல் சீட்டைக் கூட நமக்கு காட்ட மாட்டாள். நமக்கு நாமே திட்டத்தில் நாமே ஏதாவது பிட்டை ரெடி பண்ணனும் போல் இருக்கு.''

''மாட்டினால் ஆப்புதான்! ஞாபகம் இருக்கட்டும்!''

''இதுக்கு பேர்தான் சொந்த செலவில் சூன்யம் வச்சுக்கிறது'' என ரேஷ்மா கூற,

''அப்பா! ஒரு வழியாய் பேசிவிட்டாய்! ஒரு சின்ன கேள்வி. தமிழ் மொழியில் வெளியான முதல் சைலன்ட் சினிமா எது?''

"இரு, இரு. அது சைலன்ட் படம்-னா தமிழ்ப்படம்-னு உனக்கு எப்படித் தெரிஞ்சது?" என மதுமதி வார...

"அதானே?" என ரேஷ்மா கூற கிஷோர் தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடினான்.

காவ்யாவும், மதுமதியும் 'டெக்னிக்கல் திருவிழாவிற்கு' தயார் ஆகி கொண்டிருந்தனர். இணையதளம், நூலகம், எலெக்ட்ரானிக்ஸ் பொருள்கள் கடை என மாறி மாறி அலைந்தனர். ஒரு வழியாய் வெற்றிகரமாய் அவர்கள் செயல்திட்டத்தை முடித்தனர். பின் அதன் திட்ட விளக்கத்தை அனுப்பி வைத்தனர். அவர்களது பிராஜெக்ட் பிரசண்ட்டேஷனுக்காக தேர்ந்து எடுக்கப்பட்டிருந்தது.

காவ்யா மதுமதியை தேடி வந்தாள்.

"ஹேய்! நம்ம மாடலுக்கு பரிசு கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது." என உற்சாகமாய் சொன்னாள். பிறகு இரகசியக்குரலில் "உனக்கொரு சஸ்பென்ஸ் இருக்கிறது தெரியுமா? நம் மாதிரிகளை தேர்ந்தெடுக்கும் டீமின் தலைவர் உன் ஆள்தான். உன் கனவில் கண்டவரை நேரில் பார்த்து பரவசப்படப் போகிறாய்!"

மதுமதிக்கு படபடப்பாய் இருந்தது. அவளே ஒரு கவிதையாய் மாறி போயிருந்தாள். அவர்கள் 'ரோபோ' ஒன்றை வடிவமைத்து இருந்தனர். "சூரிய சக்தியில் இயங்குகிற ரோபோ – அதுவும் சங்கத்தமிழ் பேசும் ரோபோ. சங்கத்தமிழ் நூலான புறநானூற்று பாடல்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வரிகளை கேட்கின்ற கேள்விகளுக்கு தகுந்தாற்போல் சொல்லியது.



"எந்திரன்."

"உனது ஊர்?"

"யாதும் ஊரே யாவரும் கேளிர்."

"எது நல்ல நாடு?"

"எவ்வழி நல்லவர் ஆடவர்: அவ்வழி வாழிய நிலனே."

"ஜெயிப்பது எப்படி?"

"தீதும், நன்றும் பிறர் தர வாரா."

இப்படி பல கேள்விகள் கேட்க எந்திரன் சங்கத்தமிழ் புலவனாய் ஒரு வரிக்கவிதையை எடுத்து விட அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. பார்த்த ஒவ்வொருவரும் தங்கள் கருத்துகளை பதிவு செய்து சென்றனர்.

புது லெக்சரர் அந்த ஹாலிற்குள் வந்தார்.

"மதுமதி! உன்னை எங்கே எல்லாம் தேடுவது?"

"ஏன் சார்?"

"'பெண்கள்' – பத்திரிகையிலிருந்து 'இளம் தேவதை'ப் போட்டிக்கு வந்திருக்கிறார்கள். நீ போய் கலந்து கொள்."

"ம்ஹூம்! வேண்டாம்."

"இது அழகி போட்டியில்லை! ஜஸ்ட் எ மினிட்டில் திறமையை வெளிப்படுத்தும் போட்டி! போய் கலந்து கொள்."

அவள் சற்று தயங்க காவ்யா அவளை வற்புறுத்தி உற்சாகப்படுத்தி அனுப்பி வைத்தாள். ஆடிட்டோரியத்திற்கு சென்று முதலில் பெயரை பதிவு செய்...

வினாடிவினா நடக்கும் இடத்திற்குச் சென்றாள். விளையாட்டு, பொது நிகழ்ச்சிகள், இலக்கியம், பத்திரிகை அறிவியல், அரசியல், வரலாறு, நாட்டுநடப்பு எல்லா வற்றையும் அடக்கியதாய் வினாடிவினா இருந்தது. மதுமி கண் இமைக்கும் நேரத்தில் பட்பட்டென்று கரவொலி கிடையில் பதிலளித்தாள். அடுத்து ஒரு விஷயத்தை ஆதரித்து 3 நிமிடங்களும் பின் அதே விஷயத்தை எதிர்த்து 3 நிமிடங்களும் பேச வேண்டியிருந்தது. ''பெண்கள் வேலைக்கு செல்ல வேண்டும் - வேண்டாம்'' ''பெற்றோர்கள் நிச்சயிக்கும் திருமணம் நல்லது - கெட்டது'' என்றும் இரு தலைப்புகள் கொடுத்திருந்தார்கள்.

நடுவர்களே அசந்து போகும் அளவிற்கு பேசி அசத்தி விட்டாள். ஒழிய, முறையாக கற்றுக் கொண்டதில்லை மனம் கவர்ந்த பாடல்களை அவ்வப்பொழுது ரசிகர்கள் இல்லாமல் தானாக பாடி மனதை உற்சாகப்படுத்தி கொள்வது மட்டுமே உண்டு.

'முயற்சி செய்யாமல் தோற்பதை விட முயன்று வெல்ல முடியாமல் போவது மதிப்பான செயல். அது மறுமுறை ஜெயிக்க பாடம் கற்றுக் கொடுக்கும்!' என்ற முடிவுடன் பாடச் சென்றாள். பாரதியாரின்

**''சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா**
**சூரிய சந்திரரோ?**
**வட்டக்கரிய விழி - கண்ணம்மா**
**வானக் கருமை கொல்லோ?**
**பட்டுக் கருநீலப் புடவை**
**பதித்த நல் வயிரம்**
**நட்ட நடு நிசியில் - தெரியும்**



அனுபவித்து பாடினாள். இயல்பாய் அமைந்த இனிய குரலில் எதையும் ஆழ்ந்து கவனித்து கிரகிக்கும் புத்தி கூர்மையால் சிறப்பாய் அருமையாய் பாடியவளை,

''எத்தனை வருடமாய் பாட்டு கற்றுக் கொள்கிறீர்கள்?'' என்றனர்.

''இல்லை. கேள்வி ஞானம் தான்.''

''சினிமா பாட்டு பாடுவீர்களா?''

''காற்றில் வரும் கீதமே என் கண்ணனை அறிவாயா?'' எனப் பாட... ஹாலே நிசப்தமாய் ரசித்தது.

''உங்கள் பொழுதுபோக்கு பாடல்கள் கேட்பதா?''

''ம்ஹூம்! ஓவியம் வரைவது.''

''என்னை வரைய முடியுமா?''

''ஓ!'' என்றவள் நிமிடத்தில் கார்ட்டூனாய் சொன்னவரை வரைந்து காட்ட...

''வாரே வாவ்! சகல கலா வல்லி தான்! வேறு என்ன தெரியும்?''

''அவ்வப்போது கவிதை எழுதுவேன்.''

''தமிழா? மரபுக்கவிதையா? புதுக்கவிதையா?''

''இரண்டும் இல்லை. ஆங்கிலத்தில் எழுதுவேன்.''

''எங்கே ஒரு கவிதை சொல்லுங்கள் பார்க்கலாம்.''

இயற்கையின் வசீகரத்தை, உயர்வை, அமைதியை, கோபத்தை வர்ணித்து அழகாய் ஆங்கிலத்தில் கவிதை சொன்னாள்.

கேட்டுக் கொண்டிருந்த ரேஷ்மாவால் தாங்க முடியவில்லை.

'இவள் எப்படி இத்தனை அழகாய், அருமையாய் கவிதை சொல்கிறாள்? அதுவும் ஆங்கிலத்தில்? பட்டிக்காட்டு பள்ளியில் படித்தவளுக்கு ஏது இந்த அறிவு?'

''சொந்த சரக்கா? எங்காவது சுட்டதா?''

என வாய்விட்டே கேட்டுவிட்டாள்.

''நீயே ஒரு தலைப்பு சொல்; நான் கவிதை சொல்கிறேன்;'' என வருத்தப்படாமல் மதுமதி கூற,

''லிமரிக்....'' என அவள் தொடங்கியதும்.

''தமிழில் நான்கு வரி வெண்பா மாதிரி ஆங்கிலத்தில் ஐந்து வரிகள் 'லிமரிக்' என கவிதை வடிவம் உண்டு. அதில் ஒரு கவிதை சொல்லட்டுமா?'' எனக் கேட்டு மதுமதி சொல்ல...

ரேஷ்மா மயக்கம் போடாத குறைதான்.

அதற்குள் டெக்னிக்கல் திருவிழாவில் நடுவர்குழு வந்து பார்வையிட்டு சென்றிருந்தனர். அதற்கு மறுநாள் தான் முடிவு அறிவிக்கப்பட இருந்தது.

இங்கோ,

''ஆள்பாதி, ஆடை பாதி என்பார்கள். நாளைக்கு நீங்கள் ஆடையுடுத்தி வருவதில் இருந்து உங்கள் தனித்துவம் நிர்ணயிக்கப்பட்டும் முடிவு அறிவிக்கப்படும்,'' என்று கூற மதுமதி கிளம்பினாள், வீட்டில் தன் பாட்டியிடம் நடந்ததை கூறினாள்.



''என் கண்ணே! தங்க மயிலி! நீ ஜெயிக்காவிட்டால் வேறு யார் ஜெயிப்பார்கள்?'' என்று அணைத்துக் கொண்டார்.

''அம்மம்மா! நாளைக்கு என்ன டிரஸ் போடட்டும்?''

''அழகாய் புடவை கட்டிக்கொள்.''

''ஆனால், என்னிடம் புடவையே இல்லையே அம்மம்மா!''

''என் புடவை எதுவும் நீ கட்டிக்கொள்வது போல் இல்லையே கண்மணி!''

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கற்பகம் சொன்னாள்.

''தப்பாக எடுத்துக்காதீர்கள்! என் புடவையை நான் யாருக்கும் கட்டிக் கொள்ள கொடுக்கமாட்டேன்; நானும் அடுத்தவர் பொருளை தொட மாட்டேன்.''

''அதனால் என்னம்மா?''

''அத்தை! என்னிடம் மிக அழகான சுடிதார்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை அணிந்து கொள்கிறேன்.''

வாசலில் ஏதோ ஆளரவம் கேட்டது. கற்பகம் வெளியே சென்று எட்டிப் பார்த்தாள். யாரையும் காணவில்லை. 'அவர் செருப்பு இங்கே கிடக்கிறது. வந்தது அவரா? பின் எங்கே காணோம்? வண்டி சத்தம் கூட கேட்கவில்லையே' என எண்ணிக் கொண்டாள்.

''யார் அத்தை?''

''ஒருவரையும் காணோம்'' என்றாள் யோசனையோடு. பின் ''நீ முன்னரே சொல்லியிருந்தால் ஒரு புது புடவை வாங்கி கொடுத்துவிட்டு பணம் வாங்கி கொண்டிருப்பேன்,'' என்றாள் கற்பகம்.

"ச்சோ! அதனால் ஒன்றுமில்லை. நீங்கள் சங்கடப்ப
வேண்டாம்."

"இதில் எனக்கென்ன சங்கடம்? ஏதோ இனியாவ
முன்யோசனையுடன் செயல்படுவாய் என்று சொன்னே
உனக்கும் நான் எடுக்கும் டிசைன் எல்லாம் ரொம்
பிடிக்கும். இங்கே இருநூறு, முந்நூறு ரூபாய்க்கே நல்
சேலைகள் கிடைக்கும். நான் அறுநூறு, எழுநூறுக்
குறைஞ்சு புடவை எடுப்பதில்லை. உன் மாமா பண
கொடுப்பதுடன் சரி; அவருக்கு இதற்கெல்லாம் நேர
இருப்பதில்லை."

சாப்பிட்டுவிட்டு படிப்பதற்காக மதுமதி ஹாலில் அம
பாட்டியும் அவள் அருகில் வந்து அமர்ந்தார்.

"நீங்க போய் படுங்க அம்மம்மா!"

"இருக்கட்டும்; நீ படிடா!"

"உங்களுக்கு லைட் வெளிச்சம் தொந்தரவாய் இருக்கு
என்று தான் இங்கேயே படிக்கிறேன். நீங்க படுங்க."

"வேண்டாம்! நீ அங்கேயே வந்து படி. எனக்கொன்று
தொந்தரவு இல்லை."

இருவரும் உள்ளே சென்று அரைமணி இருக்கும். கத
தட்டப்பட்டது. திறந்தால்....

"என்ன மாமா?"

கையிலிருந்த அட்டைப்பெட்டியை நீட்டினார். வாங்
திறந்தால்.... ஆரஞ்சும், சிவப்புமாய் பிரிண்டட் சில்
புடவை ரெடிமேட் ப்ளவுஸுடன் கண்ணை பறித்தது.



# 8

கற்பகம் முகத்தைப் பார்க்க மதுமதிக்கு தர்மசங்கடமாய் இருந்தது. அவள் மனநிலை புரிந்து தான் இருந்தது. இரவில் மாமா கொடுத்த புடவையை கற்பகம் அறியவில்லை என்பதை காலையில் தான் தெரிந்து கொண்டார். அதனால் எந்த பிரச்சனையும் வரக்கூடாது என்பது தான் இருவரின் எண்ணமாய் இருந்தது. எனவே புடவையுடன் கற்பகத்திடம் மதுமதி சென்றாள்.

"அத்தை இந்தப் புடவை உங்களுக்கு பிடித்திருந்தால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என.

'இராத்திரி சத்தமில்லாமல் புடவையை வாங்கி வைத்துக் கொண்டு காலையில் என்ன நடிப்பு?'

"அவளிடம் நிறைய புடவை இருக்கிறது. உனக்காக மாமா முதல் முதலாய் வாங்கித் தந்த புடவையை பத்திரமாக வைத்துக்கொள்."

'நான் மட்டும் அடுத்தவளுக்கு கொடுத்ததை வாங்கிக் கொள்பவளா? அவள் பிச்சை இங்கே யாருக்கு வேண்டும்?'

மதுமதி செய்வதறியாது கற்பகத்தின் முகத்தைப் பார்க்க... கடலுக்கு உள்ளே குமுறிக் கொண்டிருக்கும் எரிமலையாய் அமைதியாய், நிசப்தமாய் இருந்தாள். பாட்டி கணேசனிடம் வந்து பணத்தை நீட்டினார். "என்ன பெரியம்மா இது?"

"புடவைக்கு பணம்."

''ஏன் பெரியம்மா என்னை இப்படி அந்நிய ஆக்குகிறீர்கள்? நீங்கள் உருட்டி உருட்டித் தந்த உருண்டை உணவிற்கு இந்தப் புடவை ஈடாகுமா? நீ பணம் தந்துவிட்டு இங்கு தங்க வந்த பொழுது ஏன் வாங் கொண்டேன் தெரியுமா? உங்கள் மனத்தில் எந்த கௌரவ குறைச்சலும் ஏற்படக் கூடாது என்று தான். மேலு மதுமதியின் திருமணத்திற்கும் அது பயன்படுமே என் தான்!'' என்றவன் தொடர்ந்து.

''மது சீக்கிரம் கிளம்பி வா. உன்னை பஸ் ஸ்டாப் இறக்கி விட்டு செல்கிறேன்.''

''இல்லை மாமா! காவ்யா ஸ்கூட்டியில் வருகிறே என்றார்கள். நான் அவர்களுடன் செல்கிறேன்.''

கணேசன் கிளம்பி விட, மதுமதி கல்லூரிக்கு தயா வெளியே வந்தாள். கற்பகம் தன் அறையை விட்டு வர இல்லை. பாட்டி தான் தன் கண்மணியை உச்சி முகர் ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

மதுமதி வழக்கம் போல் கல்லூரி பேருந்தில் கல்லூரி அடைந்தாள். மாலினிக்கு கோபம் அடக்க முடியாம பெருகிக் கொண்டிருந்தது. 'ரிஷியுடன் காரில் கல்லூரிக்கு செல்லலாம்' என கனவு கண்டு கொண்டிருந்தால் அவனோ வேறு வேலை இருக்கிறது. சற்று தாமதமாகத்தா கல்லூரிக்கு கிளம்புவேன்' எனக் கூறிவிட.

வருணோ ''நீ கிளம்பு'' என அவளை அனுப்பி வைத் விட்டான். அவள் சீக்கிரம் கல்லூரிக்கு செல்லாவிட்டா என்ன தட்டுக்கெட்டுப் போகிறது? என பொரு கொண்டிருந்த நேரத்தில் மதுமதி கல்லூரியை அடைந்தா



ஆரஞ்சும் சிவப்பும் கலந்த டபுள் ஷேடு பிரிண்டட் புடவையில் அதற்கு பொருத்தமாய் கழுத்திலும், முதுகிலும் கைகளிலும் வர்ணஜாலம் காட்டும் மின்னும் கற்கள் பதித்த ப்ளவுஸ், மெல்லிய செயினில் ஒற்றை ஆரஞ்சு வண்ணக்கல் பதிக்கப்பட்ட பெண்டன்ட் திராட்சை கொத்தாய் காதில் ஆடிய ஆரஞ்சு வண்ண டிசைனர் காதணி, பிறை நெற்றியின் அழகை கூட்டுவது போல் அமைந்த ஆரஞ்சு வண்ணப் பொட்டு; சிறிதளவு முடியெடுத்து மேலே மட்டும் போடப்பட்ட பொருத்தமான பேண்டு, ஒற்றை ரோஜா, காற்றில் அலை பாய்ந்த கூந்தல் கூட அவள் மென்மையை, இனிமையை எடுத்துக் காட்டியது. வைத்த கண் எடுக்காமல் எல்லாரும் அவளை பார்த்தனர். அனைவரின் பார்வையையும் உணர்ந்தவளுக்கு மிகவும் வெட்கமாய் இருந்தது.

எதிரே காவ்யா வந்தாள்.

''வாவ்! அம்மாடி தாங்க முடியலை'' என மயங்குவது போல் பாவனை செய்ய,

''சூ! ப்ளீஸ் காவ்யா...''

''காட்! இது கிண்டல் இல்லம்மா; நிஜம், யு லுக் வெரி ப்ரெட்டி அன்ட் சார்மிங்.''

''தேங்க் யூ.''

''எத்தனை பேர் உன்னைப் பார்த்து ஜொள்ளு விடப் போறார்களோ? ஹேய் கண்ணம்மா! உனக்கு ஒரு குட் நியூஸ் வச்சிருக்கேன்.''

''என்ன? சொல்லுங்களேன்.''

''நம்ம மாடலுக்கு பரிசு கிடைச்சிருக்கு''என அவ
கைகளை நீட்டி அதை தன் இரு கைகளால் தட்
குதூகலித்தாள்.

''ஆடிட்டோரியத்திற்கு தானே செல்கிறாய்? இ
தேவதைப் போட்டியில் நீ கலக்கி விட்டாயாமே? உனக்
ஒரு ரசிகர் மன்றமே உருவாகி இருக்கிறது.''

''சே! ரொம்ப வாராதீங்க.''

''ஹேய்! என்னை நம்புப்பா. உன் டூப்ளிகேட் - டூபாக்
ப்ரெண்ட்ஸ் சொல்வதை எல்லாம் அப்படியே நம்புகிறா
நான் உண்மையைச் சொன்னால் கேலி செய்வதா
சொல்கிறாய்?''

தூரத்தில் ஸ்டீபன் வருவதை மதுமதி பார்த்தாள்.

''காவ்யா! நான் செல்கிறேன்'' என சிட்டென மறை
அப்போது தான் காவ்யா ஸ்டீபனை கவனித்தாள்.

'ஓ! இவனைப் பார்த்து தான் ஓடுகிறாளா?'' என எண்ணி
கொண்டே,

''என்ன ஸ்டீபன்?'' என்றாள்.

''உங்க பார்ட்டனர் எங்கே?''

''யார்?''

''இந்தக் கல்லூரியின் நட்சத்திரம், இனிய தேவதை
உங்கள் மதிப்பிற்குரிய தோழி.''

''ஏன் அவளைப் பற்றி கேட்கிறாய்?''

''கல்லூரியை ஒரே நாளில் கலக்கிவிட்டாளே
பாராட்டலாம் என்று தான்!''



''அவள் இன்னும் சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது! அதற்கு...''

''அதற்கு...''

''யாரும் இடையூறு செய்யாமல் இருந்தால் சரி.''

''அவளை யார் தொந்தரவு செய்கிறார்கள்? சொல்லுங்கள் நான் அவர்களை பார்த்துக் கொள்கிறேன்.''

''அது சரி! அவள் வாழ்க்கையை அவளுக்கு பார்த்துக் கொள்ளத் தெரியும். உதவி செய்கிறேன் என்று குழப்பாமல் இருந்தால் போதும்.''

''இப்ப நீங்க தான் என்னை குழப்புகிறீர்கள்.''

''நம் செயல்கள், எண்ணங்கள் அனைவரையும் நம்மை நாடி வரச் செய்ய வேண்டும்; ஓடி விட செய்யக் கூடாது.''

''லெக்சர் கேட்கும் மூடு எனக்கு இல்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்'' என அவன் நகர்ந்தான்.

மதுமதி தன் வகுப்பறைக்குள் நுழைந்தாள். விதவித மான நாகரீக உடைகளில். பெண்கள் பளபளத்தனர். காஸ்ட்யூம் டிசைனர் வடிவமைத்த உடைகளில் போட்டிக்கு தயாராகி நின்றிருந்தனர்.

''ஆரஞ்சு தேசத்து இளவரசி மதுமதி, எங்கள் கல்லூரி தேவதை பராக்... பராக்'' என கிஷோர் உரக்க கூற அனைவரும் திரும்பினர்; ஸ்தம்பித்தனர்.

''ஆரஞ்சுக்கும், ஆப்பிளுக்கும் என்ன வித்தியாசம் என்று கூறுங்கள் எங்கள் இளவரசியே!'' என கிஷோர் கேட்க,

''ஆரஞ்சு, ஆரஞ்சு கலர்'ல இருக்கும். ஆனால் ஆப்பிள் ஆப்பிள் கலர்'ல இருக்காது'' என மதுமதி பதிலளித்தாள்.

''ஆனால் ஆரஞ்சும், ஆப்பிளும் சேர்ந்தே எதிரே வந் நிற்கிறதே! அது எப்படி?''

மதுமதி 'நறுக்' கென்று அவன் தலையில் குட்டினாள்.

''கணக்கு வாத்தியார் வைக்க வேண்டிய குட்டை ஆரஞ்சு டீச்சரம்மா வச்சிட்டாங்க!''

''ஹேய்! ப்ளீஸ்ப்பா...''

''ஓகே! ஓகே நாங்க முன்னாடி போய் இடம் பிடிக்கிறோம் நீ நிதானமாய் வா'' அவர்கள் கிளம்பினர்.

ஆடிட்டோரியமே களை கட்டியிருந்தது. மாணவ மாணவியர் உற்சாகமாய், தங்களுக்கே உரிய குறும்பு தனத்துடன் குழுமியிருந்தனர். ரிஷி மேடையில் அமர்ந்திருந்தான்.

'டெக்னிக்கல் திருவிழா' வில் ஜெயித்தவர்களுக்கு பரி வழங்க காத்திருந்தான். 'பெண்கள்' பத்திரிகை போட் முடிவும் அங்கேயே அறிவிக்கப்பட இருந்தது. பத்திரிகை ஆசிரியை முடிவை அறிவிக்க மேடையேறினார்.

''இளைய தோழர்களே, தோழிகளே வணக்கம்! எங்கள் பத்திரிகை சார்பாய் நடத்தப்பட்ட ''இளம் தேவதை போட்டி முடிவை நான் அறிவிக்கப் போகிறேன். உங்கள் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் ஆடை அணியு போட்டிக்கு நடுவர்களாக நாங்கள் இல்லை; நீங்கள் தான் காலையில் இருந்து எங்கள் ஆசிரியர் குழு உறுப்பினர்க உங்கள் உளம் கவர்ந்த மதிப்புக்குரிய ஆடை அணிந்தவ தேர்ந்து எடுக்கச் சொல்லி வாக்குப் பதிவு நடத்தினோ அதில் அதிக அளவு வாக்குகளை பெற்றவரை இதோ சொல்லப் போகிறோம்! அவர்...'' என சற்று நிறுத்த,



''மதுமதி, மதுமதி'' என்று கூட்டமே கைத்தட்டி ஆர்ப்பரிக்க ஆரம்பித்தது. காவ்யா அவரை நெருங்கி ஏதோ சொல்ல ''நேற்று வினாடி - வினா, ஓவியம் , ஆங்கில கவிதை என அசத்தியவருக்கு இன்னொரு கூடுதல் பரிசும் உண்டாம். கல்லூரி டெக்னிக்கல் திருவிழாவிலும் அவர் தன் சீனியர் காவ்யாவுடன் இணைந்து ''ரோபோ'' உருவாக்கி முதல் பரிசு பெற்று இருக்கிறார். செல்வி மதுமதியை பரிசு பெறவும் 'இளம் தேவதை' மகுடம் சூட்டிக் கொள்ளவும் மேடைக்கு வருமாறு அழைக்கிறோம்.

மதுமதி கைத்தட்டல்களுக்கும், விசில் சத்தங்களுக்கும் இடையில் கூச்சத்துடன் நடந்து வந்தாள். மாலினிக்கு தாங்க முடியவில்லை. ரிஷியின் கண்கள் யார் படக்கூடாது என்று நினைத்தாளோ அவள் இன்று அவன் கையால் பரிசு பெறப் போகிறாள். காலையில் காரில் தன்னுடன் அவன் அழைத்துதான் வரவில்லை. இங்கு வந்த பிறகாவது அவளை கண்டு கொண்டானா? அவளை அறிந்து கொண்ட மாதிரி கூட அவன் காட்டிக் கொள்ளவில்லை. எப்படியாவது மேடையில் இடம் பெற்றிட வேண்டும். அவன் கண்களில் படுமாறு இங்கும் அங்கும் உலாத்திட வேண்டுமென பார்த்து, பார்த்து டிரஸ் பண்ணி கொண்டு பரிசு பொருள்களை சிறப்பு விருந்தினருக்கு எடுத்து தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

''தேவதை போலொரு பெண் இங்கு வந்தது தம்பி'' என கோரஸாக மாணவர்கள் பாட, ரிஷி திரும்பிப் பார்த்தான். உள்ளே ஓர் இனிமை அவனையறியாமல் முகிழ்த்தது. அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த மாலினி உள்ளிருந்து வந்த அந்த மலர்ச்சியை சகித்துக் கொள்ளவே முடியாதவள் ஆனாள். 'இந்த நொடியே ஏதாவது செய்தாக

வேண்டும்' என்று வெறி வந்தது. மதுமதி மேடை ஏறிவிட்டாள். இயல்பான கூச்சத்தினாலோ, அனைவரின் கவனத்தினாலோ சற்று குனிந்து நடந்தவள் எதேச்சையாக நிமிர்ந்த பொழுதுதான் ரிஷியைப் பார்த்தாள். இதயம் படபடவென துடித்தது. கண்களை சிமிட்டக் கூட மறந்து போனாள். அப்போது தான் அது நடந்தது. அவளது கவனக்குறைவோ, யார் காலோ தட்டியதாலோ தடுமாறி விழப் போனாள். பரிசை தருவதற்காக எழுந்து வந்த ரிஷி சட்டென கைப்பற்றி நிறுத்தினான்.

''ஸாரி, ஸாரி'' என மதுமதி மிக மெல்ல படபடப்புடன் முணு முணுக்க.

''ரிலாக்ஸ்! தேவதைகளுக்கு பறக்கத்தான் தெரியுமோ? தரையில் நடக்கத் தெரியாது போலிருக்கிறதே!'' என தெளிவாய், மென்மையாய் அவன் கூறியது மதுமதியின் காதில் மட்டுமே விழுந்தது. முகம் சிவந்து ரோஜா மலர் ஆனது. கீரீடம் சூட்டிய பொழுது...

புன்னகையுடன் அவளையே கண் இமைக்காமல் ரிஷி பார்த்து கொண்டிருக்க,

ரிஷி அருகில் அவள்...

நினைவும், நனவும் உள்ளார்ந்த மகிழ்ச்சியை நிருற்றாய் பொங்க வைக்க...

**''என்ன அழகு! எத்தனை அழகு!**
**கோடி மலர்கள் கொட்டிய அழகு!''**

கீழே நேயர் விருப்பமாய் மாணவர்கள் பாட... தங்கமாய் ஜொலித்தாள். மின்னிய புகைப்பட ஒளி விளக்குகள்



# 9

கற்பகம் ஒன்றும் பேசாமல் அமைதியாய் தன் வேலையை செய்து கொண்டிருந்தாள். அவள் மனதில் அன்று நடந்தது இன்னும் நிழலாடிக் கொண்டிருந்தது.

''எனக்கு ஒரு நூறு ரூபாய்க்கு புடவை எடுத்து தந்து இருப்பீர்களா? இன்றைக்கு உங்கள் அக்கா பெண்ணிற்கு மட்டும் ஐந்தாயிரம் ரூபாயில் பட்டுப் புடவை வாங்கி தந்திருக்கிறீர்கள்?''

''உன்னிடம் பட்டுப்புடவைகளும், ஸிந்தடிக் புடவைகளும் ஏராளமாய் இருக்கிறது. அப்படியும் மாதம் மூன்று புடவை எடுக்கிறாய். மாதம் இரண்டாயிரம் ரூபாய் உன் புடவைகளுக்கே செலவாகிறது. அதுவும் நான் தரும் பணம் தானே? இதில் நான் வேறு தனியாக எடுத்து தர வேண்டுமா? அன்றைக்கு மதுமதிக்கு புடவையே இல்லை என்று தான் எடுத்துத் தந்தேன்.''

''சத்தமில்லாமல் வந்து, பேசியதை கேட்டுக் கொண்டிருந்து விட்டு மூச்சு விடாமல் போய் புடவை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து விட்டீர்கள்.''

''ஒட்டு கேட்டேன் என்கிறாயா? பக்கத்து வீட்டு வாசலின் குறுக்கே கார் நின்று கொண்டிருந்தது; இடையே புகுந்து வர முடியாத நிலை. எனவே வண்டியை தள்ளி நிறுத்திவிட்டு நடந்து வந்தேன். எதேச்சையாய் உங்கள் பேச்சு காதில் விழுந்தது.''

''எங்கே நான் பார்த்துவிடுவேனோ என்று கழட்டிய செருப்பைக் கூட போடாமல் ஓடியவர் அல்லவா நீங்கள்?''

''உன் சேலையை ஒரு நாளைக்கு அவளுக்கு கொடு என்று சொன்னால் உனக்கு பிடிக்காமல் போகலாம். உன் ஆடையை பிறர் உடுத்துவது பிடிக்காது என்பதை நான் மதிக்கிறேன். கடையை மூடுவதற்குள் போய் வாங்க வேண்டும் என்றுதான் நான் அவசரமாக சென்றேன். என் பணத்தை நான் செலவு செய்வதற்கு உன்னிடம் எதற்கு பயப்பட வேண்டும்? உன்னிடம் மறைக்கவும் எனக்கு அவசியம் இல்லை. நமக்கென்ன பிள்ளைகளா இருக்கிறார்கள்? அதை மதுமதிக்கு செய்ததில் என்ன தப்பு?''

''பிள்ளை....'' என அவள் ஆரம்பிக்கும் முன் கணேசன் குறுக்கிட்டு ''இங்கே பார்! இதைப் பற்றி மேலே பேச நான் விரும்பவில்லை. இத்துடன் இதைவிடு'' என கண்டிப்பாக கூறி விட....

வாயை மூடிக் கொண்டாள். ஆனாலும் உள்ளே கனன்று கொண்டே இருந்தது. பாட்டி ''கற்பகம்'' என்று கூப்பிட்டார். காதில் விழாதது போல் தன் வேலையை செய்து கொண்டிருந்தாள்.

இருமுறை திரும்ப அழைத்தும் கண்டு கொள்ளாதது போல் இருந்தாள். பின்புறத்திலிருந்து நிழல் முன்னே விழுந்தது. அப்போதும் கவனியாதது போல் இருந்தாள்.

''கற்பகம், இந்தா புடவைக்கு பணம், '' என்றதும் சட்டென திரும்பினாள்.

ஐந்து ஆயிரம் ரூபாய் நோட்டுகள்.



''நேற்று நான் வங்கியில் இருந்து எடுத்து வந்ததும் உனக்கே தெரியுமே? கணேசனிடம் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டான். அவன் நூறு ரூபாய்க்கு வளையலோ அல்லது வேறு ஏதாவது பொருளோ வாங்கி கொடுத்திருந்தால் சும்மா விட்டு விடலாம். ஆனால் ஐந்து ஆயிரம் ரூபாய் சிறிய தொகை அல்ல. இந்தா வைத்துக் கொள்.''

கற்பகம் பணத்தை வாங்கி சம்படத்தில் வைத்து பத்திரப்படுத்தினாள். பின் பாட்டியிடம் ''இது அவருக்கு தெரிய வேண்டாம்,'' என்றாள்.

மதுமதிக்கு மனசெல்லாம் ரிஷி நிறைந்திருந்தான். அவனை பார்க்க வேண்டும் போல் மனம் பரபரத்தது. மனதில் வந்த ரிஷியை வர்ணமாய், ஓவியமாய், உயிராய் கேன்வாஸில் தீட்டலானாள். நேரம் காலம் மறந்து உள்ளார்ந்த அர்ப்பணிப்புடன். அவள் வரைய வரைய ரிஷி கண் முன்னே எழுந்தான். பத்திரிகை பேட்டியில் அவன் சொல்லியிருந்தது அவள் நினைவிற்கு வந்தது. ''என்...'' அவன் பெயரை எழுதி கீழே என்றென்றும் அன்புடன் மது என கையெழுத்திட்டாள்.

பாட்டி உள்ளே வந்தார்.

''யாரிந்த இராஜகுமாரன்?''

''இவர்தான் எனக்கு பரிசு கொடுத்தார் அம்மம்மா!''

கையில் அந்த ஓவியத்தை வாங்கிப் பார்த்தார்.

''எங்கேயோ பார்த்திருக்கிறேன் கண்மணி.''

''அன்னிக்கு டி.வியிலே பார்த்தீங்க அம்மம்மா!''

''இல்லடா! நேரிலேயே பார்த்திருக்கிறேன். டி.வியில் பார்த்த அன்றே யோசித்தேன்; பிறகு தான் ஏதோ கொஞ்சம்

ஞாபகம் வந்தது. காலேஜ் சேர சென்னைக்கு சென்றோமே அப்போது பார்த்த மாதிரித்தான் நினைவு.''

''ம்ஹூம்! இருக்காது. நானும், நீங்களும் ஒன்றாக தானே இருந்தோம்? நான் இவரை பார்க்கவில்லையே?''

''எப்போது என்று சரியாக நினைவில்லை. ஆனாலு நான் பார்த்திருக்கிறேன்; பேசியிருக்கிறேன்.''

பாட்டி தன் நெற்றியில் தடவியபடி யோசித்தார்.

'என் கண்மணியின் மனம் கவர்ந்தவனைத் தேடி நா அவளை ஒப்படைக்க வேண்டும்! எங்கே? எப்போது ஞாபகத்திற்கு சரியாக வரவில்லை. சென்னையா? இல்ல வேறு எங்காவதா?' மதுமதியின் மனதில் ரிஷியி வார்த்தைகள் எதிரொலித்து கொண்டே இருந்தன.

''தேவதைகளுக்கு பறக்கத்தான் தெரியுமோ? தரையி நடக்கத் தெரியாது போலிருக்கிறதே!''

'அப்படியென்றால்... தேவதை...யார்?... நானா மனதிற்கு பிடித்தமானவர்கள் பாராட்டினால் எத்தனை இனிமையாக இருக்கிறது! யார் பேசினார்கள்? என்ன பேசினார்கள்? என ஒன்று கூட நினைவில் இல்லை மனதில் பதிந்தால் தானே நினைவில் இருக்கும் எல்லாரையும், எல்லாவற்றையும் அந்த நிமிடத்தில் மிகவு பிடித்தது. கண்ணில் படும் எல்லாவற்றையும் அன்பா நேசிக்க வேண்டும் போல் தோன்றியது; அது மரம், செ கொடியாக இருந்தால் கூட! அன்பான இதயத்திற் குறைகள் தெரியாது. எனவே தான் கற்பகம் கடுக வென்றிருந்தது அவள் கண்ணில் பட்டாலும் கருத்தி பதியவில்லை.



பாட்டி மதுமதியின் அருகில் வந்தார்.

''மதும்மா! பட்டுப்புடவையை எதில் எடுத்து வைத்தாய்?''

''என் பெட்டியில் தான் அம்மம்மா! ஏன் கேட்கிறீர்கள்?''

''கசங்கியிருக்குமே? சலவை செய்யலாம் என்றுதான் கேட்டேன். ஆனால்... எல்லா இடத்திலும் பார்த்து விட்டேன். எங்கும் காணவில்லை.''

''இருங்கள்; நான் வந்து பார்க்கிறேன்; ராசியான முதல் புடவை அல்லவா? அவள் ரிஷியை கண்டுபிடித்து கொடுத்த மனம் கவர்ந்த புடவையை ஏறக்குறைய அறையையே புரட்டி போடுவது போல் தேடிவிட்டாள். ஆனால் எங்குமே அது கிடைக்கவில்லை! அவள் பரபரப்பையும், தவிப்பையும் உணர்ந்தவராய் தலையை மென்மையாய் வருடி,

''நிதானமாய் தேடு; இங்கு தான் இருக்கும். கால் முளைத்தா ஓடிவிடப்போகிறது'' என்றார்.

கற்பகம் இவற்றை பார்த்துக்கொண்டு தான் இருந்தாள். ''வெளியில் கொடியில் உலர போட்டுப் போனால் பத்திரமாகவா இருக்கும்? எப்படி வந்ததோ? அப்படி போய்விட்டது!''

''இல்லை அம்மம்மா! நானே எடுத்து மடித்து வைத்தேன்;'' குரல் கம்ம சொல்ல,

''ஒரு வேளை தொலைந்து போனால் போல் ஒளித்து வைத்து அந்த அறிவு கெட்ட மனிதரிடம் இன்னொரு புடவை வாங்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதோ?''

"போனால் போகிறது விடு கண்ணம்மா! நல் காஞ்சிபுரமே நான் உனக்கு வாங்கித் தருகிறேன். உன்னை பிடித்த திருஷ்டி கழிந்து விட்டது என்று நினைத்துக் கொ அம்மம்மா சொல்வதை முழுவதும் நம்புவாய் அல்லவா எல்லாவற்றையும் துடைத்து போட்டுவிட்டு படிக்கப் போ மறு பேச்சில்லாமல் மதுமதி எழுந்து முகம் கழுவ உள்ளே சென்றாள். அவள் சென்றதும் கற்பகத்திடம் திரும் "கணேசனிடம் நாங்கள் எதுவும் எதிர்பார்க்கவில்லை உன்னிடம் புடவைக்கு பணம் கொடுத்தது மதுவுக்கு தெரியும். அதனால் அவள் மனசு வருந்த பேச நீ முய வேண்டாம். நீயும் அப்படி பேசக் கூடிய பெண் அல்ல ஏதோ வருத்தம் மிகுந்த கோபத்தில் பேசி விட்டாய் கணேசன் வருகிறான்; போய் அவனை கவனி."

கற்பகம் ஒன்றும் பேசமுடியாமல் அவனருகே சென்றா மதுமதி விழி மூடி படுத்திருந்தாள். புடவை எங் போயிருக்கும்? எப்படி போயிருக்கும்? ம்ஹூம்! இதை பற்றி யோசிக்கக் கூடாது. மனசு வருத்தமாகி விடு விழாவை மறுபடியும் நினைத்துப் பார்த்தாள். விழ முடிந்தவுடன் ரிஷியைச் சுற்றி ஒரே இளம் பெண்க கூட்டம் ஆட்டோகிராஃப் வாங்க சூழ்ந்து கொண்டது.

"சார்! நீங்க யார் பெயரையாவது டாட்டூ குத்தியிரு கிறீர்களா?"

"இல்லை". "எங்க பெயரை குத்திக் கொள்ளும் வாய் உண்டா?" என துடுக்குப் பெண்ணொருத்தி கேட் "நிச்சயம் இல்லை" என்றான்.

"எப்ப சார் உங்க கல்யாணம்? கூடிய சீக்கிரம் என் சொல்லி எங்களுக்கு 'ஷாக்' கொடுத்துவிடாதீர்கள்" எ மற்றொருத்தி ஏங்க...



ரிஷி கும்பலை விட்டு சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த மதுமதியைப் பார்த்து புன்னகைக்க கண்கள்... இல்லையில்லை... உள்ளம் மலர்ந்து போனாள். தேவலோக மங்கையைப் போல கால்கள் தரையில் பாவவில்லை. கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவளை அலுவலக அறை வாட்ச்மேன் வந்து கூப்பிட்டான். "உங்களை பிரின்ஸிபால் சார் உடனே வரச் சொன்னார்."

மதுமதி கிளம்ப, மாலினி அவளை தன் பட்டாளத்துடன் சூழ்ந்து கொண்டாள். ரிஷி அலுவலக அறையில் அவளிடம் பேச காத்திருப்பது மதுமதிக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம்; ஆனால் ரிஷியையே சுற்றிக் கொண்டிருந்த, அவன் செயல்களை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த மாலினிக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. ஏதாவது காரணம் சொல்லி மதுமதியை அவனை சந்திக்க விடாமல் பேச விடாமல் தடுக்க வேண்டும். ரிஷி காலந்தவறாமையை கடைபிடிப்பவன். அதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் அவன் காத்திருக்க மாட்டான் என உறுதியாக நம்பினாள். அப்படி இப்படி பேசி பேசி நேரத்தை கடத்த, மதுமதி அங்கிருந்து நகரும் பொழுது அரைமணி கடந்து இருந்தது.

மதுமதி அலுவலகம் சென்ற பொழுது ரிஷி அங்கிருந்து கிளம்பியிருந்தான். "வெல்கம் மதுமதி! ஏன் லேட்? உன்னை பாராட்ட ரிஷி சார் காத்திருந்தார். இப்பொழுது தான் நேரமாயிற்று என கிளம்பினார்" என பிரின்ஸிபால் கூற மதுமதிக்கு ஒரே ஏமாற்றமாய் போய் விட்டது.

'சே! சுத்த மடச்சி நான்! கூப்பிட்ட உடனே வந்திருக்க வேண்டும்!' என தன்னையே கடிந்து கொண்டாள்.

''இரும்மா! போய்விடாதே. அவர் உனக்கு ஒரு புத்தகம் பரிசாக கொடுத்திருக்கிறார்'' என பரிசு ரிப்பனுடன் கட்டப்பட்ட புத்தகத்தை நீட்டினார்.

ஓர் ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பு புத்தகம். ''வானமும் வசப்படட்டும்''என எழுதி என்றும் அன்புடன் அவன் பெயரை எழுதியிருந்தான்.

அவள் அப்பொழுதே வானத்தில் சிறகடித்து பறந்து கொண்டிருந்தாள். அப்போது காவ்யா ஸ்கூட்டியில் வர அவளுடன் வீட்டிற்கு கிளம்பினாள். இருவரும் செல்லும் பொழுது சிக்னலில் நின்ற ரிஷியின் காரைப் பார்த்தனர்.

'காருக்கு அருகில் காவ்யா செல்ல வேண்டுமே?' என இவள் தவிக்க

காவ்யாவோ ''ஹேய் அங்கே பார்''! என்றவாறே அதன் அருகே ஸ்கூட்டியை நகர்த்தினாள். குரல் கேட்டு ரிஷியும் திரும்பி அவர்களைப் பார்த்தான். அதற்குள் சிக்னல் மாறி க்ரீன் சிக்னல் வர காரை கிளப்பினான். இருந்தும் வெளியே எட்டிப் பார்த்து.

மதுமதியை நோக்கி புன்னகையுடன்

''ஸீ யூ'' என்று விரலசைத்தான்.



# 10

பாவ்னா தோட்டத்தில் வாக்கிங் முடித்துவிட்டு சற்று மூச்சு வாங்க உள்ளே வந்தாள். நிறைமாத கர்ப்பிணியான அவளுக்கு வளைகாப்பை விமரிசையாக செய்து அழைத்து வந்திருந்தனர். உடற்பயிற்சியை முடித்து விட்டு வோக்க, விறுவிறுக்க வந்து அமர்ந்த ரிஷியைப் பார்த்து மனம் மலர்ந்து சிரித்தாள்.

''அண்ணா! எப்பொழுது இந்த வீட்டிற்கு அண்ணியை அழைத்து வரப் போகிறாய்?''

கேட்ட வினாடியில் ஓர் அழகு முகம் அவன் மனதில் பூத்தது. ''என்ன அண்ணா? முகமெல்லாம் நட்சத்திரம் மாதிரி மின்னுது? மனசுக்குள்ளே பவர் ஹவுஸ் உருவாயிடுச்சா?''

''என்ன பவர் ஹவுஸ்? ஏற்கனவே நாடு முழுவதும் ஆங்காங்கே தெர்மல் பவர் ஸ்டேஷன், வின்ட் - மில் என்னும் காற்றாலையும் அமைத்து உன் அண்ணன் மின்சாரம் தயாரிக்கிறான். இன்னும் புது யோசனை எதுவும் வைத்திருக்கிறானா?'' என அங்கே வந்த சரஸ்வதி கேட்க.

பாவ்னா வாய்விட்டு சிரித்தாள். ரிஷியும் சின்ன சிரிப்புடன் ''நெல் உமியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று இருக்கிறது அம்மா.''

''கிராமப்புறங்களை இன்னும் முழுமையாக மின்சாரம் சென்று அடையவில்லை. இந்தியா விவசாய நாடு. இங்கு

கிராமங்கள் அதிகமாக இருக்கும் பொழுது நெல் உ
யிலிருந்து மின்சாரம் தயாரிப்பது நல்ல பயனைத் தரும்.

''மின்சாரத்தை சூரிய ஒளி நெல் உமி இப்ப
பலவற்றில் இருந்து தயாரித்தால் தான் மக்கள் தொ
பெருக்கத்திற்கு ஏற்ப மின் தேவை பூர்த்தி ஆகும். அ
விஷயமாய் நான் ஜெர்மனிக்கு செல்லலாம் என்
இருக்கிறேன் அம்மா.''

''எப்பொழுது கிளம்ப வேண்டும்?''

''இரண்டொரு வாரம் ஆகும். அதற்குள் கோவை
ஒரு தொழிற் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.''

''பாவ்னாவின் பிரசவத்திற்கு முன்னரே கிளம்
விடுவாயா?''

''அப்படித் தான் நினைக்கிறேன்.''

''உனக்கும் சீக்கிரம் திருமணம் செய்ய வேண்டும்.''

''ம்! ஒன்றிரண்டு வருடங்கள் போகட்டும் அம்மா.''

''ஏன்?''

'அவள் டீன் ஏஜ் பெண்! கொஞ்சம் வளரட்டும்!' எ
மனதில் எண்ணியவனுக்கு உதவியாக.

''நம் பாரம்பரியத்தை காப்பாற்ற நம் குலம் தழைக்
வருகிற பெண்ணை கவனமாக தேர்ந்தெடுக்க வே
டாமா? அதனால் அண்ணன் யோசனை செய்கிறாரே
என்னவோ?'' - பாவ்னா பேச,

''நம் வீட்டு செல்ல பெண்ணிற்கு பொறுப்பு வந்
விட்டது! எங்கேயோ பார்த்த பெண்ணை உட



கல்யாணம் செய்து கொள் என அடம்பிடித்த பெண் எங்கே போனாள்?''

''போ அண்ணா! இப்பொழுதும் அவள் என் கண்ணிலேயே நிற்கிறாள். ஏதோ அவளைப்பற்றி நினைத்தாலே எனக்கு உன் ஞாபகம் தான் வருகிறது.''

''நல்லவேளை! அத்துடன் நிறுத்திக் கொள்! இனி என் மருமகளைப் பற்றி மட்டும் கனவு காண். வேறு எந்த கற்பனையும் வேண்டாம்.''

''அண்ணா உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும். என்று நினைத்தேன். மாலினியை மணந்து கொள்ளும் எண்ணம் உனக்கு உண்டா?''

''இல்லவே இல்லை! அதனால் தான் நான் உன் வீட்டிற்கு வருவதில்லை. அவளுக்கு என்மேல் அப்படி ஒரு விருப்பம் வருவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று நான் கவனமாய் இருக்கிறேன்.''

'அவள் நம் வீட்டிற்கு ஏற்ற பெண் அல்ல' என மனதிற்குள் பாவ்னா நினைத்துக்கொண்டாள்.

''என்ன பாவ்னா யோசனை?''

''என் மாமியார் போடும் ஊறுகாய்களின் செய்முறை குறிப்புகளை தொகுத்து ஆங்கிலத்தில் நான் புத்தகம் எழுதப் போகிறேன்.''

''வெரிகுட்! நம் குடும்ப ஜீன் உன் உடம்பிலும் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. அப்பா பிஸ்கட் தயாரித்தார். அம்மா ரெடிமேட் உணவு வகைகள், மசாலாப் பொடி என விரிவுப்படுத்தினார்...''

இடையே பாவ்னா குறுக்கிட்டாள்.

''நீ இவர்களுக்கு மாறுபட்டு சக்தி உற்பத்தியில் இறங்கி விட்டாய்! ஜாலியாய் வாழ்க்கையை உங்கள் பணத்தை செலவு செய்து அனுபவித்துக் கொண்டிருந்தேன். எனக்கு இப்பொழுது சமையல் புத்தகம். எழுத தோன்றியிருக்கிறது அதை அருமையாய் செய்யவேண்டும். நல்ல வண்ண தாளில் அருமையான புகைப்படங்களுடன் கணினியால் அச்சிட்டு விளக்கமாய் இரண்டு தொகுதிகளாய் எழுத போகிறேன். அம்மா தான் எனக்கு ரோல் மாடல்.''

''கண்டிப்பாய் நம் இருவருக்கும் ரோல் மாடல் அம்மா தான். வெறும் பள்ளி படிப்புடன் திருமணமாகி வந்தவர் அப்பாவின் ஊக்கத்தால் கல்லூரி படிப்பை முடித்தார். அந்த நேரத்தில் அப்பா இறந்துவிட.... நாம் இருவருமே சிறு குழந்தைகள் வேறு. கண்ணை கட்டி காட்டில் விட்ட நிலைமை. மிகப் பெரிய இழப்பை தாக்கி, இவளால் என்ன முடியும்? என ஏளனமாக பார்த்தவர்கள் வியக்கும் வண்ணம் தொழிலை ஏற்று நடத்தி வாழ்வில் உயர்வது என்பது சாதாரண விஷயமா? அது நம் அம்மாவால் மட்டுமே முடியும்;''

''சூ! காக்கா சூ!''

''போங்கம்மா! அண்ணன் சொல்வதில் உண்மை மட்டும் தான் இருக்கிறது. இதில் 'காக்கா - பொய் எதுவுமில்லை. உங்களிடம் எங்களுக்கு வேண்டுவது என்று எதுவும் இல்லை. ஆசையெல்லாம் கேட்காமலே நிறைவேற்றப் படுகிறது. பிள்ளைகள் மனமறிந்து தாய் இருக்கும் பொழுது வேண்டுவது ஒன்றுமில்லை.''



''பெற்றவர்களை புரிந்து கொண்ட பிள்ளைகளைப் பெற்றது பூர்வ ஜென்ம புண்ணியம்.''

''பிள்ளைகளை புரிந்து கொண்ட பெற்றோர் கிடைத்தது எங்கள் பாக்கியம்.''

''அம்மா, இந்த வருடம் பண்டிகை ஸ்பெஷலாக என்ன ரெடிமேட் பலகாரம் அதாவது இனிப்பு அறிமுகப் படுத்துகிறீர்கள்?''

''ரெடிமேட் ஜாங்கிரி; தேவைப்படும் பொழுது எண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து சர்க்கரைப் பாகில் போட்டு எடுத்து சாப்பிடலாம்.''

''இந்த கால நவீன பெண்களுக்கு ஏற்ற மாதிரி சமையலும் மாறிவிட்டது, சமையல், அலுவலகம் என இரட்டைக்குதிரை சவாரி செய்பவர்களுக்கு ரெடிமேட் உணவு பதார்த்தங்கள் அவசியமாகி விடுகின்றன. சாம்பார் பொடி, மசாலாப்பொடி, ரசப்பொடி, பருப்புப் பொடி, கறிவேப்பிலைப்பொடி, பூண்டுப் பொடி இப்படி பலவகை பொடிகள் விற்பனை ஆவதன் காரணம் அவசரயுகம் தான். மேலும் ருசியாய் சாப்பிட்டு பழகிய நாக்கிற்கு இவை யெல்லாம் தேவையாய் இருக்கின்றன. தரமும், சுவையும் இருந்தால் தான் இந்த தொழிலில் நிலைத்து நிற்க முடியும்.''

''பேசுவது என் தங்கையா? நம்ப முடியவில்லையே? கூடிய சீக்கிரத்தில் நீயும் மெனு ராணியாக வலம் வரப்போகும் அறிகுறித் தெரிகிறது.''

''உங்கள் வாழ்த்துகளுக்கு நன்றி அண்ணா.''

அவன் கைப்பேசி ஒலிக்க, எடுத்தான்.

“சே! முட்டாள்... இல்லை... மட்டமான பெண்” என்றவாறே செல்லை அணைத்தான்.

“மறுபடியும் அதே பெண்ணா?”

“ஆமாம்; ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு எண்ணி பேசுகிறாள். இதே தொந்தரவு! தாங்க முடியவில்லை. இ கண்டுபிடிக்கச் சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டு சே! இப்படியும் சில பெண்கள் இருக்கிறார்கள்.”

“அண்ணா! உன்னிடம் கோவை கல்லூரி விழா எப்ப யிருந்தது? என கேட்க வேண்டும் என எண்ணியிருந்தே நீயும் அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லையே?”

“வாவ்! எக்ஸ்சலண்ட்! மாணவர்கள் எவ்வள திறமைசாலிகளாக இருக்கிறார்கள் தெரியுமா? இன்றை இளைஞர்கள் பலர் இலட்சியவாதிகள்; அவர்களுக் சரியான வழிகாட்டுதல் அமைந்து விட்டால் பெரி அளவில் சாதிப்பார்கள்!”

“மற்றவர்கள் சாதனை எனக்கெதற்கு? நீ இன்னு முக்கியமான விஷயத்திற்கே வந்து சேர மாட்டே என்கிறாய்?”

“என்ன முக்கியமான விஷயம்?”

“அன்றைக்கு கண்ணும், முகமும் மலர்ந்து மி பிரகாசமாய் வீட்டிற்கு வந்தாயாம்! வருண் சொன்னார்,” எ மெல்ல கிசுகிசுத்தாள்.

“அவன் இன்னும் உன்னை கண்ட மயக்கத்திலிருந் தெளியவில்லை! அதனால் தான் காணுகிறவர்கள் எல்லா ஏதோ இனிய மயக்கத்தில் இருப்பது போல் தோன்றுகிறது



“ஹே! அண்ணா, உண்மையை சொல்லிடு! தங்கச்சி துணை உனக்கு தேவையிருக்கும்!”

“நன்றி தங்காய்! அவசியம் ஏற்படும் பொழுது உன் துணையை நாடுகிறேன்.”

சரஸ்வதி அவர்கள் பேசிகொண்டிருக்கட்டும் என்று உள்ளே சென்றுவிட இருவரும் ஒருவரையொருவர் நாசுக்காய் சீண்டிக் கொண்டனர். மாலினியிடம் விழாப் பற்றி விசாரிக்க பாவ்னா பேசியபொழுது அவள் எதுவும் சரியாக சொல்லாமல் மழுப்பினாள். வருண் சொன்னதுடன், விசாரித்தே ஆக வேண்டும் என்ற உணர்வை அவன் கோட்டிலிருந்த சற்றே காய்ந்தாற் போலிருந்த ரோஜாப்பூ ஏற்படுத்தியது.

“அண்ணா, போட்டியில் யாருக்கு பரிசு கிடைத்தது?”

“எல்லாம் தகுதி வாய்ந்தவர்களுக்கு தான் கிடைத்தது.”

“பின்னே? என் அண்ணன் காக்காய் பிடிப்பவருக்கா தருவார்? சங்கத்தமிழில் பேசிய ரோபோ - எந்திரன் என பத்திரிகையில் சிறு பொட்டி படித்தேன். பரிசு பெற்றவரின் புகைப்படம் அதிலே இல்லையே?”

“காவ்யா என்று ஒரு இறுதியாண்டு மாணவியும், அவள் ஜூனியர் தோழியும் சேர்ந்து உருவாக்கியிருக்கிறார்கள்.”

“அந்த ஜூனியர் பெண் தானே பிரபல பெண்கள் பத்திரிகை போட்டியில் கல்லூரி ‘இளம் தேவதையாக’ கூட தேர்ந்து எடுக்கப்பட்டாள் என்று கூட சொன்னாய்?” என இடையில் அவர்கள் பேச்சை கேட்டுக் கொண்டே வந்த சரஸ்வதி கேட்க “ம்! அம்மாவிடம் மட்டும் எல்லா வற்றையும் சொல்லிவிட்டாயா?” அதற்குள் ஏதோ வேலையாய் ரிஷி செல்ல,...

அண்ணாவிடம் எந்த விஷயமும் வாங்க முடியாது உணர்ந்து, ''எங்கே அம்மா அந்த பத்திரிகை? கட்ட அட்டைப் படத்தில் போட்டிருப்பான். நான் அவசி பார்க்க வேண்டுமே?'' என பரபரத்தாள் பாவ்னா

## 11

பாவ்னாவின் ஆசை அன்று அந்த விஷயத் நிறைவேறவில்லை. அந்த பத்திரிகையை வீட்டில் பே பேப்பர்காரன் மறந்து விட்டிருந்தான். ஏறக்குறைய எல் தமிழ் பத்திரிகைகள் வாங்கி தவறாமல் வாசிக் பழக்கமும் அவர்கள் வீட்டில் இருந்தது. வெளியே வா வரச் சொல்லி ஆள் அனுப்பினால் அது வி தீர்ந்திருந்தது. பாவ்னா ஆர்வமாய் தேடுவதை உண ''உன் அண்ணனை பத்திரிகை அலுவலகத்திலே கேட்டு வாங்கி வரச் சொல்கிறேன்,'' என சரஸ் சமாதானப்படுத்தினார். தாய்ச் சொல் தட்டாத தமைய பத்திரிகை அலுவலகத்திற்கு பேசி ஒரு புத்தக வாங்கினான் என்றாலும் அதை தங்கையிடம் தரவில் அட்டைப்பட மங்கை மனக் கவர்ந்தவளாக போய் டாளே! எனவே தானே வைத்துக் கொண்டா என்னவோ? மனதை கொள்ளை கொள்ளும் வசீகர புன்னகையுடன் நின்றவளை கண் எடுக்காமல் பார் கொண்டே இருக்கலாம் போல் தோன்றியது. பாஸ்போ சைஸ் போட்டோவில் இருந்ததை விட முழு அ புகைப்படத்தில் புடவையில் மிக மிக ரம்யமாய் இருந்



மனதை சுண்டி இழுக்கும் காந்தப் புன்னகை; அழகோடு சேர்ந்த அறிவு கண்களிலும் தெரிந்தது. தடுமாறிய பொழுது ஏற்பட்ட பதற்றம், மெல்லிய நடுக்கம், ரொம்ப மென்மையானவளோ? இப்படி அவளைப் பற்றிய ஓராயிரம் எண்ணங்களுடன் கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெறும் தொழிற் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றான்.

கல்லூரியில் மதுமதி இப்பொழுது எல்லாராலும் நேசிக்கப்படும் இளவரசி ஆனாள். ஒவ்வொருவரும் முன்னேறுவதற்கு ஒரு தளம் வேண்டும். அது சுயமுயற்சியால் அமையாமல்; அல்லது சூழ்நிலையால் அமையலாம். நல்ல தலைமுறை உருவாக பெற்றோர்கள் தளம் அமைத்து கொடுக்கவேண்டும். ரிஷிக்கு அவன் பெற்றோர்கள் உறுதியான தளத்தை அமைத்துக் கொடுத்திருந்தார்கள். அதை அவன் பற்றிக் கொண்டு மிக பிரம்மாண்டமான மாளிகை அமைத்துவிட்டான். ஆனால் மதுமதிக்கு பெற்றோர்கள் இல்லை; தாய் வழிப் பாட்டி தன்னால் இயன்ற அளவிற்கும் மேல் அவளை சீராட்டி, பாராட்டி வளர்த்தாராம் அவள் முன்னேற்றத்திற்கான வாய்ப்பை அவளே உருவாக்க வேண்டிய நிர்பந்தம் இருந்தது. தன்னியல்பாய் நல்லவற்றை சிறப்பாக செய்தாள்; அவளைத் தேடி பரிசுகளும், பாராட்டுகளும் வந்தன. கேண்டீனில் ப்ரெஷ் ஜூஸ் சாப்பிட மதுமதி சென்றிருந்தாள். ''மது அக்கா! நானே உங்களை பார்க்க வரணும்னு இருந்தேன்;'' என கேண்டீன் பையன் கூற ''என்ன விஷயம்?'' ''உங்களுக்கு ஒரு போன் வந்தது. யாரோ ரிஷியாம். உங்களை மாலை ஆறுமணிக்கு கொடிசியா வளாகத்திற்கு வரச்சொன்னார்.''

"ஹேய்! உன் ஆளுக்கு உன் அலைபேசி எண்ணை தரவில்லையா?" என குரல் கேட்டுத் திரும்பினாள். காவ்யா நின்றிருந்தாள்.

"என்ன காவ்யா எங்கே உங்களை பார்க்கவே முடியவில்லை?"

"பேச்சை மாத்தாதே! என்ன மாலை அங்கே போகிறாயா?"

"நீங்களும் என்னுடன் வர முடியுமா காவ்யா?"

"ம்! எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறதே! சரி, சரி வாடி விடாதே. உன்னை இறக்கிவிட்டுட்டு என் வேலையை முடித்து விட்டு வந்து பிக்கப் அஃப் செய்து கொள்கிறேன். மேலும் நான் இடைஞ்சலாக இருப்பது நன்றாக இருக்காது அல்லவா?"

சொன்னபடியே மதுமதியை காவ்யா அழைத்துச் சென்றாள். மிகப் பெரிய தொழிற் வளாகம் அது. தொழில் சம்பந்தமான அனைத்து கூட்டங்களுக்கும் தேவையான வசதியுடன் அமைக்கப்பட்டிருந்தது. ரிஷி உள்ளே இருந்த பொழுது வெளியே மதுமதி நின்று கொண்டிருந்தாள். உள்ளே செல்ல அடையாள அட்டை வேண்டியிருந்தது. நேரம் ஆக ஆக வீட்டில் தேடுவார்களே என்ற எண்ணம் வந்தது. போக வேண்டும் என்று அறிவும் போகாதே என்று மனமும் ஒன்றுடன் ஒன்று முரண்பட... அவள் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் ரிஷியின் கார் வெளியே வந்தது. கார் ஜன்னல் கதவை இறக்கிவிட்டு மற்றொரு காரில் இருந்தவரிடம் "நான் நாளை ஜெர்மனி செல்கிறேன். வந்ததும் உங்களை தொடர்பு கொள்கிறேன்," என.



அவர்கள் பேசியது எதுவும் மதுமதியின் செவியை எட்டவில்லை. அவன் அவளை கவனிக்கவில்லை. அவன் சுற்றும் முற்றும் பார்ப்பதை உணர்ந்து சற்றே முன்னே அவள் நகர, "நேரமாச்சு! ஸாரி! இன்னொரு நாள் பார்க்கலாம். பை. நான் அவசரமாக போக வேண்டும் ப்ளீஸ்" எனக் கூறிவிட்டு அவன் கையசைத்து கிளம்பி விட்டான். அவனை பார்த்த பரவசத்திலேயே மதுமதி மெய்மறந்து நின்று கொண்டிருக்க, "ஹேய்! என்னாச்சுப்பா? உன் ஆளை பார்த்து பேசி முடித்தாகி விட்டதா?" என காவ்யா கேள்வியால் உலுக்க சுய நினைவுக்கு வந்தாள்.

"ம்! அவர் பேசினார்; அவசரமாய் போகணும் என்று அவரை நொடியில் கிளம்பிட்டார்."

"உன்னை மாதிரி அழகுப் பெண் காத்திருக்க, அவருக்கு அப்படி என்ன அவசர வேலையாம்?"

"அதைப்பற்றி அப்புறம் பேசலாம். இப்பவே ரொம்ப தாமதமாகிவிட்டது. அம்மம்மா கவலைப்படுவார்கள். வாங்க சீக்கிரம் போகலாம்."

இருவரும் கிளம்பினர். 'அங்கே பாருப்பா! அது மாலினி தானே?' "ஆமாம்! அவளைப் போலத்தான் இருக்கிறது! ஆனாலும் இல்லை; அவளைப் போல யாரோ?"

பாட்டி மதுமதியை காணோமே என்று வாசலை பார்த்துக் கொண்டே இருந்தார். கணேசன் வந்ததும் நேரே பெரியம்மாவை தேடிக் கொண்டு வந்தான். "சாப்பிட்டீர்களா பெரியம்மா? இன்னும் மதுமதி வரலையா?"

அங்கே கற்பகம் வந்து நின்றாள்.

"சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?"

"இரு! இரு! நான் போய் பஸ் - ஸ்டாண்ட் வரை மதுமதி வருகிறாளா? என பார்த்து விட்டு வருகிறேன்."

"அவள் என்ன சின்னப்பிள்ளையா? எல்லாம் வந்து விடுவாள். உங்க பெரியம்மா! சீக்கிரம் மதுமதிக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொன்னார்."

"இந்த நேரத்தில் என்ன பேச்சு இது?"

"ஆமாம், பொண்ணுங்களுக்கு காலாகாலத்தில் கல்யாணத்தை பண்ணிடணும்! இந்த காலத்தில் யாரையும் நம்பமுடியலை."

"நம் வீட்டுப் பெண் அப்படிப்பட்டவள் இல்லை! மதுமதி விஷயத்தில் நீ தலையிட வேண்டாம்" என்றவன் தொடர்ந்து,

"பெரியம்மா, அவள் சின்னப் பெண்; அதற்குள் கல்யாணத்திற்கு என்ன அவசரம்? டீன் ஏஜ் பெண்ணிற்கு திருமணத்திற்கு உரிய பக்குவம் இருக்காது. படிப்பு முதலில் முடியட்டும்."

"அந்தக் காலத்தில் இன்னும் சின்ன வயதில் செய்ய வில்லையா?"

"பேசாமலிரு கற்பகம்! ஏன் பெரியம்மா இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்?"

"இன்னும் எவ்வளவு காலத்திற்கு வாழப் போகிறேன்! என் கண் இருக்கும் பொழுதே அவளை கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும்."



அப்போது காவ்யாவுடன் மதுமதி வந்தாள். அவளை இறக்கி விட்டுவிட்டு வாசலிலேயே விடைபெற்றாள்.

"ஏன் மது இவ்வளவு லேட்?"

"ரிஷி கொடிசியா வளாகம் வரச்சொல்லி இருந்தார்; நானும், காவ்யாவும் சென்றிருந்தோம்."

"சரி போய் கை கால் கழுவி வா சாப்பிடலாம்."

"சரி மாமா" அவள் உள்ளே செல்ல.

"இதற்குத்தான் சீக்கிரம் கல்யாணம் செய்ய வேண்டும்; ஊர் சுற்றினாலே எல்லாம் கோளாறு தான்."

"வாயை மூடு கற்பகம். சொன்னால் உனக்குப் புரியாதா? ஏன் என்மேல் நம்பிக்கை இல்லையா பெரியம்மா? நான் அவளுக்கு நல்ல வாழ்க்கை அமைத்து கொடுக்க மாட்டேனா?" என்று கேட்டான்.

"அதற்கு சொல்லவில்லையப்பா! அவள் மனம் போல வாழ்க்கை அமைந்தால் தான் எனக்கு நிம்மதி! அவளை என் கண்மணியாய் வளர்த்தி விட்டேனே தவிர உலகத்தை சொல்லி கொடுக்கவில்லை. வெளுத்தது எல்லாம் பால் என நம்பும் இயல்புடையவள்."

"கவலைப்படாதீர்கள்! அவள் மனம் போல் மாங்கல்யம் அமையும்."

இவர்கள் அவளைப்பற்றி பேசிக் கொண்டிருந்த நேரத்தில் கல்லூரியில் "ப்ரெண்ட்ஸ் கிளப்" புதுப்பிக்க வேலை நடந்து கொண்டிருந்தது. சேர்மன், செகரட்டரி தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தனர். மூன்றாம் ஆண்டு மாணவி சேர்மன் ஆக இருக்க, செகரட்டரி முதலாம்

ஆண்டிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுக்க முடிவு செய்த
''யாரை தேர்ந்தெடுக்கலாம்?'' என மாணவர்களிடம் ஓட்
எடுப்பு நடுவர் முன்னிலையில் நடத்தப்பட்டது. ரேஷ்
விற்கு தன்னை தேர்ந்தெடுப்பார்களோ? என நப்பா
வந்தது. ஆனால் மதுமதி, கிஷோர், ரேஷ்மா, சுந்
நால்வரும் பேச அழைக்கப்பட்டனர்.

''நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் ப்ரெண்ட்ஸ் கிளப்பை
ஜாலி கிளப்பாக மாற்றுவேன். இலவசமாக 'டாப்
போட்டுக் கொள்ள ஏற்பாடு செய்வேன். தெர்மா மீட்
மாதிரி படிக்காமலே டிகிரி காட்ட ஏற்பாடு செய்வேன்'' எ
அரசியல்வாதியாய் மாறி வாக்குறுதிகளை அள்ளிவிட்
மாணவர்களை கலகலக்க வைத்தான்.

ரேஷ்மாவோ கலை நிகழ்ச்சிகள், பொழுதுபோக்
அம்சங்கள் இவற்றை தேவையான அளவு ஏற்பா
செய்வதாகவும்; உற்சாகமான இளமையை கல்லூ
பருவத்தை கவலையில்லாமல் சந்தோஷமாக கொண்டா
எல்லா வகையான வழிவகைகளை செய்வதாகவு
கூறினாள்.

''அப்போ, பீர், பியர் எல்லாம் உண்டா?'' என் நக்க
குரல் எழுந்தது. அடுத்து மதுமதி பேச எழுந்தாள்.

''ப்ரெண்ட்ஸ் கிளப்பிற்கு யாரை வேண்டுமானாலு
தேர்ந்தெடுங்கள் ஆனால் அப்படி தேர்வானவர்களுக்கு
மற்றும் என் சகோதர சகோதரிகளுக்கும் ஒரு வேண்
கோள், 'ப்ரெண்ட்ஸ் கிளப்' வெறும் பொழுதுபோக்கு கிள
ஆகி விடக்கூடாது. மாணவர்களாகிய நாம் நினைத்தால் ப
நல்ல மாற்றங்களை உருவாக்கலாம். புதிய சரித்திர
... வரை மற்றவர்களுக்கு உதவலா



நம் பகுதியை ஒட்டியுள்ள வளர்ச்சியற்ற கிராமத்தை தத்து எடுக்கலாம். அங்கு படிக்க மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பாடங்களை விளக்கலாம்; முன்னேற வழிகாட்டலாம்'' என பேசி அமர,

''உபதேசம் தாங்க முடியலைடா'' என குரல் எழுந்தது. கிண்டல் ஒலித்தாலும் அவள் பேச்சை எல்லாரும் வரவேற்றனர். அடுத்து பேசிய சுந்தர் மதுமதியை ஆதரித்ததுடன் அவளையே செகரட்டரியாக தேர்ந்து எடுக்குமாறு வேண்டுகோள் வைக்க, அனைவரின் ஏகோபித்த ஆதரவுடன் மதுமதியை தேர்ந்தெடுத்தனர்.

தன்னை தேர்ந்தெடுத்தவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப உடனே செயலிலும் இறங்கினாள். மாணவர்களிடம் கலந்து ஆலோசித்து அருகிலிருந்த கிராமங்களுக்கு சென்று பார்வையிட்டனர். பின் மிகவும் பின்தங்கியிருந்த கிராமத்தை தத்து எடுத்துக் கொண்டனர். பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்கு பாடங்கள் சொல்லி கொடுத்தனர். பள்ளிக்கு போக முடியாத படிக்க ஆசைப்படுபவர்களுக்கு 'நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஓபன் ஸ்கூலில்' அதாவது உத்திரப் பிரதேசத்தில் உள்ள திறந்த நிலைப் பள்ளியில் படிக்க ஏற்பாடு செய்தனர். பள்ளியை விட்டு இடையில் நின்றவர்கள் பள்ளியில் படிக்காத மாணவர்கள் என பதினான்கு வயது பூர்த்தியானவர்கள் அனைவரும் படிக்க ஏற்பாடு செய்தனர். மேலும் தொழிற்கல்வி பயிற்சியும் அங்கு தரப்பட்டது. இணைய தளத்தின் மூலம் தொடர்பு கொண்டு பல விவரங்களை பெற்று தந்தனர். மாணவர்கள் செய்தது சிறு தொண்டு தான் என்றாலும் அக்கிராமத்தின் வளர்ச்சிக்கு பெருமளவு உதவியது.

பத்திரிகைகள் எல்லாம் பாராட்டி எழுதின. நாளுக்கு நாள் கல்லூரியில் மதுமதியின் மதிப்பு கூடி கொண்டே போனது.

கிஷோர் வகுப்பில் வழக்கம் போல் அரட்டையடித்துக் கொண்டிருந்தான்.

''முந்நூறு ரூபாய் கொடுத்து பிளாக்கிலே வாங்கிற டிக்கெட் கூட சந்தோஷப்படுத்துதடா! ஆனால் இந்த வாரம் டிக்கெட் பரீட்சையை காட்டி பயமுறுத்துவது இருக்கே....! சாமி தாங்க முடியலையடா.''

அப்போது மதுமதி உள்ளே நுழைந்தாள்.

''மது இங்க வாயேன்!''

''என்ன?''

''இப்ப எல்லாம் என்னால் சாப்பிட முடியலை; தூங்க முடியலை; எதை கண்டாலும் பிடிக்கலே; மனசே சரியில்லை; ஐ திங்க்...''

''யூ திங்க்...''

''உன் மேல காதல் வந்துடுச்சோ?''

''ஹேய்! போடா! உனக்கு செமஸ்டர் எக்ஸாம் வந்துடுச்சு; அந்த பயம்! போ, போய் ஒழுங்காய் படி.''

எல்லாரும் மேசையைத் தட்டி சிரித்தனர்.

அப்போது ''பூங்கொத்து'' ஒன்று மொட்டும் மலருமாய் அழகான சிவப்பு ரோஜாக்களுடன் வந்தது.

''மதுமதி! உனக்குத் தான் 'பொக்கே' வந்திருக்கிறது.''

''மதுவுக்கு பொக்கே! கிஷோருக்கு ஆப்பா!''



'யார் அனுப்பி இருப்பார்கள்?' யோசனையுடன் வாங்கினாள்.

''மது எங்கிருந்தாலும் வாழ்க! மது இல்லாட்டி மாலினி! மாலினி நீயும் ப்ரெண்டா தான் நினைச்சேன்னு மனசை காயப்படுத்திடாதேம்மா!''

''உதை வாங்கியே ஓடப் போகிறாய்!'' என அவள் மிரட்ட,

''சரி, சரி! விடு விடு! மாலினி இல்லாட்டி என்ன? ஒரு தீபிகா படுகோனே! என அவன் பேச மதுமதியின் மனதில் எதுவும் பதியவில்லை. பொக்கேயுடன் இருந்த துண்டுச் சீட்டைப் பார்த்தாள். ''வாழ்த்துகளுடன் ரிஷி'' என்றிருந்தது. குப்பென்று சிவந்து போனாள் மதுமதி.

## 12

மதுமதி அழகான ஆல்பம் தயார் செய்து கொண்டிருந்தாள். எல்லா பக்கங்களையும், ரிஷியும் - ரிஷிப்பற்றிய செய்திகளுமே ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. பத்திரிகை, செய்தித்தாள்களில் அவனைப் பற்றி வந்த செய்திகள், புகைப்படங்களை வெட்டி ஒட்டி தயாரித்திருந்தாள். ''நமக்கு நம்மைப் பற்றி பெருமிதம் இல்லை. நம் உயர்வை பிறர் எடுத்து சொன்னால் கூட ஏற்றுக் கொள்வதில்லை. பிரமிடுகள் பற்றி வியந்து போகிற நமக்கு ஆதிச்சநல்லூர், மணல்மேடு மற்றும் காரைமேடு போன்ற நம் மண்ணில் கிடைக்கிற முதுமக்கள் தாழிகளின் முக்கியத்துவம் தெரியவில்லை. மொகஞ்சதாரோ, ஹரப்பா பற்றி நமக்கு

இருக்கிற அக்கறை தமிழ் மண்ணின் மையப் பகுதியில் கங்கை கொண்ட சோழபுரத்துக்கு மிக அருகே உள்ள 'உட்கோட்டை' குறித்து இல்லை. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நகர நாகரிகம் என்று கொண்டாடப்படுகிற மெசபடோமியா நாகரிகத்தை நாம் அறிந்தது போல பூம்புகார் குறித்து அறியவில்லை. பதினொராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நுட்பமான கட்டுமானங்களை கொண்ட புகார் நகரம் கடலுக்குள் மூழ்கியுள்ளது என தன் ஆய்வு முடிவை 'கிரஹாம் கூக்' என்ற அறிஞர் சான்றுகளோடு வெளியிட்ட பிறகும் மௌனமாய் தமிழ் மண்ணின் கலாச்சாரம், பண்பாடு மற்றும் நாகரிகத் தொன்மையை இருட்டடிப்புச் செய்கிறோம். நாம் நம் அடையாளம், தொன்மை குறித்து கவனிக்காத தவற்றைத் திரும்பத் திரும்ப செய்கிறோம். நம் மொழியில் உள்ள அருமையான நூல்களின் பெருமைகளை நாம் இன்னும் உணரவில்லை. அவற்றை மொழிப்பெயர்த்து பிற நாடுகளில் சேர்க்கின்ற வேலையை நாம் இன்னும் துரிதமாக உத்வேகத்துடன் செய்ய வேண்டும். மாணவர்கள் முயன்றால் முடியாதது இல்லை. எந்திரனை சங்கத் தமிழ் பேச வைத்த மாணவிகள் செல்போனில் சங்கத்தமிழ் பாடல்களின் சில வரிகளை பழமொழி போல தேர்ந்து எடுத்து எளிய மொழிப் பெயர்ப்புடன் மென்பொருள் எழுதினால் என் செலவில் அவற்றை வெளியிடுவேன். தக்க பரிசும் வழங்கப்படும்.'' என கல்லூரி விழாவில் ரிஷி பேசியவற்றை அந்தப் பக்கங்களில் செய்தித்தாளில் இருந்து கத்தரித்து ஒட்டி வைத்தாள்.

'ப்ரெண்ட்ஸ் கிளப்'பில் மாணவர்கள் தங்கள் பாக்கெட் மணியை பே



பட்டது. கிராம வளர்ச்சி செயலில் ஈடுபட பணம் தேவைப்பட்டது. கல்லூரி முதல்வரிடம் 'கல்லூரி பஜார்' நடத்த அனுமதி கேட்டனர். நல்ல விஷயத்திற்காக அவர் மனமுவந்து அனுமதியளிக்க... மாணவர்கள் ஸ்டால் திருவிழாவே நடத்திவிட்டனர். துணிமணி, அணிமணி, நொறுவல் ஐட்டங்கள் வரை கடை கட்டி பணத்தை அள்ளிவிட்டனர். அதுவும் பெண்கள் 'மெஹந்தி' ஸ்டாலில் செம வசூலானது. மதுமதி கைவண்ணத்தில் அழகு அழகான டிசைன்களில் கைகளில் மெஹந்தியுடன் உலாவரும் ஒளிக்கதிர்களாய் மாணவிகள் உற்சாகமாய் அலைந்தனர்.

''எங்களுக்கு மெஹந்தி போடமுடியுமா?''

''பாக்கெட்டில் இருநூறு ரூபாய் இருக்கா கிஷோர்?'' காவ்யா கேட்டாள்.

''ஐயோ! பகல் கொள்ளையாய் இருக்கிறதே! ஐந்து ரூபாய் முதலீட்டில் நாற்பது மடங்கு இலாபமா? வருமான வரி ரெய்டுக்கே ஏற்பாடு பண்ணனும் போலிருக்கே?''

வந்த மொத்தப் பணத்தை கணக்குப் பார்த்து - செலவும், வரவும் எழுதி சேர்மனிடம் ஒப்படைத்தனர்.

செமஸ்ட்டர் எக்ஸாமை மிக நன்றாக எழுதினாள் மதுமதி. பின்னே அவள் வானத்தை வசமாக்க வேண்டாமா? காவ்யாவிற்கு இந்த செமஸ்ட்டர் தான் கடைசி. பின் அவள் ப்ராஜெக்ட் வேலைக்காக டெல்லிக்கு கிளம்ப இருந்தாள், காவ்யா கிளம்புவது மதுமதியின் மனதிற்கு கஷ்டமாக இருந்தது. கடந்த ஆறுமாதங்களில் இருவரும் நெருங்கி பழகி விட்டனர். ஒரு சகோதரியைப் போல வழி நடத்தினாள்;

தோழியாய் நட்புக் காட்டினாள். பாதுகாவலராய் அவளை சுற்றி சுற்றி வந்தவர்களிடமிருந்து காப்பாற்றினா இத்தனைக்கும் மதுமதி எதையும் வாய்திறந்து அவளிட சொன்னாள் இல்லை. ஸ்டீபன் பிரச்சனை உட்ப எதைப்பற்றியும் அவள் பேசவில்லை.

காவ்யாவுடன் அவள் பெரும்பான்மையான நேரங்களில் காணப்பட்டதால் நிறைய பேர் அவளை நெருங்கவில்லை நல்லவனாய் இருப்பதுடன் வல்லவனாய் இருக்க வேண்டும் என காவ்யா அடிக்கடி கூறுவார். அவள் கிளம்பு பொழுது "மது! என்னவோ தெரியலை. மனசு ரொம் சங்கடமாய் இருக்கிறது. உனக்கு ஒன்று சொல்வேன் கவனத்தில் வை. யாரையும் நம்பி விடாதே! எதை செய்தாலும் என் உதவி தேவை என்றால் என்னை தயங்காமல் தொடர்பு கொள்" எனக் கூறி கண்ணீர் வழி நின்றவளின் கன்னத்தில் தட்டிக் கொடுத்து விட் கிளம்பினாள்.

ஸ்டீபன் காவ்யாவை எண்ணி சற்று விலகி இருந்தான் அவள் சென்றதும் மனதிற்குள் உற்சாகமாகி எங்கு சென்றாலும் மதுமதியை பின் தொடர்ந்து செல்லலானான் தேர்ந்தெடுத்த திரைப்படப் பாடல்களை கைப்பேசியில் பதிவு செய்து அவள் செல்லும் நேரங்களில் அதை ஒலிபரப்பிக் கொண்டிருந்தான். ஓரிரு முறை அவளுடன் பேச எத்தனித்தான். ஆனால் மதுமதியோ ஓடாத குறையா நழுவ...

ரேஷ்மா கூட கேட்டாள்.

"அவனுடன் பேசினால் தான் என்ன? அவன் உன்னை கடித்தா தின்னப் போ



"சும்மாவே தொல்லை தாங்கலை; இதில் பேசினால் அவ்வளவு தான்!"

"நீ விலகி விலகி ஓடத்தான் அவன் உன் பின்னால் சுற்றுகிறானோ என்னவோ?" என மாலினி சொன்னாள்.

'ரிஷியை விட்டு இவள் எப்படியோ விலகினால் சரி! இவள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?' என்ற நினைப்பில் ஸ்டீபனை ஆதரித்து பேசினாள்.

"ஹேய்! எந்த காலத்தில் இருக்கிறாய்? பாய்ஸ்-ம், கேர்ள்ஸ்-ம் பழகுவதில் என்ன தப்பு இருக்கிறது? பிடித்திருந்தால் கல்யாணம் பண்ணிக்கொள். அதுவும் வசதியான பார்ட்டியா? என பார்த்துக்கொள். இல்லையென்றால் டைம் பாஸிற்காக பழகி அவர்கள் நமக்காக செலவு செய்வதை ஜாலியாக அனுபவி."

"சீச்சீ!" அருவெறுப்புடன் கூறினாள் மதுமதி.

"இந்த மாதிரி நட்புகள் எனக்கு வேண்டாம். உங்களுடன் நிறுத்திக் கொள்ளுங்கள்."

"உனக்கு வாழத் தெரியவில்லை; சந்தோஷமாக துள்ளும் இளம் பருவத்தை அனுபவிக்க வேண்டும். உன்னை நாங்கள் டிஸ்கொதே கூப்பிட்டோமா? பீர் சாப்பிட சொன்னோமா? இதற்குப் போய் 'சீச்சீ' என்கிறாய்? எல்லாருடனும் இயல்பாய் பழகு என்றால்... இப்படி தப்பாய் புரிந்து கொள்கிறாயே?"

"உங்களை நான் குறை ஒன்றும் சொல்லவில்லை. எனக்கு இதெல்லாம் ஒத்து வராது என்று தான் சொன்னேன். ஒழுக்கம், பண்பாடு இவற்றைப் பற்றி நிறைய என்

வளர்ந்த சூழல் வேறு. என்னால் உங்களைப் போல மு
முடியாது.''

''அப்படியென்றால் நாங்கள் ஒழுக்கமில்லாதவர்களா?

''சூழ்நிலை உன்னையும் மாற்றும்; நாங்களு
பார்க்கத்தானே போகிறோம்!'' என இருவரும் மாறி ம
வெடித்தனர்.

''ஹேய்! கோவிச்சுக்காதீங்கப்பா! ஒருத்தர் எவ்வள
உயர்ந்த இடத்தில் இருந்தாலும் ஒழுக்கம் தவறிவிட்டா
மதிப்பு இழந்து போவார். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படு
என்று வள்ளுவர் சொல்லி இருக்கார். எதுவும் இழந்
வாழலாம்; ஆனால் ஒழுக்கம் இழந்து வாழக்கூடாது.''

''அம்மா! அறுவை அரசி! ஆளைவிடு தாயே! இனி உ
பேச்சிற்கே நாங்கள் வரமாட்டோம்.''

இருவரும் இணைந்து ஒரே குரலில் கூறினர்.

மாலினி ஏதாவது செய்தாக வேண்டிய மனநிலையி
இருந்தாள். தன்னுடைய அடுத்த செயல்பாடு என்ன? என
தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள். மதும
எல்லாரிடமும் நன்றாக பழகினாலும் தன் சொந்
விஷயங்கள் எதுவும் சொன்னதில்லை. விவரித்து என்ன
சுருக்கமாகக் கூட பேசுவதில்லை. ரிஷியிடம் அவள் ப
வாங்கும் படத்தைப் பார்த்துவிட்டு வகுப்பில் அனை
வரும், ''உன் ஆள் அம்சமாய் இருக்கிறார்!'' ''உன்னை
பார்த்ததும் அவர் முகத்தில் ஆயிரம் கோடி சூரிய பிரகா
தெரியுது!'' ''ஆமாம், அவர் உன்னிடம் என்ன சொன்னா
உன்னைப் பார்த்ததும் மூளையில் பல்பு எரியுதுன்
சொன்னாரா



''பிடிச்சாலும் புளியங்கொம்பாய் பிடித்தாய்''
''அதிர்ஷ்டக்காரி நீ! லக்கி ஸ்டாரில் பிறந்து இருப்பாய் போல!'' என வியப்பும், பொறாமையும், மேலும் ஏதேனும் விஷயம் இருக்கிறதா? என தெரிந்து கொள்ளும் ஆர்வமுமாய் வினவினர். அவள் சிவக்கின்ற முகம் ஆர்வத்தை வளர்க்க...

நாளுக்கு நாள் ரிஷியுடன் அவளை இணைத்து பேசி சீண்டுவது அதிகமாகியது. மலர்கின்ற இளம்பருவம் கனவுகளின் காலமல்லவா? மதுமதியின் மனதும் இனிய கனவுகளால் பூரித்து பூத்து நின்றது. பாவ்னாவிற்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த மாலினி சந்தோஷமாய் சென்னை கிளம்பி போனாள். மதுமதியின் கைப்பேசி எண்ணிற்கு தேவையற்ற அழைப்புகள் வருவதில்லை. மிக முக்கியமான தகவல் தொடர்பிற்கு மட்டுமே பயன்படுத்துவாள். காதணியாய் அவள் அதை பயன்படுத்துவதில்லை. அவள் தன் எண்ணை முக்கியமானவர்களைத் தவிர மற்றவர்களுக்கு கொடுக்கவில்லை. மனதின் ஓர் மூலையில் ஏக்கமோ? ஆசையோ? எட்டிப் பார்த்தது.

'நேரில் தான் சந்திக்க முடியவில்லை. போனிலாவது பேசினால் என்ன?' என ஆசை கொண்ட மனது ஏங்க,

'உன் கைப்பேசி எண் அவருக்கு எப்படித் தெரியும்?' என்று முட்டாள் எண்ணத்தை அறிவு தட்டிக் கேட்டது.

ஆனால் அந்த அறிவே 'ஆர்வமிருந்தால் அறிந்து கொள்ள வழிகளா இல்லை?' என பதிலும் சொன்னது. எந்த தேவதை அவள் ஆசைக்கு 'ததாஸ்து' சொன்னதோ

"ஹாய் மது டார்லிங்,

எப்படி இருக்கிறாய் கண்ணம்மா? நான் உன்னைப் பார்க்க சீக்கிரம் வருகிறேன்."

பேசியது ரிஷி தான். ஆனந்தத்தில் பேச்சே மறந்து போனாள் மதுமதி.

## 13

கணேசன் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டான். பத்து இலட்சரூபாய் பணத்தை அவன் கீழே வேலை செய்தவன் எடுத்துக்கொண்டு ஓடிவிட அதற்கு பொறுப்பு ஏற்கும் நிலைக்கு ஆளானான். டி.டியை மாற்ற உடன் அழைத்துச் சென்றவன் கவனமாய் திட்டமிட்டு காத்திருந்து பணத்துடன் திரும்பும் பொழுது சாலை விபத்தில் கணேசனின் கவனம் கலைந்த பொழுது உடன் வந்தவன் பணத்துடன் நழுவி விட்டான். பல இடங்களில் அவனைத் தேடி கண்டுபிடிக்க முடியாமல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தான். போனவனை கண்டுபிடிக்க பல்வேறு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போதிலும் உடனடியாக பணத்தை கணேசனே கட்ட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. கணேசனிடம் பெரிய அளவில் சேமிப்பு எதுவும் இருக்கவில்லை. தாராளமாய் செலவு செய்து வாழ்ந்ததை தவிர சொல்லிக் கொள்ளும்படி எந்த பொருளையும் வாங்கி வைக்கவில்லை. என்ன செய்வது? என அவன் தவித்துக் கொண்டிருக்க கற்பகமோ கோபத்தின் உச்சியில் இருந்தாள்.



"பணத்தை கன்னாபின்னா என்று செலவழிக்காதீர்கள் என்றால்... கேட்டால் தானே? பிள்ளையா? குட்டியா? என இஷ்டத்திற்கு செலவு செய்தால் இப்படித்தான் ஆபத்தில் கஷ்டப்படணும்! நான் என்ன இளிச்சவாயா? என் நகைகளை கேட்டால் கொடுக்க போவதில்லை. அதையும் கொடுத்துவிட்டு தெருவில் நிற்பேனா?" என படபடத்துக் கொண்டே வேலை செய்தாள். இவையெல்லாம் பாட்டியின் காதுகளிலும், மதுமதியின் செவிகளிலும் விழத்தான் செய்தன. அவள் ஒன்றும் கேட்டுக் கொள்ளவில்லை. மாதா மாதம் செலவுகள் எல்லாம் தன்னால் தான் செய்யப்பட்டது என்று கற்பகத்திற்கு தெரியாதா என்ன? ஆனால் அவளை கேட்பவர் யார்? வீட்டில் நடக்கின்ற விஷயங்களை கவனிக்க நேரமில்லையோ? அல்லது கண்டும் காணாமல் விட்டதோ? வாழ்க்கை இதுவரை பிரச்சனை இல்லாமல் ஓடிவிட்டது. வீட்டிற்கு வந்த கணேசனிடம் பாட்டி கேட்டார்.

"என்னப்பா! பணத்திற்கு என்ன செய்யப் போகிறாய்?"

"வெளியில் இரண்டு இலட்ச ரூபாய் தான் புரட்ட முடிந்தது. மீதி எட்டு இலட்சத்திற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை."

"உனக்கொரு யோசனை சொல்லட்டுமா?"

"என்ன பெரியம்மா?"

"நான் கொடுத்த அஞ்சு இலட்ச ரூபாயை எடுத்துக் கொள். மதுமதியின் படிப்பிற்காக இரண்டு இலட்சரூபாய் வைத்திருக்கிறேன். அதையும் தருகிறேன். இப்போதைக்கு அந்தப் பணம் தேவையில்லை. அதனால் மறுப்பு சொல்லாமல் எடுத்துக் கொள்."

"இரண்டொரு மாதங்களில் படிப்பிற்கான பணத்தை நான் திருப்பித் தந்து விடுகிறேன்."

"அதற்கென்ன? உன் மேல் முழு நம்பிக்கையிருக்கிறது."

அப்படி. இப்படி - அதையும், இதையும் புரட்டி போட்டு பணம் பெற முயற்சித்தும் எதுவும் பெயரவில்லை. ஒன்பது இலட்சம் மட்டுமே திரட்ட முடிந்தது. முதலாளி கணேசன் மேல் இருந்த மதிப்பினால் ஒன்பது இலட்ச ரூபாயை பெற்றுக் கொள்ள சம்மதித்தார். மதுமதி பல்கலைக்கழக முதல் மாணவியாய் தேர்ச்சி பெற்றிருந்தாள். சும்மாவே அவள் எல்லாராலும் கவனிக்கப்படுகின்ற, கொண்டாடப்படுகின்ற கனவு தேவதைப் பெண், அவள் இன்னும் இன்னும் வெற்றி பெறும் பொழுது, உயரமான சிகரம் தொடும்பொழுது காற்றுப்பட்ட நெருப்பாய் சகல இடங்களிலும் விஷயம் பரவி வாழ்த்து மழை பொழிந்தன.

ஸ்டீபன் அவளைத் தேடிக்கொண்டு அவள் வகுப்பறைக்கே வந்துவிட்டான்.

"வாழ்த்துக்கள்!"

"நன்றி" சொல்லி விலகியவளை கைநீட்டி தடுத்தான்.

"ஏன் இப்படி ஓடுகிறாய்? ட்ரீட் கிடையாதா?"

"இந்தாங்க சாக்லேட்."

"அவ்வளவு தானா? ஹோட்டலுக்கு போகலாமா?"

"மன்னிக்கவும்."

மேலே பேசாமல் அங்கிருந்து நகர முயற்சித்தாள். ஆனால் அசையாமல் ஸ்டீபன் நிற்கிறானே? கிஷோர் அவளருகே வந்தான்.



"மதுமதி, என் கேள்விக்கு உன்னால் பதில் சொல்ல முடியுமா?"

'என்ன?' என்பது போல் பார்க்க,

"ஒருத்தன் கடவுள் கிட்டே - 'கடவுளே எனக்கு பை நிறைய பணம், ஒரு வண்டி, என்னைச் சுற்றிலும் பெண்கள் எல்லாம் வேண்டும் என வேண்டிக்கிட்டானாம்..."

அவன் முடிப்பதற்குள் ரேஷ்மா குறுக்கிட்டாள்.

"உன்னை மாதிரியே வேண்டியிருப்பான் போலிருக்கிறதே!"

"உஷ்! குறுக்க பேசாதே; நம் தேவதை என்ன சொல்லுதுன்னு பார்க்கலாம். சொல்லு பெண்ணே சொல்லு! கடவுளும் இந்தா பிடிச்சுக்கோன்னு வரம் தந்துட்டார். அப்புறம் என்ன ஆச்சு?" என மதுமதியைப் பார்த்து கேட்க

"சூ! லேடீஸ் பஸ் கண்டக்டர் ஆகிட்டானாக்கும்!" என அவள் கூற

"ஹோ" என கூச்சல் எழுந்தது.

"யுனிவர்ஸிட்டி மெடலிஸ்ட்டு கிட்டே இப்படி மொக்கை ஜோக் அடிக்காதே!" என்ற மாலினியை கிஷோர் சீண்டினான்.

"மாலினி நீ யுனிவர்ஸிட்டி பர்ஸ்ட் வர ஒரு ஐடியா தரட்டுமா? காலையில் அலாரம் வச்சு மூணு மணிக்கு எழுந்திரி. தூக்க கலக்கம் போக உடனே பச்ச தண்ணில குளி. அப்புறம் சூடா ஒரு கப் டீயை குடி. பின் டூவீலரிலோ, ஆட்டோவிலோ ஐந்து மணிக்கே கிளம்பினால் பீக் அவர் இல்லாததனால் டிராபிக் ஜாமில் மாட்டாமல் யுனிவர்ஸிட்டிக்கு பர்ஸ்ட்டா வந்திடலாம்."

மாலினி பட்டென்று அவன் முதுகில் தட்டினாள்.

"ஆள் வச்சு அடிக்கிறதை கேட்டிருக்கிறேன்; இங்கே பொண்ணுங்களே ஆளாளுக்கு அடிக்கிறாங்கப்பா! கிஷோர் ரொம்ப பாவம்பா."

"ஹேய் நேற்று எங்கே போனாய்? தீபாவளிக்கு துணி எடுக்கவா?" என மாலினி பேச்சை மாற்றினாள்.

"இல்லை! தீபாவளிக்கு இல்லை; எனக்கு துணி எடுக்கப் போனேன்."

"ரொம்ப கடிக்காதே!" என மாலினி அலுத்துக்கொள்ள மதுமதி நாசுக்காய் அங்கிருந்து வெளியேறியிருந்தாள். ஸ்டீபன் அவளைத் தேட நண்பர்கள் குழாம் தொடர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தது.

"நான் போகாத லேடீஸ் காலேஜே இல்லை; ஸ்டீபன் ஸார் நுழைய முடியா இடத்திலும் நான் நுழைந்து விடுவேன்" என அவன் பீலா விட... ஸ்டீபன் எரிச்சலுடன் வெளியேறினான். முன்னணி பெண்கள் கல்லூரி பெயரைச் சொல்லி அதில் அவன் நுழையவே முடியாது என ரேஷ்மா சவால் விட...

"யார் சொன்னது? அந்த கல்லூரியில் எப்பவோ நுழைந்து விட்டேன்."

"சும்மா பீலா விடாதே!"

"கதையல்ல நிஜம்! உன் மேல் சத்தியம் செய்யட்டுமா?"

"இவன் அடித்துவிடுவதை எல்லாம் நம்புகிறாயா? எப்போது போனாய் என்று கேட்டுப் பாரேன்! ஒரு வயது குழந்தையாய் இருந்த பொழுது [illegible] வில் இருந்த



சித்தியைப் பார்க்க அம்மா அங்கே தூக்கிட்டு போனாங்கன்னு சொல்லுவான்," என மதுமதி மறுபக்க கதவு வழியாக உள்ளே வந்தவாறே கூற,

"தேவதைகள் எல்லா இடத்திலும் இருக்கும்; எல்லா ரகசியத்தையும் தெரிஞ்சுக்கும்! இப்படி பட் பட்டென்று உண்மையை உடைக்கக் கூடாது."

மணியொலித்ததும் அனைவரும் கலைந்து செல்ல..

மதுமதி மெல்ல எட்டிப் பார்த்தாள் ஸ்டீபன் எங்காவது தென்படுகிறானா? என்று.

அவள் பார்ப்பதை கிஷோரும் கவனித்தான்.

"மதுமதி! அவன் செய்கை உனக்கு பிடிக்கவில்லை என்றால் நேரிடையாக சொல்லிவிடு. அவனை சந்திக்க பயந்து ஓடினாய் என்றால் பிரச்சனை அதிகமாகுமே ஒழிய, தீராது. பயம் தான் முதல் எதிரி."

"நன்றி கிஷோர் அவனுடன் தனியாக பேச நான் விரும்பவில்லை."

"இதையெல்லாம் மேடை போட்டு மைக் வச்சு பேச முடியாதம்மா?" அவள் சிரித்தாள்.

"இப்படி அழகாய் சிரித்தால் என்னைக் கூட நம்ப முடியாது! நீ முதலில் உன்னை நம்பு."

"தத்துவமோ, கேலியோ எதுவாய் இருந்தாலும் நம்பிக்கை கொடுத்ததிற்கு ரொம்ப நன்றி."

மதுமதி வீட்டிற்கு வந்த பொழுது ஒரு பார்சல் வந்திருந்தது. யார்? யாருக்கு அனுப்பியது? எனப் பார்த்தாள்.

அனுப்புநர் பகுதியில் ரிஷியின் பெயரைப் பார்த்ததும் பரபரப்புடன் பிரித்தாள்.

மிக மிக அழகான கை கடிகாரம்.

18 காரட்டில் அழகான பூ வேலைப்பாடுகளுடன் வைரக்கற்கள் பதித்து செய்யப்பட்ட கடிகாரம் பளபளவென்று மின்னியது.

'வெற்றிக்கான பரிசோ?'

பாட்டியும், கற்பகமும் ஆர்வமும், வியப்புமாய் அதைப் பார்த்தனர்.

## 14

பாட்டி யோசனையுடன் மதுமதியின் முகத்தைப் பார்த்தார். அதிலிருந்த அலாதியான மகிழ்ச்சி, கண்களில் தெரிந்த ஒளி அவற்றை முடிவெடுக்க செய்தது.

"யார் கண்ணம்மா அனுப்பியது?"

"அவர் தான்... அம்மம்மா!"

"யார்...? உனக்கு புத்தகம் பரிசு கொடுத்தவரா?"

"ம்!"

"புத்தகம் என்றால் பரவாயில்லை. ஆனால் இவ்வளவு விலை உயர்ந்த பரிசு... எனக்கு நல்லதாகப் படவில்லை" என கற்பகம் காதில் விழுமாறே முணுமுணுத்தாள்.



"உனக்கு பிடித்திருந்தால் சொல்! கல்யாணத்திற்கு பேசலாமா?" என பாட்டி கேட்க,

"அம்மம்மா!" என அவரை கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

"கணேசன் வரட்டும். பேசச் சொல்கிறேன்."

"என்ன பெரியம்மா?"

"உனக்கு நூறு வயசுப்பா."

"என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?"

"மதுமதிக்கு கல்யாணம் செய்வதைப் பற்றித் தான்."

"இப்பொழுது அதற்கென்ன அவசரம்?"

"உங்களுக்கு அவசரமில்லை. ஆனால் அவளுக்கு அவசியமாய் இருக்கிறதே!"

"என்ன உளறுகிறாய்?"

"என்னை மட்டும் தான் மிரட்ட முடியும். விவரம் கேட்டால் உளறலா? உண்மையா? என்று புரியும்."

"நம் மதுவை ஒரு பையன் விரும்புகிறான். மதுவுக்கும் இஷ்டம் தான். எனக்கும் பையனை பிடித்திருக்கிறது."

"அப்புறம் என்ன பெரியம்மா? பையனை பார்ப்போம்; பேசுவோம்; விசாரிப்போம். பிறகு திருமணத்தை நடத்தலாம். அவளுக்கும் பதினெட்டு வயது பூர்த்தியாகட்டும்."

"நீ சொல்வது சரி தான். பையன் வீட்டில் பேசி முடிவு செய்து கொள்வோம். கொஞ்சம் நாட்கள் கழித்து திருமணத்தை நடத்திக் கொள்ளலாம்."

"பையனின் முகவரி என்ன?"

மதுமதியின் முகத்தில் தெரிந்த மாற்றத்தை சட்டென பாட்டி கண்டு கொண்டார்.

''எனக்கு சரியாய்...'' என அவள் முடிக்கும் முன் பாட்டியின் நினைவில் பளீரென ஒரு மின்னல் வெட்டியது.

''மதும்மா! ரிஷி பையனை நான் சென்னையில்தான் பார்த்தேன். அவன் தங்கை கூட அவர்கள் முகவரி அட்டையை கொடுத்தாள். அதை எங்கேயோ வைத்திருக்கிறேன். கணேசா! அன்றே அந்த பையனை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. எத்தனை மரியாதையாய் பேசினான் தெரியுமா?''

''உங்கள் மதிப்பீடு சரியாய் தான் இருக்கும். முகவரியை தேடி வையுங்கள். நம் வீட்டுப் பெண் கவனம் படிப்பில் இருக்கட்டும்; நாம் அவள் ஆசைக்கனவை சுமப்போம்.''

மதுமதிக்கு அன்று ஏனோ உறக்கமே வரவில்லை. உற்சாகத்தால், ஆனந்தத்தால் மனம் நிறைந்து இருந்தது. புரண்டு புரண்டு படுத்தாள். வழக்கத்திற்கு மாறாக பாட்டி அன்று அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தார். மறுநாள் அவள் கல்லூரிக்கு கிளம்பிவிட... பாட்டி தன் வழக்கமான வேலைகளை முடித்து விட்டு கொல்லைப்புறம் வந்த பொழுது கற்பகம் அடுத்த வீட்டுப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தாள். இருவரும் வாசலுக்கு முதுகு காட்டி பேசிக் கொண்டிருந்ததால் அவர் வந்ததை கவனிக்க வில்லை.

''கிழவி கிட்டே நிறைய பணம் இருக்கும் போலிருக்கே? ஏதோ கல்யாணம் என பேச்சு அடிபட்டதே? யாருக்கு கல்யாணம்?''



''அதுதான் உலக பேரழகியாய் ஒரு பெண் இருக்கிறதே! வெள்ளையாய் இருந்தால் எல்லாரும் மதிமயங்கி போய்விடுகிறார்களே!''

''ஏன் அக்கா அப்படி சொல்கிறாய்?''

''ஆமாம் ரமா! உனக்கு ரெண்டு பிள்ளைகள் இருக்கு. எனக்கோ ஆதரவளிக்க அம்மா, அப்பா இல்லை; என்னை வளர்த்தவர்கள் கல்யாணம் செய்து கொடுத்ததும் தொலைந்தது நம்மை பிடிச்ச பீடை என்பது போல் ஒரேடியாக தலை முழுகி விட்டார்கள். எனக்கென்று பிள்ளைகளும் இல்லை. கட்டின கணவன் கண் நிறைவாய், அன்பாய் இருக்கிறார் என்று நினைத்தால் அதிலும் மண் விழும் போலிருக்கிறது.''

''என் வீட்டுக்காரர் எந்நேரமும் ஜவுளிக்கடையிலேயே இருக்கிறவர். ஆனால் உன்னவரோ உன்னை சுற்றிச் சுற்றி வருவார். அப்படியிருக்க ஏன் அக்கா இப்படி நொந்து பேசுகிறீர்கள்?''

''என் தலையெழுத்தை நான் தான் நொந்து கொள்ள வேண்டும். இப்பொழுது எல்லாம் அவர் எரிந்து எரிந்து விழுகிறார். கல்யாணம் ஆகி இத்தனை வருடங்களில் அவராக எனக்கு ஒரு புடவை கூட வாங்கி தந்ததில்லை. ஆனால் நேற்று வந்தவளுக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு பட்டுப்புடவை வாங்கித் தருகிறார். எனக்கு வயிறு எரிகிறதடி!''

''பார்த்து அக்கா! அல்சர் வந்துவிடப் போகிறது. நீயோ உன் வீட்டுக்காரரை விட நிற மட்டு. உன்னை விட அவர்தான் பளிச்சென்று இருக்கிறார். இப்போ நான் அழகாய்

இருப்பது போல் என் வீட்டுக்காரர் இல்லாவிட்டாலும் பிரச்சனையில்லை. ஆனால் உன் வீட்டுக்காரர் விஷயத்தில் நீ கவனமாய் இருக்க வேண்டும்.'' என்ற பொழுது ரமா வீட்டு வாசலில் கார் வந்து நின்றது.

''ரமா! என்னை கவனமாய் இருக்கச் சொன்னாயே? உன் வாழ்விலே இடியே விழுந்துடுச்சு.''

மாலையும், கழுத்துமாய் ரமாவின் கணவன் மற்றொரு பெண்ணின் கரம்பிடித்துக் கொண்டு காரிலிருந்து இறங்கினான்.

''ஐயோ! கடையில் வேலை செய்த பெண் அல்லவா இவள்! ஏன் இப்படி எனக்கு துரோகம் செய்தார்? கடவுளே! கடவுளே!'' என தலையிலடித்துக் கொண்டு ரமா அழ, தெருவே வேடிக்கை பார்த்தது. ஒருவர் துக்கம் மற்றொருவருக்கு செய்தி என்பதைப் போல்தான் உச்சுக் கொட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தனர்.

பாட்டிதான் முன்னே வந்து கேட்டார்.

''இது உனக்கே நல்லா இருக்காப்பா? கண் நிறைவாய் மனைவி, கண்மணி போல் இரு பிள்ளைகள் இருக்கும் பொழுது இன்னொரு கல்யாணம் செய்து கொண்டது நியாயமா?''

''இது என் வீட்டு விவகாரம்! யாரும் தலையிட வேண்டாம். அப்புறம் விளைவுகள் மோசமாய் இருக்கும்'' என்றவன் ''ஏய்! போய் ஆரத்தி கரைத்து வா'' என ரமாவையும் அதட்டினான். அவள் விக்கித்து நிற்க, கற்பகம் சட்டென்று முன்வந்து பாட்டியின் கையைப் பற்றி வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.



''அந்த ஆளே நிர்மூடன். நமக்கு எதற்கு வம்பு?''

என்ன சமாதானம் சொன்னாலும் பாட்டியின் மனது ஆறவில்லை. புலம்பி தீர்த்து விட்டார். கற்பகமும், ரமாவும் பேசிக் கொண்டிருந்ததை கேட்ட மன உளைச்சல் வேறு! தனக்குப் பின் மதுமதியின் வாழ்க்கையைப் பற்றி கவலை பிடித்துக் கொண்டது. அவளுக்கு நல்லதை மட்டுமே சொல்லிக் கொடுத்து வளர்த்துவிட்டோமே! பொல்லாத உலகத்தின் மறுபக்கத்தை காட்டத் தவறிவிட்டோமே! பிரச்சனைகளை சமாளிக்க அவளால் முடியுமா? என் கண்மணி அனிச்சமலராச்சே? இந்த வீட்டில் அவளுக்கு நல் ஆதரவு கிடைக்காது போலிருக்கே? கணேசன் ஆண்பிள்ளை; வெளியில் சென்று விடுவான். கற்பகம் ஆதரவு இல்லாவிட்டால் இந்த வீடு நரகமாகிவிடுமே! பல்வேறு யோசனைகளோடும், மனகலக்கத்துடனும் ரிஷியின் முகவரி அட்டையைத் தேடினார். தேடிய பொருள் பெட்டியில் மடித்திருந்த கைக்குட்டையிலிருந்து கிடைத்தது. மனசுக்குள் ஓர் நிம்மதி பரவ அதை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார். தெருவின் முடிவில் இருந்த பொது தொலைப்பேசியிலிருந்து ரிஷி வீட்டு எண்ணை தொடர்பு கொண்டார்.

''வீட்டிலிருப்பவர் வெளியில் சென்றிருப்பதால் எண் 6ஐ அமுக்கி விட்டு உங்கள் அழைப்பின் செய்தியை பதிவு செய்யவும்.'' என பேச்சை பதிவு செய்யுமாறு பதில் வந்தது.

''பாவ்னா! நான் தான் மதுமதியின் பாட்டி பேசுகிறேன். பின்வரும் எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்,'' என வீட்டு எண்ணை சொல்லி முடித்தார்.

அலுப்பாய் இருந்ததால் வீட்டிற்கு சென்றதும் அறைக்குள் நுழைந்து படுத்துக் கொண்டார். சாப்பிடும் எண்ணம் கூட வரவில்லை. தொலைப்பேசி ஒலித்தது.

கற்பகம் வரும் ஓசை கேட்டது.

"உங்களுக்குத்தான்!"

"யார்?"

"யாரோ ரிஷியாம்."

"ரிஷி" கால்களுக்கு இத்தனை வேகம் வருமா?

"வணக்கம் பாட்டி! மது எப்படி இருக்கிறாள்? நீங்க எப்படி இருக்கிறீர்கள்? நானே உங்களை பார்க்க வர வேண்டும் என்று இருந்தேன். எங்களுக்கு உங்கள் அனுமதி வேண்டும்; திருமணம் செய்து கொள்வதற்கு நீங்கள் முழு மனதாய் சம்மதிக்க வேண்டும்."

"ஆகா! அந்த நாளிற்காகத்தான் காத்திருக்கிறேன்."

திருமணகோலத்தில் ரிஷியும், மதுவும்.

**"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத்தாமம் நிறை தாழ்ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னை**
**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் - தோழீ!"**

என பூத்திட்ட மலர்ச்சியுடன் கண்ணுக்கு மிக நிறைவாய் நின்றிட்ட தன் கண்மணியைப் பார்த்துப் பூரித்து பாட்டி நிம்மதியுடன் கண் மூடினார்.



மதுமதிக்கு வகுப்பில் அன்று ஏனோ கவனம் செல்ல வில்லை. மனதிற்குள் இனம் புரியாத கலக்கம். என்றைக் கும் இல்லாமல் அன்றைக்கு வகுப்பு எப்போதடா முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டது. வாசலில் அலுவலகப் பையன் வந்து நின்றான்.

"மதுமதியை ஆபீஸில் அழைத்து வரச் சொன்னார்கள்."

'அப்பாடா!' என்ற உணர்வுடன் எழுந்தாள்.

அவள் பெரிதாக எதையும் எண்ணிக் கொள்ளவில்லை.

ஆபீஸில் கணேசன் அமர்ந்திருந்தான். ஆச்சரியமாய் பார்த்தாள்.

"என்ன மாமா?"

"மது...." குரல் தழுதழுத்தது.

"என்னாச்சு மாமா?"

"மது... பெரியம்மா....."

"பெரி... அம்மம்மாவிற்கு என்ன?"

"அவங்க.... நம்மை தவிக்கவிட்டுட்டு போய்ட்டாங்க."

முழுவதும் விஷயத்தை புரிந்து கொள்ள ஒரு நிமிடம் ஆயிற்று.

புரிந்த வினாடி மின்சாரம் பாய்ந்தவள் போல் ஆனாள். அப்படியே அடியற்று விழுந்தாள்.

# 15

மதுமதியை தேற்றுவார் இல்லை. விவரம் தெரிவதற்கு முன் மறைந்து போன பெற்றோர்களின் முகமே மறந்து போனது. ஆனால் பாட்டி அப்படி இல்லையே? ஊனாய், உயிராய் அவளோடு இரண்டற கலந்து விட்டவர் அல்லவா? அவளால் தேறவே முடியவில்லை. இனி அவளுக்கென்று யார் இருக்கிறார்கள்? அவள் முகம் பார்த்து மனதறிபவர் எவர்? அவள் வாடினால் துடிப்பவர் யார்? அவளை நேசிக்கும் ஜீவன் எது? அழுதழுது துவண்டு கிடந்தவளுக்கு சென்னையில் இருந்து தந்தி வந்தது.

"மது டார்லிங்.

என் ஆழ்ந்த வருத்தங்கள்! நான் உனக்கிருக்கிறேன். வருந்தாதே."

அன்புடன்

'உன் ரிஷி'

இருண்ட குகையில் - வறண்ட பாலைவனத்தில் கிடப்பவளுக்கு ஓர் சின்னஞ்சிறு ஒளிக்கீற்றாய் அந்த தந்தி இருந்தது. சாப்பிடாமல் சுருண்டு கிடந்தவளை கற்பகம் பார்த்தாள். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. தன் கடமை சமைப்பது மட்டும் தான் என்பதோடு நிறுத்திக் கொண்டாள். கணேசன் வீட்டிற்குள் நுழைந்தான். "மதுமதி எங்கே?"



"சாப்பாடு போடட்டுமா?"

"நான் என்ன கேட்கிறேன்? நீ என்ன சொல்கிறாய்? மது சாப்பிட்டாளா?" என்றவாறே அவள் பதிலை எதிர்பாராமல் மதுமதியை தேடிச் சென்றான்.

சோகம் உள்ளிருந்தாலும் அதனையும் மீறி ஏதோ ஓர் அழகு பளிரிட அஜந்தா ஓவியமாய் மிளிர்ந்தாள்.

"மது, மதூ... எழுந்து வா. நீ இப்படி இருப்பது கண்டிப்பாய் பெரியம்மாவிற்கு பிடிக்காது. சாப்பிடலாம் வா. உன் கவனம் எல்லாம் இனி படிப்பில் செலுத்து. காலம் துக்கத்தை மாற்றும். எழுந்து வா சாப்பிடலாம்."

"வேண்டாம்...."

"உன்னை இப்படியே விட முடியாது! உனக்கு நான் இருக்கிறேன்டா. யாருமில்லையே என கவலைப்படாதே. நீ எனக்கு மகள். உனக்கு நான் தான் இனி அம்மா, அப்பா, பாட்டி எல்லாம். உன் வாழ்க்கையை உன் மனம் போல் நான் அமைத்து தருகிறேன்டா. வா சாப்பிடு."

பேச்சை மீற முடியாமல் சாப்பிட வந்தாலும் சாப்பாடு உள்ளே இறங்கினால் தானே? ஆனாலும் பேசி பேசி சமாதானப்படுத்தி அரை வயிறாவது நிரம்ப வைத்தான் கணேசன். பார்த்துக் கொண்டிருந்த கற்பகத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது.

'நான் என்ன ரமா மாதிரி ஏமாளியா?'

'ஏன் சாப்பிட வைத்ததுடன் நிறுத்திக் கொண்டீர்கள்? தட்டிக் கொடுத்து தூங்க வைக்க வேண்டியது தானே? என்னவோ ஒரு வயது குழந்தையை விட்டுட்டு அம்மா

இறந்து போன மாதிரியில்லை உருகுகிறார்கள்? வயசான குடு குடு கிழவி செத்து போனதற்கா இந்த ஆர்ப்பாட்டம்? சரியான துக்கிரிப் பெண். இவள் எங்கே போனாலும் அந்த இடம் உருப்படாது.'

மதுமதியிடம் துக்கம் விசாரிக்க கிஷோருடன் அவன் வகுப்பு மாணவர்கள் நால்வர் வீட்டிற்கு வந்தனர்.

''மதுமதி ஒரு சந்தேகம்....''

''வழக்கம்போல் ஆரம்பிச்சிட்டான்!''

மௌனமாய் இருந்தவளிடம், ''அதெப்படி அழுகையில் கூட மழையில் நனைந்த ரோஜாப் பூ மாதிரி சிலீருனு இருக்கிறாய்?''

''நம்பிடாதே! ஏதாவது வாருவான்.''

''இப்ப போய் உன்னை சீண்டுவேனா? இவன் கிட்டே ஒரு சின்ன கேள்வி கேட்டேன். அதுக்கு பதில் சொல்லாமல் நழுவிட்டான். நீயே சொல்லு! திருவள்ளுவர் தாத்தாப் பற்றி ஒரு சின்ன கேள்வி தான். திருக்குறளில் எத்தனைப் பாடல்கள் எப்படி அமைந்துள்ளன? என்று கேட்டேன். அதற்கு இவன் திருக்குறளில் 1330 பாடல்களை 133 அதிகாரமாய் எழுதி இருக்கிறாருன்னு சொன்னான். ஏண்டா! அவர் ஒரு பாட்டைக் கூட அன்பா எழுதலையான்னு? கேட்டேன். அடிக்க வந்துட்டான். நீயே சொல்லு நான் கேட்டது தப்பா?''

மதுமதியின் முகத்தில் சிறுமுறுவல் வந்தது. அப்படி இப்படி பேசி அரட்டையடிக்காத குறையாய் அவள் மூடை மாற்றி அடுத்தநாள் கட்டாயம் கல்லூரிக்கு வரச் சொல்லி வற்புறுத்தி அவளிடம் உறுதிப்படுத்திக் கொண்டு



கிளம்பினார். செல்லும் பொழுது நண்பர்களை முன்னே விட்டு கிஷோர் ''அப்புறம் மதுமதி காலேஜ் பீஸ் கட்ட நாளை கடைசி நாள். உன் பேரை நோட்டீஸ் போர்டில் போட்டு விடுவார்கள். நாளை அவசியம் பணத்துடன் வா.'' என மெல்ல கூறிவிட்டுச் சென்றான்.

'பணமா? யாரிடம் கேட்பது? அம்மம்மா மாமாவிற்கு கடனாக கொடுத்த பணத்தை மாமாவிடம் கேட்டால் உடனே கிடைக்குமா? என்ன செய்வது?

யோசித்து கொண்டிருந்தவளை இருமுறை கற்பகம் சாப்பிட அழைத்து விட்டாள்.

''என்... என்ன... அத்தை?''

''சாப்பிட வருகிறாயா? அல்லது உன் மாமா வந்து ஊட்டி விட்டால் தான் சாப்பாடு இறங்குமா?''

அப்படியே விக்கித்துப் போனாள் மதுமதி. ஒன்றும் பேசாமல் சாப்பிட்டு எழுந்து சென்றாள். மாமா வந்ததும் பீஸ் கட்ட பணம் கேட்க வேண்டும் என எண்ணியவாறே விழித்திருந்தாள். அவன் வந்த அரவம் கேட்டு சாப்பிட்டு முடிக்கட்டும் என காத்திருக்க...

கணேசன், கற்பகம் இருவரும் காரசாரமாய் விவாதம் செய்வது காதில் விழுந்தது. ''சும்மா பணம், பணம் என நச்சரிக்காதே! வெளியில் கடன் வாங்கிய பணத்தை முதலில் கொடுத்து முடிக்க வேண்டும்.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு கண்டிப்பாய் பணம் வேண்டும். நீங்க கவனமில்லாமல் பணத்தை தொலைத்தற்கு நான் கஷ்டப்படமுடியாது.''

இருவரும் மாறி மாறி உரத்தக் குரலில் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இந்த சமயத்தில் எப்படி பணம் கேட்பது? என தயங்கித் தவித்தாள். ஸ்டீபன் ஊருக்கு சென்றிருந்தான். அதனால் மதுமதி விஷயம் அவனுக்கு எதுவும் தெரியவில்லை. அவன் தன் நண்பனிடம் அவளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தான்.

''உன்னை கண்டாலே விலகி ஓடுகிற பெண்ணை ஏண்டா தொந்தரவு செய்கிறாய்?''

''எனக்கு அவளை அவ்வளவு பிடித்திருக்கிறதடா! இத்தனை அழகும், அறிவும் உள்ள பெண் எத்தனை அடக்கமாய், ஒழுக்கமாய் இருக்கிறாள் தெரியுமா?''

''பார்ட்டி, டிஸ்கொத்தே போற பெண்ணைத் தான் நீ கல்யாணம் செய்து கொள்வாய் என்று நினைத்தேன். எல்லாவற்றிலும் மாடர்னாய் இருக்கவேண்டும் என விரும்புபவன் அல்லவா நீ?''

''ஆமாம்டா! நாம தண்ணியடிக்கிறதே நம்ம அம்மாக்களுக்கு பிடிக்கலை. நம்ம கூட நம் மனைவிகளும் அடித்தால் அம்மாக்கள் நம்மை விஷம் வைத்தே கொன்று விடுவார்கள்.''

''அது சரிதான்டா! மொத்தத்தில் நம் மனைவிகள் நம்மைப் போல இருக்கக் கூடாது. கலாச்சார, பண்பாட்டுச் சின்னமாய் திகழ வேண்டும் என்கிறாய்? இது நியாயமா? உன்னைப் போல அந்த பெண்ணிற்கும் எதிர்ப்பார்ப்புகள் இருக்காதா?''



''இருந்து விட்டு போகட்டும்! ஆனால் நாம் மாறினால் பிரச்சனை தீர்ந்து விடாதா? மதுமதியை மணந்து கொள்ள நான் எதை வேண்டுமானாலும் செய்வேன்'' என்றான் உறுதியாக.

மறுநாள் கல்லூரிக்கு கிளம்பினாள். கல்லூரி பேருந்து சிக்னலில் நிற்கும் பொழுது தான் அவளை கவனித்தாள். அவள் அருகில் நின்ற பஸ்ஸில் அமர்ந்திருந்தவளை 'எங்கே பார்த்தோம்?' என அவள் யோசிக்கும் பொழுதே,

''என்னா அம்மா! பட்டும் பவிசுமாய் இருக்கிறாய்? பிச்சையெடுத்ததில் செம கலெக்ஷனா? இல்லே எங்காவது தேட்டை போட்டுட்டியா?''

''சே! சும்மாயிரு, இரண்டொரு மாசத்துக்கு முன்னால் நரி முகத்திலே முழுச்சிருப்பேன் போலிருக்கு! சூபர்வைஸர் வூட்டு அம்மா இந்த புது பட்டுப் புடவையை எனக்கு தூக்கி கொடுத்துடுச்சு! ஏதோ ராசி கெட்ட புடவையாம்.'' அவள் ஆசையாய் உடுத்தின ஆரஞ்சு வண்ணப் புடவையை கற்பகம் தூக்கி பிச்சைக்காரிக்கு போட்டிருந்தாள். இதை விளங்கிக் கொள்ள மதுமதிக்கு அதிகநேரம் வேண்டியிருக்கவில்லை.

வகுப்பில் நுழைந்தவளின் கையைப் பற்றி அவள் உடன் பயிலும் மாணவிகள் ஆறுதல் சொல்லினர். ரேஷ்மா, மாலினி இருவரும் அன்றைக்கு வகுப்பிற்கு வரவில்லை. வகுப்பு முடிந்ததும் வந்து பார்க்கச் சொல்லி மதுமதிக்கு பிரின்ஸிபாலிடம் இருந்து அழைப்பு வந்தது. 'இன்னும் பணம் கட்டவில்லை. நோட்டீஸ் போர்டில் அவள் பெயரை எழுதி ஒட்டி விட்டார்கள். அதற்கு காரணம் கேட்பாரோ? என்ன சொல்வது? தவணை கேட்க முடியுமா? அனுமதிப்பாரா?'

என பல கேள்விகளுடன் அவரைப் பார்க்கச் சென்றாள். ஆனால் பிரின்ஸிபால் என்றுமில்லா கோபத்தில் அன்று இருந்தார். 'ராகிங்' செய்யக்கூடாது என்று எச்சரித்திருந்தும் இறுதியாண்டு மாணவர்கள் சிலர் முதலாண்டு மாணவனை விடுதியில் கடுமையாக 'ராகிங்' செய்ய அவன் தற்கொலைக்கு முயல... நல்ல வேளையாக வார்டன் அவனை கவனித்து மருத்துவமனையில் சேர்த்து அரும்பாடுபட்டு காப்பாற்றிவிட்டனர். விஷயம் வெளியே பரவாமலும், சம்பந்தப்பட்ட மாணவனின் பெற்றோர்களை சமாதானப் படுத்தியும், ராகிங் செய்தவர்களின் பெற்றோரை வரவழைத்து மிக கடுமையாய் எச்சரித்து கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு கல்லூரி முதல்வர் அனுப்பிவைத்தார். பிரச்சனை பெரிதாகாவிட்டாலும் கல்லூரி முதல்வருக்கு மிகுந்த கோபத்தையும், அவமானத்தையும் உண்டாக்கி விட்டது.

'வணக்கம்' சொன்ன மதுமதியைப் பார்த்தார்.

“உன்னை நல்லப் பெண் என நினைத்துக் கொண்டிருந்தேன். என்னம்மா உன்னைப் பற்றி இப்படி மோசமான கடிதம் வந்திருக்கிறது;” என ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினார். அதில் அவள் நடத்தையைப் பற்றி மிக மட்டமாய் எழுதப்பட்டிருந்தது. மேலே தொடர்ந்து படிக்க முடியாமல் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. உடல் வெடவெடவென நடுங்கியது; தலைச் சுற்றியது. தடுமாறியவள் சட்டென மேசையைப் பிடித்துக் கொண்டாள்.

“சார்!.... இது... உண்மையில்லை.”

அந்த வாக்கியத்தை சொல்லி முடிப்பதற்குள் உதடு நடுங்கி... விக்கி... விக்கி... அழுதுவிட,



“பாரம்மா! இது ஒரு மொட்டைக் கடிதம் தான்! உன் மேல் தவறு இல்லாமல் இருக்கலாம். ஆனால் இப்படி ஒரு கடிதம் வரக்கூடிய சூழ்நிலை உருவாகாமல் நீ கவனமாய் இருந்திருக்க வேண்டும். இனியொரு முறை இப்படி நடக்காமல் பார்த்துக் கொள். பிறகு நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.”

எப்படித்தான் வீடு வந்து சேர்ந்தாளோ?

வந்ததும் அறையில் கட்டிலில் விழுந்து,

“அம்மம்மா! ஏன் என்னை இப்படி தனியாய் தவிக்க விட்டுட்டு போனீங்க?” என்று வாய்விட்டு அழுது தீர்த்து விட்டாள்.

“சே! இந்த துக்கிரிப் பெண் விளக்கு வைக்கும் நேரத்தில் கூட அழுது அழுது உயிரை எடுக்கிறாள். இந்த வீடு விளங்கினாற் போலத் தான்” என கற்பகம் இரைய...

மதுமதி சட்டென எழுந்து முகத்தை துடைத்துக் கொண்டாள்.

## 16

“ஹேய் மது எங்கேப்பா போகிறாய்? உன்னை ப்ரெண்ட்ஸ் கிளப் சேர்மன் உமா பார்க்கணும் என்று சொன்னாள்” என மாலினி கூற,

மணியைப் பார்த்தாள் மதுமதி. இன்னும் வகுப்புத் தொடங்க முக்கால் மணி நேரத்திற்கு மேல் இருந்தது.

எனவே உமாவை பார்த்துவிட்டு வரலாம் என்று விடுதி அறைக்கே சென்றாள் மதுமதி.

அவள் சென்ற பொழுது... யார்... அது?

"ரேஷ்மா" என கூப்பிட்டாள். ஆனால் அவள் அழைத்த பெண் திரும்பி பாராமலே சென்றுவிட ஒருவேளை அவள் ரேஷ்மா இல்லையோ? எனத் தோன்றியது. உமாவின் அறைக்கதவு சாத்தியிருந்தது. தட்டுவதற்கு கையை வைத்ததும் திறந்து கொண்டது. ஆனால் அங்கே யாருமில்லை. உள்ளே செல்லலாமா? வேண்டாமா? என தயங்கி கொண்டிருந்த பொழுது பாத்ரூமில் சந்தம் கேட்டது.

உள்ளிருந்து "காஞ்சனா" எனக் கூப்பிட,

"உமா..." என மதுமதி குரல் கொடுக்க,

"யார்?" "மதுமதி". உள்ளே வந்து உட்கார். காஞ்சனா இல்லையா?" "அவங்களை காணோம்."

"ஐந்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன். ப்ளீஸ் கொஞ்சம் காத்திரு."

யாருமில்லாத சூழலில் அங்கே தனியே காத்திருக்க தயங்கி வெளியே வராண்டாவில் நின்று கொண்டிருந்தாள். அவள் வகுப்பு தோழி ஒருத்தி வர அவளுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

"ஏன் வெளியே நிற்கிறாய்? உள்ளே வா."

"ஓ! வந்துவிட்டீர்களா உமா? எதற்கு என்னை பார்க்க வேண்டும் எனச் சொன்னீர்கள்?"

"ப்ரெண்ட் கிளப் மீட்டிங் பற்றி சொல்லத்தான் வரச் சொன்னேன். நம்ம ப்ரெண்ட்ஸ் கிளப் சேமிப்பு ரூபாய்



20,000 நேற்று தான் வங்கியிலிருந்து எடுத்து வந்தேன். அதை அந்த கிராம வளர்ச்சிக்கு நாம் போட்ட திட்டப்படி செலவிட வேண்டும்."

"எத்தனை மணிக்கு கூட்டம்?"

"மூன்று மணியளவில் எல்லாரும் வந்துவிடுவார்கள். நீயும் வந்துவிடு. ரொம்ப மெலிந்துவிட்டாய் மதுமதி. அப்படி என்ன கவலை உனக்கு?

"ஒன்றுமில்லை; அலைச்சல் தான் மெலிவிற்கு காரணம்."

அவள் விடைபெற்றாள் நடக்கப் போகும் விபரீதம் புரியாமல். மாலை அவள் கூட்டத்திற்கு கிளம்ப சற்று தாமதமானது. சைன் வாங்க வேண்டிய அசைன்மெண்ட்டுகளை காத்திருந்து கையெழுத்து வாங்கிவிட்டு கிளம்ப வேண்டியிருந்தது. இடையில் வராத நாட்களுக்கு உரிய பாடப்பகுதிக்கான குறிப்புகளை நூலகத்தில் குறித்துக் கொண்டு தான் அசைன்மெண்ட்டிற்கு கையெழுத்து வாங்க வந்திருந்தாள். அதற்குள் அவளைத் தேடி இருவர் வந்துவிட்டனர். "உனக்காக எல்லாரும் காத்திருக்கின்றனர்; சீக்கிரம் வா."

"உன்னிடம் என்னமோ கேட்க வேண்டுமாம். உடனே வா" என மறுபடியும் ஆள் வர,

மதுமதி ஒன்றும் எண்ணாமல் தான் அங்கு சென்றாள்.

"நீ எங்கள் அறைக்கு வந்தபோது யார் இருந்தார்கள்?" என காஞ்சனா கேட்டாள்.

"யாருமில்லையே!"

"அரைமணிநேரம் அறையில் இருந்து இருப்பாயா?"

"இல்லை. நான் உள்ளே நுழையவே இல்லை. வெளியே வராண்டாவில் தான் பதினைந்தோ - இருபதோ நிமிடங்கள் இருந்தேன். என் பேட்ச் மேட் வந்தாள். அவளுடன் பேசிக் கொண்டிருந்தேன். ஏன்? எதற்கு இப்படி கேட்கிறீர்கள்?"

"அறையில் கைப்பையில் வைத்திருந்த பிரண்ட்ஸ் கிளப் பணம் ரூபாய் 20,000 -த்தை காணவில்லை."

"ஐயோ!"

"அங்கே உன்னைத்தவிர வேறு யாரும் வரவில்லை; அதனால்..."

"அதனால்...."

"நாங்களே எங்கள் வாயால் சொல்ல வேண்டாம் என்று பார்க்கிறோம்! உனக்கு பணத்தேவை இருக்கிறது. உன்னுடைய சூழ்நிலை உன்னை இந்த மாதிரி செய்ய வைத்திருக்கலாம். அதனால் நாங்க இதை பெரிதுப்படுத்த விரும்பவில்லை. பணத்தை நீ திரும்ப கொடுத்துவிட்டால் போதும். நாங்கள் அதை வெளியில் கூட சொல்ல மாட்டோம்" என காஞ்சனா பேசிக்கொண்டே போக "அம்மம்மா! என்னால் பழி தாங்க முடியவில்லையே!" என்று பதறி கதறினாள் மதுமதி.

"உன்னை நாங்கள் குற்றம் சொல்லவில்லை. கல்லூரிக்கு பணம் கட்ட வேண்டிய இக்கட்டான சூழ்நிலை உன்னை இந்தமாதிரி செய்ய வைத்து விட்டதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. பணத்தை நீ தந்துவிட்டால் நமக்குள் இந்த விஷயத்தை முடித்துக் கொள்ளலாம்."



"என்னை நம்புங்கள் உமா! நான் நிச்சயமாய் அந்த பணத்தை பார்க்கவும் இல்லை; தொடவும் இல்லை."

"ப்ளீஸ் மதுமதி! மறைக்க முயலாதே. இதோ பார் கல்லூரிக்கு. நீ பணம் கட்டிய ரசீது. காலையில் தான் கட்டியிருக்கிறாய்?

"இல்லை உமா! நான் இன்னும் பணம் கட்டவில்லை."

"இதை முதலில் பார்த்துவிட்டு பேசு" என ரசீதை நீட்டி அவள் சொல்ல... 'ஆம்! அவளுக்கு தான் பணம் கட்டி யிருந்தது. ஆனால் அவள் கட்டவில்லையே! யார் கட்டினார்கள்? அவள் மாமாவிடம் கூட இன்னும் பணம் கட்ட வேண்டிய விஷயத்தையே சொல்லவில்லையே? அதை பின்னர் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது உடனடியாக தீர்க்க வேண்டியது இந்த பழியல்லவா? என்ன செய்வது?'

"உமா, இதை பிடியுங்கள்" தன் கைகளில் இருந்த இரண்டு தங்க வளையல்களை கழட்டித் தந்தாள்.

"இது மூன்று பவுனிற்கு சற்று அதிகம். இதை என்ன வேண்டுமானாலும் செய்து பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். என் செகரட்டரி பதவியை விட்டு நான் விலகிக் கொள்கிறேன். பழிக்கு ஆளானவர் பதவியில் இருக்கக் கூடாது," என்று கூறிவிட்டு விடுவிடுவென அங்கிருந்து வெளியேறினாள். எப்படியோ உணர்வில் லாமல் அனிச்சை செயலாய் திருப்பூர் வரை வந்து விட்டாள். செல்லும் வழியில் ஒரே கும்பலாய் இருந்தது. ஏதோ விபத்து, தன்னையறியாமல் தான் திரும்பிப் பார்த்தாள், அங்கே...

ஸ்டீபன் அடிபட்டு கிடந்தான். அவசரமாக 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தாள். அவசர சிகிச்சை வண்டி வந்ததும் அதில் அவனுடன் ஏறி மருத்துவமனைக்கு சென்றாள். சங்கு சுட்டாலும் வெண்மை தரும்; அட்டாலும் பால் சுவையின் குன்றாது; கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள் அல்லவா? அதனால் தான் மதுமதியும் தன்னியல்பாய் ஸ்டீபனுக்கு உதவினாள். அவனுக்கு 'ஏபி'-பாஸிட்டிவ் இரத்தம் தேவைப்பட்டது.

மதுமதியின் இரத்தம் 'ஓ' - பாஸிட்டிவ் அவனுக்கு சேர தன் இரத்தத்தை அவனுக்கு கொடுத்தாள். சரியான சமயத்தில் அவனுக்கு மருத்துவ சிகிச்சை கிடைத்ததால் உயிர்பிழைக்க முடிந்தது. அவன் நண்பனுக்கு தகவல் கொடுத்ததால் அவன் வந்து சேர மதுமதி வீட்டிற்கு கிளம்பினாள். இரவு ஒன்பது மணி ஆகிவிட்டிருந்தது. வாசலில் கால் வைக்கும் பொழுதே கற்பகத்தின் வசை மொழி கேட்டது.

''கண்டவளுக்கு நான் காத்திருக்க முடியாது. இப்பொழுது சாப்பிட வருகிறீர்களா? இல்லையா?''

ஏதோ கோபமாய் சொல்ல வாய் திறந்த கணேசன் வாடிய மலராய் வந்த மதுமதியைக் கண்டதும், ''என்னம்மா ஆச்சு? உன்னைத்தேடி நாலு முறை அலைந்து விட்டேன். கை கால் கழுவி வா; சாப்பிடலாம். மிகவும் களைத்து போய் தெரிகிறாய்.''

''இதுதான் வீட்டிற்கு வரும் நேரமா? உன்னை கேட்க ஆளில்லை என்று எவன் கூட சுற்றிவிட்டு வருகிறாய்?''

சூடு போட்டாற் போல் மதுமதி துடித்துப் போனாள்.



''சீச்சீ! நீயும் ஒரு பெண்ணா? அம்மா, அப்பா இல்லாமல் வளர்ந்தவள் தானே நீயும்? ஒரு சிறு பெண்ணின் தவிப்பை, துன்பத்தை கூட புரிந்து கொள்ளாத ராட்சசி!''

''ஆமாம்; நான் ராட்சசி தான். எவளுக்கோ பரிந்து என்னை மட்டம் தட்டுகிறீர்கள். கட்டின மனைவியை அவமானப் படுத்தும் நீங்க மனுசனா? அவளை நான் புரிந்து கொள்ள வேண்டுமாக்கும்? அவளைத் தாங்க நீங்கள் இருக்கிறீர்களே!''

''கண்டிப்பாய் நான் தான் அவளை தாங்கப் போகிறேன். அவள் தான் எனக்கு முக்கியம்.''

''உங்க மட்டமான புத்தி எனக்குத் தெரியாதா? அவளை ரெண்டாம் கல்யாணம் செய்து கொள்ளும் கனவில் இருக்கிறீர்கள். அது நான் இருக்கும் வரை கட்டாயம் நடக்காது.''

கணேசனுக்கு கோபத்தில் கண்கள் சிவந்து விட்டன. வெறி வந்தவனைப் போல் சாப்பாட்டுத் தட்டை விசிறி எறிந்தான். மறுவினாடி கையை உதறி கொண்டு வீட்டை விட்டு வெளியே சென்றான். தட்டு கற்பகத்தின் நெற்றியில் பட்டு கீழே விழுந்தது.

''ஐயோ அத்தை! இரத்தம் வருகிறது.''

பதட்டத்துடன் மதுமதி அதை துடைக்கப் போனாள்.

''சீ! தொடாதே; உன்னால் தான் என் வாழ்க்கையே பாழாய் போனது. நீ ஒழிந்தால் தான் எனக்கு நிம்மதி. என் கண் முன்னே நிற்காதே; போய் ஒழி'' என ஆவேசம் வந்தவளைப் போல் கத்தினாள்.

மதுமதி யாரை நோவாள்? என்ன சொல்வாள்? எதைச் செய்வாள்? திக்கற்றவளுக்கு யார் துணை? அவள் கதி என்ன? அவளுக்கு போக்கிடம் ஏது? அழுது கொண்டிருந்த அவளைப் பார்த்து சிரித்தது விதியோ? ஊழ்வினையோ? அவள் அம்மம்மா இறந்து மாதங்கள் கூட கடக்கவில்லை. அதற்குள் அவள் நிலை கேள்விக்குறி ஆகிவிட்டது! அந்த நிமிடமே தன் அம்மம்மாவை பார்க்க வேண்டும் போல் அவளுக்கு இருந்தது; அம்மம்மாவை கட்டிக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது. பெட்டியைத் திறந்து அம்மம்மாவின் புடவையை எடுத்தாள். அதை வருடும் பொழுது ஏனோ ஓர் இனம் புரியாத அமைதி ஏற்பட்டது. புடவையை பிரிக்க சில ரூபாய் நோட்டுகளும், ஓர் முகவரி அட்டையும் கீழே விழுந்தன. பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்தாள். ஆயிரம் ரூபாய் இருந்தது. அதை கைப்பையில் வைத்துவிட்டு கீழே கிடந்த முகவரி அட்டையை எடுத்தாள். திருப்பி பார்க்க...

ரிஷியின் முகவரி அட்டை அது!

## 17

மதுமதி பேருந்தில் சென்னையை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தாள். 'கல்லூரியில் படிக்க அவளிடம் பணம் கிடையாது. பணம் மட்டுமே பிரச்சனை என்றால் கல்வி உதவித் தொகை, வங்கி கல்விக் கடன் மூலம் சமாளிக்கலாம். ஆனால் அவள் சுயபிம்பமே அங்கே அடித்து நொறுக்கப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்டு



விட்டது. இராஜகுமாரியாய் உலா வந்த இடத்தில் மோசமானவள், பணத்தை திருடியவள் என்ற பழிச்சொல்லுடனும் குற்றவுணர்வுடனும் பயில முடியாது. சகித்து பயில ஆசைப்பட்டாலும் மாமா வீட்டில் இருக்க முடியாது. அத்தை கூசாமல் எவ்வளவு பெரிய பழியை சுமத்தி விட்டாள். அவள் சொன்ன பழியை நினைத்தால் அருவெறுப்பாக.... குமட்டிக் கொண்டு வருகிறது. அப்படி நான் என்ன தவறு செய்தேன்? மானம் போய் இங்கு வாழலாமா? இனி இங்கிருக்கக்கூடாது! எங்காவது சென்றுவிட வேண்டும்' என தீர்மானித்த பொழுது தான் ரிஷியின் முகவரி அட்டை கிடைத்தது. 'ரிஷியை பார்க்க போ' என தன் அம்மம்மாவே சொல்வது போல் இருந்தது. 'இனி அவளுக்கு எல்லாம் ரிஷி தானோ?' கடிதம் எழுதி வைத்து விட்டு அதிகாலையிலேயே சென்னை கிளம்பி விட்டாள். வீட்டிலிருந்து எதையும் எடுத்துக்கொள்ளவும் இல்லை; மிகவும் முக்கியமான பொருட்களை சிறு பெட்டியில் எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

ஸ்டீபன் கண் விழித்த பொழுது அவன் நண்பனும், பெற்றோரும் உடனிருந்தனர். ''நல்ல வேளை உன்னை அந்தப் பெண் காப்பாற்றினாள், இல்லாவிட்டால் இந்நேரம் நாங்கள் உன்னை இழந்திருப்போம்.''

''யாருடா?''

''அதுதான் உன் ஜூனியர் ஸ்டூடண்ட்! நீ துரத்திக் கொண்டு இருந்தாயே? அந்தப் பெண் தான்.''

''யார்? மதுமதியா?'' ''ஆமாம்! அவள்தான் மருத்துவமனையில் சேர்த்தாள். உனக்கு இரத்தம் கொடுத்தது கூட அவள் தான். போகும் பொழுது அவள் உன்னிடம் கூறுமாறு ஒன்று சொல்லிச் சென்றாள்.''

''என்ன? என்ன சொன்னாள்?''

''அவளுக்கு நீ ஏதாவது உதவி செய்யவோ, நன்றி செலுத்தவோ நினைத்தால் அது அவளை தொந்தரவு செய்யாமல் இருப்பது தான். அவள் வேறு ஒருவனை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறிச் சென்றாள்.

''செடியில் தானாய் பூ மலரணும். நம் விருப்பத்திற்கு அது நடக்காது. ஒரு பெண்ணை கட்டாயப்படுத்தி மணந்து கொள்ளக் கூடாது ஸ்டீபன். உன்னை நாங்கள் எதற்காவது கட்டாயப்படுத்தி இருக்கிறோமா? நீயே யோசித்துப் பார். பூப்பதும், காய்ப்பதும், கனிவதும் இயல்பாய், இயற்கையாய் நடக்க வேண்டிய விஷயங்கள். அதே போல் தான் பெண் மனம் மலர்வதும்! காயப்படுத்தியோ, கட்டாயப்படுத்தியோ அதை செய்ய நினைக்காதே! உன் மேல் விருப்பமில்லை என தெளிவாய் சொல்லிவிட்ட பிறகு உன் மனதை மாற்றிக் கொள்வது தான் நல்லது. அது ஒரே நாளில் முடியாது என்றாலும் முயற்சி செய்தால் எதுவும் முடியும்.''

அவன் மௌனமாய் இருப்பதே யோசிப்பின் காரணம் தான் என உணர்ந்தது போல்,

''நீ நேசித்த பெண் நன்றாக வாழ வேண்டாமா? அதற்கு உன்னாலான உதவிகளைச் செய். அதுதான் உயர்ந்த நேசம். எதையும் எதிர்பார்த்து வருவதல்ல உண்மையான அன்பு. அதனால் அந்த அருமையான பெண்ணின் நல்வாழ்விற்கு பிரார்த்தனையாவது செய்யவேண்டும்.''

கண்களை மூடியவாறே கேட்டுக் கொண்டிருந்தான் ஸ்டீபன். அவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.



அம்மா அவன் தலையை வருடி கொடுக்க, அந்த கைகளைப் பற்றிக் கொண்டான். ''கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார் மகனே!''

மதுமதி அந்த பெரியவீட்டின் முன் தயங்கி நிற்க, அப்போது ஓர் கார் வெளியே வந்தது. சட்டென அவளைப் பார்த்ததும் நின்றது. காரிலிருந்து ரிஷி இறங்கினான்.

''மது!''

''எப்படிடா இருக்கிறாய்? அம்மம்மா இறந்தபிறகு மிகவும் இளைத்துவிட்டாய்! உனக்கு தான் நாங்கள் இருக்கிறோமே! ஏன் வருத்தப்படுகிறாய்? வா அம்மாவை பார்க்கலாம்'' என கைப்பிடித்து அழைத்துச் சென்றான்.

''வாம்மா! உன்னைப் பற்றி ரிஷி சொல்லி இருக்கிறான்,'' என தோள் அணைத்து உச்சி முகர...

''என் கனவு தேவதை எப்படி இருக்கிறாள் அம்மா?''

'உஷ்' - விசில் சப்தம் பலமாய் கேட்டது. சட்டென விழித்துக் கொண்டாள். 'எத்தனை இனிய கனவு!'

சென்னை வந்திருந்தது. ஏற்கனவே பலமுறை சென்னை வந்து சென்ற அனுபவம் இருந்ததால் தடுமாறாமல் சட்டென ஓர் ஆட்டோ பிடித்து நேரே ரிஷியின் வீட்டிற்கு புறப் பட்டாள்.

நகருக்கு வெளியே கடற்கரையை ஒட்டி கட்டப் பட்டிருந்த பிரம்மாண்டமான பங்களாவின் முன் ஆட்டோ சென்று நின்றது. அதன் பிரம்மாண்டம் அவளை தயங்க வைத்தது. ஒரு வினாடி குனிந்து தன் உடையை பார்த்துக் கொண்டாள். அவளின் மென்மையான உணர்வுகளை

பிரதிபலிப்பது போல் பேபி பிங்க் நிற சுடிதார். அ அம்மம்மா செய்து கொடுத்திருந்த ஜர்தோஸி வேலை பாடுகள்; அடக்கமாய், அமிரிக்கையாய் அவளுக்கு ஓ மரியாதையை ஏற்படுத்தி கொடுத்திருந்தன.

வாசலில் இருந்த வாட்ச்மேன் அவளை எந்த கேள்வி கேட்காமல் உள்ளே செல்ல அனுமதித்தான். நுழைந்த சிவப்பு கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதையின் இருபு களிலும் புல்வெளியுடன் கூடிய அழகான தோட்ட பூக்களும், மரங்களும் மரத்தின் அடியில் அமைக்கப்ப ஆசனங்களும் சுத்தமாய் பராமரிக்கப்படும் சிறப் எடுத்துரைத்தன. வேண்டாத குப்பைகள், இலைச்சருகுக உதிர்ந்த காய்ந்த மலர்கள், பறவை எச்சம் பட்ட இருக்கைக இப்படி எதுவுமில்லை. அதன் அழகில் மதிமயங்கி மது ஓர் வினாடி நின்று வி.... உள்ளிருந்து வந்த மாலி பார்த்தாள். 'ஆகா! இவள் எப்படி இங்கே வந்தா கல்லூரியில் இருந்து ஒழிந்தாள் என்று பார்த்தால் இங் வந்து நிற்கிறாளே? இவள் இனி எங்கேயும் வந்து நிற்க கூடாது. எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடி வி வேண்டும். அப்புறம் மிக மிக முக்கியமான விஷயம் ஓ வரும் பெண்களை ரிஷிக்கு பிடிக்காது. அது, அது தானே அவளுக்கு வேண்டும்.'

மதுமதி அவளை பார்த்துவிட, ''மாலினி'' என அருகில் வந்தாள். ஒன்றும் சொல்லாமல் நின்றவளிடம் ''நீ எங்கே இங்கேப்பா?'' என தொடர்ந்து கேட்டாள்.

''அதே கேள்வியை நானும் கேட்கலாம் இல்லையா?''

''நான் ரிஷியை பார்க்க வந்தேன்.''



''உரிமையுள்ளவள் போல் ரிஷியாம் ரிஷி....''

''ம்! வேலை தேடி வந்தாயா? ஆனால் அப்படி தெரியவில்லையே? வா! கொஞ்சம் தோட்டத்தில் உட்கார்ந்து பேசலாம்'' என அவளை அழைத்துக் கொண்டு ஒதுக்குப்புறமாய் இருந்த மரத்தடிக்குச் சென்றாள்.

''இங்கே பார் மதுமதி! இந்த இடத்தை விட்டு வராதே. நான் போய் நீ வந்திருப்பதாக சொல்லி வருகிறேன். வீட்டை விட்டு ஓடி வந்துவிட்டாயா? பெட்டியுடன் வந்திருக்கிறாய்? இங்கே கொஞ்சம் கட்டுப்பாடுகள் அதிகம்!'' எனக் கூறிவிட்டு நகர்ந்தாள். 'மாலினிக்கும் இந்த வீட்டிற்கும் என்ன சம்பந்தம்? அவள் அதைப் பற்றி எதுவும் கூறவில்லையே?' என யோசித்துக் கொண்டிருந்தாள் மதுமதி.

மாலினி குழந்தையை கொஞ்சிக் கொண்டிருந்த பாவ்னாவிடம் சென்றாள்.

''அண்ணி''

''என்ன மாலினி?''

''உங்க அண்ணனுக்கு ஒரு மட்டமான போன்கால் வருதுன்னு சொன்னீங்களே? அந்தப் பெண் இங்கே வந்திருக்கிறாள்.''

''அடப்பாவி! என்ன துணிச்சல்? இரு நான் போய் பார்த்து வருகிறேன்.''

''வேண்டாம் அண்ணி! அவள் வீட்டை விட்டு ஓடி வந்திருப்பாள் போல. உங்கள் அண்ணனின் காதலி போல பேசுகிறாள். அவரிடம் சொல்லி போலீசிடம் பிடித்துக் கொடுங்கள். அதுதான் சரியான தண்டனையாக இருக்கும்.''

''நீ சொல்வது சரிதான்'' என குழந்தையை தூக்கிக் கொண்டு ரிஷியின் அறைக்கு சென்றாள்.

''அண்ணா'' ''என்னம்மா?'' ''நீ யாரையாவது லவ் செய்கிறாயா?''

''என்ன திடீர் கேள்வி? உன் பெண்ணிற்கு இன்னும் ஒரு வயது கூட ஆகவில்லையே? அதற்குள் யாரந்த போட்டிப் பெண்! என கேட்கிறாயே?''

''விளையாடாதே! நிஜமாகச் சொல்; நீ யாரையும் திருமணம் செய்து கொள்வதாக வாக்கு அளிக்க வில்லையே?''

''நான் விளையாடவில்லை கண்ணம்மா! உன் மகளுக்கு கிழவனாகிய என்னை மணமகனாக்க தீர்மானித்து விட்டாய் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது.''

தோட்டத்தில் மரத்தடியில் அமர்ந்திருந்த மதுமதி அந்த ஓரமாகவே நடக்க...

ரிஷியின் அறை சன்னல் அருகே வந்தாள். உள்ளே பேசுவது வெளியே தெளிவாகக் கேட்டது.

''அண்ணா'' என அவள் அலுத்துக்கொள்ள...

''சரி, சரி! சொல்.''

''உன்னை திருமணம் செய்து கொள்வதற்காக ஒரு பெண் வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிறாள்.''

''எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில்? ஒலிம்பிக் மெடல் கிடைக்குமா?''

''ச்சு! உன்னை மிக விரும்பி நேசித்து கல்யாணம் செய்து கொள்வதற்குக் கூட இங்கே ஓடி வந்திருக்கலாம்.''



''என்ன உளறுகிறாய்? நான் ஊரிலேயே இருப்பதில்லை. கண்டம் விட்டு கண்டம் பறந்து கொண்டிருக்கிறேன். இதில் காதல் செய்ய எனக்கேது நேரம்? நம் கண்மணி என் மருமகள் பிறக்கும் முன் இங்கிருந்து சென்றவன் இன்றைக்கு தானே வந்திருக்கிறேன். காலையில் வந்து மாலைக்குள் காதல் முளைத்துவிடுமா சொல்?

''இன்றைய யுகத்தில் இணையதளத்தின் மூலமே லவ்விக் கொள்கிறார்கள். அதனால் எதுவும் ஆச்சரிய மில்லை! நன்றாக யோசித்து சொல். யார் மனத்திலும் நீ நம்பிக்கை வளர்க்கவில்லையே?''

''என்ன விஷயம்டா? துருவி துருவி ஏதேதோ கேட்கிறாய்?''

''என் அண்ணனுக்கு எந்த பழிபாவமும் வந்து விடக் கூடாது, என்ற தவிப்பில் கேட்கிறேன்.''

''அப்படி நீ தவிக்கவே வேண்டாம். கண்டிப்பாக நீ என்னை நம்பலாம். அம்மாவை உயர்வாய் மதிப்பவர்கள் யாரும் பெண்ணை ஏமாற்ற மாட்டார்கள். இன்னும் என் மேல் நம்பிக்கை வரவில்லையா?''

''அ... அந்தப் பெண் உன்னை நன்றாகத் தெரியும் என்று சொன்னாளாம்'' என இழுக்க,

வாய்விட்டு சிரித்து விட்டு,

''நான் அவளிடம் நெருங்கி பழகினேன் எனக் கூற வில்லையே? நன்றாகத் தெரியும் என்று தானே சொன்னாள்?

திரு. வாஜ்பாயை எல்லாருக்கும் தெரியும்; ஆனால் திரு. வாஜ்பாய்க்கு உன்னை தெரியுமா? யாரோ என்னைத்

தெரியும் என்று சொன்னால் அப்படியே நம்பிவிடுவாயா? கண்ணிருக்கும் எல்லாருக்கும் தான் நான் தெரிவேன்; நீயும் தெரிவாய்! அப்படியிருக்க நீ இப்படி பேசலாமா?''

அதற்கு மேல் மதுமதியால் கேட்க இயலவில்லை. தலையில இடி விழுந்தாற் போல் உணர்ந்தாள். அப்படியே தரையில் அமர்ந்து குமுறி குமுறி அழுதாள். இவனை பார்க்கவா அத்தனை கனவுகளுடன் ஓடி வந்தாள்? எல்லாம் கலைந்து மட்டுமா போனது? பொய்யாக அல்லவோ போயிற்று! அவளுக்கென்று யார் இருக்கிறார்கள்? அவளை நேசிக்க ஒரு ஜீவனும் இல்லை. அம்மா, அப்பா, உற்றார், உறவினர், தோழி இப்படி எவரும் இல்லை. அவள் உயிரினும் இனிய அம்மம்மாவும் இல்லை; நேசத்திற்குரிய ரிஷியும் இல்லை. உலகத்தில் வாழ இடமும் இல்லை. மதுமதி நீயும் கடவுளும் ஒன்றடி; எல்லாவற்றையும் துறந்தவர்கள். அவள் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டக்காரி! தான் எத்தகைய முட்டாள் என எவ்வளவு நாசுக்காய் தெரிந்து கொள்கிறாள்! இனி இங்கு நிற்கலாமா? முட்டாள் தனமான பைத்தியக்கார காதல்! எப்படி இப்படி ஆகிப் போனாள்? எல்லாரும் எள்ளி நகையாடி 'பைத்தியக்காரி' என சிரிப்பதற்குள் மிக மிக விரைவாய் இங்கிருந்து ஓடி விட வேண்டும். நெருப்பின் மேல் நிற்பது போல் இருந்தது. அங்கிருந்து மிக வேகமாய் ஓடினாள். அவள் பெட்டியைக் கூட கையில் எடுத்துக் கொள்ள வில்லை. அழுது கொண்டே அவள் ஓடியதை காவலாளி பார்த்தான். அந்த வீட்டிற்கு வந்தவர்கள் யாரும் இப்படி சென்றதில்லை! என்ன ஆயிற்று? என அவனுக்கு புரியவில்லை. அவளிடம் ஏதேனும் அவன் கேட்பதற்குள் அவள் மின்னல் வேகத்தில் மறைந்து போனாள். தன்னிச்சையாய் கால்கள் தள்ள



கடற்கரைக்கு வந்து சேர்ந்திருந்தாள். இருட்டுத் துவங்கியிருந்தது. அலை யோசை அவள் மனயோசையை விட குறைவாய் தான் இருந்தது. உயர உயர எழும்பிய அலைகள் அவளை அருகே அழைத்தன. நெருப்புச் சூடு தணிய கடலாடும் எண்ணமோ? ஆசையோ? வெறுப்போ? எழுந்தது. மெல்ல தண்ணீரில் இறங்கினாள். வெதுவெதுப்பாய் இருந்த நீர் அவள் மனதிற்கு ஒத்தடம் கொடுப்பது போல் மேலே வாரி தெளிக்க நாவில் பட்ட நீரின் உப்புச்சுவை அவள் கண்ணீரை விட கம்மியாய் தான் இருந்தது. ''கண்ணே மது!'' என்று அம்மம்மாவின் குரல் அவளுக்கு கேட்பது. ''வா வா'' என கடல் அழைத்தது. "இதோ வந்துவிட்டேன் அம்மம்மா!'' என்றவாறே இன்னும் உள்ளே சென்றாள்.

## 18

காவலாளி தயங்கி, தயங்கி உள்ளே வந்தான். மாலினி சற்று முன்தான் ஊருக்கு நிம்மதியாய் கிளம்பிச் சென்றாள். மதுமதியை போலீசில் பிடித்துக் கொடுக்கலாம் என யோசனை சொன்னவள் பாவ்னா வெகுநேரம் தன் அண்ணனின் அறையிலிருந்து வெளி வராததால் நகத்தை கடித்துக் கொண்டு மன அழுத்ததுடன் காத்திருந்தாள். அதற்குள் காவலாளி அந்தப் பெண் அழுது கொண்டே ஓடிவிட்டதாகக் கூற ஆறுதல் பெருமூச்சு விட்டாள். பாவ்னாவும், ரிஷியும் பேசியதை மாலினி கேட்கா

நன்றாக கேட்கும் என அவளுக்கு தெரியாதா என்ன? அவன் அறைக்குள் சட்டென யாரும் நுழைய முடியாது. அந்தக் கிழவியோ, அவன் ஆசைத்தங்கையோ கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது. மேலும் அவனும் மிகவும் கறாராய் இருந்ததால் பாவ்னாவுடன் அவள் அங்கே செல்லவில்லை. எப்படியோ ஒழிந்தாள்! என எக்கச்சக்க மகிழ்ச்சியுடன் ரிஷியைப் பற்றிய எண்ணம் ஏற்படுத்திய பரவசத்துடன் கிளம்பிவிட்டாள். என்னவோ இவளை திருமணம் செய்ய அவன் காத்திருப்பது மாதிரி! விதி வலியது. எதை விதைக்கிறோமோ அதைத்தானே அறுவடை செய்ய முடியும்?

காவலாளி தயங்கி நிற்பதை ரிஷிதான் பார்த்தான். பாவ்னா குழந்தையை தூங்க வைக்க சென்றிருந்தாள்.

"என்ன முத்து?"

"சாயந்திரமாய் ஒரு பொண்ணு வந்துச்சுங்களே! அது இதை விட்டுட்டு அழுதுகிட்டே ஓடிடுச்சுங்க" என பெட்டியைக் கொடுத்தான்.

"இதை அப்பவே கொடுப்பதற்கு என்ன?"

"நான் சரியாய் கவனிக்கலைங்க ஐயா! உங்க அறைக்கு வெளியே இருக்கும் மரத்தடியில் இருந்தது. இப்பத்தான் பார்த்தேன். வெடிகுண்டு பெட்டியோ, என்னமோன்னு தயங்கினேங்க; சரியாய் பூட்டாததினால் உள்ளே இருக்கிறது குண்டு எதுவுமில்லைன்னு தெரிஞ்சுதுங்க. அதான் உங்க கிட்டே காட்டலாம்னு எடுத்துக்கிட்டு வந்தேன்."

ரிஷி யோசனையுடன் அதை கையில் வாங்கிக் கொண்டு தன் அறைக்குள் சென்றான். அதை திறக்க... அப்படியே அசந்து போனான். அத்தனை அற்புதமாய்...



அச்சு அசலாய்... அவனையே உரித்தாற் போன்ற ஓவியம்! கண்ணாடி முன்னே நிற்கிறோமோ? என சந்தேகத்துடன் அவனையே குனிந்து பார்த்தான். உடையின் நிறம் மட்டுமே மாறி இருந்தது. மற்றபடி அச்சு அசலாய் அவனே தான்! குளோனிங் பிம்பமாய் நின்று கொண்டிருந்தான். "என் ரிஷி துருவ்" என அழகாய் எழுதி என்றென்றும் அன்புடன் உங்கள் மது என கையெழுத்திட்டிருந்தது. எத்தனை உரிமை? என் ரிஷி துருவாமே? ஓவியத்திலேயே நேசிப்பின் ஆழம் தெரிய அப்படியே அசையாது நின்றான். ஓர் இனம் புரியாத உணர்வு மனசுக்குள் பொங்கியது.

"என்ன அண்ணா அப்படியே நிற்கிறாய்? நான் இருமுறை உன்னை அழைத்துவிட்டேன். அப்படி எதில் கவனம்?" ரிஷியின் மோனநிலை கலையவில்லை.

"அண்ணா சாப்பிட வருகிறாயா? அல்லது வாக்கிங் போன அம்மா வந்ததும் சாப்பிடுகிறாயா?"

அவனிடம் பதில் வராது போகவே "ம்! எந்த கனவு லோகத்தில் இருக்கிறாய்?" என்றவாறே அருகே வந்தாள்.

"வாவ்! யார் உன்னை இத்தனை தத்ரூபமாக வரைந்தது?" என்றவள் "என் ரிஷி துருவ், என்றென்றும் அன்புடன் உங்கள் மது" ஆகா! இது... இது..." என இழுக்க,

"ஆமாம் நீ நினைப்பது சரிதான், மாலை யாரோ ஒரு பெண் என்னைத் தேடி வந்தாள் என்றாயே? அவள் பெயர் என்ன? அவள் யார்? எங்கிருந்து வந்தாள்?" கேள்விகளாய் அடுக்க.

"ஐயோ! நான் அவளை பார்க்கவில்லையே! மாலினி தான் சொன்னாள். ...

அட! இதைப் பாரேன் உன்னைப் பற்றிய ஆல்பம். எத்தனை விதமான செய்திகளையும், விவரங்களையும் சேகரித்து வைத்திருக்கிறாள். ஒவ்வொன்றின் கீழும் அவளது நேசத்தை வெளிப்படுத்தும் அடிக்குறிப்பு வேறு! உன் பெயரை ஸ்ரீராம ஜெயம் மாதிரி எழுதி கோட்டோவியம் போட்டு இருக்கிறாள் பாரேன்! ஆனால் அவளைப் பற்றிய சிறு குறிப்பைக் கூட காணோமே?''

''மாலினி என்ன சொன்னாள்? அவளுக்கு தெரிந்த பெண்ணா?''

''தெரிந்த பெண் போல அவள் எதுவும் சொல்ல வில்லையே! ஆனால் அவளிடம் பேசியிருப்பாள் போல.''

''எப்படி சொல்கிறாய்?''

''உனக்கு மட்டமாய் போன் செய்த பெண் இவள்தான் என்று உறுதியாக சொன்னாளே? 'உன் காதலி போல பேசினாள்; வீட்டை விட்டு ஓடி வந்துவிட்டாள்; போலீசிடம் பிடித்துக் கொடுங்கள்' என்றெல்லாம் கோபமாய் அடித்து பேசினாளே?''

''நீ அதை நம்புகிறாயா?''

''அப்பொழுது சரி என்று நினைத்தேன். ஆனால் இப்போது அப்படி தோணவில்லையே அண்ணா. தப்பு செய்து விட்டேனா?''

''நீ எதுவும் செய்யவில்லையடா! என்னிடம் வந்து அந்தப் பெண்ணைப் பற்றி தவறாக எதுவும் கூறவில் லையே! என்னைத் தானே தூண்டித் துருவி விசாரித்தாய்.''

''இன்னும் கொஞ்சம் நான் யோசித்து இருக்கலாம். மாலினி



அளவில்லா நேசத்தை வைத்திருக்கிற பெண்ணை உதாசீனப்படுத்தி விட்டோமே.''

''வருத்தப்படாதே! எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடலாம். முதலில் அந்த பெண்ணை கண்டுபிடித்து சமாதானப்படுத்த வேண்டும். நம் பேச்சை கேட்டிருப்பாள் என்றே நினைக்கிறேன். அழுது கொண்டே ஓடினாளாம்.''

''ஐயோ! அவள் எப்படி துடித்து போயிருப்பாள்? அவளை கண்டுபிடித்து கல்யாணம் செய்து கொள்.''

''உன் அண்ணன் என் கிருஷ்ண பரமாத்துமாவா? பார்க்கிற பெண்ணையெல்லாம் திருமணம் செய்து கொள்ள சொல்கிறாய்?''

''போ அண்ணா! எனக்கொரு சந்தேகம்; இந்த பெண்ணா உனக்கு அசிங்கமாய் போன் செய்திருப்பாள்?''

''ரொம்ப சரியாக விஷயத்திற்கு வந்துவிட்டாய்! கண்டிப்பாய் இவள் இல்லை.''

''நீ உறுதியாக சொல்வதைப் பார்த்தால்... யார் என்று கண்டுபிடித்து விட்டாய் போல?''

''என் தங்கை கெட்டிக்காரி தான். எல்லாவற்றையும் சரியாக யூகித்து விடுகிறாள்.''

''யார் அண்ணா அது?''

''அது வேண்டாமே உனக்கு.''

''எல்லாவற்றையும் என்னிடம் சொல்லக்கூடிய நீ இதைச் சொல்ல தயங்குகிறாய் என்றால்.... யார் மாலினியா?'' என்றாள்.

"சூ! உன்னுடன் வைத்துக்கொள் வருணுக்கோ, அவன் அம்மாவிற்கோ தெரிய வேண்டாம்."

"நம் அம்மாவிடம் சொல்ல வேண்டும்."

"அம்மாவுக்கு முன்பே தெரியும். இதை கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ததே அம்மா தான்."

"ஓகோ! அதனால் தான் நீ கோவைக்கு வருவதையே தவிர்த்து விட்டாயா? வருணுக்கு இது தெரிந்தால் மிகவும் கோபப்படுவார். மாலினி கொஞ்சம் பொறுமை இல்லாதவள்; கர்வி என்று தான் நினைத்தேன் அண்ணா! இன்னும் அவள் என்னென்ன வேலைகள் செய்தாளோ?"

"சரி விடு! இன்னுமா அம்மா வரவில்லை? வந்திருந் தால் நம்மை இந்நேரம் அழைத்திருப்பார்களே? அம்மாவின் செல்லை தொடர்பு கொள். நான் கை கால் கழுவி விட்டு சாப்பிட வருகிறேன்," பாவ்னா தொடர்ந்து முயற்சி செய்ய அலைப்பேசியை தொடர்பு கொள்ளவே முடியவில்லை. விஷயம் அறிந்த ரிஷி விஸ்வத்திற்கு போன் செய்தான்.

'வாக்கிங்' முடித்துவிட்டு 'கடவுள் இல்லத்திற்கு' சென்று அங்கு உள்ளவர்களுடன் சில மணி நேரங்களை செலவிட்டு வருவது தான் அவர் வழக்கம். அங்கிருக்கும் ஒவ்வொருவரும் அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்ப்பர். எனவே தவறாமல் அங்கு அவர் சென்றுவிடுவார். தாமதம் ஆகும் என்றால் உடனே வீட்டிற்கு தகவல் வந்து விடும். ஆனால் இன்றோ தகவலும் இல்லை; செல்லை தொடர்பும் கொள்ள முடியவில்லை. என்ன ஆயிற்றோ? என்ற பதட்டம் ஏற்பட ஆரம்பித்தது. அதனால் தான் தன் செயலர் விஸ்வத்தை தொடர்புகொண்டு கடவுள் இல்லத்திற்கு



சென்று பார்க்கக் கூறினான். முதியவர்களும், உடல் முடியாதவர்களும் உறங்குகின்ற நேரத்தில் அங்கு போன் செய்து இடைஞ்சல் ஏற்படுத்த விரும்பவில்லை. அரைமணிநேரம் யுகமாய் கழிய, விஸ்வா அரைமணிக்கு பிறகு தொடர்பு கொண்டான்.

"சார்! அம்மா 'கடவுள் இல்லத்திற்கு' வரவே இல்லை. டிரைவரிடம் விசாரித்தேன். வாக்கிங் போனவங்க திரும்பவே இல்லை என அவன் தேடிக் கொண்டிருந் தானாம். நான் எல்லா இடங்களிலும் விசாரித்துக் கொண்டி ருக்கிறேன். நல்ல தகவல் கிடைத்ததும் சொல்கிறேன். காவல் துறைக்கும் செய்தி தெரிவித்து விட்டேன். அவர்களும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்."

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த பாவ்னா கேட்டாள் "என்னாச்சு? அம்மா எங்கே?"

"அம்மாவை காணலை; தேடிக் கொண்டிருக்கிறார்கள்."

"ஐயோ! ஒரு அப்பாவிப் பெண்ணை நாம் தெரிந்தோ, தெரியாமலோ அழ வைத்தோம்; இப்போ நாமே அழ வேண்டிய சூழ்நிலை வந்துடுச்சே!"

"ஆம்! பெண் பாவம் பொல்லாதது. ஆனால் நாம் யாருக்கும் மனதறிந்து கெடுதல் செய்யவில்லை. அதனால் ஒன்றும் நேராது; தைரியமாய் இரு. நான் போய் பார்த்து விட்டு வருகிறேன்."

இரவு முழுவதும் தவிப்பும், வேதனையுமாய் தேடல் தொடர்ந்தது. ஆனால் சரஸ்வதி இருக்குமிடம் தெரிய வில்லை.

## 19

மதுமதி தண்ணீருக்குள் சென்று கொண்டிருந்தாள். மறுபடியும் குரல். "கண்ணே மது!" குரல் பின்புறம் இருந்து வந்தது.

"அம்மம்மா!" என்றவாறே பின்னால் திரும்பிப் பார்க்க... வேகமாக அவளுக்கு நேரே வந்த அலை அவளை கரையை நோக்கித் தள்ளியது.

கரையில் நடுத்தர வயது பெண்மணி நெஞ்சை பிடித்துக் கொண்டு வேதனையில் தவித்துக் கொண்டிருந்தாள். "மது". அவர்தான் கூப்பிட்டார். தன்னையாய் இருக்காது என்றே நினைத்தாள். ஆனால் அம்மம்மா அழைப்பது போலவே இருந்தது. அருகே இயன்ற அளவு விரைவாய் ஓடினாள். "அம்மா! என்ன செய்கிறது?" நெஞ்சை பிடித்துக் கொண்டு ஜாடை செய்ய, அவசரமாய் ஆட்டோவை அழைத்தாள். ஆட்டோ ஓட்டுநரின் துணையோடு அருகிலிருந்து மருத்துவமனைக்குச் சென்றனர்.

"ஏம்மா, அம்மாவை கூட கவனிக்காமல் தண்ணீரில் நீ விளையாடிக் கொண்டிருந்தாயா? இன்னும் கொஞ்சம் தாமதித்து இருந்தால் உயிரே போயிருக்கும்" என்று டியூட்டி டாக்டர் அதட்டினார்.

"ஆம்! உயிரே போயிருக்கும்!" என மதுமதி முணுமுணுத்துக் கொண்டாள்.



சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டதால் அந்த பெண் ஆபத்தான கட்டத்தை தாண்டினார். இருந்தும் மருந்தின் விளைவால் அவர் ஆழ்ந்த உறக்கத்திலோ, மயக்கத்திலோ இருக்க.. அவர் யார்? என்னவென்று விவரம் எதுவும் கேட்க முடியவில்லை. மதுமதிக்கும் எந்த வேலை தட்டுக் கெட்டுப் போகிறது. அவள் இறப்பு இன்னும் கொஞ்சம் தள்ளி போயிருக்கிறது. அவ்வளவு தான்! போகும் நேரத்தில் ஒரு நல்ல காரியத்தை செய்துவிட்டு போகும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனவே ஆத்மார்த்தமாய் அவரை கவனித்துக் கொண்டாள். மருத்துவமனை செலவிற்கு கழுத்திலிருந்த செயினை கழட்டி செவிலியிடம் கொடுத்து விற்று பணம் வாங்கி கட்டினாள். மறுநாள் மதியம் அந்த பெண்மணி கண்விழித்தார். அவர் மதுமதியைப் பார்க்க. "அம்மா உங்கள் வீட்டு முகவரியோ அல்லது தொலைப்பேசி எண்ணையோ கொடுங்கள். உங்களைப் பற்றிய தகவல்களை அவர்களிடம் சொல்ல வேண்டும், உங்களை காணாமல் தவித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்."

"அது இருக்கட்டும்! நீ ஏன் கடலில் இறங்கினாய்? என்ன பிரச்சனை உனக்கு?"

மெலிந்த குரலில் வந்த கேள்வி அவளை அதிரச் செய்தது. பதில் சொல்ல முடியாமல் நெஞ்சுவலி வந்து விட்டது. வாழ்வை வெறுத்து உயிரை விட துணிந்த கணத்தில் கூட அடுத்தவருக்கு உதவும் நீ கண்டிப்பாக தவறு எதுவும் செய்திருக்க முடியாது. சொல்லம்மா! நீ யார்? உன் பெற்றோர் எங்கிருக்கிறார்கள்? அவள் இன்னும் தலை நிமிரவில்லை.

''யாருக்கு நீ வேண்டாது இருந்தாலும், உன் வீட்டிற்கு நீ ராணி தான்....'' என்ற போது 'ஓ!' என விம்மி, விம்மி அழுதாள்.

''என்னடா ஆச்சு?'' என பதறி, சமாதானப்படுத்த முயல,

''வீடோ, பெற்றோரோ உற்றாரோ இல்லாத பொழுது நான் எப்படியம்மா ராணியாக முடியும்?''

அவள் அழட்டும் என பார்த்திருந்தார். ஆறுதலாய் அவள் தலையை வருட, வருட மெதுவாய் மெதுவாய் அவள் அழுகை நின்றது. அதன்பிறகு அவளிடம் எதுவும் கேட்க வில்லை. மருத்துவர் மாலையே வீட்டிற்கு செல்லலாம் என கூறிவிட...

''நீ உன்னைப் பற்றி எதுவும் சொல்ல விருப்பம் இல்லாவிட்டால் பரவாயில்லை. என்னுடன் வீட்டிற்கு வருகிறாயா?''

''ம்ஹூம்! வேண்டாம். நான் வரவில்லை'' என பலமாக மறுத்தாள்.

''ஏன் இன்னும் தற்கொலை உத்தேசம் இருக்கிறதா?''

''சரி! எனக்கொரு உதவி செய்வாயா?''

''என்னம்மா செய்ய வேண்டும்?''

''மாலை தான் இங்கிருந்து கிளம்ப வேண்டும். அதற்கு முன், நான் செல்லும் இடத்திற்கு ஒரு பெண்ணை பார்த்துவிட்டு வரவேண்டும்.''

''எதற்கு அம்மா?'' ''அவளுக்கு பணம் தருவதாக வாக்களித்து இருந்தேன். இன்றைக்கு காலையிலேயே



தந்திருக்க வேண்டும். ஆனால் தர முடியவில்லை. நாளை நான் தருவதாக சொல்லி விட்டு வரவேண்டும்.''

''முகவரியை சொல்லுங்கள்.'' என்ன சொல்ல வேண்டும்? என்ற விவரங்களுடன் முகவரியை வாங்கிக் கொண்டு மதுமதி கிளம்பினாள். ''இரும்மா! கால் டாக்சியில் போகலாம்'' என பக்கத்தில் இருந்தவரிடம் அலைப்பேசியை வாங்கி தகவல் கொடுக்க... கார் வந்ததும் மதுமதி புறப்பட்டாள். ''மங்களம் ஸ்டோர்ஸ்'' என்ற கடையை அடைந்தாள்.

''மங்களம் மேடத்தை பார்க்க வேண்டும்.''

''அக்கா, உள்ளே இருக்காங்க போங்க'' என்றாள் முறுக்கு, சிப்ஸ் பாக்கெட்டுகளை வரிசையாக அடுக்கிக் கொண்டிருந்த பெண். சின்ன கடைதான். ஆனால் மிக நேர்த்தியாய் பலகாரங்கள் அடுக்கப்பட்டிருந்தன. கைமுறுக்கு, சீடை, தட்டை, மிக்சர் என வகை வகையாய் இருந்தன. உள்ளே மதுமதி சென்றாள். நுழைந்ததுமே பலகாரம் சுட்டுக் கொண்டிருக்கும் வாசனை நாசியை துளைத்தது. ஒரு புறம் சில பெண்கள் கைமுறுக்கு சுற்ற, இன்னொரு புறம் சீடை உருட்டிக் கொண்டிருந்தனர். இருந்த போதும் இடம் மிக சுத்தமாய் இருந்தது.

''என்ன அக்கா வேண்டும்?''

''மங்களம் மேடம்...''

''மங்களம் அக்காவை பார்க்க வந்தீர்களா? கொஞ்ச நேரம் உட்காருங்கள்; வந்துவிடுவார்கள்'' என ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டாள் ஒரு பெண்.

இன்னொரு பெண் ஒரு தட்டில் சுட்டுக் கொண்டிருந்த பலகார வகைகளில் சிலவற்றை வைத்து அவளிடம் கொண்டு வந்து கொடுத்தாள். "சாப்பிடுங்க! எங்க கடை பலகாரத்தை ஒருமுறை சாப்பிட்டால் மறுமுறை எங்கிருந்தாலும் எங்களை தேடித்தான் வருவீர்கள்!" என்று கூற மறுக்க முடியாமல் மதுமதி இலேசான முறுவலுடன் முறுக்கை வாயில் போட சுவை சப்பு கொட்ட வைத்தது.

பசியோ? ருசியோ? தட்டில் வைத்த அனைத்தையும் காலி செய்து விட்டாள்.

"மன்னிக்கவும்! உங்களை காக்க வைத்து விட்டேன்;" குரல் கேட்டுத் திரும்பினாள்.

இருபெண்கள் அந்தப் பெண்ணை தாங்கி பிடித்திருக்க புன்னகையுடன் நின்றிருந்தாள். "பத்மா" என்றவுடன் "இதோ அக்கா!" என ஒரு பெண் சக்கரநாற்காலியை தள்ளிக் கொண்டு அவளருகே வந்தாள். அதில் அவள் அமர்வதற்கு மிகவும் சிரமப்பட்டு போனாள். மதுமதி கண்கொட்டாமல் அவளைப் பார்க்க...

"எனக்கு தசை இழுப்பு நோய் (மஸ்குலர் டிஸ்ட்டிராபி) உடலில் உள்ள ஒவ்வொரு தசையாக செயல் இழந்து கொண்டே வரும் நோய். என்னால் யார் உதவியும் இன்றி என்னுடைய வேலைகளைக் கூட செய்து கொள்ள முடியாது. ஆனாலும் இந்தக் கடையை எப்படி நடத்துகிறேன் என்று பார்க்கிறாயா? என் மேல் சொந்த சகோதரியைப் போல பாசம் காட்டும் இவர்களின் உதவியால்தான் நான் வெற்றிகரமாக இயங்க முடிகிறது. தரமுள்ள, சுவையான பொருள்கள் எங்களது தனிச்சிறப்பை நிலைநிறுத்துகின்றன. என்னுடைய நல்ல நம்பிக்கை என்னை வழிநடத்துகின்றது."



"அக்கா எங்களை உயர்வாய் சொன்னாலும் உண்மையில் எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியது அவர்கள் தான். இன்றைக்கு நாங்கள் வறுமையின்றி நிறைவாய் வாழ அக்கா சொல்லி கொடுத்த தொழில் தான் காரணம். அக்காவின் கை பக்குவத்திலும் அளவுகள் மற்றும் தரம் தான் சுவைக்கு காரணம்."

"நாங்கள் எங்களைப் பற்றியே பேசி கொண்டிருக்கிறோமே? நீ எதற்கு அம்மா வந்தாய்?"

"சரஸ்வதி அம்மா நாளை உங்களுக்கு பணம் தருவதாக சொல்லி வரச் சொன்னார்."

"அதை போனிலேயே சொல்லி இருக்கலாமே? அவர் போன்ற நல்ல மனிதர்களால் தான் எங்களைப் போன்றோர் நம்பிக்கையுடன் வாழ முடிகிறது. வாழ்வின் எத்தனையோ கசப்பான அனுபவங்கள்; ஏமாற்றப்பட்ட நிகழ்ச்சிகள், நம்பிக்கை துரோகங்கள் என எல்லாவற்றையும் அனுபவித்து விட்டேன். இன்று நடக்க முடியாமல் இருக்கும் நான் நாளை இருதய தசையும் செயல் இழந்து இறக்க நேரிடலாம். மரணத்தை எதிர்நோக்கி இருக்கும் என் வாழ்வில் நம்பிக்கை சுடரொளி ஏற்றி வைத்தவர் அவர்தான். எல்லா வகையிலும் எனக்கு உறுதுணையாக இருக்கிறார்."

மதுமதி கிளம்பிய பொழுது அவளையறியாமல் அவளுக்குள்ளே ஓர் புத்துணர்ச்சி பிறந்து இருந்தது. மருத்துவமனைக்கு வந்தவளை சரஸ்வதி ஆழ்ந்து பார்த்தார். "நன்றி" என்றார்.

புரியாமல் மதுமதி அவரைப் பார்க்க,

"யாருமில்லாத உடல்நலம் குன்றிய மங்களமே வாழ்க்கையில் ஜெயிக்கும் பொழுது உன்னால் வெற்றி

பெற முடியாதா? நடந்தவைகளை மறந்துவிடு. இன்று புதிதாய் பிறந்ததாக எண்ணிக் கொள். வாழ்க்கை வாழ்வதற்கே! தோல்விகளில் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வெற்றிகளில் அடக்கமாயிருந்து அதை தக்க வைத்துக் கொள்வது எப்படி? என யோசிக்க வேண்டும். சாதாரண மனிதனும் சரித்திர மனிதனாய் மாற முடியும்."

"ஹார்ட் அட்டாக் வந்தவங்க இப்படி பேசாதீங்க! ஓய்வு எடுங்க. மகள் கிட்டே வீட்டிற்கு போய் பேசிக் கொள்ளலாம்" என செவிலி அதட்ட,

"அம்மாவிற்கு மகள் மேல் பாசம் புதுப்புனல் மாதிரி பொங்குகிறது! அம்மா இப்பொழுதாவது சொல்லுங்கள் உங்கள் முகவரியை! உங்களை மாதிரி நல்லவர்களை காணாமல் அவர்கள் எப்படி தவிப்பார்களோ?"

"நீ என்னுடன் வருகிறாயா? அதைச் சொல் முதலில்."

"அம்மா, உங்களை மறுப்பதற்கு மன்னியுங்கள். நான் யார் வீட்டிற்கும் செல்வதை விரும்பவில்லை. முடிந்தால் எங்காவது ஓர் பாதுகாப்பான இடத்தில் வேலை வாங்கிக் கொடுங்கள்."

ஒன்றும் சொல்லாமல் அவளை பார்க்க...

"எனக்கு என்ன வேலை வாங்கித் தருவதென்று யோசிக்கிறீர்களா?"

"நீயோ சிறு பெண்ணாக இருக்கிறாயே? அதுவும் பேரழகியாக இருக்கிறாய்! உன்னை நல்ல இடத்தில் வைக்க வேண்டுமே!"

"என்னம்மா? இவள் என்ன வேலை செய்வாள்? என தயங்காதீர்கள், யாருக்காவது... பள்ளி பிள்ளைகளுக்கு டியூசன் சொல்லி கொடுக்கவும் நான் தயார்."



"ஆனால் அதில் நல்ல வருமானம் உனக்கு வராதே அம்மா! மேலும் தனியாக நீ இருக்க முடியாது. எனக்கு தெரிந்தவர் வீட்டில் பிள்ளைகளுக்கு வீட்டுடன் தங்கி பாடம் சொல்லி கொடுக்க ஆள் தேடி கொண்டிருக்கிறார்கள். நீ அங்கு செல்கிறாயா? பாதுகாப்பான இடம். நான் ஒரு கடிதம் தருகிறேன். நீ போய் அவர்களைப் பார். இன்றைக்கே போவதானாலும் சரி! என்னுடன் வந்துவிட்டு நாளைக்கு செல்வதனாலும் சரி!"

"மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா! நான் உங்கள் வீட்டிற்கு தகவல் தந்துவிட்டு உடனே கிளம்புகிறேன்."

"எங்கள் வீட்டிற்கு நீ வரத் தயார் இல்லை! இந்த அம்மாவை இப்படியே கழட்டி விட நீ பார்க்கிறாய் அப்படித்தானே?"

"தாய்ப் பாசத்தை நான் அனுபவித்ததே இல்லையம்மா! இது என்னுடைய புதுப்பிறவி. இதில் எனக்கு இருக்கும் ஒரே சொந்தம் நீங்க மட்டும் தான்."

"சரி கண்ணம்மா! அம்மா தான் உனக்கு பெயரையும் சூட்ட வேண்டுமா?"

"போங்கம்மா! என்னை கேலி செய்யாதீர்கள்!"

"ஆனால் நீ இன்னும் என்னிடம் உன் பெயரைக்கூட சொல்லவில்லை."

"மதுமதி."

"அழகான பெயர். நீ என்னைப் பார்ப்பதற்காவது என் வீட்டிற்கு வருவாயா?"

"வேண்டாம் அம்மா! நாம் ஏதாவது பொது இடத்தில் சந்தித்து கொள்ளலாம்."

"ஏனம்மா? மனிதர்களையே வெறுத்ததுபோல் ஒதுங்கி ஒதுங்கி ஓடுகிறாய்! நீ முதலில் உன்னை நம்பு. உன் சுய பிம்பம் அதாவது செல்ப் - இமேஜ் கௌரவமாய், நேர்மையாய், இளவரசியாய் இருக்க வேண்டும். நீயே உன்னை குள்ளனாய், குறுகியவளாய் உருவகப்படுத்திக் கொள்ளாதே."

மௌனமாய் நின்றவளின் தலையை வருடினார்.

"இது என் அலைப்பேசி எண். பார்க்கலாம்! உனக்கு நினைவு இருக்குமா என்று?" என ஒரு கடிதத்தையும், தன் அலைப்பேசி எண்ணையும் தர மதுமதி ஆட்டோவில் கிளம்பினாள். அவள் சென்ற ஐந்து, பத்து நிமிடங்களில் காரில் புயலாய் ரிஷி வந்து சேர்ந்தான்.

## 20

ரிஷி ஏறக்குறைய பதறி போய்விட்டான். ஒரு நாள் - இருபத்து நான்கு மணி நேரம் தன் அன்பிற்கும், நேசத்திற்கும், மதிப்பிற்கும் உரிய அம்மா எங்கிருக்கிறார்? என்னவானார்? எனத் தெரியாமல் தவித்த தவிப்பில்... இரவு முழுவதும் அலைந்த அலைச்சலில் சிறுவினாடி கூட கண்மூடவில்லை. தன் தாயை மருத்துவமனையில் கண்ட வினாடி மிகவும் பதறிப்போனான்.



"எனக்கு ஒன்றுமில்லையப்பா! நன்றாகி விட்டேன். நீ ஊரில் இல்லையென்றால் நானே தானப்பா மருத்துவ மனைக்கு வரவேண்டும். அதனால் மனசுக்குள் குற்ற உணர்ச்சி அடையாதே! உன்னைப் போல அருமையான பிள்ளை எனக்கு இருக்கும் பொழுது நோய் வருமா? வந்தாலும் நோய் பறந்து ஓடிவிடும்! நீ இருக்கும் தைரியத்தில் எதையும் எதிர்கொள்ள என்னால் முடியும். கவலைப்படாதே!"

மருத்துவரைத் தேடி ரிஷி சென்றான். அவனை அடையாளம் கண்டு அவர் வரவேற்றார்.

"சார்! உங்க அம்மாவா இவங்க? நல்ல தைரியசாலி அதனால் தான் வலியை தாக்குப் பிடிக்க முடிந்திருக்கிறது. தக்க சமயத்தில் அவங்க பெண் மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டார்கள்."

'பெண்ணா? யாரது?' என்ற யோசனையுடன் "பணம் எவ்வளவு கட்ட வேண்டும்?" என கேட்க,

"அவங்க பெண்ணே கட்டிட்டாங்க."

"யாரம்மா?" என குழப்பமாய் கேட்டான். அப்போது அங்கே வந்த செவிலி செயினை விற்ற விஷயத்தைக் கூற...

சரஸ்வதி அம்மாள் வியந்து போனார்.

'என்ன பெண் இவள்? தனக்கென்று எதுவும் இல்லாமல் முன்பின் தெரியாத ஒருவருக்கு உதவி செய்வாளா?" என எண்ணும் பொழுது,

"உங்களுக்கு உதவிய தேவதை யாரம்மா?" என்றான் ரிஷி மறுபடியும்.

''உண்மையிலேயே அவள் தேவதை தான் கண்ணா! முதலில் அவள் நகையை மீட்க வேண்டும்.''

''செய்துவிடுவோம் அம்மா'' என்றவாறே தன் அருகிலிருந்த விஸ்வாவை பார்க்க,

அவன் உடனே செயல்பட்டான். செவிலியிடம் விவரம் கேட்டு நகை விற்ற கடைக்குச் சென்றான்.

வெறும் மூன்று பவுன் எடையுள்ள நகை கோடீஸ்வரியின் உயிரை சமயத்தில் காக்க உதவியது. சரஸ்வதியை அழைத்துக் கொண்டு தங்கள் குடும்ப மருத்துவரின் மருத்துவமனைக்குச் சென்றான். அங்கு அவரிடம் மறுகருத்து கேட்டு, மருத்துவ ரிப்போர்ட்டுகளை காண்பித்து ஆலோசனை பெற்ற பிறகே வீட்டிற்கு கூட்டிச் சென்றான். பாவ்னாவும், ரிஷியும் அவரை விட்டு அகலாமல் சுற்றி சுற்றி வந்து மாறி மாறி உள்ளன்போடு தாங்குவதைப் பார்த்து சரஸ்வதி சிரித்தார்.

''நான் என்ன சின்ன குழந்தையா? வயதானால் வர வேண்டிய வியாதிகள் வரத்தான் செய்யும். அதற்காக வருத்தப்படவோ, பயந்துவிடவோ போவதில்லை. எதையும் எதிர்நோக்கும் மனவலிமையுடன் மருத்துவர் ஆலோசனையும் கடைப்பிடித்தால் பிரச்சனையில்லை. அதனால் நீங்கள் இருவரும் கவலைப்படுவதை விடுங்கள்.''

''அம்மா, உங்களை காப்பாற்றிய பெண்ணைப் பற்றி நீங்க எதுவும் சொல்லவில்லையே?''

''ஆமாம் அம்மா! அவளுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவள் நகையை வேறு திருப்பித் தரவேண்டும்.''



''நான் உனக்கோ, பாவ்னாவிற்கோ நன்றி தெரிவிப் பேனா? அவளை நம் வீட்டில் ஒருத்தியாக நான் ஏற்றுக் கொண்டு விட்டேன். அவள் நகையை என்னிடம் கொடு; நான் அவளை பார்க்கும் பொழுது கொடுத்துக் கொள்கிறேன்.''

''அது என்னம்மா! சின்ட்ரெல்லா கதை தேவதை போல் அவள் உங்களுக்கு மட்டும் தான் காட்சி கொடுப்பாளா?''

''அப்படியே வைத்துக்கொள் பாவ்னா!'' அப்போது அவர் அலைப்பேசி ஒலிக்க எழுந்து சென்று பேசிவிட்டு வந்தார்.

வந்தவர் ''ஆமாம், மாலினி ஊருக்கு சென்று விட்டாளா?'' என வினவினார். ''ம்!''

''அவள் வயது தான் இருவருக்கும்! இருந்தும எத்தனை வித்தியாசம்?'' என்ற பொழுது,

பாவ்னா ரிஷியைப் பார்க்க, ரிஷி தலையசைக்க அன்று நடந்ததை பாவ்னா சொல்ல குறுக்கிடாமல் கேட்டார் சரஸ்வதி. ''ஏனப்பா! அந்தப் பெண்ணை பார்த்து நீ பேசியிருக்கக் கூடாதா? நேசிப்பது, நேசிக்கப்படுவது எத்தனை உயர்வான விஷயம்! நம் கண் முன் இருக்கும் பாசத்தை மரியாதை செய்ய வேண்டும். உனக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் மனது நோகாமல் மென்மையாய் எடுத்து சொல்லி இருக்கலாமே?''

''இல்லையம்மா! நாங்கள் பார்ப்பதற்குள் அந்தப் பெண் அழுது கொண்டே சென்றுவிட்டாள் அம்மா!''

''தப்பு பாவ்னா. ஒரு சின்னப் பெண்ணின் மனதை ஒடித்துவிடக் கூடாது. உன் அண்ணனுக்கு நான் ஏன் துருவ் என்று பெயர் வைத்தேன் தெரியுமா? மத்தியப்பிரதேசம்

மாநிலத்தில் போபாலில் விஷவாயு கசிவு ஏற்பட்டதே? அதைப் பற்றி அறிந்து இருக்கிறாயா? போபால் ரயில்வே ஸ்டேஷனில் ''துருபே'' என்ற ஸ்டேஷன் மாஸ்டர் வேலை செய்து கொண்டிருந்தார். விஷவாயு தொழிற்சாலையில் இருந்து கசிந்து காற்றில் எங்கும் பரவியது. இதைப்பற்றி மக்கள் எவரும் அறியவில்லை. அறிந்தவர்களோ தாங்கள் மட்டும் தப்பித்தால் போதுமென்று பல நூறு மைல்கள் தள்ளி ஓடிவிட்டார்கள். 'துருபே'' வெளியில் வந்த போது காற்றில் வித்தியாசமான மணத்தை உணர்ந்தார். வெளியில் இருந்த நாய் செத்து கிடப்பதை பார்த்தார். பிச்சைக்காரர்கள் வாயிலும் மூக்கிலும் இரத்தம் வர இறந்து கிடப்பதையும் பார்த்தார். ஏதோ விபரீதம் என உணர்ந்தார். அடுத்த ஸ்டேஷனுக்கு போக வேண்டிய இரயில் வண்டி இந்த வழியாக வராமல் வேறு வழியில் செல்ல தகவல் கொடுக்க உள்ளே ஓடினார். ஆனால் இரயில் அதற்குள் புறப்பட்டு விட்டது. இந்த ஸ்டேஷனுக்குள் வந்தாலும் கதவு, சன்னல்களை நன்கு அடைத்துவிட வேண்டும் என்றும், இங்கு வெகுநேரம் நிற்காமல் சென்றுவிட வேண்டும் என்றும் எச்சரித்தார். அதை மீறி கதவை திறந்தவர்கள் செத்து 'பொத், பொத்' என்று விழுந்தார்கள். ஆனால் பலர் தப்பித்தனர், விடிய விடிய இரயில்கள் அந்த நிலையத்திற்கு வராமல் தடுக்க தொடர்ந்து செய்தி அனுப்பி கொண்டே இருந்தார். மறுநாள் 'சிக்னல்' அனுப்பும் கருவியோடு அறைவாயிலில் வாயிலும் மூக்கிலும் இரத்தம் வர இறந்து கிடந்தார். அவர் நினைத்திருந்தால் அடுத்தவரைப் பற்றி கவலைப்படாமல் ஓடிப் போனவர்களைப் போல் அங்கிருந்து வெளியேறி உயிர் தப்பியிருக்கலாம். அந்த வருடம் அதே மாதத்தில் தான் நீ பிறந்தாய். அவரை உலகம்



இன்று மறந்து இருக்கலாம். ஆனால் அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ரிஷியாக அவரை மதித்து 'ரிஷி துருவ்'' என உனக்கு பெயர் வைத்தேன். 'மனித நேயம்' எல்லாருக்கும் வேண்டுமப்பா. 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என உலகிற்கு கற்றுத்தந்தவர்கள் நாம். மனதில் ஈரம் வற்றிவிட்டால் வாழ்விற்கே அர்த்தமேது? நீயும் நான் எதிர்பார்த்த மாதிரியே வளர்ந்தாய். சிறுவயதில் காவிரிக் கரைக்குச் சென்ற பொழுது தண்ணீரில் விழுந்த இரு சிறுவர்களை பாய்ந்து நீ காப்பாற்றினாய். அப்போது உனக்கு நீச்சல் கூட சரிவர தெரியாது. நம்பிக்கையும், தைரியமும் உன் புத்திசாலித்தனமும் அவர்களை காப்பாற்ற உதவின. உன்னால் ஒரு பெண் பாதிக்கப்படுவதை, நீ அறியாமல் கூட அது நடப்பதை நான் விரும்பவில்லை.''

ரிஷி மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தான். அவன் மனதில் பல யோசனைகள். காலையில் பாவ்னா சொன்ன விஷயம் ஒன்று கூட அவனை யோசிக்க வைத்தது.

''அண்ணா, தோட்டத்தை பார்த்து நின்று கொண்டிருந்த அந்தப் பெண் 'மாலினி' என கூப்பிட்டாளாம். அப்படி யென்றால் அவளுக்கு தெரிந்தவளாகத் தானே இருக்க வேண்டும்?''

''நீ சொல்வது ரொம்ப சரி! மாலினியிடம் நாசுக்காய் விசாரியேன்.''

''அண்ணா! அவள் சரியான அமுக்குனி. விஷயத்தை என்னிடம் மூச்சு விடவே மாட்டாள்.''

''சரி! இதை நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்று அப்போது முடித்துவிட்டான்.

பின் வீட்டு தொலைப்பேசி எண்ணில் வருண் வீட்டிற்கு போன் செய்தான். எடுத்தது மாலினி தான். "வருண், நான் ரிஷி பேசுகிறேன்!" மாலினிக்கு மழையில் நனைந்தாற் போல் இருந்தது. "வருண் அண்ணா இல்லையே? என்ன விஷயம் சொல்லுங்கள்?"

வருண் வீட்டில் இருக்க மாட்டான் என்று எனக்குத் தெரியாதா? என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

"ரோபோ மாடல் பற்றி அவனிடம் கேட்டு இருந்தேன். நீ பேசுவது கூட நல்லது தான். உங்கள் கல்லூரி பெண் கூட ரோபோ மாடல் செய்திருந்தாள் அல்லவா? அவள்... பெயர்... என்ன?"

"எனக்கு நினைவில்லையே!" என்றாள்.

"நன்றாக யோசித்துப் பார்."

"காவ்யாவா?"

"இல்லை; அதே சமயத்தில் நடந்த பத்திரிகை பேட்டியில் கூட தேவதை பட்டமோ என்னவோ பெற்றாளே? ரொம்ப அழகாய்...ம்... ஏதோ தடுக்கி மேடையில் கூட தடுமாறினாளே....!"

"ஓ! அவளா? மதுமதி ஒன்றும் தடுக்கி தடுமாறவில்லை. கொஞ்சம் பிகேவியர் சரியில்லாத பெண்! அவள் பேரில் தப்பு தப்பாய் கல்லூரிக்கு கடிதம் வந்தது. அப்புறம் கல்லூரி பொது பணத்தை வேறு திருடிவிட்டாள் என்று கல்லூரியை விட்டே நீக்கி விட்டார்கள்."

"சே! இத்தனை மோசமான பெண்ணா? நான் கூட அவளை நல்லவள், புத்திசாலிப்பெண் என்று எண்ணி விட்டேன்."



"எல்லாருமே அப்படித்தான் நினைத்தார்கள்! இப்போது தான் அவள் சுயரூபம் தெரிந்தது. அம்மாவிற்கு நான் அவள் கூட பழகினேன் என்று தெரிந்தாலே கோபிப்பார்கள். நீங்க இனி இதைப் பற்றி யாரிடமும் விசாரிக்க வேண்டாம்."

"சரி! வீட்டில் நான் எல்லாரையும் விசாரித்தாகக் கூறு" என வைத்துவிட்டான்.

'இனி ஏன் நான் உன்னிடம் விசாரிக்கப் போகிறேன்? உன்னிடம் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை தெரிந்து கொண்டேன். இது நேரிடையாக விசாரிக்க வேண்டிய விஷயமல்லவா?' யோசனையுடன் பதிவு செய்யப்பட்ட செய்திகளை அறியும் பட்டனை அவன் விரல்கள் ஏதேச்சையாக அமுக்க...

"பாவ்னா! நான் தான் மதுமதியின் பாட்டி பேசுகிறேன். 9782347699 என்ற எண்ணில் என்னுடன் பேசவும்."

என மதுமதியின் பாட்டி குரல் ஒலித்தது.

## 21

மதுமதி ஆட்டோவை ஒரு ஜவுளிக்கடையின் அருகில் நிறுத்த சொல்லி உள்ளே சென்றாள். செயின் விற்ற பணம் மீதி கையில் மூவாயிரம் இருந்தது. அதில் சாதாரண சுடிதார்கள் இரண்டு மற்றும் அவசியமான உடைகள் சிலவற்றையும் வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள். 'எங்கே ஆட்டோ டிரைவரை காணோம்?' என்று பார்த்தாள்.

இன்னொரு ஆட்டோ பிடிக்கலாமா? என யோசித்தாள். ஏறும் பொழுது டீசல் போட சில்லரை கேட்டான் எ[illegible] ஐம்பது ரூபாய் கொடுத்து இருந்தாள். எனவே அவனை முதலில் பார்த்து விட்டு கிளம்பலாம் என சற்று நகர்ந்து தேடினாள். ஒரு சந்தின் இடைவெளியில் ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. ''அம்சமாய் இருக்கு. ஆளை நைசா தள்ளிக்கிட்டு வந்துடுறேன்.'' குரலைக் கேட்டதும் யாரென்று உணர்ந்தாள். அவன் வருவதற்குள் சட்டென இன்னொரு ஆட்டோவில் ஏறி கிளம்பினாள். செல்லும் பொழுதே காய்ன் பூத்தில் அவள் போகும் வீட்டிற்கான வழியை சரஸ்வதியிடம் விசாரித்தாள்.

''என்னம்மா பிரச்சனை? ஏதாவது உதவி வேண்டுமா?''

''தேவையில்லையம்மா! நான் பார்த்துக் கொள்கிறேன்.'' எனக் கூறிவிட்டு புறப்பட்டாள். அந்த வீட்டை அடைவதற்கான முக்கியமான பாதையை அடைந்ததும் ஆட்டோவில் இருந்து இறங்கிக் கொண்டாள். தெருவிற்குள் திரும்பும் பொழுது ஒரு சிறுவன் ஓடிவந்தான். ஓடி வந்த வேகத்தில் மதுமதியின் மீது மோதிக்கொண்டான். ''ஸ்! ஆ.''

''ஸாரி தீதி!''

''பரவாயில்லை எனக்கொரு உதவி செய்வாயா? ப்ளாட் 221 எங்கிருக்கிறது?''

''நீங்கள் யார்?'' என அவன் எதிர்கேள்வி கேட்டான்.

''நான் அந்த வீட்டு பையனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வந்திருக்கிறேன்.''

''டியூசன் அக்காவா? என்ன சொல்லித் தருவீர்கள்?''



''அதை நான் அவர்களிடம் சொல்லிக் கொள்கிறேன்.''

''அவன் என் நண்பன் என்றால் சொல்வீர்களா?''

''ஓ! இன்டர்வியூ இங்கேயே ஆரம்பமாகிவிட்டதா?''

அதற்குள் இன்னொரு சிறுவன் சக்கர நாற்காலியை தள்ளிக் கொண்டு வந்தான். ''அமோஸ்! என்னடா செய்கிறாய்?''

''ராம்லால் ஸாப் வீட்டிற்கு கெஸ்ட் வந்திருக்காங்கடா! இரு கொஞ்சம் கேள்வி கேட்டுட்டு வருகிறேன்'' என்றவன் தொடர்ந்து, ''நீங்கள் சொல்லுங்கள், என்ன சொல்லித் தருவீர்கள்?'' என்று கூற துறுதுறுப்பாய் நின்று கொண்டிருந்த அந்த சிறுவர்களைப் பார்த்தாள். இருவரும் ஒரே மாதிரியாய் இருந்தனர். இரண்டு பேரும் சேர்ந்தாற் போல் நின்றிருந்தால் அடையாளம் கண்டுபிடிப்பது சிரமமாயிருந்திருக்கும். இரட்டையர்கள்.

''எல்லாம் சொல்லித் தருவேன்.''

''எல்லாமேவா? பாட்டு, டான்ஸ், உடான்ஸ் எல்லாம் சொல்லித் தருவீர்களா?''

''உங்களை மாதிரி நல்லப் பிள்ளைகளுக்கு பாடம் மட்டும் சொல்லித் தருவது தான் பிடிக்குமாக்கும்.''

''எங்க தாத்தாவை உனக்குத் தெரியுமா?''

''யார் உங்க தாத்தா?''

''மக்கு! எங்க தாத்தா தான் உனக்கும் தாத்தா! காந்தி தாத்தாவையே தெரியாமல் என்ன பாடம் சொல்லித் தரப் போகிறாய்?''

அவளையறியாமல் புன்னகைப் பூத்தாள்.

"விலாசம் விசாரித்தால் நீங்கள் வில்லங்கத்தில் மாட்டிக் கொள்வீர்கள் எனச் சொல்லாமல் சொல்கிறீர்கள்? ஸோ ஸ்வீட்!"

"அஸீம்! நாம் ஸோ ஸ்வீட்டாம்! உன் பங்கிற்கு ஏதாவது கேளேன்."

"தட்டி விட்டால் கொட்டாத பொருள் எது?"

"சொன்னால் என்ன தருவீர்கள்?"

"உன்னை ப்ரெண்டாக ஏற்றுக் கொள்வோம்."

"அப்படியென்றால் சொல்லட்டுமா?"

"ம்."

"தேள்."

"தேளைத் தொட்டுப்பாரேன்; கொட்டுதா? இல்லையான்னு தெரிஞ்சிடும்."

"அஸீம், அமோஸ்" என அழைக்கும் குரல் கேட்டது.

"ஹேய்! அம்மாடா!"

அதற்குள் அவர்களைத் தேடி அவர்களின் அம்மா அங்கேயே வந்து விட...

"மேம்! திரு. ராம்லால் வீடு எது?" என மதுமதி கேட்டாள். இரு சிறுவர்களும் இணைந்து சிரித்தனர். "ரெட்டை வாலுங்க; வம்பு ஏதாவது செய்தீர்களா?" என்றவள் தொடர்ந்து அவளிடம் திரும்பி "எங்க வீடுதாம்மா; நீ யார்?" என,



"என் பெயர் மதுமதி. சரஸ்வதியம்மா இந்த கடிதத்தை சாரிடம் கொடுக்கச் சொன்னார்கள்."

"இரண்டு முறை போன் செய்துவிட்டார்கள்; நீ வந்துவிட்டாயா என்று. வா உள்ளே போகலாம்."

ராம்லால் மிகவும் மரியாதைக்குரியவராய் இருந்தார். கனிவான பேச்சு, அன்பான உபசரிப்பு, தேவையற்ற கேள்விகள் இன்றி சரஸ்வதியம்மாள் சொன்னால் எல்லாம் சரியாய் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் அவளை தங்களுடனேயே தங்கச் சொல்லினர். இரட்டையரில் ஒருவனான அஸீமிற்கு பிறவியிலேயே கால் குறைபாடு இருந்தது. அவனால் நடக்க முடியாது என்பதால் இதுவரை பள்ளி செல்லாமல் வீட்டிலிருந்தே படித்தான். அமோஸ் படித்த பள்ளியிலேயே ஆறாம் வகுப்பு படிக்க ஏற்பாடு செய்து இருந்தனர். பள்ளிக்கு உற்சாகமாய் அஸீம் கிளம்பிவிட்டான். இருவருக்கும் பாடம் படிப்பது சற்று கசப்பாக இருந்தது. வீட்டில் நெடுநேரம் டி.வி பார்த்து பழகியிருந்ததால் படிக்க அமர்வது எரிச்சலூட்டியது.

"தீதி! சும்மா அம்மா மாதிரி படிபடின்னு சொல்லி விடாதே! அப்புறம் உன்னையும் எங்களுக்கு பிடிக்காமல் போய்விடும்."

முதல் இரண்டு நாள் கொஞ்சம் விட்டுப் பிடித்தாள். பின் மெதுமெதுவாய் விளையாட்டாய், கடி ஜோக்கடித்து படிக்கின்ற நேரத்தை சற்று அதிகப்படுத்தினாள். அஸீமிற்கு டிரம்ஸில் மிகுந்த ஆர்வமிருந்தது. அதை முறைப்படி கற்க அவள் பெற்றோரிடம் சொல்லி ஏற்பாடு செய்தாள். அமோஸிற்கு கால்பந்து விளையாட பிடித்திருந்தது. இருவரையும் தட்டிக் கொடுத்து அழுத்தமான குரலில்

கண்டிப்பு காட்டி நல்ல விஷயங்களை செய்ய வைத்தாள். குழந்தைகள், சிறுவர்கள் மனதில் இடம் பிடிப்பது கஷ்டம். ஆனால் இடம் பிடித்துவிட்டாலோ அவர்கள் நாம் என்ன சொன்னாலும் செய்வார்கள். இயல்பாகவே அனைவரையும் வசீகரிக்கும் தன்மை மதுமதிக்கு இருந்தது. அவர்கள் மனதிற்கு பிடித்தபடி மதுமதி நடந்து கொண்டது வேறு அவளிடம் அவர்களை பைத்தியமாக செய்து விட்டிருந்தது. இணைய தள வசதியுடன் கணினி அறை இருந்தது. அஸீம், அமோஸிற்கு பாடங்களை விளக்க அனிமேஷன் தயாரித்தாள். மாலையில் அதைப் போட்டுக்காட்டி பாடத்தை விளக்கவும் அவர்கள் எக்கச்சக்க குஷியாகிவிட்டனர்.

"அச்சா தீதி! இப்ப தான் பாடம் நல்லா புரியுது. இன்னும் மியூசிக்கும் பாட்டும் இருந்தால் நன்றாக இருக்கும்."

"சினிமா மாதிரி தனித்தனியாய் டப்பிங் வாய்ஸ் கொடுத்தால் கூட ரொம்ப நன்றாக இருக்கும்."

"தீதி! இனிமேல் நாங்க உன்னை ஸோனானு கூப்பிடட்டுமா?"

"ஏன்?"

"நீ தங்கமாய் இருக்கிறாயே?"

"ஸோனு தீதி! இன்னிக்கு இந்தியாவின் பிரதம மந்திரிகள் பெயரை எல்லாம் சோஷியல் வகுப்பில் கேட்டார்கள். கொஞ்சம் உதவி பண்ணுகிறாயா?"

"நீ எழுதி கொண்டு வா! விட்டுப் போன பெயர்களை நான் சொல்கிறேன்;"

"தீதி! திரு. வாஜ்பாய்க்கு முன்னால் யார்?"



"வாஜ்பாயை எல்லாருக்கும் தெரியும். ஆனால் உன்னை வாஜ்பாய்க்கு தெரியுமா?"

இப்பொழுதும் பளீர் என்று அறை வாங்கினாற் போல் இருந்தது. கண்களில் இருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

"என்னாச்சு தீதி?"

அமோஸ் ஓடிப்போய் தன் தாயிடம் சொன்னான்.

"அம்மா தீதி அழறாங்க!"

"என்னடா வம்பு பண்ணுனீங்க?"

அவர்கள் உதட்டை பிதுக்க,

"என்னம்மா?" பதில் சொல்லாமல் அவள் விம்ம,

"உன் வீட்டினரது ஞாபகம் வந்துவிட்டதா? உன் உறவினராய் எங்களை நினைத்துக்கொள்."

சற்றுநேரம் அழுது அரும்பாடுபட்டு தன்னை சமாளித்துக் கொண்டாள்.

"ஸாரி தீதி! உங்க அப்பா பேரும் அதுதானா? அவங்க ஞாபகம் வந்துடுச்சா?" என அஸீம் வினவ தன்னை அறியாமல் புன்னகைத்தாள். அன்றைக்கு படிக்க வேண்டிய பாடங்களை படிக்க சொல்லிவிட்டு சப்ஜியும் டாலும் பேருக்கு உண்டு விட்டு படுக்க வந்தாள்.

'எப்படி ரிஷி என்னை தெரியவே தெரியாது எனக் கூற முடிந்தது? வாழ்த்துக்களும், பூங்கொத்தும், பரிசும் நேசத்தை வெளிப்படுத்தவில்லையா? அப்புறம் என்னுடன் போனில் பேசியது ரிஷியே அல்லவா? அந்த

காந்தக் குரலே அவள் அறியாமல் இருப்பாளா? மது டார்லிங், கண்ணம்மா என்றெல்லாம் உருகிவிட்டு... ஏதோ அறிமுகமே இல்லாதவளைப் போல எப்படி, இப்படி பேச முடிந்தது? மனசெல்லாம் வலித்தது; ஆயுசுக்கும் இந்த வலியும், அவமானமும் போகாதோ? இறப்பை விட நேசம் பொய்த்து போவது தான் மிகப் பெரிய வலியை ஏற்படுத்தியது.

**"ஆசைமுகம் மறந்து போச்சே - இதை**
**ஆரிடம் சொல்வேனடி தோழி**
**நேசம் மறக்கவில்லை நெஞ்சம்"**

மனதிற்குள் படித்த பாரதியார் கவிதை ஓடியது.

**"ஓய்வு மொழிதலுமில்லாமல் அவன் உறவை**
**நினைத்திருக்கும் உள்ளம்."**

வேண்டாம், வேண்டாம். இனி அவன் நினைவு வேண்டாம். அவனை மறக்க வேண்டும் என்றால் நினைவை மறக்கவேண்டும். நினைவை மறத்திட வேண்டும் என்றால் அவளை மறக்க வேண்டுமே! அவள் மறக்க வேண்டுமென்றால் ஏதாவது உழைப்பில் தீவிரமாக வேண்டும். உடல் களைத்து வீழும் வரை வேறு எதிலாவது ஈடுபட வேண்டும். ஆசைப்பட்ட படிப்பு இல்லை. அன்பு செய்ய எவரும் இல்லை என்ற நினைப்பை தூக்கி எறிய வேண்டும். எனக்கு எதுவும் தேவையில்லை. அம்மா சொன்னது போல் புதுப்பிறவி இது! புதிதாய் பிறந்தவள் பழைய ஜென்ம வாசனையில் இனி அழலாமா? யார் மேலும் ஆசையும் இல்லை; வெறுப்பும் இல்லை. இனி நேசிப்பு சுயநல மில்லாத அன்பாய், பிறரை உயர்த்துவதாய் அமைய வேண்டும். மனித குலத்தை நேசித்த முன்னோர்களைப்



போல வாழ்விற்கு அர்த்தம் தருவதாய் அமைய வேண்டும். பிறந்ததற்கு, வாழ்ந்ததற்கு நல்ல அடையாளம் வேண்டும். எவரையும் எண்ணி கவலைப்பட போவதில்லை, வருத்தப்பட போவதில்லை. என் குறிக்கோள், இலட்சியம் எல்லாம் வாழ்வில் உயர வேண்டும். உலகமே வியக்கும் அளவிற்கு அனைவரும் பாராட்டும்படி பழிசொல்லியவர் வெட்கி தலைகுனியும்படி உயரவேண்டும். மதுமதி களங்கமில்லாதவள். நேர்மை, உழைப்பு, வெற்றி இவற்றின் பொருள் அவளல்லவா? என ஊர் சொல்ல வேண்டும்; உலகம் சொல்ல வேண்டும்; ரிஷியும் சொல்லவேண்டும். மனதில் உறுதி எழ எழ இரவு வெகுநேரத்திற்கு பிறகு ஆழ்ந்து உறங்கிப் போனாள் மதுமதி.

## 22

பாவ்னா வீட்டிற்கு போன் செய்தாள். "மாலினி உனக்கு உன் அண்ணன் நகைகள் வாங்க வேண்டும் என்றார், எங்கே வாங்கலாம்?"

"புது மாடல் நானே பார்த்து வாங்க வேண்டும்."

"சரி! எங்கே வாங்கலாம்? திருப்பூரா? கோவையா?"

"ஏன் அண்ணி சென்னை என்று ஓர் ஊர் இருப்பதே மறந்து விட்டதா?"

"ஆனால் நீ வர வேண்டுமே? உனக்கு கல்லூரி இருக்கிறதே?"

"கட் அடிக்காவிட்டால் கல்லூரி படித்து பயன் ஏது? இரண்டு நாள் போதுமல்லவா?"

"உன் வேகம் எனக்கு எப்படியம்மா தெரியும்?"

"போங்க அண்ணி! என்றைக்கு நான் கிளம்பி வரட்டும்?"

"இன்றைக்கே இப்போதே என்றாலும் எனக்கு சரிதான். ஆனால் அத்தையிடம் ஒரு வார்த்தை கேட்டுவிடு கிறேன்."

"அம்மா, இப்பொழுது இதெல்லாம் எதற்கு என முட்டுக்கட்டை போடுவார்கள்."

"அத்தையிடம் நான் சொல்கிறேன்; மறுக்கமாட்டார்கள்."

சென்னை கனவில் மாலினி மிக உற்சாகமானாள். 'அண்ணி குழந்தை இருப்பதால் ஷாப்பிங்கிற்கு வரமாட்டாள். வருணோ வெளியூர் சென்றிருந்தான். தன்னை யாரும் தனியே நகைவாங்க அனுப்பப் போவ தில்லை. மனம் கவர்ந்த ரிஷியுடன் ஆசைப்படும் அத்தனை பொருள்களையும் வாரிக்கொண்டு வரப் போகிறாள். மதுமதி ஒழிந்தபிறகு அவளுக்கு நல்ல நேரம் பிறந்து விட்டது. தன்னை சென்னைக்கு வரவழைத்த காரணம் தெரிய நேர்ந்தால் பெரிய ஏமாற்றத்திற்கு அல்லவா ஆளாவாள்.

சென்னை சென்று ரிஷியை அவள் விழிகள் தேடிக் கொண்டிருந்த நேரத்தில் ரிஷி விஸ்வா உடன் கோவை கல்லூரியில் இருந்தான். கல்லூரி வகுப்புகள் துவங்கி யிருந்ததால் கண்ணாடி சன்னல்கள் மூடப்பட்டிருந்த கார்



முதல்வர் அறையை அடைந்ததை எவரும் கவனிக்க வில்லை.

"வாங்க சார்! என்ன விஷயம்? உங்க பி.ஏ. போன் செய்தார். உங்க அப்பாய்ன்மெண்ட்டிற்கு ஊரே காத்திருக் கிறது. எவ்வளவு பவர் மேன் நீங்க? சொல்லுங்கள் என்ன செய்ய வேண்டும்?"

"இங்கே வந்தது ஓர் வேலை விஷயமாகத்தான். ரோபோ மாடல் பற்றி விசாரிக்கத்தான் பல இடங்களுக்குச் சென்றேன். உங்க ஸ்டூடண்ட் செய்த மாடல் மற்ற எல்லாவற்றையும் விட நன்றாக இருந்தது. அதைப் பற்றி விவரம் அறியத்தான் வந்தேன்."

"காவ்யா - மதுமதி செய்த மாடல்தானே சார்? காவ்யா டெல்லியில் இருக்கிறாள்."

"இன்னொரு பெண்?"

"அவள் கல்லூரிக்கே வருவதில்லை."

"வருவதில்லையா? நிறுத்திவிட்டீர்களா?"

"ம்! நல்லா முன்னுக்கு வருவாள்னு நினைச்ச பெண். தவறான நடத்தையால் கல்லூரியை விட்டே நின்று விட்டாள்."

"என்ன சார் சொல்கிறீர்கள்? அவள் அப்படி என்ன தவறு செய்தாள்? டிரக் அடிக்ட் ஆகி விட்டாளா? பையன்களுடன் சுற்றினாளா?"

"சே! சே! அப்படியெல்லாம் செய்யவில்லை!"

"பின் என்ன?"

"அவளைப் பற்றி ஒரு கடிதம் கல்லூரிக்கு வந்தது. அது கூட இங்கே தானே இருந்தது" என மேசை இழுப்பறை

அதை கையில் வாங்கியவன் பிரித்து பாராமலே "மொட்டைக் கடிதமா?" என்றான்.

பின் "ஒருத்தரை மொட்டைக்கடிதத்தை வைத்து எடை போட முடியாது. பொறாமையில் கூட யாராவது இப்படிச் செய்யலாம். ஒரு வருடம் நன்கு அறிமுகமான மாணவியை முகத்தை பார்த்தாலே தெரியாதா?"

"ஆமாம்! அதனால் தான் நான் அவள்மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சும்மா எச்சரித்துவிட்டு விட்டுட்டேன். அவள் பாட்டி இறந்த பிறகு கல்லூரிக்குக் கூட அவள் பணம் கட்டவில்லை. பிறகு எப்படி கட்டினாள் என்று தெரியவில்லை. 'ப்ரெண்ட்ஸ் கிளப்' பணத்தை எடுத்துவிட்டாள் என்று கூட ஒரு பேச்சு அடிபட்டது. ஆனால் பணம் எதுவும் குறையவில்லை. ஏனோ கல்லூரிக்கு வராமல் நின்றுவிட்டாள்."

"சரி சார்; நான் கிளம்புகிறேன்."

"இருங்கள்! ப்ரெண்ட்ஸ் கிளப் சேர்மனை கூப்பிடுகிறேன். அவளுக்கு மதுமதியைப் பற்றி ஏதாவது தெரியுமா என கேட்கலாம்."

ப்யூனை விட்டு உமாவை அழைத்து வரச் சொன்னார்

"எக்ஸ்க்யூஸ் மீ சார்."

"உமா! மதுமதியைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா? ஏன் அவள் கல்லூரிக்கு வருவதில்லை? வீட்டிற்கு கடிதம் அனுப்பியும் எந்தவித பதிலும் இல்லை."

"ப்ரெண்ட்ஸ் கிளப் பணம் இருபதாயிரத்தை எடுத்து கல்லூரி பீஸ் கட்டிவிட்டாள் சார். அது தெரிந்துவிடவும்



அவமானப்பட்டுக் கொண்டு வராமல் இருந்துவிட்டாள் போலும்."

"என்னம்மா சொல்கிறாய்? பணம் எதுவும் குறைந்ததாக தெரியவில்லையே? அந்த பணத்தை அப்படியே கிராம வளர்ச்சிக்கு பயன்படுத்தி விட்டோமே?"

"ஆமாம் சார்! பணம் இருபதாயிரம் காணோம்; நீ எப்படி கல்லூரி பீஸ் கட்டினாய் என்றதும் பதறி கதறிவிட்டாள். பின் கையிலிருந்த மூன்றரை சவரன் வளையல்களை கழட்டி தந்துவிட்டு போய்விட்டாள். இருபது ஆயிரம் கட்டியது போக மீதி பன்னிரெண்டாயிரம் ரூபாய் எங்களிடமே உள்ளது. அதை வாங்கக் கூட அவள் வரவில்லை."

"தப்பு செய்துவிட்டீர்ளே? அப்போதே ஏன் இதை என்னிடம் தெரிவிக்கவில்லை. உங்க கோ-ஆர்டினேட்டர் சார் கிட்டேவாவது தெரிவித்து இருக்கலாமே? கைவளையலை உடனே கழட்டித் தந்த பெண் தப்பு செய்திருக்க முடியாது."

"ஸாரி ஸார்!"

"ஒரு ஸாரி தடம் மாறிய பெண்ணின் வாழ்க்கையை திருப்பி தந்துவிடுமா? சரி போங்க; எல்லார் மேலும் தவறு இருக்கிறது. இருக்கக் கூடாத சூழ்நிலையில் மதுமதி இருந்தது தான் தவறு போலிருக்கிறது."

ரிஷி கிளம்பினான். மனசு கனத்தது. தப்பு ஏதும் செய்யாமலே ஒரு சிறு பெண் தன்னந்தனியாய் சுமந்த பழியும், அவமானங்களும் இல்லையென்று ஆகிப் போகுமா? பழி மறைந்தாலும் அந்த வலியும், வேதனையும்

அனுபவித்தது அனுபவித்தது தானே? இதில் தான் எப்படி சிக்க வைக்கப்பட்டோம்? என இன்னமும் அவனுக்கு சரிவர விளங்கவில்லை. பதிவு செய்யப்பட போன் பேச்சை கேட்டபிறகு அந்த டெலிபோன் எண் யாருடையது? என விசாரித்து முகவரியை அறிந்து கொண்டான். பாவ்னாவுடன் பேச விரும்பிய மதுமதியின் பாட்டியார்? ஏன்? எதற்கு பேச விரும்பினார்? என அவன் யோசித்து கொண்டிருந்த பொழுதே விஸ்வா அவர்களைப் பற்றிய தகவலுடன் வந்து விட்டான். 'கோவை கல்லூரியில் பொறியியல் படிக்கும் மாணவி மதுமதி! அவளுடைய ஒரே சொந்தம் பாட்டி. இருவரும் வசிப்பது திருப்பூர் சொந்தக்காரர் வீட்டில் என்பது போன்ற தகவல்கள் இந்தப் பெண் தான் அவன் மனத்தில் சலனத்தை ஏற்படுத்திய மதுமதியா? அவளுடன் நான் பேசி பழகியே இராத பொழுது இங்கு எப்படி என்னைத் தேடி வீட்டை விட்டு ஓடிவரமுடியும்? என்னை தேடி வந்த பெண்ணும், இவளும் ஒன்றா? பாவ்னாவுடன் பேச மதுமதியின் பாட்டிக்கு என்ன அவசியம்? என பல்வேறு கேள்விகள் எழும்பின.

அவர்கள் காரில் ஏற முற்பட்ட பொழுது கிஷோர் எதிரே வந்தான்.

"சார்! ஒரு நிமிடம்! நீங்க மதுமதியைத் தேடி வந்தீர்களா? என்ன சார் உங்க ஆளை இப்படி தவிக்கவிட்டு விட்டீர்கள்? அவள் ரொம்ப நல்ல பொண்ணு சார். எத்தனை பேர் அவள் பின்னால் ஜொள்ளு விட்டுக்கிட்டு சுத்தினார்கள்! ஆனால் யாரையும் அவள் ஏறெடுத்துக் கூட பார்க்கவில்லை. நீங்க அனுப்பிய 'பொக்கே'யைக் கூட அவள் வீட்டில் பத்திரமாக வைத்திருக்கிறாள். அவள் மேல் பைத்தியமாய் திரிந்த ஸ்டீபன் கூட அவள் மனத்தை தொடவில்லை. அந்தப்



பெண் கல்லூரிக்கும் வரவில்லை. வீட்டிலும் இல்லையாம்! எங்கே போனாள்? என்ன ஆனாள்? என்று ஒருவருக்கும் தெரியவில்லை!" என பேசிக் கொண்டே போக...

"மதுமதியை கடைசியாக பார்த்தது யார்?" என ரிஷி குறுக்கிட்டான்.

"எங்க சீனியர் ஸ்டீபனுக்கு விபத்து ஏற்பட்டது என்றும், அவனை மதுதான் மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றி னாள் என்றும் கேள்விப்பட்டோம். ஸ்டீபன் இன்னும் மருத்துவமனையில் தான் இருக்கிறான். அவனைக் கேட்டால் ஏதேனும் விவரம் தெரியலாம்" என்று சொல்லி மருத்துவமனை பெயரைக் கூறினான்.

மருத்துவமனைக்கு இருவரும் சென்றனர். அன்று தான் ஸ்டீபன் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி கிளம்பிக் கொண்டிருந்தான். அவனைப் பற்றி விசாரிப்பதை கவனித்து அருகே வந்தான்.

"யார் சார் நீங்க? எதற்கு என்னைப் பற்றி விசாரிக் கிறீர்கள்?"

"ஹலோ ஸ்டீபன்."

"ரிஷி சார் நீங்கள் எங்கே இங்கே?" என அவனை அடையாளம் கண்டு விசாரித்தான். அருகில் இருந்த விஸ்வா "நாங்கள் மதுமதிக்கு வேண்டியவர்கள்...." என தொடங்கியதும் ஸ்டீபன் குறுக்கிட்டான்; "இங்கே பாருங்க சார்! நான் அவளை நேசித்ததும், நேசிப்பதும் உண்மை! அவளுக்கு என் மேல் விருப்பமில்லை என்றதும் நான் அவளை தொந்தரவு செய்யாமல் விலகிவிடுவது என்று முடிவு செய்து விட்டேன்."

''நீங்கள் எங்களே தவறாக புரிந்து கொண்டீர்கள்'' என விஸ்வா சொல்லிக் கொண்டிருந்த பொழுது ரிஷி இடையிட்டான். ''மதுமதியை பார்க்க வந்தோம். அவள் கல்லூரிக்கே வருவதில்லை என்று சொன்னார்கள்.''

''என்ன சார் சொல்கிறீர்கள்? நீங்கள் ஏன் அவளை பார்க்க வேண்டும்? ஏன் அவள் கல்லூரிக்கு வருவதில்லை? இந்த விஷயம் எனக்கு தெரியாதே! இது நிஜம் தானா? அவளுக்குத் தான் நான் கல்லூரி பீஸை கட்டி விட்டேனே! பின் ஏன் அவள் வரவில்லை?''

''நீங்களா கல்லூரி கட்டணத்தைக் கட்டியது? அங்கே ஒரு பிரளயமே நடந்தேறிவிட்டது. கல்லூரி கட்டணத்தை கட்டுவதற்காக அவள் 'ப்ரெண்ட்ஸ் கிளப்' பணத்தை திருடிவிட்டாள் என்று பழி சுமத்திவிட்டார்கள்.''

''யார் அப்படி சொன்னது? பணம் கட்டியதற்கான ரசீது என்னிடம் இருக்கிறது. அவள் மேல் அபாண்டமாய் பழிசுமத்தியவர்களை நான் சும்மா விடப் போவதில்லை. அடித்து நொறுக்க வேண்டும் என வெறியே வருகிறது. அவள் எப்படிப்பட்ட பெண்!

இப்படியும் வாழ முடியுமா? என ஒவ்வொருவரையும் ஆனந்த ஆச்சரியப்படுத்தி விடுவாள். யாரையும் நோகடிக்கக் கூட அவளால் முடியாதே! அவளைப் போய் எப்படி...? பெற்றோர் அன்பே தெரியாமல் வளர்ந்தவள்; அப்படியிருந்தும் யார் மேலாவது சிறு வெறுப்பு காட்ட வேண்டுமே? ஏன் அவள் பாட்டி இறந்து மனது ஒடிந்திருந்த நேரத்தில் கூட எனக்கு இரத்தம் தந்து காப்பாற்றிய தேவதை சார் அவள்!''

அவன் பேசிக் கொண்டே போக ''ரிலாக்ஸ்'' என அவன் தோளைத் தட்டிக் கொடுத்தான் ரிஷி.

''இனி அவள் விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவள் வாழ்வை சிறக்க வைப்பது என் பொறுப்பு. நம்புங்கள்'' என கைப்பிடித்து அழுத்தி விட்டு விடைபெற்றான், மதுமதியின் மனம் கவர்ந்த ரிஷி துருவ்.

# 23

கணேசன் கற்பகத்திடம் பேசுவதே இல்லை. அவளுக்கு வேண்டிய அனைத்தையும் வாங்கி தந்து விடுவான். சமைத்து வைத்ததை தானே போட்டுக் கொண்டு பேருக்கு உண்டுவிட்டு வேலைக்கு சென்றுவிடுவான். உறங்குவது கூட பெரியம்மா அறையில் தான்.

'பெரியம்மா உங்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாத பாவி ஆகிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்' என தினமும் புலம்பிக் கொண்டிருந்தான்.

திருப்பூரிலும், கோவையிலும் அவளைத் தேடாத இடமில்லை. ஆனால் அவள் போன சுவடே தெரிய வில்லை!

'ஏனம்மா என்னை இப்படி நம்பிக்கை துரோகி ஆக்கினாய்? உன் வாழ்வை அழித்து எனக்கு வசந்தம்

உணர்ச்சியுள்ள மனிதன்! நீ இல்லாமல் இங்கு நிம்மதியில்லை; நீ எப்படி இருக்கிறாய்? என அறிந்தால் தான் எனக்கு அமைதி கிடைக்கும்' என்று கணேசன் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் வீட்டின் இன்னொரு மூலையில் கற்பகம் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். மதுமதி வீட்டை விட்டு சென்று அன்று எழுதி வைத்திருந்த கடிதத்தின் ஒவ்வொரு வரியும் அவள் கண் முன்னே எழுந்து நின்றன.

கடிதமா அது? அவள் இதயத்தின் மேலிருந்த பாறாங்கல்லை தகர்த்தெறிந்த வெடிகுண்டு அல்லவா அது? ஒட்டப்பட்டிருந்த கடித உறையை கிழித்து முதலில் படிக்கத்தான் நினைத்தாள். அதற்குள் கணேசன் வந்துவிட அதை அவனிடம் நீட்டினாள். அவன் படித்த வேகத்தில் அவள் மேல் அதை விட்டெறிந்தான். கற்பகம் அதை எடுத்துப் படித்தாள்.

“அன்புள்ள மாமாவிற்கு,

மதுமதி எழுதிக்கொள்வது. நீங்கள் செய்தது தவறு மாமா. தட்டை வீசி எறிந்ததை மட்டும் சொல்லவில்லை. அத்தையிடம் உண்மையை மறைத்தது கூட தவறுதான். நீங்கள் மறைத்த உண்மைதான் இன்று பூதாகாரமாய் எழுந்து நிற்கிறது. அத்தை மனது நோகும் என்று மறைத்த உண்மையே இன்று பிரச்சனை ஆகி விட்டது. அத்தைக்கு குழந்தை பிறக்கும் வாய்ப்பில்லை என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லி மருத்துவ பரிசோதனை செய்து நிரூபித்து இருவரும் என்ன செய்யலாம் என கலந்து ஆலோசித்து இருக்க வேண்டும். நீ எடுக்கும் நல்ல முடிவுக்கும், உனக்கும் என் அன்பும், ஆதரவும்



உண்டு என்று நீங்கள் பேசி இருக்க வேண்டும். அன்பு கூட வெளிப்படுத்தினால் தான் புரியும். இன்றைக்கும் உங்கள் இருவருக்கும் நான் பிரச்சனையாக முளைத்துவிட்டேன். இனியும் நான் இங்கிருந்தால் அது தீராது. ஒரு அருமையான குடும்பத்தைப் பிரித்த பாவம் எனக்கு வேண்டாம். அம்மம்மாவிற்கும், எனக்கும் இடையில் எந்த ஒளிவு மறைவும் இருந்தது இல்லை. நீங்கள் இருவரும் மனம் விட்டு பேசி இணைந்து வாழுங்கள். அத்தையிடம் சொல்லுங்கள் அவர் மேல் எனக்கு எந்த கோபமும் இல்லை. பெற்றோர் இல்லாமல், ஆதரவு இல்லாமல் வளர்ந்த பெண்ணின் மனநிலை எனக்கு நன்றாகப் புரிகிறது. எனக்கு ஆதரவு காட்ட, அன்பை அள்ளித்தர, அருமையாய், அற்புதமாய், ஆனந்தமாய் வளர்க்க அம்மம்மா கிடைத்தார்கள். அவர்கள் இறந்தபிறகு அவர்கள் அன்பின் உயர்வு இன்னும் நன்றாக எனக்குப் புரிகிறது. அத்தைக்கு யாருமில்லை. அவர்களை நீங்கள் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். நான் செல்கிறேன்; என்னைப் பற்றி கவலைப் பட வேண்டாம்; என்னை தேட வேண்டாம். எங்கிருந்தாலும் நான் நலமாக இருக்க அம்மம்மா துணையிருப்பார்.

இப்படிக்கு,

உங்கள் நலம் விரும்பும் மகள்,

**மதுமதி.**

படிக்க படிக்க கண்ணீர் நிற்காமல் பெருகியது. அன்று வடிய ஆரம்பித்த கண்ணீர் இன்றும் நின்றபாடில்லை.

அவள் எங்கு சென்றிருப்பாள்? கல்லூரிக்கு வருவதில்லை என்ற செய்தியும் அறிந்திருந்தனர். பெண்ணை காணவில்லை என அப்பட்டமாக விசாரிப்பது பின்னாளில் அவளுக்கு பிரச்சனை ஏற்படுத்தும் என மறைமுகமாக பல வழிகளில் தேடிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் விஸ்வா மதுமதியின் பாட்டியை விசாரித்து போன் செய்தான்.

''பாவ்னா வீட்டிலிருந்து பேசுகிறோம். மதுமதி பாட்டிக்கிட்டே பேச வேண்டும்.''

''அவங்க இறந்து போய் கிட்டத்தட்ட இரு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன'' எனக் கூறிவிட்டு மனம் துக்கத்தில் பொங்க மேலே விசாரியாமல் கணேசன் போனை வைத்துவிட்டான். கற்பகம் அதை கவனித்துக் கொண்டு தான் இருந்தாள். மதுமதிக்கு வேண்டியவர்களின் அழைப்போ? அவர்களிடம் பேசினால் மதுமதியைப் பற்றி ஏதேனும் விவரம் தெரியுமோ? ஆனால் எப்படி இவரை விசாரிக்கச் சொல்வது? என்னிடம் முகம் கொடுத்து பேசியே பல நாட்கள் ஆகின்றனவே! ஒன்றும் சொல்லாமல் வெளியே செல்வது அவன் வாடிக்கை ஆகிவிட்டது. அன்று அப்படித்தான் சென்றிருந்தான். அப்போது ரிஷியும் விஸ்வாவும் அங்கே வந்து சேர்ந்தனர். கற்பகம் கார் சத்தம் கேட்டுக் கூட வெளியே வரவில்லை. அழைப்பு மணியொலிக்கவே வந்து கதவைத் திறந்தாள்.

''யார் நீங்க? என்ன வேணும்?''

''நான் ரிஷி'' என்று தான் கூறினான். கல்லூரியில் உடன் படிக்கும் மாணவர்களே ரிஷி மதுவின் ஆள் எனக் கூறும்பொழுது வீட்டில் இருப்பவர்களுக்கு கண்டிப்பாய்



ஏதேனும் தெரிந்திருக்கும் என்ற நினைப்புடன் தான் தன் பெயரைச் சொன்னான், அவன் எதிர்பார்த்ததைப் போல் அது மந்திரச் சொல்லாய் வேலை செய்தது. கதவை விரியத் திறந்து ''உள்ளே வாருங்கள்!'' என அழைத்தாள். உட்காரச் சொல்லி உபசரித்து விடுவிடென காபி தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''அவர்... மதுவின் மாமா வெளியே போயிருக்கிறார். மது நன்றாக இருக்கிறாளா?'' என கண்களில் மிகுந்த எதிர்பார்ப்புடன் கேட்டாள்.

ரிஷியும், விஸ்வாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ''மதுமதி வீட்டிலிருந்து புறப்பட்டு உங்களிடம் தான் சென்றிருக்க வேண்டும் என ஊகித்தேன். அதன்படியே வந்துவிட்டாள் போல. அது தான் நீங்கள் அவளை சமாதானப்படுத்தி அவளை பற்றி இங்கே பேச வந்திருக்கிறீர்கள் என நினைக்கிறேன். அவளை என்னை மன்னிக்கச் சொல்லுங்கள். அவளை காண, கண்ணீர்விட்டு என் தவறை கழுவ காத்திருக்கிறேன் என்று கூறுங்கள்.''

''பொறுங்கள்! நாங்களும் மதுமதியைத் தேடித்தான் இங்கே வந்தோம்.''

''ஐயோ! அவள் உங்களைத் தேடியும் வரவில்லையா? நான் பாவி! நான் தான் அவளை கண்டபடி பேசி வீட்டை விட்டே விரட்டி விட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாது,'' என அவள் புலம்ப...

சற்று பொறுத்து ரிஷி ''உங்களுக்கு மறுப்பு எதுவும் இல்லை என்றால் அன்று என்ன நடந்தது என்று சொல்ல முடியுமா? அப்பொழுது தான் மதுமதியை கண்டுபிடிக்க

ஏதாவது முயற்சி செய்ய எளிதாக இருக்கும்;'' என தயக்கத்துடன் வினவ சுருக்கமாய் நடந்ததை அனைத்தையும் சொன்னாள். குழந்தை இல்லாத ஏக்கமும், சிறுவயதில் இருந்தே உறவினர் வீட்டில் பட்ட அவமானங்களும், சுற்றுச்சூழலில் நடந்த பெண்களை ஏமாற்றிய நிகழ்ச்சிகளும் முக்கியமாய் ரமா வாழ்வில் விழுந்த இடி கணவனை தன்னுள்ளே வைத்துக் கொள்ள விரும்பிய கற்பகத்தை பாதிக்க...

அவன் கற்பகத்தின் மேல் வெளிப்படையாய் காட்டாத அன்பை பெற்றோர் இல்லாத ஆதரித்து அரவணைத்த பெரியம்மாவின் ஆசை பேத்தி மேல் நன்றி உணர்ச்சியை அன்பாய் செலுத்த... வெறுப்பும், கோபமும், ஆங்காரமும், வக்ரமும் உள்ளுக்குள்ளே பொங்கியதை கடவுள் சன்னிதானத்தில் கொட்டுவது போல் கொட்டித் தீர்த்தாள்.

''அவளை நான் தப்பாக நினைத்தேன், அவள் பெரியம்மாவும், அவளும் தான் என் கணவர் இக்கட்டில் இருந்த பொழுது இலட்சக்கணக்கில் பணத்தை தந்து காப்பாற்றினார்கள். என் கணவர் ஒரு புடவை வாங்கித் தந்ததை பொறுக்க முடியாமல் அவருடன் சண்டை போட்டேன்; ஆனால் வெட்கமில்லாமல் புடவைக்கு அவர்கள் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டேன். அப்புறம் இன்னொரு மோசமான காரியத்தை செய்தேன்; அந்தப் புடவையை யாருமில்லாத நேரத்தில் பிச்சைக்காரிக்கு எடுத்து போட்டேன். கேவலமாய் மற்றொரு செயலும் செய்தேன். அவளைப் பற்றி தப்புத்தப்பாய் கடிதம் எழுதி கல்லூரிக்குப் போட்டேன். கல்லூரிக்கு பணம் கட்ட வந்த கடிதத்தை என் கணவருக்கு தெரியாமல் மறைத்தேன்.



அவளை வீட்டிலும் மனம் நோக பேசி வறுத்தெடுத்தேன். எனக்கு மன்னிப்பே கிடையாது! அவள் எழுதி வைத்துவிட்டு போன கடிதம் தான் என் கண்ணைத் திறந்தது.''

உள்ளே சென்று அந்த கடிதத்தையும் எடுத்து வந்து கொடுத்தாள். ரிஷிக்கு மதுமதியின் கடிதத்தை படிக்க மனசு அலமலந்து போனது.

'எத்தனை அருமையான பெண்! இத்தனை சிறுவயதில் இவ்வளவு பக்குவம் எங்கிருந்து வந்தது இவளுக்கு? எப்படி சுலபமாய் துரோகம் செய்தவர்களை மன்னிக்க முடிந்தது?'

கணேசன் வீட்டிற்கு வந்தான்.

ரிஷி அவனிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பாட்டி போன் செய்ததைப் பார்த்து அவளைத் தேடி வந்ததாக தெரிவித்தான். கல்லூரியில் நடந்ததையோ, அவள் மேல் சுமத்தப்பட்ட பழியையோ, கற்பகம் செய்த தப்புகளையோ அவன் சொல்லவும் இல்லை; சொல்ல நினைக்கவும் இல்லை. சொல்ல வேண்டியவளே சம்பந்தப்பட்டவளை மன்னித்து விட்ட பிறகு தான் அவற்றைக் கூறி கணவன் மனைவிக்குள் பிரச்சனை உண்டாக்க விரும்பவில்லையோ? செய்த தப்புக்காக வருந்தி கண்ணீர் விடுபவளை மேலும் தண்டித்து என்ன ஆகப் போகிறது என்றோ எண்ணி விட்டான் போலும். அந்த மொட்டைக் கடிதமும் இன்னும் அவன் கோட் பையில் தான் இருந்தது. இருந்தும் அதை எடுத்து அவன் கணேசன் முன் நீட்டவில்லை. வந்த சில நிமிடங்களிலேயே அவன் கற்பகத்திடம் பேசாதது ரிஷிக்கு புரிந்துவிட்டது.

''மதுவுக்கும், உங்களுக்கும் மணம் பேச பெரியம்மா என்னை போகச் சொன்னார்கள். ஆனால் நான் தான் வீட்டில் நடப்பது தெரியாமல் அவள் படிப்பு முடியட்டும் எனத் தள்ளிப் போட்டேன். அது மாபாதகம் ஆயிடுச்சு'' என்றான் கணேசன்.

''நானும் அவளும் நெருங்கி பழகினாற் போலவே எல்லாரும் பேசுகிறார்களே?'' என அவன் யோசிக்க,

''உங்க பரிசாய் கடிகாரம் வந்த பொழுது அவள் எத்தனை சந்தோஷப்பட்டாள் தெரியுமா? பல்கலைக்கழக முதல் மாணவியாய் வந்ததை விட உங்க பரிசைப் பார்த்துத்தான் அவளுக்கு மிகவும் சந்தோஷம்!''

விடுகதைப் புதிர் மேலும் சிக்கலாகிக் கொண்டிருந்தது.

விடை தெரியாத புதிரை விளக்க மதுமதி வந்தால் தான் புரியுமோ? அல்லது அவளுக்கே அந்த புதிருக்கான விடை தெரியாதோ?

''அவள் எங்கே போனாள் என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். அவளை கண்டுபிடித்து உங்களிடம் ஒப்படைத்தால் தான் எங்க பெரியம்மாவின் ஆன்மா சாந்தியடையும்.''

''மதுவின் அறையை நான் பார்க்கலாமா?''

''வாங்க மாப்பிள்ளை! நீங்க பார்க்க உரிமையுள்ளவர் தான்'' என அவனை அழைத்துச் சென்றான். அழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள்; அலமாரியின் மேல் தட்டில் அடுக்கியிருந்த புத்தக வரிசையில் தட்டிலிருந்து இரண்டாவது தட்டில் தன் நேசத்துக்குரிய



அம்மம்மாவை மது வரைந்த லேமினேஷன் செய்யப்பட்ட ஓவியம்! அதனருகே சென்றவுடனே ரிஷிக்கு ஒன்று புரிந்தது. 'இவர்களை நான் பார்த்திருக்கிறேனே! சென்னையில் பல்கலைக்கழக வளாகத்தில் கலந்தாய் விற்கு சென்ற பொழுது பாவ்னா அறிமுகப்படுத்த சந்தித்து இருக்கிறான். அப்படியென்றால் பாவ்னா பார்த்து ஆசைப்பட்ட பெண்ணும், என் மனத்தில் ஆசைவிதை யைப் போட்ட பெண்ணும் ஒன்றா? இது தான் விட்ட குறை தொட்ட குறையா? பூர்வ ஜென்ம பந்தமா? எங்கள் நடுவில் விளையாடியது யார்? மதியா? விதியா? தன் உடைகளைக் கூட எடுத்துக் கொள்ளாமல் என்னைத் தேடி வந்த வைரத்தை தவற விட்டேனே! புத்தகங்களுக்கு இடையில் ஒரு தாள் நீட்டிக் கொண்டிருக்க அதை எடுத்தான். தந்திக் கடிதம்.

''மது டார்லிங்!

என் ஆழ்ந்த வருத்தங்கள்! நான் உனக்கிருக் கிறேன். வருந்தாதே.

அன்புடன்

**''உன் ரிஷி''**

அவள் அம்மம்மா இறந்தபொழுது வந்திருந்தது. 'அன்றைக்கு வேண்டுமானால் இது பொய் கடிதமாய் இருக்கலாம்! ஆனால் இது இன்றைக்கு நூற்றுக்கு நூறு சதவீதம் சரி! மது நான் உனக்கிருக்கிறேன். நீ பட்டது எல்லாம் போதும். உன்னை தனியே தவிக்க விட மாட்டேன்.'

"மதுவை நான் தேடி கண்டுபிடிக்க முயற்சி செய்கிறேன்" எனக் கூறிய பொழுது அலைப்பேசி ஒலித்தது.

பாவ்னா பதட்டத்துடன் பேசினாள்.

"அண்ணா உடனே வா; மாலினி மேல் யாரோ ஆஸிட் ஊற்றிவிட்டார்கள்.

## 24

ரிஷி சென்னை அடையும் முன்பே பல்வேறு ஏற்பாடுகளை செய்து விட்டான். மருத்துவமனைக்கு சிறப்பு மருத்துவ டீமை அனுப்பவும், அவள் மேல் ஆஸிட் ஊற்றியவனை பிடிக்க போலீஸ் உயர் அதிகாரியை பார்த்து பேசவும் முக்கியமான ஆட்களை தகவல் கொடுத்து அனுப்பி விட்டான். ரிஷியுடன் ஊர் சுற்றலாம், ஷாப்பிங் செய்யலாம் என்ற கனவுடன் சென்னை வந்த மாலினிக்கு அவன் ஊரில் இல்லாதது ஏமாற்றத்தை தந்தது. 'இருந்தாலும் நகை வாங்குவது என்றால் அது தனக்கு திருமண ஏற்பாடு செய்வதற்கு தானே? நான் படித்து என்ன செய்யப் போகிறேன்? இந்த சொத்தை அனுபவிக்க ப்ளஸ் டூ படிப்பு போதாதா?'

ஆசை ஆசையாய் பல நகைக்கடைகள் ஏறி இறங்கினாள். பாவ்னா நகை கடைக்கு வரவில்லை. ஆனால் அவள் மதிப்பிற்குரிய அத்தை மாண்புமிகு மாமியார் மாலினியின் அம்மா உடன் வந்தாரே! அதுதான் அவளை எரிச்சல் மூட்டியது இரண்டு இலட்சத்திற்கு மேல் அவள் நகைகளை



எடுக்க அவள் அம்மா அனுமதிக்கவில்லை. "வீட்டில் உனக்கென்று சேமித்து வைத்திருக்கும் நகைகளே மிக அதிகம். அதனுடன் இதுவும் சேர்ந்தால் பட்ஜெட் எக்கச்சக்கமாகி விடும். உனக்கே எல்லாவற்றையும் செய்ய முடியாது. நம் வீட்டிற்கு வந்த பெண் பாவ்னாவிற்கு இன்னும் நாம் எதையும் வாங்கித் தரவில்லை."

"அதுதான் அவர்கள் வீட்டில் கோடி கோடியாய் கொட்டித் தருகிறார்களே!"

"அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் தரட்டும்! ஆனால் நம் வீட்டுப் பெண்ணிற்கு நாம் ஏதாவது வாங்கித் தர வேண்டாமா?"

"அடேங்கப்பா! மருமகள் மேல் பாசம் அருவியாய் கொட்டுகிறதே!"

"அவளைப் போல நல்ல பெண்ணிற்கு உயிரையே தரலாம்; உடமைகளா பெரிய விஷயம்?"

"புல்லரிக்குது அம்மா! வருண் தான் மயங்கிட்டான்னு நினைச்சேன். மாமியார் நிலைமையே இப்படி இருக்கும் பொழுது பையனைச் சொல்லி குற்றமில்லை."

"ஏய்! அறிவு இருந்தால் உனக்கே புரியும். வருண் சம்பாதிப்பதை இன்னமும் என்னிடம் தான் கொடுக்கிறான். நான் தான் அதை பாவ்னாவிடம் அப்படியே கொடுத்து விடுகிறேன். அவள் வந்தபிறகு நம் தொழில் எவ்வளவு வளர்ச்சி அடைந்து இருக்கிறது? அவள் கூறும் சின்ன சின்ன ஆலோசனைகள் கூட நமக்கு எவ்வளவு நல்லது செய்திருக்கிறது? வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது? அதனால் தான் வந்த இலாபத்தில் உனக்கு இலட்ச ரூபாய்க்கு நகை வாங்க முடிகிறது.

தனக்கென்று வாங்கிக் கொள்ள நினைக்காமல் உனக்காக வாங்க அவள் நினைப்பதற்கு நீ சந்தோஷப்படு.''

''செவிடன் காதில் சங்கு ஊதினால் மட்டும் கேட்கவாப் போகிறது?''

''ஏய், நீ குணத்தில் உங்க அத்தையைக் கொண்டு பிறந்து இருக்கிறாய்!''

''நான் உனக்குப் போய் பெண்ணாய் பிறந்தேனே?''

இரண்டு நாட்களில் முடிப்பதாய் இருந்த ஷாப்பிங் நான்கு நாட்களாய் நீண்டது. மாலினி கல்லூரியில் இல்லாத நேரத்தில் ரிஷி கல்லூரி சென்று மதுமதியைப் பற்றி விசாரிக்க விரும்பினான். எனவே தான் நகை வாங்க அவளையும் கூப்பிட்டாள் பாவ்னா. ரிஷியை பார்க்கும் ஆவலில் சென்னையைத்தான் தேர்ந்தெடுப்பாள் என்று நிச்சயம் நம்பினாள். அதைப் போலவே அவளும் சென்னையை விரும்பவே நல்லதாய் போயிற்று என்று தன் அத்தையுடன் அவளையும் வரவழைத்தாள். நகை வாங்கியவள் அதனுடன் உடைகளும் வாங்க வேண்டும் என அடம்பிடித்தாள், எப்படியும் ரிஷியை பார்க்காமல் கிளம்பக் கூடாது என்ற உத்தேசத்துடன். பாவ்னாவும் அவளை ஆதரிக்க தாயால் தடுக்க முடியாமல் போனது.

''இங்கே பாரம்மா! நீ என்னுடன் வர வேண்டாம். வந்தால் இது வேண்டாம் அது வேண்டாம் என்று தொந்தரவு செய்வாய். காரில் போய் காரில் வரப்போகிறேன். அதில் நீ வேறு எதற்கு? நான் என்ன சின்ன பாப்பாவா? யாரும் தூக்கிக் கொண்டு போக?'' என தனியே காரில் இஷ்டம் போலச் சுற்றினாள். கடைவீதியில் சாமான்களை



வாங்கிவிட்டு கார் டிரைவரை அவற்றை எடுத்து வரச் சொல்லிவிட்டு காரின் மேல் ஒய்யாரமாய் சாய்ந்தவாறு ரேஷ்மாவுடன் அலைபேசினாள்.

''ரேஷ்மா! நான் ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறேன். இலட்ச ரூபாய்க்கு நகைகள் வாங்கி இருக்கிறேன். எல்லாம் எங்க அண்ணி பாவ்னா ஏற்பாடு. கூடிய சீக்கிரம் எனக்கும் ரிஷிக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது! என்னது... நிச்சயமா? இப்பொழுதே நிச்சயம் ஆனது மாதிரி தான்.''

உற்சாகத்தில் உரக்கப் பேசினாள். ரோட்டில் போவோர் வருவோர் ஒரு சிலர் திரும்பிப் பார்த்துவிட்டுச் சென்றனர். சரஸ்வதியைப் பார்த்து தான் மாலினிக்கு சற்று அச்சமாக இருந்தது. உள்ளத்தை ஊடுருவது மாதிரியான அவரது பார்வையை அவளால் எதிர்கொள்ள எப்பொழுதுமே முடிவதில்லை. பாவ்னா மாமியாரிடம் சமையல் குறிப்புகளைக் கேட்டு எழுதிக் கொள்வதிலும் எழுதியதை செய்துப் பார்த்து அவரிடம் காட்டி சுவையை சரிபார்ப்பதில் மும்முரமானாள். ஆயிரம் வகை ஊறுகாய் புத்தகம் போட ஏறக்குறைய குறிப்புகளை தயார் செய்து விட்டாள். அவற்றிற்கான படங்களை எடுக்க தரமான, இயல்பாய் படமெடுக்கும் புகைப்படக்காரரை வரவழைத்து இருந்தாள். மாமியார் ஊறுகாயிற்கு தரமான பொருட்களை எப்படி தேர்ந்தெடுப்பது என டிப்ஸ் கொடுக்க, அதையும் ஊறுகாய் ரெஸிப்பியுடன் டிப்ஸ் என்று பெயரிட்டு கீழே குறித்து இருந்தாள். ஊறுகாயை எதில் சேமிக்கலாம் மற்றும் அந்த ஊறுகாயால் விளையும் ஆரோக்கிய குறிப்பு, எத்தனை நாள் உபயோகப்படுத்தலாம் என தெளிவாய் எழுதினாள்.

வண்ணத்தில் எடுக்கப்பட்ட ஊறுகாய் புகைப்படங்களை பார்க்கும் பொழுதே நாவில் நீர் சுரக்கச் செய்தன.

தடிமனான அட்டையில் நல்ல வழு வழு காகிதத்தில் படிக்கக்கூடிய சற்று பெரிய எழுத்துகளில் அருமையான லேஅவுட் டிசைனில் ஆங்கிலத்தில் புத்தகம் தயார் ஆனது. வருணும் ஊரிலிருந்து வந்துவிட்டான். தொழில் விஷயமாய் சிங்கப்பூர் சென்றிருந்தான். தொழிலை விரிவு செய்ய பாவ்னாவின் மாமா அவனை அங்கே வரச் சொன்னார். அதற்காக அங்கே சென்று விட்டு அன்றுதான் வந்தான். அவன் வந்தபொழுது வழக்கம்போல் மாலினி வெளியே சென்றிருந்தாள். தன் தாயைப் பார்த்ததும்,

"பேத்தியை கொஞ்ச ஓடிவந்துவிட்டீர்களா அம்மா?" எனக் கேட்டான்.

"இந்த மாலினி பெண்ணுக்கு நகை வாங்க அவளை அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள் பாவ்னா."

"கல்லூரியை 'கட்' அடித்துவிட்டு ஊரைச்சுற்றிக் கொண்டு இருக்கிறாளா? அதை நீங்களே வாங்கி விடுங்கள் அண்ணி என்று சொன்னால் என்ன? பாவ்னாவை விட அவள் நன்றாகத் தேர்ந்தெடுத்து விடுவாளா?"

"ஏன் அப்படி சொல்கிறீர்கள்? இப்பொழுது சின்னக் குழந்தைகள் கூட தங்கள் உடைகளை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள விழைகின்றன. நாளைக்கு உங்கள் பெண் கூட அப்படித்தான் சொல்லுவாள்."

"என் பெண் புத்திசாலி! என்ன செய்ய வேண்டும்? எதை செய்யக் கூடாது என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்!"

"ஆகா! ஒரு வயதிலேயே அவளுக்கு நல்லது, கெட்டது எல்லாம் தெரியுமாக்கும்!" எனச் சீண்ட அனைவரும் சிரித்தனர்.



அப்போது தான் கார் டிரைவர் ஓடி வந்தான்.

"சின்னம்மா, மாலினி அம்மா மேலே யாரோ ஆஸிட் ஊத்திட்டாங்க. நான் அவங்களை ஆஸ்பத்திரியில் சேர்த்திட்டு ஓடி வரேன். போன் பண்ணினால் லைன் பிஸின்னு வந்துச்சு. அதான் ஒரு எட்டு சொல்லிட்டு வந்திடலாமேன்னு நானே வந்துட்டேன்."

அனைவரும் கதிகலங்கி போயினர்.

"என்னடா! இது போதாத வேளை!"

மருத்துவமனைக்கு அவர்கள் விரைய மாலினி மயக்கத்தில் இருந்தாள். நல்ல வேளை ஆஸிட் கண்களில் படவில்லை. கண்ணை விட்டு இரண்டு அங்குலம் தள்ளி காதுவரை கன்னத்தில் பட்டு பயங்கர புண்ணாகி இருந்தது. பாவ்னா ரிஷிக்கு தகவல் தெரிவித்தாள்.

அவன் விரைந்து செயல்பட்டதால் உடனடியாக சிறப்பு சிகிச்சை மாலினிக்கு அளிக்கப்பட்டது. போலீஸ் உயர் அதிகாரியின் நேரடி தலையீட்டால் விசாரணை துரிதமாக நடைபெற்றது. கார் டிரைவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

"பொம்பள புள்ளையப்பா! முகத்தில் இப்படி காயம் பட்டுடுச்சே! நாளைக்கு கல்யாணம் செய்யும் போது பிரச்சனை வருமே? தழும்பை மாற்ற முடியாது; புண் ஆறினாலும் தழும்பு பளிச்சென்று தெரியுமே?"

"விடுமா! அவள் உயிரோடு, கண்பார்வை பாதிக்கப் படாமல் கிடைத்தாளே! அதுவே நீ செய்த புண்ணியம்! அவள் முதலில் தேறட்டும். பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்ளலாம்" என்றான் வருண்.

## 25

ரிஷி நேரே மருத்துவமனைக்கு வந்து பார்த்த பொழுது மாலினி மயக்கத்தில் இருந்தாள். நினைவு வந்தால் புலம்பலும், அழுகையும், வலியும், வேதனையுமாய் இருந்தாள். யாரையும் பார்க்க மறுத்தாள். கோபத்தில் கத்தினாள். வலியை குறைக்க போட்ட ஊசியின் விளைவால் உறங்கி விட்டாள்.

''என்ன பொண்ணும்மா இது? எல்லாத்துக்கும் கத்தி இத்தனை ஆர்ப்பாட்டம் செய்யுது?'' என ஒரு பெண் அலுத்துக் கொண்டாள், அவளிடம் டியூட்டி முடிந்து வீட்டிற்கு செல்லும் பெண்.

''உஷ்! சத்தமாய் பேசாதே! பெரிய இடம் வேறு; பார்த்து நடந்து கொள்'' சலிப்பும் எச்சரிக்கையுமாய் கூறிவிட்டு கிளம்பினாள். காவல்துறை சுறுசுறுப்பாக செயல்பட்டு இருபத்து நான்கு மணி நேரத்தில் குற்றவாளியைப் பிடித்தது. வருணும் ரிஷியும் அங்கு சென்றிருந்தனர். அவனைப் பார்த்ததும் வருணும், ரிஷியும் அதிர்ந்தனர்.

அவன் ரிஷி வீட்டில் வேலை செய்து கொண்டிருந்து ஒரு பெண்ணை திருமணம் செய்ய ஏமாற்றி அழைத்துக் கொண்டு ஓடிவந்ததிற்காக வேலையில் இருந்து நீக்கப்பட்ட செல்வம் தான். கையில் பணம் கொடுத்து ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள் என்று சொல்லித்தான் ரிஷி அனுப்பியிருந்தான். திட்டம் இடாமலும், அனுபவம்



இல்லாமலும் அவன் ஆரம்பித்த தொழில் பிசுபிசுத்து போனது. காலையிலிருந்து மாலை வரை கடுமையாய் உழைப்பதும் அவன் இயல்புக்கு ஒத்து வராததாய் இருந்தது. அவன் நினைத்தது போல் ஜாலியாக வாழ சம்பாத்தியம் இடம் கொடுக்கவில்லை. சேரக் கூடாதவர்களின் நட்பு வேறு அவனைத் தொற்றிக் கொண்டது. கீதாவை தேடினான்; அவளிடம் பேசினால்... மறுபடியும் சந்தித்தால் எப்படியும் திருமணம் செய்து கொண்டு விடலாம் என்ற நப்பாசையுடன் அலைந்தான். ஆனால் கீதாவின் அம்மா மகளின் நல்வாழ்விற்காக அவளை அழைத்துக் கொண்டு வட நாட்டிற்கு சென்று விட்டார். எனவே அவளைத் தொடர்பு கொண்டு மூளைச்சலவை செய்ய முடியாமல் போயிற்று. அவளை திருமணம் செய்து கொண்டிருந்தால் பங்களாவில் அமர்ந்து காலாட்டிக் கொண்டே சாப்பிட்டு இருக்கலாம்; ஏஸி காரில் சுற்றி ஜாலியாய் செலவு செய்து இருக்கலாம் என்ற ஏக்கம் ஏமாற்றமாய் மாறி கோபமாய் கொந்தளித்துக் கொண்டிருந்த பொழுது தான் மாலினியைப் பார்த்தான். ரிஷியின் கார் நிற்கிறதே என அவன் நின்று கவனித்த பொழுது தான், மாலினி அதனருகே வந்து டிரைவரிடம் பொருள்களை எடுத்து வருமாறு உத்தரவிட்டதையும். அலைப்பேசியில் பேசியதையும் கேட்டான். 'அந்த ரிஷிக்கு கல்யாணமா? கல்யாணத்தை நிறுத்தி என் வாழ்க்கையை பாழாக்கிய ரிஷிக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும். இவள் அவன் உறவுக்காரி தானே? வருண் பயல் தங்கச்சி தானே? அவன் தானே போலீசையும் என் அம்மாவையும் அழைத்து வந்தான்? ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!' என எண்ணியவன் யோசித்து திட்டமிட்டான். தொடர்ந்து அவள் எங்கெங்கு செல்கிறாள்

என கண்காணித்தான். சரியாய் மாட்டியதும் டிரைவரை விட்டுத்தள்ளி நகர்ந்ததும் ஆஸிட்டை வீச...

ஏதோ காலில் இடிக்க, வலியால் கீழே சற்றே குனிந்ததால் பெருமளவு (ஆஸிட்) அமிலம் அவள் மேல் படவில்லை. முழுவதும் பட்டிருந்தால் முகம் முழுசும் வெந்து போயிருக்கும்; உருத் தெரியாமல் குலைந்து போயிருக்கும். சிறிய அளவில் அவள் மேல் பட்டுத் தெறித்த அமிலமே கண்ணுக்கருகில் இருந்து காது வரை காயம் ஏற்படுத்தியது. அவள் அலறலைக் கேட்டு டிரைவர் ஓடிவர செல்வம் அவனை தள்ளி விட்டு ஓடினான். டிரைவரிடம் போலீஸ் விசாரித்த பொழுதே செல்வத்தைப் பற்றி கூறிவிட மிக எளிதாய் அவனை வளைத்து பிடித்து விட்டனர். அவன் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகளை செய்துவிட்டு புறப்பட்டனர்.

“வருண்! மாலினியை முதலில் கொஞ்சம் மனதளவில் தயார் படுத்த வேண்டும். அவள் முகத்தில் ஏற்பட்ட காயத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியாது. அதனால் கவுன்சிலிங் கொடுக்க முதலில் ஏற்பாடு செய்ய வேண்டும்.”

சொன்னபடியே மனநல மருத்துவரை கவுன்சிலிங் கொடுப்பதற்காக அழைத்து வந்தான். அவரது தொடர்ச்சியான சிகிச்சையினால் மனதளவில் ஓரளவிற்கு நல்லபடியாகவே தேறினாள். ஆனாலும் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்தவள் தன் முகத்தை கண்ணாடியில் பார்த்து அலறிவிட்டாள். இதை எதிர்பார்த்து இருந்ததால் அவளை மென்மையாய் நடத்தி, இது ஒன்றும் நிரந்தரமல்ல கூடிய விரைவில் சரிப்படுத்தி விடலாம்



என்று பாவ்னா கனிவாய் எடுத்துரைத்தாள். மாலினிக்கு இப்போது எல்லாருடைய அன்பும், ஆதரவும் தான் தேவைப்பட்டது. ஒரு வாரத்திற்கு பிறகு மாலினியை அழைத்துக் கொண்டு வருண் ஊருக்கு கிளம்பிவிட்டான்.

“ஏன் வருண்? அவள் இங்கேயே இருக்கட்டுமே?”

“வேண்டாம் ரிஷி; அவளுக்கு பிடித்துவிட்டால் உரிமையில்லாத பொருளைக்கூட சொந்தமாக்கிக் கொள்ள ஆசைப்படுவாள். மேலும் எல்லாரும் தாங்கிக் கொண்டே இருந்தால் அப்புறம் இன்னும் மோசமாகிப் போவாள்.”

ரிஷி ஒன்றும் சொல்லவில்லை. வருண் சொல்வது உண்மை என்று அவனுக்கு புரிந்துதான் இருந்தது. மேலும் மதுமதியை தேட வேண்டிய வேலை வேறு இருந்தது. பாவ்னா தன் அண்ணனை தேடிக் கொண்டு அவன் அறைக்கு வந்தாள்.

“குட்டிம்மா தூங்கி விட்டாளா?”

“ம்! நீ போன காரியம் என்னாச்சு? ஏதாவது விவரம் தெரிந்ததா அண்ணா? உன்னிடம் இதைப்பற்றி பேசவே நேரமில்லாமல் ஏதேதோ நடந்துவிட்டது!”

“சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன. இந்தப் பெண்ணை நீ பார்த்து இருக்கிறாயா?” என ஒரு பெண்கள் பத்திரிகையை எடுத்து நீட்டினான். அது ஒரு பழைய பத்திரிகை. அட்டையில் ஜொலித்துக் கொண்டி ருந்த பெண்ணைப் பார்த்து வியப்பால் அவள் விழிகள் விரிந்தன.

"ஐ! அண்ணா... இது... இது.... மதுமதி.... அல்லவா?"

"இன்னும் ஞாபகம் வைத்திருக்கிறாயா?"

"அவளை எப்படி அண்ணா மறக்க முடியும்? நான் உனக்காக பார்த்த பெண் அல்லவா? சிலரை பார்த்த வினாடியே பிடித்து விடும். நம் உள்ளுணர்வு சொல்வது போல் அவர்கள் அருமையானவர்களாகவும் இருக்கலாம். மதுமதி நல்முத்து என மனதுக்கு தோன்றியது. அதனால் தான் நம் வீட்டு தொலைப்பேசி எண்ணை அவள் பாட்டியிடம் கொடுத்துவிட்டு வந்தேன். சரி, சரி, என் கதை இருக்கட்டும். உனக்கெப்படி அவளைத் தெரியும்? அதைச் சொல் முதலில்."

"அவசரப்படாதே கண்மணி. அவள் பாட்டி நம் வீட்டு போனிற்கு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். நாம் தான் யாரும் அப்போது வீட்டில் இல்லை. பதிவு செய்யப்பட்ட செய்தியில் அவர்கள் குரல் பதிவாகி இருந்தது."

"அவர்களை நீ பார்த்தாயா? எப்படியிருக்கிறார்கள்?"

"இல்லையம்மா! நம்வீட்டிற்கு அவர் பேசிய அன்றே இறந்து விட்டார்!"

"ஐயோ! மதுவைப் பற்றி மிகவும் கவலை அப்பொழுதே பட்டார்கள். அவள் எப்படி இருக்கிறாள்? அவளை நீ பார்த்தாயா? பேசினாயா? உனக்கு அவளை பிடித்திருக்கிறதா?"

ஒன்றும் சொல்லாமல் அவளை ஆழ்ந்து பார்த்தான்.

"என்ன அண்ணா?"



மெல்ல மூச்சு விட்டு பிறகு "அவள்தானம்மா என்னைத்தேடி நம் வீட்டிற்கு வந்தவள்" என்றான்.

"என்னது?" என்றவள் "அ... அவளுக்கு உங்களை எப்படித் தெரியும்?" என,

"கல்லூரி விழாவில் நான்தான் அவளுக்குப் பரிசளித்தேன். ஏய்! அதற்குள் என்னை அப்படிப் பார்க்காதே! அதற்குப் பின் நான் அவளை சந்திக்கவே இல்லை."

"பின் எப்படி அண்ணா உன் மேல் அவளுக்கு இவ்வளவு நேசம் வந்தது?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. எது உண்மையோ இல்லையோ அவள் நேசம் பொய்யில்லை; அவள் அன்பு பொய்யில்லை."

"நடந்ததைச் சொல்."

எல்லாவற்றையும் ரிஷி சொல்ல சொல்ல அதிர்ந்து போனாள். அவளைச் சுற்றி சுற்றி எத்தனை வலைகள்? எவ்வளவு சதிகள்? இத்தனைக்கும் அவள் செய்த தவறு என்ன? யாருக்கு கிடைக்க வேண்டியதை அவள் தடுத்தாள்? அல்லது பறித்தாள்? அவளைச் சுற்றி இருப்பவர்கள் பந்தை அடிப்பதைப் போல் துரத்தி துரத்தி அடித்தால் அவள் என்ன செய்வாள்? என எண்ணியவாறே "கல்லையையும், வீட்டையும் தவிர வெளியுலகம் தெரியாமல் வளர்ந்திருப்பாள் போல. இரக்கமின்றி பழி கத்தியால் குத்தப்பட்டிருக்கிறார்கள். மனமெங்கும் இரத்தம் வடிய வடிய சென்றவளை வீட்டிலும் காயப்படுத்தினால் என்ன செய்வாள்? குற்றுயிரும், குலை உயிருமாக

வந்தவளை நாம் வேறு இதயத்தில் பலமாய் தாக்கி அனுப்பி விட்டோமே?'' என வருந்தினாள்.

''அண்ணா! மது வாழ்க்கையே வெறுத்துப் போய்... ஏதாவது தவறான முடிவுக்குப் போயிருந்தால்...''

சொல்லும் போதே நடுங்கினாள்.

''அப்படி சொல்லாதே கண்ணம்மா!'' என அவள் வாயைப் பொத்தினான் ரிஷி.

''அவள் உயிரோடிருப்பாள் என்று என் உள்ளுணர்வு உறுதியாக நம்புகிறது. அவள் பாட்டியின் ஆன்மா அவளை காப்பாற்றும்.''

''அண்ணா இதை இப்போதைக்கு அம்மாவிடம் சொல்ல வேண்டாம். அன்று நடந்ததை கேட்ட பொழுதே அம்மா மிகவும் வருந்தினார்கள். மதுவின் முழு கதையும் கேட்டால் தாங்க மாட்டார்கள். ஏற்கனவே அட்டாக் வந்த இதயம் வேறு! மதுவை கண்டுபிடித்து அம்மா முன் நிறுத்தி விட்டு முழுகதையும் சொல்லலாம்.''

''எல்லாவற்றிற்கும் முன் அவளை தீவிரமாகத் தேடி கண்டுபிடிக்க வேண்டும்.''

''அதைச் செய் அண்ணா முதலில்!''

அவள் சென்றதும் மதுவின் பெட்டியைத் திறந்தான். மேலேயே அவனது ஓவியம்.

'என்றென்றும் அன்புடன் மது' என எழுதியிருந்த கையெழுத்தை மென்மையாய் வருடினான்.



'இன்னும் என்மேல் அன்பு இருக்கிறதா மது?'

'நீ எங்கிருக்கிறாய்? நான் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறேன் கண்ணம்மா! உன் மனதில் மொட்டு விட்ட அன்பை மலராக மலர்ந்து மணம் வீசச் செய்வேன். நான் இதை கண்டிப்பாக நிறைவேற்றுவேன்! எந்த தப்பும் செய்யாத உன்னை எந்த சமூகம் ஓட ஓட விரட்டியதோ அங்கேயே உன்னை உலகத்திற்கே மகாராணியாக நிலை நிறுத்துவேன்.'

பத்திரிகை காற்றில் படபடத்தது. ஆரஞ்சு வண்ண பட்டுப் புடவை தகதகவென மின்னியது. அலைபாய்ந்த கூந்தலும், ஒற்றை ரோஜாவும் அருகே அழைக்க...

அதை கையில் எடுத்தான்.

அவள் மனது நன்றாகப் புரிந்து பிறகு...

அவளை பார்த்த பொழுது,

பளபளத்த பட்டுப்புடவையை விட அவள் கண்கள் ஜொலி ஜொலித்ததைப் பார்த்தான்.

**''எண்ணிரண்டு பதினாறு வயது,**
**உன் கண்ணிரெண்டில் காணுதம்மா**
**காதல் கொண்ட மனது''**

அவன் வாய் தன்னையறியாமல் பாடியது. அது அவள் செவியை எட்டாமல் போயிருக்கலாம்; ஆனால் உணர்வுக்குமா அறியாமல் போயிருக்கும்?

# 26

அதிகாலையில் கண்ணை விழித்ததும் வலக்கையை உயர்த்தி உள்ளங்கையைப் பார்த்தாள் மதுமதி.

''கையை, சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சாதனைகள் யாவினையுங் கூடும் - கையைச்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தியுற்றுக் கல்லினையுஞ்சாடும்.
மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சஞ்சலங்கள் தீர்ந்தொருமை கூடும்
மனம், சக்தி தனக்கே கருவியாக்கு - அதில்
சாரும், நல்ல உறுதியும் சீரும்''

என வாய் முணுமுணுக்க கண்களை மூடித் திறந்தாள். படுக்கையை விட்டு இறங்கி காலைக்கடன்கள் முடித்து விட்டு அரைமணி நேரம் 'யோகா' செய்தாள். பின் அன்றைக்கு செய்ய வேண்டியது என்ன? என கண்மூடி திட்டமிட்டாள். அஸீம், அமோஸிற்கு பாடங்களை சொல்லிக் கொடுக்கத் தயாரானாள்.

''ஸோனு தீதி! குட்மார்னிங்'' என இருவரும் ஒரே குரலில் கூறி அனுமதி கேட்டு அவள் அறைக் கதவைத் தட்டினர்.

''ஹேய்! என்ன ஆச்சரியம்? இவ்வளவு சீக்கிரம் குளித்து விட்டீர்கள்?''



''தீதி, நீ மட்டும் காலையில் இவ்வளவு சீக்கிரம் குளித்துவிடும் பொழுது நாங்கள் மட்டும் அழுக்கு உருண்டைகளாக இருக்க முடியுமா?' என அஸீம் கேட்டான்.

''உன்னைப் பார்த்து அழுக்கு உருண்டை என்று யாராவது சொல்வார்களா? அழகு பையன் அல்லவா நீ?''

''தீதி! ஐஸ் வைக்காதே! நீ சொல்லிக் கொடுத்ததை எல்லாம் நாங்கள் படித்து விட்டோம்!''

''உண்மையில் அழகு என்றால் நீதான்! லிப்ஸ்டிக் போடாமலே உன் உதடுகள் எத்தனை சிவப்பாக உள்ளன? எங்க மிஸ் டெய்லி லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டு தான் வருவார்கள்'' என்றான் அமோஸ்.

''ஐஸ் வைப்பது இப்போது உன் வேலையா? எங்கே கணக்கு நோட்டை வெளியில் எடு!''

''நீ சொல்லிக் கொடுத்து நாங்கள் போடாமல் இருப்போமா? காலை நான்கு மணிக்கு எல்லாம் எழுந்து தினமும் படிக்கிறோம் தெரியுமா?''

''நல்ல பையன்கள்! சரி வாங்க படிப்போம்!''

''தீதி! கணினி அறைக்கே செல்லலாம். நீ படம் போட்டு சொல்லிக் கொடுப்பது எங்களுக்கு நன்றாகப் புரிகிறது. கார்ட்டூன் கதையாக பாடம் வந்தால் எத்தனை நன்றாக இருக்கும்?''

''வாவ்! என்ன சொன்னாய்? கார்ட்டூன் கதையாக பாடம் வந்தால் நன்றாக இருக்குமா? யூ மீன் காமிக்ஸ் புத்தகம் மாதிரி பாடப் புத்தகங்கள் வேண்டும் என்கிறீர்களா?''

“ஆமாம் தீதி! அப்படி இருந்தால் நாங்கள் எல்லாம் எவ்வளவு ஜாலியாக படிப்போம். நீ அனிமேஷன் முறையில் போயமிற்கு செய்த ஸி.டி யால் எவ்வளவு சீக்கிரம் பாட்டு மனப்பாடம் ஆகிவிட்டது தெரியுமா?”

“என் ப்ரெண்ட்ஸ் கூட அந்த ஸி.டியை காப்பி பண்ணக் கேட்டார்கள். நீ பேசாமல் இந்த மாதிரி ஸிடிகள் வெளியிடும் தொழிலைச் செய்யலாம். நிறைய பணமும் வரும்.”

“நல்ல யோசனையடா!”

“இவன் நிறைய பிஸினஸ் ஐடியா எல்லாம் வச்சிருக்கிறான் தீதி! அவ்வப்போது ஆலோசனை கேட்டுக் கொள்.”

“உண்மையிலேயே அஸீம் சொன்னது நல்ல யோசனை தான்!”

அவர்கள் பேசிக் கொண்டிருந்த பொழுதே,

“ஹாய் மாப்பிள்ளைஸ்!” எனக் குரல் கேட்டது.

“ஹை! விகாஸ் மாமா!” என அமோஸ் துள்ளிக்கொண்டு ஓடினான். அஸீமிற்கும் ஏறக்குறைய அதே உற்சாகம் தான். வந்தவன் திரும்பி மதுமதியைப் பார்த்தான்.

“இதுதான் உங்க கேர்ள் ப்ரெண்டா? சும்மா சொல்லக்கூடாது ரொம்ப ஸ்மாட்டாய் இருக்காங்க! அவங்க தொட்டாற் சிணுங்கி இல்லையே?” என காதில் விழுமாறே கிசுகிசுத்தான்.

“தப்பாய் பேசாதவரைக்கும் தண்டனை எதுவும் கிடையாது” என்றாள் பளிச்சென்று.



“தங்க சிலை போல் இருக்கிற உங்களை யாரும் தப்பாக பேசமாட்டார்கள்!” என்றவன் பசங்களிடம் திரும்பி “என்ன மாப்பிள்ளைஸ் ஸ்கூலில் ரொம்ப கலக்குறீங்கன்னு கேள்வி பட்டேன். எப்படிடா? எல்லாவற்றிலும் முதல் ஆளாய் வந்தீர்கள்? மாமா உங்களுக்கு ‘பிட்’ கொடுக்கனும் மோன்னு ரொம்ப கவலைப்பட்டுக்கொண்டு இருந்தேன். அதெப்படி கணினியில் கூட புகுந்து விளையாடு கிறீர்களாமே?”

“ஆமாம் மாமா! எல்லாம் ஸோனு தீதிதான் காரணம். இந்த ஸிடியை பாருங்களேன்.”

அதைப் பார்த்தவன், “நீங்க அனிமேட்டரா?” என்றான்.

“ம்! அனிமேஷன் கோர்ஸ் பொழுது போக்காய் படித்திருக்கிறேன்.

“அனிமேஷனில் என்ன தெரியும்?”

“மாயா, சாஃப்ட் இமேஜ், பிளாஷ், எக்ஸ் ஏஸ்.ஐ, 3டி மேக்ஸ் எல்லாம் தெரியும். பிளாஷும், 3டி மேக்ஸ்-ம் சிறப்பாய் படித்து இருக்கிறேன்.”

“வெரிகுட்! நீங்க வெளியில் வேலைக்குச் சென்றால் முன்னணி நிறுவனங்கள் உங்கள் திறமைக்கு ஏற்ப சம்பளம் கொடுப்பார்கள். தொடக்க நிலையிலே 25 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக கிடைக்கும். போகிறீர்களா? நான் வாங்கித் தரட்டுமா? திறமை சாலிகள் ஒரு கூட்டுக்குள் முடங்கி விடக் கூடாது.”

“நன்றி! நான் வெளியில் வேலைக்குச் செல்ல விரும்ப வில்லை. சொந்தமாக தொழில் செய்ய விரும்புகிறேன்.

"டைரக்ட் ஹோம்" என்ற முறையில் அரைமணிநேர கார்ட்டூன் படங்களை டி.வி.டிக்களாக நானே தயாரித்து விற்பனை செய்ய விரும்புகிறேன்."

"வாவ்! வெரிகுட்! வொன்டர் புல் ஐடியா! இன்னும் இந்தியாவில் இதை யாரும் பிரபலமாகச் செய்ய ஆரம்பிக்கவில்லை. அதனால் நன்றாக தய்யாரித்து சரியான முறையில் மார்க்கெட்டிங் செய்தால் வெற்றிக்கு உத்திரவாதம் உண்டு. 'ரிஸ்க்' எடுக்க நீங்க தயாரா?"

"நிச்சயமாக!"

"இது டீம் வொர்க்! நிறைய செலவாகும் ப்ராஜெக்ட் வேறு? என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ப்ராஜெக்ட் தயார் செய்துவிட்டு ஸ்பான்ஸர்ஸிப்பிற்காக பல கம்பெனிகள் படியேறி கேட்கப் போகிறேன்."

"அவ்வளவு ரிஸ்க் எடுக்கும் துணிச்சல் உண்டு என்றால் நானும் உங்களுக்கு உதவ தயாராய் இருக்கிறேன்."

"எப்படி? எந்த விதத்தில்?"

"நான் சவுண்ட் இன்ஜினியரிங் பட்டதாரி! திரைப்படத் துறையில்தான் பணியாற்றி கொண்டு இருக்கிறேன். திரைப்படத் துறை என்றால் பயப்பட மாட்டீர்களே?"

"எல்லா துறையிலும் மோசமானவர்கள் உண்டு. நாம் சரியானவர்களை தேர்ந்தெடுத்துவிட்டால் பிரச்சனை இல்லை."

"வெரிகுட்! நல்ல அப்ரோச்! தெளிவான திட்டமிடலும், விழிப்புணர்ச்சியும் செயல்திறனும் உங்களிடம் இருக்கிறது. சாதிக்க தயார் ஆகுங்கள். ஆல் தி பெஸ்ட்!"



"நன்றி."

மதுமதி நன்றாக யோசித்து திட்டமிட்டாள். முதலில் பாட புத்தகங்களை காமிக்ஸ் வடிவில் உருவாக்க வேண்டும். அப்படி செய்தால் பிள்ளைகள் அதன் மூலம் மற்றவர்களை விட விரைவாகப் படித்து விடுவார்கள். அஸீம், அமோஸ் இருவருமே அதற்கு உதாரணம். நூறு சதவீதம் இல்லையில்லை 200 சதவீதம் அதிகத் தகவல்களை நினைவில் வைத்துக் கொள்வார்கள். எளிய மொழி, கதை போன்ற நடை, கண்ணைக் கவரும் படங்கள் பிள்ளைகளுக்கு பிடிக்காமல் போகுமா என்ன? யாருக்காகவும் காத்திருக்காமல் பிள்ளைகளே அவற்றைப் படித்து தெரிந்து கொண்டும் விடலாம். அறிவியல், வரலாறு, கணக்கு, தமிழ் போன்ற அனைத்து பாடங்களையும் படக்கதைப் புத்தகங்களாகவும், சி.டி, டிவிடிகளாகவும் வெளியிடலாம் என தீர்மானித்தாள்.

ஆறு, ஏழு, எட்டாம் வகுப்பிற்கான பாடங்களை பிரித்துக் கொண்டாள். அவற்றில் கடினமாக உள்ளவற்றை எளிமையாக எழுதி தேவையான படங்களை அல்லும் பகலுமாய் வரைந்து விளக்கங்களுடன் உருவாக்கினாள். அறிவியல், கணக்கு என இரண்டு பாடங்களை மட்டும் முதலில் ஸிடி போட முடிவு செய்தாள்.

ஆர்க்கிமிடிஸ் கோட்பாட்டை விளக்கும் முன் அரசர் தன் கிரீடத்தில் தங்கம் மட்டும் தான் இருக்கிறதா? தான் கொடுத்த தங்கம் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டிருக் கிறதா? தன் கிரீடத்தில் தங்கத்துடன் எத்தனை சதவீதம் செம்பு கலந்து இருக்கிறது என்பதை கிரீடத்தை உருவாக்காமல் கண்டுபிடிக்குமாறு ஆர்க்கிமிடிஸிடம்

கேட்டுக் கொண்டதையும் அவர் அதே சிந்தனையாய் இருந்ததையும், பாத்டப்பில் குளிக்கும் பொழுது... அவர் உள்ளே இறங்கிய பொழுது வெளியேறிய நீரை கண்டதும் புதிருக்கான விடை கிடைத்தது ஆர்க்கிமிடிஸ் கோட்பாடு உருவான நிகழ்ச்சியை படங்களுடன் அனிமேஷன் முறையில் தயாரித்தாள்.

பிதாகரஸ் தேற்றத்தை மொட்டை மனப்பாடம் செய்யாமல் அவருடைய சுருக்கமான வாழ்க்கை வரலாறு, அவர் இந்த சூத்திரத்தைக் கண்டுபிடித்த சம்பவம் முதலியவற்றையும் படவிளக்கத்துடன் கூடிய கதை யாகவும் தயாரித்தாள்.

அதற்கு இசையும், பொருத்தமான டப்பிங்கையும் சேர்த்தால் அருமையான பாட ஸிடி உருவாகிவிடும். முதலில் புத்தகமாய் தயாரித்து எடுத்துக் கொண்டு போய் ஸ்பான்ஸர்ஸிப் கேட்கலாம் என்று அதன் மாதிரியை தயாரித்து முடித்தாள். யார் யாரை போய் பார்க்க வேண்டும்? அவர்கள் முகவரி முதலியவற்றை இணைய தளத்தில் தேடிப் பெற்றாள். எல்லாம் செய்து முடித்த பொழுது அவளுக்கு அம்மம்மாவுடன் பேசவேண்டும் போல் இருந்தது. ட்விட்டரில் இணைய தளத்தில்,

''அம்மம்மா! என்னை விட்டு ஏன் சொர்க்கத்திற்கு போனீர்கள்?'' எழுதிவிட்டு எழுந்தாள் தன் வேலையைச் செய்ய.

காமிக்ஸ் கதை பாணியில் சொல்லப்பட்ட பாடங்களை மாணவர்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களா? என பரிசோதிக்க பல சுவையான தேர்வுகளை புகுத்தினாள்.



மாணவர்கள் அச்சமடையாத வகையில் - கேள்வி பதில் அமைப்பில் இல்லாமல், வெறும் மனப்பாடத்திறனை சோதிக்கும் தேர்வாகவும் இல்லாமல், போரடிக்காமல் குறுக்கெழுத்துப் புதிர்கள், துண்டுப் படங்களைப் பொருத்தி விளையாடும் ஜிக்-ஸா புதிர்கள், தாயக்கட்டம், பரமபதம் மாதிரியான விளையாட்டுகளாய் தேர்வையும் குழந்தை களுக்குப் பிடித்த வகையில் புதுமையாக அமைத்தாள்.

காமிக்ஸ் கதை பாடப்புத்தகங்களின் கதாநாயகனாக அஸீமைப் போல ஒரு சுட்டிப் பையனை உருவாக்கினாள். அவன் மாற்றுத்திறனாளியாக இருந்தும் கேள்விகளுக்கான பதிலைத் தேடி தன் நண்பர்களுடன் விடாமுயற்சியுடன் பயணம் செய்கிறான். வெவ்வேறு பிரச்சனைகளில் மாட்டிக் கொண்டு தன்னுடைய புத்திசாலித்தனத்தினால் தப்பிக் கிறான். சாகச பயணத்தில் பல்வேறு பாடங்களை எவ்வாறு கற்றுக்கொள்கிறான் என்பதை நகைச்சுவை மிளிர தயாரித் தாள். வேலையில் மெய்மறந்து பசி நோக்கவில்லை; கண் துஞ்சவில்லை. கருமமே கண்ணாயிரமாய் ஈடுபட்டாள். அஸீமும், அமோஸும் பள்ளி நேரம் தவிர மீதி நேரங்களில் அவளுடன் இணைந்தே இருந்தனர். அவர்கள் உடனி ருந்தது ஒரு விஷயத்தை எந்த அளவிற்கு கீழிறங்கிச் சொன்னால் பிள்ளைகள் புரிந்து கொள்வார்கள் என பரிசோதிக்க உதவியாய் இருந்தது. சிந்திக்க துவங்கும் பிள்ளைகளை மேலும் கூர்ந்து, ஆழ்ந்து அகன்று அறிவை பயன்படுத்த எளிமையான வழியில் முயற்சித்தாள். இன்னும் வருங்காலத்தில் தமிழ் இலக்கியங்களுடன், இலக்கணங்களையும், புள்ளியியல், இயற்பியல், வேதியியல் வானியல், கணினியியல், ஸ்டெம் செல்

டெக்னாலஜி, மரபியல், மரபுப் பொறியியல் என்று சகல பாடங்களையும் காமிக்ஸ் வடிவில் அறிமுகப்படுத்த வேண்டும். மேலும் வியாபார ரீதியாக பொழுது போக்காய், நல்ல படிப்பினை உண்டாக்கும் மனம் விட்டுச் சிரித்து குடும்பத்துடன் பார்க்கும் அரைமணிநேர ஸி.டிக்களை உருவாக்க வேண்டுமென அவள் கனவு விரிந்தது.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளுக அல்லவா?' எனவே பெரிய அளவில் திட்டமிட்டாள். திட்டத்திற்கான செயல்முறையை நன்கு ஆராய்ந்து குறித்து வைத்தாள். வேலை முடித்து உறங்கும் முன் அவளையறியாமல் ரிஷியின் நினைவு வந்தது.

'ம்ஹூம்! நினைக்கக் கூடாது' என்று தலையை சிலுப்பிக் கொண்டாள்.

'என் ரிஷி துருவ் என்று எண்ணி எண்ணி கனவை வளர்த்தேனே! என் உள்ளுணர்வில் ஓர் துளி கூடவா உங்களை ஈர்க்கவில்லை! அல்லது பொய் சொன்னீர்களா? உங்களால்... என்.... துருவால்... பொய்க் கூட சொல்ல முடியுமா?... என்னை... உங்கள் மதுவை... உங்களுக்கு தெரியவே தெரியாதா?'

மனம் பல்வேறு உழட்ட எழுந்து சென்று சன்னல் திரைச்சீலையை விளக்கி வெளியே பார்த்தாள். வானம் நன்கு இருண்டிருந்தது. அவள் மனத்தைப் போலவே மேகமூட்டத்துடன் இருந்ததோ? என்னவோ? ஒரு நட்சத்திரம் கூட கண்ணுக்கு தென்படவில்லை. கதவை இழுத்து மூடினாள். 'உறக்கம் வரும்பொழுது வரட்டும்' என கணினியிடம் சென்று ட்விட்டரை ஓப்பன் செய்தாள்.



அட! அவளுக்கு பதில் வந்திருக்கிறது.

''நான் உன் அருகில் தான் இருக்கிறேன் கண்ணம்மா!

உன் மனத்தில் தானே சொர்க்கம் இருக்கிறது!''

இப்படிக்கு

உன் அம்மம்மா

## 27

தினமும் இரண்டு கம்பெனிகள் - காலையில் ஒன்று; மதியம் ஒன்று என தவறாமல் படியேறி கதவைத் தட்டிக் கொண்டிருந்தாள். எந்த நிறுவனமாவது அவளுக்கு வாய்ப்பளிக்காதா? என்று விடா முயற்சியுடன் சென்று கொண்டே இருந்தாள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாய் அனுபவங்கள். ''எஜுகேஷன் ஸி.டியா? நாங்களே நிறைய பேக்கேஜ் வைத்திருக்கிறோம். ஒரு செட் அம்பதாயிரம் ரூபாய்! அதை விற்கவே மார்க்கெட்டிங் செய்ய முடியாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறோம். இதில் நீ வேறு புதிதாய் ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டாய். வெளிநாட்டில் தயாரான ஸிடியே விற்பதில்லை. லோக்கல் சரக்கெல்லாம் எடுபடாது'' என ஒருவர் முகத்தில் அடித்தாற் போல் கூறினார்.

புன்னகையுடன் ''நன்றி'' கூறிவிட்டு வெளியேறினாள். இன்னொரு நிறுவனத்தைச் சேர்ந்தவரோ ''ஏனம்மா! எங்கள்

வேலை நேரத்தை வீணாக்குகிறாய்? இது மாதிரி ஸி.டி வெளியிடும் எண்ணமெல்லாம் இல்லை. நீயும் ஏன் இப்படி கஷ்டப்படுகிறாய்? ரொம்ப அழகாய் இருக்கிறாய்! சினிமாவில் நடிக்கலாமே? கோடி கோடியாய் சம்பாதிக்க லாம். உன் அழகை ஆராதிக்க உனக்கு கோயில் கட்டி கும்பிட பல்லாயிர கணக்கான இரசிகர்கள் கிடைப்பார்கள். உன் புகழ் கொடி கட்டி பறக்கும். இந்த வேண்டாத வேலையை விட்டு விட்டு பேசாமல் அதற்கு முயற்சி செய்; அதற்கு வேண்டுமானால் சிபாரிசு செய்கிறேன்,'' என இலவசமாய் அறிவுரை வழங்கினார். மற்றொரு நிறுவனத்தில் மாலைவரை காக்க வைத்து உள்ளே அழைத்தனர். ஆனால் அவள் பேச்சை கவனிக்காமல் வளவளவென்று தேவையில்லாத விஷயங்களைப் பேச மதுமதிக்கு உள்ளுக்குள் எச்சரிக்கை மணியடித்தது. ''சார்! விஷயம் அவ்வளவு தான்! உங்களுக்கு தேவை என்றால் இந்த தொலைப்பேசி எண்ணிற்கு தகவல் கொடுங்கள். நான் கிளம்புகிறேன்!'' என எழுந்தான்.

''ஏன் அவசரப்படுகிறாய்?'' என அவள் கையைப் பிடிக்க,

''கையை விடுகிறீர்களா?'' என அழுத்தம் திருத்தமாய் அவள் சொல்லவும் அந்த பெரிய மனிதன் கைகளை எடுத்துக் கொண்டு ஒரு மாதிரி சிரித்தான்.

''சின்ன விஷயங்களில் அட்ஜஸ்ட் செய்தால்தான் பெரிய விஷயங்களை சாதிக்க முடியும்.''

''அப்படி எதுவும் எனக்குத் தேவையில்லை.''

''இங்கிருந்து அவ்வளவு சுலபத்தில் போக முடியாது.''



''மன்னிக்கணும் சார்! அது உங்களால் முடியாது. என் வுட் பீ போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் இருக்கிறார். இப்பொழுது கூட கீழே வண்டியுடன் மஃப்டியில் நின்று கொண்டு இருக்கிறார். நான் உள்ளே நுழைந்த பொழுதே குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு நுழைந்தேன். இன்னும் ஐந்து நிமிடங் களில் நான் வெளியே போகவில்லை என்றால் பாதிப்பு உங்களுக்குத் தான். மானம், மரியாதை போனால் பரவாயில்லையா?'' என அழுத்தமான குரலில் துளிக்கூட பதற்றமின்றி கேட்டாள்.

''பொய் சொல்லாதே!''

''நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்? உங்களை மாதிரி ஒருவரை சந்திக்க வரும் பொழுது நான் பாதுகாப்பு இல்லாமல் வருவேனா?''

அவள் பேசிய தொனி அவருக்கு சற்று அச்சத்தை ஏற்படுத்தியது போலும்.

'போ, போ! எங்கே போய்விடப் போகிறாய்? இன்னொரு நாள் வசமாக மாட்டாமலா போய்விடுவாய்?' என எண்ணிக் கொண்டே அவள் செல்ல கதவை வெளியே திறக்கச் சொன்னார்.

'நான் என்ன முட்டாளா? திரும்ப வந்து உன்னிடம் மாட்டிக் கொள்ள?' என இவள் விரைந்தாள்.

மறுநாள் இன்னொரு கம்பெனிக்கு செல்ல,

''இது பெரிய பிராஜெக்ட் பேசாமல் எங்களிடம் கொடுத்துவிடு. நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நீ இதை எழுதியதால் பெரிய ஆள் என்று நினைத்துக் கொள்ளாதே.

எல்லாரும் திறமைசாலி - எபிஸிஷண்ட் தான். ஏதோ சுமாராக இருக்கிறது; நாங்கள் சரி செய்து கொள்கிறோம். உனக்கு வேண்டுமானாலும் ஆலோசனைக்கு உரிய பணத்தை தந்துவிடுகிறோம். எழுதி கொடுத்து விட்டு போ'' என அறிவைத் திருட முற்பட,

''ஸாரி சார்! கோஸ்ட் ரைட்டராய் இருக்க நான் விரும்பவில்லை;'' என வெளியேறினாள்.

விகாஸ் வீட்டிற்கு வந்தபொழுது கேட்டான்.

''என்ன வேலை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?''

அவனிடம் செய்து முடித்த மாதிரிகளைக் காட்ட,

''நம்பவே முடியவில்லை மதுமதி! ரொம்ப அற்புதமாய் செய்து. இருக்கிறீர்கள். ஸ்பான்ஸர்ஷிப் ஏதாவது கிடைத்ததா?''

''முயற்சித்துக் கொண்டே இருக்கிறேன்.''

''அப்படி யாரும் கிடைக்கவில்லையென்றால் அரசாங்க உதவியை நாட வேண்டியது தான்; புரியவில்லையா? வங்கியில் லோன் வாங்கி செய்யலாமே?''

''என்னை நம்பி ஷ்யூரிட்டி இல்லாமல் யார் லோன் தருவார்கள்?''

''உண்மை தான்! பெஸ்ட் ஆஃப் லக்.''

அன்றிரவு யோசித்துக்கொண்டே படுத்து இருந்த பொழுது சரஸ்வதியின் கனிந்த முகம் ஞாபகத்திற்கு வந்தது. 'ஆகா! அம்மாவிடம் பேசவே இல்லை. அவர்கள் இல்லையென்றால் இந்நேரம் அவள் இவ்வுலகத்தில் இருந்தே இருக்கமாட்டாள். வாழ்வதற்கு ஒரு பாதுகாப்பான வீட்டையும் தேடிக் கொடுத்தவருடன் பேச வேண்டுமே! காலையில் எழுந்ததும் முதல் வேலையாய் மறக்காமல் இன்றைக்கு போன் செய்ய வேண்டும் என்று உறுதி செய்து கொண்டாள்.



சரஸ்வதி மகன், மகள், மருமகனுடன் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டுக் கொண்டிருந்தனர்.

''அத்தை! சீக்கிரம் வீட்டிற்கு மருமகளை கொண்டு வாருங்கள்.''

''ரிஷிதான் அழைத்து வரவேண்டும்; அவன் யாரை அழைத்து வந்தாலும் எனக்கு ஓ.கே தான்.''

''இப்படி பச்சைக்கொடி காட்டும் அத்தை இருக்கும் பொழுது என் மச்சான் எதற்கு தயங்குகிறார்?''

''என்னவோ மச்சான் மனசு தெரிந்தவர் மாதிரி பேசுகிறீர்களே?''

''இதற்கென்ன மனோதத்துவமா படிக்க வேண்டும்? அடிக்கடி மச்சான் முணுமுணுக்கும் பாடலையும் உற்சாகமாய் விசிலடிப்பதையும், ஏதோ ஒரு பத்திரிகையை பார்த்தபடி தனக்குத்தானே பேசுவதையும் கேட்டாலே தெரிந்துவிடுமாக்கும்! யார் மச்சான் அது?''

''என் கனவு தேவதையை அழைத்து வரும் பொழுது பார்த்துக்கொள் வருண்!''

''சீக்கிரம் கூட்டிவாப்பா! எனக்கே மிகவும் ஆர்வமாய் இருக்கு'' என்ற பொழுது அலைப்பேசி ஒலித்தது.

சாப்பிடும் பொழுது யாரும் போன் பேசுவதை விரும்புவதில்லை.'' அம்மா உங்க போன் தான் ஒலிக்கிறது.''

''யார்?'' என்றவர் 'ஒருவேளை மதுமதியோ? அவள் ஞாபகமாகவே இருக்கிறது' என எண்ணியவாறே அவசரமாக எழுந்து சென்றார். மகன், மகள் இருவருமே வியப்புடன் தங்கள் அன்னையைப் பார்த்தனர். எதிர்பார்த்தது போலவே மதுமதி தான்.

''என்னடா எப்படி இருக்கிறாய்?''

''ம். சரி! பிடித்து இருக்கிறதா? சரி வருகிறேன்'' என போனை வைக்க...

''என்னம்மா எங்காவது போக வேண்டுமா?''

''ஆமாம் அப்பா!''

''டிரைவர் இல்லையே; நான் கொண்டு வந்து விடட்டுமா?''

''ம்ஹூம்! வேண்டாம். நானே போய்க் கொள்கிறேன்'' என அவசரமாக சாப்பிட்டு வெளியே கிளம்பினார். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்; இருந்தும் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை.

வருண் எழுந்து சென்றதும் ''அண்ணா, சீக்கிரம் என் அண்ணியை கண்டுபிடி! பாப்பா பிறந்தநாளுக்கு அவர்களை வீட்டிற்கு அழைக்க வேண்டும் என்று நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்.''



உள்ளே சென்றவளிடம் வருண் ''என்ன விஷயம்? மச்சான் மனம் கவர்ந்த பெண்ணைப் பற்றி ஏதாவது தெரியுமா? இந்த அணிலின் உதவி கூட தேவைப்படுமா?''

''நான் கூட வேறு ஏதோ என்று நினைத்தேன்!''

''ஓஹோ! ஆஞ்சநேயர் என்றால் கூட சரி தானம்மா!''

பேருந்து நிலையத்தில் மதுமதி காத்திருக்க, காரை ஓட்டிச் சென்ற சரஸ்வதி அவளருகே சென்று நிறுத்தினார்.

''என்னம்மா இது? நீங்கள் போய் காரை ஓட்டிக்கொண்டு வருகிறீர்கள்? உங்களை எப்படி உங்கள் வீட்டில் இதற்கு அனுமதித்தார்கள்?''

''ச்சு! அவர்களை சமாளிப்பது பெரிய விஷயம் இல்லை. டிரைவர் யாராவது அழைத்து செல்வேன் என நினைத்திருப்பார்கள். உன்னைப் பார்க்கும் ஆவலில் நானே ஓட்டி வந்துவிட்டேன், அது இருக்கட்டும் இப்பொழுதுதான் இந்த அம்மா ஞாபகம் உனக்கு வந்ததாக்கும்?''

''அம்மா! நான் பொய் சொல்ல விரும்பவில்லை. என் கவனத்தை முழுமையாக வேலையில் செலுத்த விரும்பினேன். கடந்த காலத்தை மறக்க கடுமையாக உழைத்தேன். அதனால் உங்களுக்கு போன் கூட செய்ய முடியவில்லை.''

''சரி வா! எத்தனை நேரம் இப்படி நடுரோட்டில் நின்று பேசிக் கொண்டிருப்பது?''

''எங்கே அம்மா?''

''பயப்படாதே என் வீட்டிற்கு இல்லை.''

"நீங்கள் காரை ஓட்ட வேண்டாம். நான் ஓட்டுகிறேன்."

"உனக்கு ஓட்டத் தெரியுமா?"

"ம்! லைசென்ஸ் கூட வைத்திருக்கிறாயா? எனக் கேட்டு விடாதீர்கள். ஓட்டத் தெரியும் அவ்வளவுதான்!"

அவள் லாகவமாய் ஓட்டும் அழகைப் பார்த்தார்.

"ரொம்ப அருமையாய் ஓட்டுகிறாய்!"

"எங்கள் வீட்டு காரை ஓட்டி ஓட்டியே உடைத்து இருக்கிறேனாக்கும்! எங்கே அம்மா செல்ல வேண்டும்?"

"இரு! இரு முதலில் அந்தக் கடை முன் நிறுத்து!" என்ற போது அலைப்பேசி ஒலித்தது.

"இல்லப்பா! நான் ஓட்டவில்லை. நான் போன் செய்யும் பொழுது டிரைவரை ஆட்டோ பிடித்து இங்கு வரச்சொல். அப்புறம் பேசுகிறோம்" என வைத்துவிட்டார்.

"உள்ளே வா" என தயங்கியவளை கைப்பிடித்து கடைக்குள் இழுத்துச் சென்றார்.

"இன்று அம்மா பேச்சிற்கு மறுபேச்சு பேசக் கூடாது."

கடையில் அழகழகான புடவைகளை தேர்ந்தெடுத்து அவற்றிற்கு பொருத்தமான டிசைனர் ப்ளவுஸ்களையும் எடுத்துக் கொடுத்து சிற்சில மாடல்களை சொல்லி அவள் அளவையும் எடுக்க வைத்தார். "காஷ்மீரி ஜிமிக்கி உன் முகத்திற்கு அழகாய் இருக்கும். அதுக்கு இந்த பெண்டன்ட் செயின் எடுப்பாய் இருக்கும்; என அவள் மறுக்க மறுக்க எடுத்துக் கொடுத்தார்.



"இவையெல்லாம் அம்மா ஆசைக்கு வாங்கியது. உனக்கு எப்பொழுது தோன்றுகிறதோ அப்போது போட்டுக் கொள். நீ போட்டுக் கொண்டால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன்."

"இவையெல்லாம் அவசியமா அம்மா?"

"என் உயிரை காப்பாற்ற உன் செயின் அவிழ்த்து விற்கலாம். நான் உனக்கு எதுவும் வாங்கித் தரக் கூடாதா?"

ஒன்றும் பேசமுடியாமல் மௌனமானாள்.

"கடவுள் இல்லம்" முகவரி சொல்கிறேன். அங்கே போ அம்மா!"

வழி சொல்ல சொல்ல மதுமதி ஓட்டினாள்.

கடவுள் இல்லத்திற்கு சென்ற பொழுது தான் உண்மையிலேயே கடவுள் வீட்டிற்கு வந்தது போல் தான் தோன்றியது. வயதான முதியவர்களும், ஆதரவற்ற குழந்தைகளும் ஒருவருக்கொருவர் அன்பு காட்டிக் கொண்டு இருந்தது மனதிற்கு நிறைவாய் இருந்தது. சுத்தமும், அமைதியும் அங்கு நிலவியது. மெல்லிய இசையும், சுகந்தமான மணமும் அங்கு தவழ்ந்தது. எல்லாரும் சரஸ்வதி அம்மாவை அன்போடு வரவேற்றனர். மதுமதியும் அவர்கள் அன்பில் திக்கு முக்காடிப் போனாள். எல்லாரும் இணைந்து ஒரு குரலில் 'அன்பே கடவுள்' எனப் பாடினர். பாடலைக் கேட்டுவிட்டு இருவரும் பேசிக் கொண்டே ஹாலில் அமர்ந்தனர். மதுமதி என்ன செய்கிறாள்? அவள் எதிர்கால திட்டம் என்ன? என்று சரஸ்வதி கேட்க, அவள் தன் கனவு ப்ராஜெக்ட்டை

விவரிக்க.. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பேசுவதை நிறுத்திவிட்டு "என்னம்மா?" என்றாள்.

"உனக்கு எவ்வளவு அம்மா பணம் வேண்டும்?"

"மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா!"

"சரி! வங்கிக் கடனுக்கு ஜாமீன் கையெழுத்து போடட்டுமா?"

"ம்ஹூம்! நீங்க கடன்காரர் ஆவதை நான் விரும்பலை!"

"சரி! இதற்கு நீ ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். நீ போய் யாரிடமும் ஸ்பான்ஸர்ஷிப் கேட்டு கெஞ்சவும் வேண்டாம். எவனும் உன் கையைப் பிடிக்கவும் வேண்டாம். நான் சொல்கிற இடத்திற்கு போ. கொடுக்கிற கடிதத்தைக் கொடு. உனக்கு கண்டிப்பாய் உதவி கிடைக்கும். நீ சாதிக்க வேண்டும். உன் திட்டத்தில் எனக்கு நூறு சதவீத நம்பிக்கை இருக்கிறது. அதுவும் கல்வி வளர்ச்சிக்காக செய்யப் போகிறாய்; இதைக் கூட நான் செய்யாவிட்டால் எப்படி?"

"அம்மா" என அவரை கட்டிக் கொண்டாள். அவள் தலையை வருடிக் கொடுத்தார்.

"அம்மா! என்னைப் பற்றி நீங்க எதுவுமே கேட்கவில்லையே?"

"நீயே மறக்க நினைக்கும் உன் கடந்த காலத்தைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை."



அவள் கண்களில் கண்ணீர் தளும்பி நின்றது. "இனி உன் கண்களில் இருந்து ஆனந்த கண்ணீர் மட்டும் தான் வரவேண்டும்! நீ அழுதது எல்லாம் போதும் கண்ணம்மா! நீ ஜெயிக்கப் பிறந்தவள் என்பதை நினைவில் கொள்."

ஓர் கடிதத்தை எழுதி உறையிலிட்டு ஒட்டிக் கொடுத்தார். அது அவள் வாழ்க்கையில் வசந்தத்தை ஏற்படுத்தி கொடுக்கப் போகும் கடிதமல்லவா?

மனசெல்லாம் மழை கொட்டியது.

## 28

காலையில் இருந்தே அவளுக்கு ஒரே பரபரப்பாய் இருந்தது. அவள் ப்ராஜெக்ட் இன்று அங்கீகரிக்கப்படும் நாள் அல்லவா? 'எத்தனை மணிக்கு செல்வது? அம்மாவிடம் கேட்கலாமா?'

"அம்மா! உங்க ஆசீர்வாதம் வேண்டும்" என்று ஒருமுறை போன் செய்தாள். மறுமுறை "அம்மா! எத்தனை மணிக்கு போகவேண்டும்?" எனக் கேட்டாள்.

"பதினொரு மணிக்கு போ அம்மா" என்றார்.

"அம்மா! எனக்கு வாய்ப்பு கிடைக்கும் தானே?"

"உனக்கு கிடைக்காவிட்டால் ஊரில் யாருக்குமே கிடைக்காது" எனக் கூறி வைத்துவிட்டு வாய் விட்டு சிரித்தார். பாவ்னா என்னவென்று கேட்க "நான் ஒ பெண்ணிற்கு சிபாரிசு கடிதம் கொடுத்தேன் அம்

அவளுக்கு அதில் ஆயிரத்தெட்டு சந்தேகங்கள். அதற்கு தான் இத்தனை போன்'' என்றவர் ''உங்க அண்ணனை கம்பெனிக்கு தான் சிபாரிசு கடிதம் கொடுத்தேன். ஆனால் இப்ப எனக்கு ஒரு சந்தேகம்? ஆமாம் உங்க அண்ணன் வேலை கொடுப்பானா?''

''என்னம்மா இது? இப்படி சொல்கிறீர்கள்? அப்படி என்ன வேலைக்கு சிபாரிசு கடிதம் கொடுத்தீர்கள்?''

''அதுவா? எஜுகேஷன் காமிக்ஸ் ஸி.டி வெளியிட ஸ்பான்ஸர் செய்ய கடிதம் கொடுத்திருக்கிறேன்.''

''ஐயோ! என்னம்மா இது? அண்ணனுக்கு இதுக்கும் என்னம்மா சம்பந்தம்? இதில் எப்படி அண்ணன் உதவ முடியும்?''

''அதெல்லாம் எனக்கு தெரியாதம்மா! உங்க அண்ணன் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்!''

அவர்கள் பேச்சை கேட்டுக்கொண்டே ரிஷி வெளியே வந்தான். அவர்களைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே விஸ்வாவிற்கு போன் செய்தான்: ''நான் பதினொரு மணிக்கு அலுவலகம் வருகிறேன்: யார் வந்தாலும் காத்திருக்கச் சொல்'' என்றான்.

ரிஷிக்கு வேறு ஒரு முக்கிய வேலை இருந்தது. உள்துறை செயலரை பார்க்க வேண்டி இருந்தது. எனவே சீக்கிரமாகவே கிளம்பிவிட்டான். இருந்தாலும் எந்த அரசு அலுவலகம் ஆறுமணிக்கு திறக்கும்? மதுமதியை தேடும் வேலையை தனியார் துப்பறியும் நிறுவனத்திடம் ஒப்படைத்து இருந்தான். அது விஷயமாக விசாரித்து விட்டு



பின் அரசு அலுவலகம் சென்றான். உள்துறை செயலர் வர அன்று பார்த்து தாமதமாயிற்று. முதலமைச்சர் முக்கிய கோப்புடன் அவரை அழைத்திருந்தார். அவர் வரும் வரை காத்திருக்க வேண்டி வந்தது. மணி பன்னிரெண்டை கடந்து விட்டிருந்தது. ரிஷி விஸ்வாவிற்கு போன் செய்தான்.

''என்னைத் தேடி யாராவது வந்தார்களா?''

''ஒரு பெண் வந்திருக்கிறார். கையில் கடிதம் வைத்திருக்கிறார்.''

''எப்படியும் நான் வந்துவிடுவேன்! இருக்கச் சொல்.''

''அவங்க நம்மை பார்க்க வந்த விஷயம் நாம் சம்பந்தபடாத துறை போல் இருக்கிறது.''

''ம்! தெரியும்!''

''அப்படி என்றால் அவளை திருப்பி அனுப்பி விடவா?''

''வேண்டாம்! வேண்டாம்.''

''போய்விட்டு நாளைக்கு வரச் சொல்லவா?''

''அவளால் காத்திருக்க முடியுமா? என்று கேள். சரி என்றால் மாலைக்கு சற்று முன் தான் நான் வர முடியும் எனச் சொல்லிவிடு. வேறு ஏதாவது வேலையிருந்தால் பார்த்துவிட்டு வரச்சொல்.'' உள்துறை செயலர் அலுவலகம் வந்தபொழுது இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

''மன்னிக்கவும் சார்! தங்களை அதிக நேரம் காக்க வைக்க நேர்ந்துவிட்டது.''

''சரியான காரணம் இருக்கையில் மன்னிப்பு கோர அவசியமில்லை சார்!''

இருவரும் உணவு உண்ணக் கூட செல்லாமல் விஷயத்தை பேசி முடித்தனர். பின் ரிஷி அவரிடமிருந்து விடை பெற்றான். நேரம் கடந்து விட்டிருந்ததால் உணவு உண்ணும் எண்ணம் விட்டு கிளம்பினான். அதற்குள் 'விஸ்வா' அவள் ப்ராஜெக்ட்டை ரிஷியின் ஆலோசனைப் படி ஆராய்ந்து ரிப்போர்ட் தயார் செய்து ரிஷி கணினிக்கு செய்தி அனுப்ப... முழுதும் படித்தான்.

''வாவ்! கெட்டிக்காரப் பெண்! வித்தியாசமாய் இருக்கிறாள், சிந்திக்கிறாள். உதவி செய்தால் கண்டிப்பாய் ஜெயிப்பாள்' என முடிவிற்கு வந்தான்.

''விஸ்வா, அவளை காத்திருக்கச் சொல். இதற்கு நாம் கண்டிப்பாக உதவுவோம்.''

அலைப்பேசியை அணைத்துவிட்டு காரைத் திருப்பினான். அவன் வங்கி மேலாளரை காணச் சென்றான். அவரிடம் விவரங்களை சொல்லிவிட்டு வேலையை முடித்துக் கொண்டு கிளம்பினான்.

அதே சமயத்தில் சரஸ்வதி அம்மா தன்னுடைய செய்திக்காக காத்திருப்பார் என்ற ஞாபகம் வந்ததும் வெளியே சென்று போன் செய்துவிட்டு வருவதாக வரவேற்பறை பெண்ணிடம் கூறிச் சென்றாள்.

''அம்மா! என் ப்ராஜெக்ட்டை பார்த்தார்கள். எம்.டி. வெளியில் போயிருக்கிறார். வரும் வரை காத்திருக்க சொல்லி இருக்கிறார்கள்.''



''நம்பிக்கையுடன் இரு; நல்லதே நடக்கும் சாப்பிட்டாயா?''

''உங்கள் கடிதம் கொண்டு போனதாலோ என்னவோ? ஜூஸ், பிஸ்கெட் கொடுத்து உபசரித்தார்கள். எம்.டியை பார்த்து விட்டு கிளம்புகிறேன். வேலை முடியும் வரை பசியே எடுக்காது போல் தோன்றுகிறதம்மா!''

''அப்படி இருக்காதே! சீக்கிரம் வேலையை முடித்துக்கொண்டு கிளம்பு. இருட்டிய பிறகு தனியாக போகவேண்டாம். எனக்கு ஒரு போன் செய்கிறாயா? நான் கொண்டு போய் விடுகிறேன்.''

''வேண்டாம் அம்மா; நான் கவனமாய் இருப்பேன். சீக்கிரம் கிளம்பி விடுகிறேன்;'' எனக் கூறிவிட்டு மறுபடியும் அலுவலகம் வந்தாள்.

ரிஷி அதற்குள் அலுவலகம் வந்திருந்தான்.

''விஸ்வா அந்தப் பெண் அங்கே? பார்வையாளர் அறையில் இருக்கிறாளா?''

''போன் செய்து விட்டு வர சென்றிருப்பதாக தகவல்.''

''ஏன்? அவளிடம் அலைப்பேசி இல்லையா? அல்லது தொலைந்து விட்டதா?'' என்றான் ரிஷி. மேசை மேலிருந்த அம்மாவின் சிபாரிசு கடிதத்தைப் பார்த்தான். புன்னகை யுடன் அதை எடுத்து மெல்லப் பிரித்தான். சுருக்கமாய் தான் இருந்தது.

''மதிப்பிற்குரிய ரிஷி அவர்களுக்கு,

மதுமதி அருமையான பெண்! இவளுக்கு உதவி னால் எனக்கு உதவினாற் போல் மகிழ்ச்சியடைவேன்.

என்னிடம் பணம் பெற இவள் மறுக்கிறாள். அதனால் தான் இங்கு அனுப்புகிறேன்.

இப்படிக்கு,
நம்பிக்கையுடன்
**சரஸ்வதி"**

என முடித்திருந்தார்.

மதுமதி? எந்த மது?... மது... என் மதுவா? இல்லை வேறு யாரோவா?' கதவு மெல்ல தட்டப்பட்டது.

"உள்ளே வரலாமா" கதவை திறந்து கொண்டு மதுமதி உள்ளே வந்தாள்.

யாரை தேடித் தேடி ஊரெல்லாம் ரிஷி அலைந்து கொண்டிருந்தானோ; அவள் அவன் கண் எதிரே முழு நிலவாய் நின்று கொண்டிருந்தாள்.

'யாரை இனி பார்க்கவே கூடாது என மதுமதி நினைத்திருந்தாளோ அவன் எதிரிலேயே நின்று கொண்டிருக்கிறாள். பார்க்க வேண்டும், பேசவேண்டும், பழக வேண்டும் என துடித்துக் கொண்டிருந்த நேரத்தில் உதவாத விதி வேண்டவே வேண்டாம் எனும் பொழுது கொண்டு வந்து கண் எதிரே நிறுத்துகிறதே! என் மன உறுதியை சோதிக்கிறதா? மதுமதி தோற்கப் பிறந்தவள் அல்லவே? அவள் இன்று அவன் முன் நிற்பது அவன் அன்பை நாடி அல்ல! தொழில் விஷயமாய் தான் நிற்கிறாள்! இதில் வெட்கப்படவோ, அவமானப்படவோ எதுவும் இல்லை. அவனை பொறுத்தவரை அவள் யாரோ ஒருத்தி! பிரதம மந்திரி அறியாத மக்களில் ஒருத்தி! அவனுக்



கென்ன? சாதாரணமாக தொழில் பற்றி பேசாமல், சரஸ்வதி அம்மாள் சிபாரிசால் வந்தவள் என்று மரியாதையுடன் நடத்தலாம். அவ்வளவு தான்!'

நேராய் அவனைப் பார்த்து "வணக்கம் சார்! நீங்க ஏதாவது என் ப்ராஜெக்ட்டைப் பற்றி மறுபரிசீலனை செய்கிறீர்களா?" என்றாள்.

"இவ்வளவு நேரம் காத்திருந்த பிறகு ஏன் உங்களுக்கு இப்படி ஒரு சந்தேகம்? உங்கள் திட்ட அறிக்கையை பார்த்த பிறகே காத்திருக்கச் சொன்னேன். ஒருமுறை முடிவெடுத்து விட்டால் மாற்றும் எண்ணம் எங்கள் நிறுவனத்திற்கு கிடையாது."

'ஏதோ நிறுவனத்திற்காவது இருந்தால் சரி.'

"ஹலோ...."

சட்டென நினைவு வந்தவள் போல "நன்றி சார்!" என்றாள். "யோசனையைப் பார்த்தால் அப்படி தெரிய வில்லை! இருக்கட்டும், எத்தனை நாட்களில் முடித்துக் கொடுப்பீர்கள்? குறைந்தபட்சம் ஒரு வருடம் ஆகுமா?"

"இல்லை! ஆறுமாதம் போதும்!"

"ஐந்து நிமிட கார்ட்டூன் படத்திற்கே ஒரு வாரம் உழைக்க வேண்டும்?"

"உண்மை தான்! ஏறக்குறைய நான் செயல்திட்டங்களை வகுத்து பாதி வேலை முடித்து இருக்கிறேன்."

"உங்க திட்ட அறிக்கையை பார்த்தேன். அதில் தொழிலுக்கான எல்லா விஷயங்களும் தெளிவாய்

இருந்தன. சந்தை, இலாபம் தொழில்நுட்பம், லேபர், அமைவிடம், மூலப்பொருள், தரமான இயந்திரம் ஆகிய எல்லா விவரங்களையும் கொண்ட திட்ட அறிக்கை. ஆனால்....'' என இழுக்க,

''ஆனால் என்ன சார்?''

''மிகவும் சிறிய வயது; அனுபவமில்லாத சிறிய வயது. செயல்பட முடியுமா? இது அவ்வளவு சுலபமானது அல்ல.''

''முடியும்; கண்டிப்பாய் முடியும்.''

''உங்கள் நம்பிக்கையை பாராட்டுகிறேன். உங்கள் டீமில் எத்தனை பேர்?''

''இப்போதைக்கு ஒன் மேன் ஆர்மி.''

''அது சரி வராது! ரெக்கார்டிங் செய்ய, சவுண்ட் ஸிஸ்டம், டப்பிங் பேச இதற்கு எல்லாம் ஆள் வேண்டுமே?''

''டப்பிங் தியேட்டர் ஆர்ட்டிஸ்ட் இருக்கிறார்கள்! சவுண்ட் இன்ஜினியர் விகாஸ் அதற்கு உதவுவார்.''

''ஆனாலும் ஓவியர்கள் போதாது! பார்க்கலாம்! உன் உதவிக்கு ஐந்து பேர் இருந்தால் போதுமா? நல்ல ரெக்கார்டிங் ஸ்டுடியோவிற்கு நான் சொல்கிறேன்.''

''மிக்க நன்றி சார்.''

''மிஸ் மதுமதி! நான் உங்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும். நாங்கள் இந்த மாதிரி ப்ராஜெக்ட்டை செயல்படுத்தும் திட்டத்தில் இல்லை. அதனால்....''



அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள். 'இவ்வளவு நேரம் அவளை பசியுடன் காக்க வைத்து குடைந்து குடைந்து கேட்ட கேள்விகள் என்ன? உதவுவது போல் எதற்கு இத்தனை ஆர்ப்பாட்டங்கள்?'

அவன் அலைப்பேசி ஒலித்தது. எடுத்து பேசினாலும் அவன் கவனம் அவள் மேல் இருந்தது. பேசிவிட்டு அவளைப் பார்த்தான். மெலிந்திருந்தாள். கண்களில் அந்த கள்ளமில்லா மகிழ்ச்சி, துள்ளல் குறைந்திருந்தது. அவள் கிளம்ப எத்தனிக்க...'

''நில் மது! நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. என் கம்பெனி தான் இதை செய்ய முடியாது என்று சொன்னேன். உன் திட்டத்திற்கு உதவ முடியாது என்று சொல்லவில்லை. ஏறக்குறைய உனக்கு உதவி கிடைத்தமாதிரிதான். பாரத பிரதமர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் அரசாங்கம் உனக்கு உதவ தயாராய் இருக்கிறது. இதற்கு படிப்போ, சொத்து பத்திரமோ, தனிநபர் ஜாமீனோ தேவையில்லை. ரூ 10 இலட்சத்திற்கு மேல் என்றால் எட்டாவது வரை படித்திருக்க வேண்டும். கிரெடிட் கேரண்டி ஃபண்ட் மூலமாக ஒரு கோடி ரூபாய் வரை கடன் வாங்கலாம். உன் திட்ட அறிக்கை சரியாக இருந்தால் போதும். உனக்காக நான் வங்கி மேலாளரிட் பேசிவிட்டேன். இப்பொழுது என்னுடன் வந்தாய் என்றால் நீயும் அவருடன் பேசிவிடலாம்.''

இவனிடம் பணம் வாங்குவதை விட இது நல்ல யோசனைதான். அவள் சுயமதிப்பு தாழ்ந்து போகாதல்லவா? மறுபேச்சில்லாமல் அவனுடன் கிளம்பினாள்.

உற்சாகத்துடன் இலேசாய் விசிலடித்தவாறு செல்லும் தன் பாஸை வியப்புடன் பார்த்தான் விஸ்வா.

அவனைப் பார்த்து மெல்ல கண்சிமிட்டினான் ரிஷி. ''நான் மதுவுடன் வெளியே செல்கிறேன். எல்லா வற்றையும் பார்த்துக்கொள்'' என அழுத்தி வேறு சொல்ல அவனுக்கு விஷயம் புரிந்து போயிற்று. இருக்கின்ற வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு கோவை நகரிலும் திருப்பூரிலும் தேடி அலைந்த இரத்தினம் தானாகவே பாஸை வந்து அடைந்து விட்டதென்று! ''டன்'' என கட்டை விரலை பதிலாய் காட்டினான்.

இவர்கள் பேச்சையோ அல்லது இவர்களையோ சட்டை செய்யாமல் மதுமதி வெளியேறி இருந்தாள். காரில் ஏறி முன் கதவை திறந்து விட்டான். மதுமதி ஏறி அமர்ந்தாள்.

வங்கி மேலாளரை பார்க்க, தான் ஏற்கனவே பேசியிருப்பதாக சொல்லி வேறு யாராவது இருந்திருந்தால் தனியாக அனுப்பி இருப்பான். ஆனால் மனம் கவர்ந்தவளுடன் வெளியே செல்லும் வாய்ப்பை தவறவிடுவானா என்ன? மேலாளரைப் பார்த்து பேசி, அவள் திட்டத்தைப் பற்றி அவளையே எடுத்துரைக்க வைத்து அவளுக்கு வங்கி கடன் வழங்க உறுதி அளிக்க வைத்து தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்து வெளியே வந்த பொழுது நன்கு இருட்டி விட்டிருந்தது.

''மிக்க நன்றி.''

நன்றியை பொருட்படுத்தாமல் ''முக்கிய வேலையாக உள்துறை செயலரை பார்க்கப் போயிருந்தேன். அதனால் நான் வர தாமதம் ஆயிற்று.''



'அதைப்பற்றி எனக்கென்ன?' என்பது போல் மதுமதி பேசாமல் இருந்தாள்.

''மதியம் சாப்பிட முடியாமல் போயிற்று! எங்காவது சாப்பிட்டு போகலாமா?''

அவளுக்கும் மிகுந்த பசிதான். இருந்தாலும், ''இல்லை சார்! டியூசன் நேரம் வந்துவிட்டது. பிள்ளைகள் எனக்காக காத்திருப்பார்கள். நீங்கள் செல்லுங்கள்; நான் ஆட்டோ பிடித்து போய் கொள்கிறேன்.''

''அப்படியென்றால் நான் பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன். சரஸ்வதி அம்மாவை மனம் வருத்தப்பட வைக்க என்னால் முடியாது. உன்னைப் பத்திரமாக கொண்டு விட வேண்டும் என்று பணிவான உத்தரவு வேறு!''

மறுத்துவிடு என்று அறிவு சொன்னாலும் மனசு கேட்காததால் வாய் சொன்னது ''ம்! சீக்கிரம் கிளம்பிவிட வேண்டும்!'' தாஜ் கோரமாண்டல் ரெஸ்ட்டாரண்ட் முன் வண்டி நின்றது. தான் இங்கு பொருத்தமில்லையோ! என ஒரு வினாடி மதுமதிக்கு தோன்றியது.

''வெஜ்ஜா?''

''ம்!''

இடியாப்பம், பிஸிபேளாபாத், இளநீர் பாயாசம், ப்ரைடு ரைஸ் என அவன் பாட்டிற்கு ஆர்டர் கொடுக்க மதுமதி திகைத்தாள்.

''எதற்கு இவ்வளவு?'' மெல்லிய குரலில் முணு முணுக்க.... அவனும் அவள் காதருகில் குனிந்து,

''எல்லாம் கொண்டாடத்தான்'' என்றான்.

''கொண்டாடும் அளவிற்கு என்ன நடந்துவிட்டது?' என எண்ணிக் கொண்டாள்.

''உன் தொழில் துவக்கத்தை கொண்டாட வேண்டாமா? முதலில் பாயாசத்துடன் தொடங்குவோம். இனிப்புடன் நல்ல காரியத்தை தொடங்குவது நம் பண்பாடு. இளநீர் பாயாசம் சாப்பிட்டு பார்! அப்புறம் விடவே மாட்டாய்! வடிகட்டிய கெட்டி வெல்லநீர், இளநீர், கெட்டி பால் துருவிய தேங்காய் சேர்த்து ஒரு கொதியில் இறக்கி ஏலக்காய் பவுடர், குங்குமப்பூ, பிஸ்தா தூள் தூவியிருக்கும் இதை சாப்பிட்டால் துள்ளிக் குதிப்பாய்!'' என அவன் ரசனையுடன் பேச...

''நான் வீட்டிற்கு தகவல் சொல்லவேண்டும். போன் செய்து விட்டு வருகிறேன்'' என எழ கைப்பிடித்து அமர்த்தினான்.

''நம்பர் சொல்; நான் சொல்லிவிடுகிறேன்.''

''ம்ஹூம்! வேண்டாம் நானே பேசிக்கொள்கிறேன். யாராவது தப்பாக நினைப்பார்கள்!''

''இதிலேயே பேசு'' என அலைப்பேசியை நீட்டினான். மறுக்க முடியாமல் வாங்கி அவள் மெல்ல பேச,

'இனி யாரும் உன்னை எப்படியும் பேச நான் தான் இடம் தரப் போவதில்லையே!' என நினைத்துக் கொண்டான்.



# 29

அன்று அவள் மறுக்க மறுக்க விடாப்பிடியாய் அனைத்தையும் ஓரளவாவது சாப்பிட வைத்து தான் விட்டான். சும்மா சொல்லக்கூடாது இளநீர் பாயாச சுவை இன்னமும் நாக்கை சப்புக் கொட்டத்தான் வைத்தது! 'சீ சீ என்ன நினைப்பு?' என தலையை தட்டிக் கொண்டாள். தெருமுனையிலேயே அவன் காரிலிருந்து அவள் இறங்கிக் கொண்டாள். அவள் இருக்கும் வீட்டினருகே அவனுடன் காரில் சென்று இறங்க அவள் விரும்பவில்லை. அவன் கார் கிளம்பும் வரை அங்கேயே நின்று கொண்டிருந்துவிட்டு பிறகு தான் நகர்ந்தாள். அவனோ போவது போல் போக்குகாட்டிவிட்டு காரை சற்று தள்ளி நிறுத்தி இறங்கி சத்தமில்லாமல் நடந்து வந்து அவள் பத்திரமாக போகிறாளா? எனப் பார்த்தான். உற்சாகமாய் வீடு திரும்பிய வனை பாவ்னாவும், சரஸ்வதியும் எதிர்கொண்டனர்.

''என்ன அண்ணா? அந்தப் பெண்ணிற்கு உதவினாயா?''

''அது எப்படி அம்மா? தெரியாத தொழில் உதவுவது?''

''அப்புறம்? அம்மா சிபாரிசு?''

''அம்மா சொல்லிவிட்டால் விட முடியுமா?''

''என்ன தான் செய்தாய்?''

"அரசாங்கத்தின் உதவியை பெற வழிகாட்டிவிட்டேன். தொழில் தெரிந்த என் நண்பர்களை அவளுடன் சேர்த்துவிட்டு உதவுகிறேன்."

"அப்படிப் போடு!"

"அம்மா கடிதத்தை பார்க்க வேண்டுமே? மதிப்பிற்குரிய ரிஷி அவர்களுக்காம்... அம்மா அவளிடம் என்னை மகன் என்று சொல்லவில்லை போலிருக்கு!"

"சொன்னால் அவள் தயங்கவோ, மறுக்கவோ செய்யலாம் என்று தான் சொல்லவில்லை."

"அவளை உங்களுக்கு எப்படி அம்மா தெரியும்?"

"எல்லாரையும் போல ரெண்டு கண்ணால் பார்த்தால் தெரியாதா?" ரிஷி வாய்விட்டு சிரிக்க...

பாவ்னா "அட! போங்கம்மா" என்றாள்.

"இதோ! போகத்தான் போகிறேன். எனக்கு உறக்கம் வருகிறது" என அவர் நகர,

"அம்மா நாம் மேலும் ஏதும் கேட்டுவிடக்கூடாது என நகர்ந்து ஓடுகிறார்."

"ஆமாம் பாவ்னா! அவர் ஒரு சஸ்பென்ஸ் வைத்திருக் கிறார். நானும் ஒரு சஸ்பென்ஸ் வைத்திருக்கிறேன்."

"என்ன சொல்லேன்?" என்றவாறே அவன் முகத்தைப் பார்க்க அந்த காந்த கண்களின் ஜொலிப்பில்....

"அண்ணா....நீ இவ்வளவு உற்சாகமாய் இருக்கிறாய்.... என்றால் ... மது... மது... அண்ணியைப் பார்த்தாயா?"



"புத்திசாலி தங்கை! அவளுடன் தாஜில் இளநீர் பாயாசத்துடன் விருந்தே சாப்பிட்டு விட்டேனாக்கும்!"

"ஹை! அண்ணா என்றைக்கு வீட்டிற்கு அழைத்து வரப்போகிறாய்?"

"பொறு! பொறு! அவள் என்னை தெரிந்தவனைப் போலவே காட்டிக் கொள்ளவில்லை. உள் மனசில் அன்பை வைத்துக் கொண்டு வெளியில் மறைக்கிறாள். அவள் பட்ட காயங்களை முதலில் ஆற்ற வேண்டும். முடியாது, முடியாது என்று சொல்லிக் கொண்டே நான் சொன்னது அனைத்தையும் கேட்டாள் தெரியுமா?"

"அது சரி! உன் ஆள் உன்னைப் போல தானே இருப்பாள்! என் வீட்டுக்காரரைப் பார் சரி சரின்னு சொல்லிக் கொண்டு அவருக்கு தோணுவதை செய்வார்."

"நம்பாதே ரிஷி! இவள் இனிப்பு சாப்பிட வேண்டாம் எனச் சொன்னாள். நான் சரி என்று சொல்லிவிட்டு ஒரு ஜாங்கிரி சாப்பிட்டு விட்டேன். அதைப் போய் பெரிய குற்றமாக இன்னும் பேசிக் கொண்டிருக்கிறாள்" என உள்ளே வந்த அருண் சொல்ல ரிஷி இன்னும் வேகமாக சிரித்தான்.

"என்ன மச்சானுக்கு உற்சாகம் பிய்த்துக் கொண்டு போகிறது? ஜாக்பாட் அடிச்சா கூட நம்ம மச்சான் அடக்கமாய் 'அப்படியா?' எனும் ரகமாயிற்றே?"

"அதொன்றுமில்லை இன்னிக்கு புதிசா இன்னொரு தொழிலுக்கு பிள்ளையார் சுழி போட்டு இருக்கிறார். அதுவும் அம்மா ஆசைப்படி செய்தால் சந்தோஷத்திற்கா பஞ்சம்?"

''நமக்கு ஒரு தொழிலை செய்வதற்கே மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகிறது. மச்சான் நீங்க ஜமாய்ங்க! கைத்தட்டி உற்சாகப்படுத்த நான் இருக்கிறேன்,'' சொல்லிவிட்டு வருண் நகர,

''மதுமதி விஷயம் எதுவும் இப்பொழுது அவருக்குத் தெரிய வேண்டாம்.''

''நானும் அப்படித்தான் நினைத்தேன்.''

பாவ்னாவின் சமையல் புத்தக வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்க எழுத்தாளராய் திகழும் போலீஸ் உயரதிகாரியை அழைக்கச் சென்றிருந்தான் ரிஷி. அப்போது அவர் மேசை மேல் ஒரு புகைப்படம் ஒன்று இருந்தது.

''ரிஷி சார்! கண்டிப்பாக மாலை விழாவிற்கு வந்து விடுகிறேன். ஏற்கனவே உறுதி செய்த விஷயம் தானே? போன் செய்திருந்தாலே போதும்; வேலைகளுக்கு நடுவில் நீங்கள் அலைய வேண்டுமா? இப்பொழுது பார்த்து ஒரு முக்கிய வேலை வந்திருக்கிறது. இந்த புகைப்படத்தை ஆந்திரத்தில் இருந்து அனுப்பி இருக்கிறார்கள். இவன் பொண்ணுங்களை கடத்துவதில் படு கில்லாடியாம். தனியாய் இருக்கும் பொண்ணுங்களை குறிவச்சு சரியாய் காய் நகர்த்தி கடத்தி சென்று விற்றுவிடுவானாம். இப்போது இங்கே வந்திருக்கலாம் என்று ஒரு சந்தேகம். அதனால் நிறைய வேலை இருக்கிறது. சரியான நேரத்திற்கு விழாவை தொடங்கி விடுவீர்கள் தானே? ஒரு மணி நேரத்திற்கு மேல் என்னால் இருக்க முடியாது.''

''மிக்க நன்றி. சரியான நேரத்தில் தொடங்கிவிடுவோம். யாருக்காகவும், காத்திருப்பதில்லை, ஒரு மணிநேரம் நீங்கள்



இருப்பதே போதுமானது'' என்று சொல்லிவிட்டு கிளம்பினான். விஸ்வாவிடமும், பாவ்னாவிடமும் அனைத்து விவரங்களையும் தெரிவித்துவிட்டு அவன் அலுவலகம் செல்லும் பொழுது தான் மதுமதி ஆட்டோவில் செல்வதை பார்த்தான்.

'எங்கு செல்கிறாள்' அவன் யோசிக்கும் பொழுதே அவள் ஆட்டோவில் இருந்து இறங்கினாள். எதிரே இருந்து வந்தவன் ஏதோ அவளிடம் சொன்னான். இருவரும் நடந்தனர்; அவளுடன் நடந்தவனைப் பார்த்ததும் சட்டென ரிஷிக்கு பொறித் தட்டியது. 'இவன்... காவல் நிலையத்தில்... புகைப்படத்தில் இருந்தவனல்லவா? இவனுடன் இவளுக்கு என்ன வேலை? முட்டாள் பெண்! யார் என்ன சொன்னாலும் நம்பி விடுவாள் போல! காவல் அதிகாரிக்கு செய்தி சொல்லிவிட்டு நிமிர்ந்தால் இருவரையும் காணவில்லை. ராம்லால் வீட்டிற்கு போன் செய்து மதுமதி எங்கே சென்றாள்? என விசாரித்தான். அலுவலகம் அமைக்க இடம் பார்க்கச் சென்றதாக அவர் மனைவி கூறினாள். 'முயல் பிடிக்கும் நாயை முகத்தைப் பார்த்தால் தெரியாது? அவன் மூஞ்சியைப் பார்த்தால் வீட்டு புரோக்கர் மாதிரியா தெரிகிறது? எங்கு போனாள் என்று தெரியவில்லையே?' என அவளைத் தேடி தேடி சுற்றி வந்தான். விழா ஆரம்பிக்கும் நேரமோ நெருங்கி விட்டது. சாப்பிடக் கூடத் தோன்றாமல் அவளைத் தேடி களைத்து போனவன், 'கடவுளே அந்த அப்பாவி பெண்ணை காப்பாற்று' என தன்னையறியாமல் வேண்டிக் கொண்டான். அது கடவுளின் காதில் விழுந்ததோ? என்னவோ?

"துருவ்" குரல் கேட்டுத் திரும்பினான். மதுமதி நின்றிருந்தாள். "ஆபீஸிற்கு ஓர் அருமையான இடம் கிடைத்திருக்கிறது. வாடகையும் சரியான அளவில் இருக்கிறது."

உற்சாகமாய் அவள் கூற, நிம்மதியும் எரிச்சலுமாய் "அப்படி எந்த இடம் உன்னைத் தேடி வந்திருக்கிறது?" என்றான். அவள் சொன்னதும், "ஏதேது விட்டால் மெரீனா பீச்சையே விலைக்கு வாங்கி விடுவாய் போல?"

"கிண்டல் செய்கிறீர்களா?"

"சுண்டல் வாங்கி தரலாம் என்றா கேட்டேன்? அரசாங்க கட்டடத்தை உனக்கு விலை பேசிய புத்திசாலி எங்கே?"

"விலைக்கு இல்லை; வாடகைக்குத் தான்" என்றவள் விழித்துக் கொண்டாற் போல்,

"என்னது? அரசாங்க கட்டடமா?" என்றாள்.

"ஒரு நிமிடம் பொறு" என அலைப்பேசியில் குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு,

"யார் என்ன சொன்னாலும் நம்பிவிடுவாயா?" எனக் கேட்டான்.

"ஏன் இப்படி கேட்கிறீர்கள்?"

"போலீஸால் தேடப்படும் ஒரு அயோக்கியனை நம்பி அலுவலகம் அமைக்க இடம் தேடி வந்திருக்கிறாயே?" என அவன் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே அந்த ஆள் ஒரு பெண்மணியுடன் வந்தான்.



"வா கண்ணு! உன்னை மாதிரி ஆளைத்தான் நான் தேடிக் கொண்டு இருக்கிறேன். புத்தம் புதிசா இருக்கிற நீதான் இங்கே குடிவர வேண்டும் என காத்திருக்கிறேன்," என்றாள் அந்த பெண்மணி.

"எனக்கு இடம் வேண்டாம்."

"அப்படி பட்டுனு சொல்லாதே! நீ விரும்புற வாடகைக்கே தர தயாராய் இருக்கிறோம். ஒண்ணு, இரண்டு குறைஞ்சா கூட பரவாயில்லை. உன்னை அம்புட்டு புடிச்சுடுச்சு! வந்து கையெழுத்து போட்டுட்டு போ" என கைப்பிடித்து இழுத்தாள்.

கையை உதறினாள் மதுமதி.

"ரொம்ப தொந்தரவு செய்தால் போலீஸிற்கு போன் செய்வேன்."

"தப்பு செய்யறவங்க தானே பயப்படணும்! நீ எப்படியும் எங்கிட்டே வருவே கண்ணு. இப்ப ஏதோ பயந்து போயிருக்கே!" என்றவள், "ஏ! பேமானி, போலீஸ் வருதுடா ஓடு!" என புரோக்கரைப் பார்த்து கத்தினாள். அவன் ஓட எத்தனிக்க போலீஸ் சுற்றி வளைத்துப் பிடித்தது. வீரமாய் பேசினாலும் நடத்த நிகழ்ச்சி சற்றே நடுக்கத்தை அவளுக்கு ஏற்படுத்தியது. நடுங்கிய அவள் விரல்களை கவனித்தவாறே,

"கையில் போனே இல்லை. போலீஸிற்கு போன் செய்வேன் என்று எப்படி மிரட்டினாய்? முறத்தில் புலியை விரட்டும் வீர தமிழச்சி தான் நீ!"

சற்று இறுக்கம் தளர்ந்து சிரித்தாள்.

''நாளை என் அலுவலகம் வா. உன் இடம் பற்றி பேசலாம்.'' அவள் ஒன்றும் சொல்லாமல் இருக்க,

''என்ன?''

''யார் என்ன சொன்னாலும் நம்ப வேண்டாம் என்று யாரோ சொன்னதாக ஞாபகம்.''

''அதை மட்டும் எப்படி நம்பினாய்?''

''தேள் கொட்டும் இயல்புடையது என்பதற்காக நான் ஏன் என் இயல்பை மாற்றிக்கொள்ள வேண்டும்?''

''கன்ப்பூயூஸியஸ் தத்துவம் என்றால் நன்றாய் தானிருக்கிறது. வா போகலாம்.''

எதிரே வந்த காரைப் பார்த்ததும் தன் காரை நிறுத்தினான்.

''தேங்க்யூ ரிஷி சார்! நாங்கள் தேடிய குற்றவாளியை உங்கள் வீட்டு விழாவிற்கு கூட வராமல் நீங்கள் பிடிப்பதற்கு உதவி செய்து விட்டீர்கள். புத்தக வெளியீட்டு விழா நன்றாக நிறைவடைந்தது. உங்கள் தங்கைக்கு தான் நீங்கள் வரவில்லை என்று வருத்தம்.''

''அவளை நான் சமாதானப்படுத்திக் கொள்கிறேன். காரணம் தெரிந்தால் சந்தோஷப்படுவாள். நீங்க வந்ததற்கு நன்றி''

அவர் கிளம்பி செல்ல,

''என்ன துருவ்? என்ன விழா? யாருடைய புத்தகம்? நீங்கள் ஏன் செல்லவில்லை? இங்கு ஏன் வந்தீர்கள்? எப்படி இவனைப் பற்றித் தெரியும்?' இப்படி ஆயிரம் கேள்விகள் மனதில் எழுந்தாலும் எதையும் அவள் கேட்கவில்லை.



'எல்லாம் உனக்காகத்தான்' என்ற சிறிய பதிலையும் அவனும் தரவில்லை.

மதுமதிக்கு அவர்கள் அலுவலகத்தின் மேல்தளத்திலேயே இடம் ஒதுக்கித் தந்தான். கணினிகளுடன், மதுமதியின் தொழிலுக்கு உதவக் கூடியவர்களை தனியார் வேலைவாய்ப்பு ஏஜென்ஸி மூலம் நேர்முகத்தேர்வு வைத்து அவள் தேர்ந்தெடுக்க வேண்டிய உதவிகளைச் செய்தான். நான்கு உதவியாளர்களுடன் தலைவியாய் மதுமதி தன் வேலைகளைச் செய்ய விகாஸ் சவுண்ட் மியூசிக், ரெக்கார்டிங் இவற்றைப் பார்க்க, எடிட்டிங் டைரக்ஷன் பொறுப்பை மதுமதியே வைத்துக் கொண்டாள்.

விடிகாலையில் எழுந்து அஸீம், அமோஸிற்கு பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு எட்டு மணிக்கெல்லாம் அலுவலகம் வந்துவிடுவாள். மாலை ஐந்து மணிக்கு அஸீம், அமோஸ் அவளைத் தேடி இங்கு வந்துவிடுவார்கள். ஒரு மணி நேரத்திற்கு பிறகு அவர்கள் கிளம்பி விட மதுமதி ஒன்பது மணிக்கு வீட்டிற்கு கிளம்புவாள்; மீதி செய்ய வேண்டிய வேலைகளை கையில் எடுத்துக் கொண்டு, தொடர்ச்சியாக காலையிலும் மாலையிலும் இருவேளைகளிலும் ரிஷியைப் பார்த்துவிடுவாள். அவளை கடந்து தான் அவன் அறைக்கு செல்ல வேண்டி இருந்தது. அவளை ஒரு நாள் கூட பாராமல் அவன் இருந்தது இல்லை. உள்ளே வந்து 'குட்மார்னிங்' சொல்லி அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு தான் செல்வான். பேச்செல்லாம் தொழிலைப் பற்றியே இருந்தது. அவள் வரைகின்ற படங்களை பலசமயம் பாராட்டுவான். சில சமயம் கிண்டல் செய்வான். அவன் சுட்டிக்காட்டும் குறைகளும் அவனைப்

போலவே கண்ணியமாய் இருக்கும். அஸீம், அமோஸ் வந்ததும் அவனும் வந்துவிடுவான். அவன் வரவில்லை என்றால் அமோஸ் போய் அழைத்து வந்துவிடுவான். நாளாக நாளாக மதுமதிக்கு மனது தவிக்க ஆரம்பித்தது. ட்விட்டரில் ''அம்மம்மா! நான் என்ன செய்வது? என்னால் முடியவில்லையே!'' என மனபாரம் தாங்காமல் எழுதினாள். தினம் தினம் சுற்றி சுற்றி வரும் ரிஷியை விலக்கவும் மனம் வரவில்லை! இணையவும் அறிவு இணங்க்வில்லை. மறுநாளே வழக்கம் போல் அவளுக்கு ட்விட்டரில் பதில் வந்திருந்தது.

''நல்லது, கெட்டது சீர் தூக்கி பார்! விழித்துக்கொள்! உன்னால் முடியும் கண்ணம்மா!''

'இதற்கு முன்னால் ரிஷிக்கும், அவளுக்கும் இடையில் ஏதோ கண்ணாமூச்சி விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. இப்பொழுதோ அவன் அவள் எதிரேயே இருக்கிறான். விழிப்புடன் இருந்தால் எது பொய்? எது உண்மை? என அவளுக்கு புரியாமல் போய்விடும்? அவன் ஒன்றும் முட்டாள் அல்லவே? சரஸ்வதி அம்மா சொன்னார்கள் என்று உதவினான் சரி! ஆனால் அதற்கு மேல் வேறு ஏதோ அக்கறையிருப்பது போல் தெரிகிறதே! இது நிஜமா? நேசம் கொண்ட மனதின் கற்பனையா? இன்னொரு முறை கனவு கண்டு ஏமாந்து நொந்து புண்ணாகி போக வேண்டுமா? ஒரே தவறை திரும்ப திரும்ப செய்பவன் முட்டாள் அல்லவா?'

**"I WON THE GOLD BECAUSE I DID NOT REPEAT MY MISTAKES"**

-சாய்னா



என்ற வாசகத்தை பெரிதாக கணினியில் பிரிண்ட் எடுத்து மேசை மேல் அடிக்கடி காணும்படி வைத்தாள். ஆனாலும் தன்னையறியாமல் முட்டாளாகவே இருக்க விரும்பினாள் போலும்!

ஏனோ மதுமதிக்கு வேலையில் கவனம் செல்லவில்லை. கணினியை பார்ப்பதும், பின் ஒரு பார்வை வாயிலை நோக்கி செலுத்துவதுமாக இருந்தாள். ''என்ன மேடம் ரிஷி சாரை தேடுகிறீர்களா?'' என அவள் டீம்மேட் கேட்க,

அவள் திடுக்கிட்டு போனாள். 'சே! இந்த மனதிற்கு ரோஷமே கிடையாதா? இப்படி அலைகிறதே! என எண்ணியவாறு எழுந்து வேறு ஏதாவது செய்யலாம் உள்ளே சென்றாள். அடுக்கியதையே திரும்ப திரும்ப அடுக்கியிருப்பாள் வாசலை பார்த்து கொண்டே. 'இந்த துருவ் எங்கே போய் தொலைந்தார்? எப்பொழுதும் நேரத்தை மிக துல்லியமாய் கடைபிடிப்பவர் ஆயிற்றே?' மறுபடியும் வெளியே வந்து எட்டிப்பார்த்தாள்; 'ஒரு வேலை நமக்குத் தெரியாமல் அவர் அறைக்குச் சென்றுவிட்டாரோ?'

''மேடம்! சார் இன்னும் அறைக்கு செல்லவில்லை.''

''அட! எல்லாருக்கும் நம் மனசு தெரிந்துவிடுகிறது. ஆனால் ரிஷிக்கு மட்டும் தான் எதுவும் புரியாது.'

''ஏன் மேடம் சாரை தேடுகிறீர்கள்? ஏதாவது முக்கியமான விஷயமா?''

''இல்லை! ஆமாம்... மார்க்கெட்டிங் விஷயமாக பேச வேண்டும்,'' என சமாளித்து விட்டு உள்ளே சென்றாள்

அரைமணி நேரம் கடந்ததும் மறுபடியும் அவள் வெளியே வர "மேடம்; சார் இன்னிக்கு ஆபீஸ் வரமாட்டாராம். நேற்றே லீவு எழுதி வைத்துவிட்டு சென்றுவிட்டாராம்."

"இல்லை, அதற்காக நான் வரவில்லை. வெளியில் செல்ல வேண்டும் சில பள்ளி முதல்வர்களை சென்று பார்த்து வர வேண்டும்," என மதுமதி கிளம்பி விட்டாள்.

நிஜமோ? என்னவோ? சொன்னதற்காக சில பள்ளி முதல்வர்களை சந்தித்து தங்கள் நிறுவன புத்தகத்தைப் பற்றியும், ஸி.டிக்கள் பற்றியும் எடுத்துக் கூறி தங்கள் டெமான்ஸ்ட்ரேஷனை காண வர வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தாள். பின் எலெக்ட்ரிக் ட்ரெயினில் ஏறினாள். அவள் தேடிக் கொண்டிருந்த ரிஷி துருவ் தன்வீட்டிற்கு வந்திருந்த மங்கல்பூர் மாமாவிடமும், அவர் செல்லப் பெண்ணிடமும் ஜாலியாக அரட்டை அடித்துக் கொண்டிருந்தான்.

"ரிஷி! என்னை ஒரு ஷாப்பிங் மாலுக்கு அழைத்து செல்ல முடியுமா? என் நண்பர்களுக்கு எல்லாம் பரிசு வாங்க வேண்டும்."

"ஓ! இப்பொழுது வேண்டுமானாலும் போகலாம். நீ தயாரா?"

அவள் உடனே கிளம்பிவிட்டாள்.

எலெக்ட்டிரிக் ட்ரெய்னில் இருந்து இறங்கிய பொழுது "இன்னா கண்ணு சௌக்கியமா? அன்னிக்கு தப்பிச்சுகினு போயிட்டே! இன்னிக்கு நம்ம கையிலே வசமா சிக்கி கிட்டே



ஆளு இருந்த தெகிரியத்துல என்னமா ராங்க் காட்டினே!" என பேசியவளை நன்றாகவே அடையாளம் தெரிந்தது. தாமதிக்காமல் வேகமாய் நடந்து இல்லையில்லை... ஓட்டமாய் ஓடி கும்பலில் மறைந்தாள். ஓட்டமும், நடையுமாக நடக்கும் பொழுது சட்டென்று செருப்பு அறுந்து போனது. அருகில் இருந்த கடைக்குள் நுழைந்தாள். பல்வேறு பொருள்களை விற்கும் கடை அது. கால்கள் அனிச்சையாய் செருப்பு விற்கும் இடத்திற்கு சென்றன. பார்வை வெளியில் சென்றது. அவள் மறுபடியும் கண்ணில் தட்டுப்படுகிறாளா? என்றும் வேறு யாரேனும் பின் தொடர்கிறார்களா என்றும் கவனம் இருக்க,

கருத்தில் பதியாமல் செருப்புகளை பார்த்துக் கொண்டிருந்தாள். "ஹேய்! எங்கே கவனம்?" என்ற மாமா பெண்ணிடம் "அந்த பாதங்கள் எத்தனை அழகு!" என விளம்பரத்தைக் காட்டினான் ரிஷி. "அதைச் சொல்கிறாயே! அங்கே செருப்பை பார்த்துக் கொண்டிருக்கும் பெண்ணை பார்! புறாவைப் போல் மென்மையான பாதங்கள்! வருட வேண்டும் போல் தோன்றவில்லை?" திரும்பிய ரிஷியின் விழிகள் வியப்பால் விரிந்தன. 'அட! நம் கண்மணி! உன் பாதங்கள் பொற்றாமரையல்லவோ? எத்தனை அழகாய் இருக்கிறது. கால்கள் பார்த்தாலே சாந்தமும், ஆனந்தமும் பெருகுகிறதே பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஆனால் மதுமதியோ எதையும் கவனிக்கவில்லை. ஓர் ஜோடி செருப்பை "இது உங்கள் கால்களுக்கு மிகவும் பொருத்தமாய் இருக்கும்" என கடைக்காரன் தந்ததை தேர்ந்தெடுத்து பில் போடச் சொல்லி கவுண்ட்டருக்குச் சென்றாள்.

பணம் கொடுக்க பில்லை பார்த்தபொழுது அதிர்ந்து போனாள். ரூபாய் ஒரு நூறு, நூற்று அம்பது விலையிருக்கும் என எண்ணியவளுக்கு அதிர்ச்சியோ அதிர்ச்சி!

அந்த செருப்பின் விலை ரூபாய் 'ஆயிரத்து ஐந்நூறு' அவள் போக வேண்டியது பிளாட்பார கடைக்கு அல்லவா? இந்த மாதிரி பெரிய ஷோரூமில் பொருளை வாங்கியது அவளது தவறல்லவா? கையில் இருநூறு ரூபாய்க்கு மேல் பணமில்லாமல் அதை எப்படி வாங்குவாள்? பில்லை வேறு போட சொல்லிவிட்டாள் அவசரகுடுக்கையாய்!

தர்மசங்கடமான நிலைமை. என்ன செய்வது? மன்னிப்புக் கேட்டு செருப்பை திருப்பி தந்துவிட வேண்டியது தான். தயங்கி அங்கே சென்றாள்.

''சார்...'' என அவள் ஆரம்பிக்கும் பொழுதே,

''இங்கே கொடு மதுமதி'' என அந்த பில்லை அவளிடம் இருந்து வாங்கி பணத்துடன் கவுண்ட்டரில் செலுத்தினான் ரிஷி. மேலும் அவள் எதுவும் பேசுவதற்கு முன் ''இது என் மாமா பெண்'' என்று தன்னுடன் வந்தவளை அறிமுகப் படுத்தினான். அவள் விழியில் விரிந்த புன்னகை உதட்டுக்கும் பரவ ''ஹாய் கிளாட்டு மீட் யூ'' என கைகளைப் பற்றி குலுக்கினாள் சிங்கப்பூர் சிங்காரி. ஜீன்ஸ் பேண்ட்டும், டாப்ஸுமாய் இருந்தவளை சிநேகமாய் பார்த்து ''ஹலோ! ஐயம் மதுமதி'' என அவள் பார்வையை படித்தவள் போல்,



''எனக்கு திருமணம் ஆகிவிட்டது. ரிஷி என்னை விட இரண்டு, மூன்று வயது சின்னவன்'' என்றாள் அந்தப் பெண். ரிஷிக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

''இப்ப என்ன சிரிப்பு வேண்டி கிடக்கிறது? உனக்கு உதவ உண்மையைச் சொன்னால் நீ ஆளையே கலவரப்படுத்தி விடுவாய் போலிருக்கிறதே!''

மதுமதியின் சிவந்த முகத்தை ரசித்தவாறே,

''இனி நீ போய் கொள்வாயா? எனக்கு அலுவலகத்தில் அவசர வேலையிருக்கிறது. மது நீ எங்கே போக வேண்டும்? அலுவலகம் தானே வா என்னோடு'' என ரிஷி கிளம்ப,

''போய் வா சந்தோஷமாக. இந்த ஊரில் பிறந்து வளர்ந்தவள்; ஏதோ ஐந்து வருடங்களாக சிங்கப்பூரில் இருப்பதால் வழி மறந்துவிடுமா என்ன? போகும் பொழுது காருடன் டிரைவரை வரச் சொல்லிவிட்டு போ.''

''ஓ! நிச்சயமாக. வா மது, எனக்கு அவசர வேலை இருக்கிறது'' என நிஜமாகவே வேலையிருப்பவனாய் அவன் அவளுடன் செல்ல..

''யாரோ இன்று அலுவலகத்திற்கு லீவு என்று சொன்னார்கள்'' என அவள் சிரித்தது இருவர் காதுகளிலும் நன்றாக விழுந்தது.

தன் மனதை கட்டுப்படுத்த முடியாமல் ... தவித்தாள்.

அவனை பாராமல் இருந்தால் தேவலை என்று தோன்றியது. அது அவன் மனதிற்கு எப்படி எட்டியதோ ஒ

மாதம் காணாமலே போனான். முதல் இரண்டு நாள் கண்டுகொள்ளாமல் தான் இருந்தாள்; இல்லையில்லை இருக்க முயற்சித்தாள். முதல் வாரம், இரண்டு வாரம். அதற்கு மேல் அவளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பொறுத்து பொறுத்துப் பார்த்து யோசித்து விஸ்வாவை விசாரித்தாள்.

''எங்கே உங்க பாஸை காணோம்?''

''ஏன் மேடம்? ஏதாவது உதவி வேண்டுமா? அவசரமா? முக்கியமான விஷயமா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை; பதினைந்து, இருபது நாளாய் காணோமேன்னு கேட்டேன்!'' என்று சொல்லி விட்டு அவன் பதில் சொல்வான் என காத்திருந்தாள். ஆனால் அவனோ அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. ''அவர் எப்போது வருவார்?''

'சும்மா கேட்பவர் வருகையை ஆவலாய் எதிர்பார்ப்பது ஏன்?' என்று அவன் கேட்கவில்லை. ரொம்ப சின்சியராய் பதில் சொன்னான். ''தெரியலை மேடம்! அவர் தனிப்பட்ட அலைபேசி எண் உங்களிடம் இருக்குமே? அதற்கு போன் செய்து கேளுங்களேன்.''

'கேலி செய்கிறானா? அவள் அவனுக்கு போன் செய்வதா?' ஒரு முறை கனிந்த குரலில் அவன் போனில் பேசியதற்கு பதில் பேசக் கூட முடியாமல் மெய்மறந்து போனதும்.... அவன் பிறகு அப்படி எதுவும் நடக்காதது போல் பேசியதும் இணைந்தே நினைவு வந்தது. இது அவளுக்கு தேவையா? என எண்ணிக் கொண்டாள்.



கடைசி வரை விஸ்வா, அவன் எங்கு சென்று இருக்கிறான் எனச் சொல்லவில்லை. அதற்கு மேல் கேட்க முடியாமல் நிறுத்திக் கொண்டாள். ஆனால் அவளை பாராமல் அவள் தவிக்கவே செய்தாள். அதை போக்க வேலையில் மிக தீவிரமாய் ஈடுபட்டாள். தொழில் தொடர்பிற்காக அலைப்பேசி புதிதாய் வாங்கியிருந்தாள். அவனை நினைத்துக் கொண்டே உறங்கியதாலோ? என்னவோ? வெகு சீக்கிரமே கலைந்துவிட்டது. 'மணி என்ன?' என பார்ப்பதற்காக அலைப்பேசியை கையிலெடுத்தாள் நாலு மணி.

அப்போது அது ஒலித்தது. யார் இந்த நேரத்தில்?

''ஹலோ?'' என்றாள் தூக்க கலக்கத்துடன்.

''மது... மதும்மா.''

தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. ''யார்?'' வெகு சிரமப்பட்டு கேட்டாள். ''நான் தான் ரிஷி பேசுகிறேன். எதற்கு என்னைத் தேடினாய்? நான் ஜெர்மனியில் இருக்கிறேன். என்ன வேண்டும்?''

'கனவு இல்லையே?' என கையை கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

''மது...மது... தொடர்பில் இருக்கிறாயா?'

''ம்! இப்பொழுது அங்கு என்ன நேரம்?''

'இருபது நாள் ஆள் இல்லாமல் ஏங்கின மாதிரியா பேசுகிறாய்? இப்ப மணி என்னவாம்? தலையில் இரண்டு போட்டால் என்ன!''

''ஹலோ'' ''விழித்துதான் இருக்கிறேன். மணி இந்தியாவின் என்ன?''

''நாலு.''

''இங்கு இரவு ९.30. ஏறக்குறைய ஐந்தரை மணி நேர வித்தியாசம்!''

'என்ன செய்வது? அவனும் அப்படித்தான் பேச வேண்டியிருந்தது. இப்படியே கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் இருவரும் பேசி கொண்டிருக்க முடிவில் மறுபடியும் கேட்டான்.

''முக்கியமான விஷயம் எதுவுமில்லையே?''

''ம்ஹூம்! சும்மா தான் கேட்டேன்.''

''சரி; வைக்கட்டுமா? எனக்கு களைப்பாய் இருக்கிறது. வெளியில் இருந்து வந்தவுடனே உனக்கு போன் செய்கிறேன். வேறு எதுவும் இல்லையே? உறங்க போகட்டுமா?''

''ஸாரி! குட்நைட்!''

''மன்னிப்பு எதற்கு? குட்மார்னிங்!'' என அவன் போனை வைத்தான்.

அவனுடன் பேசக்கூடாது, பேசக்கூடாது என்று ஒரு மணிநேரம் பேசியிருக்கிறேன். என்ன பேசினோம்? என்று யோசித்தால் சரியாய் நினைவில்லை! உப்பு சப்பில்லாத விஷயங்களைத்தான் இருவரும் உறக்கத்தை கொடுத்து கொண்டு பேசியிருக்கிறார்கள்! ஆக மதுவும் பலகீன



மானவள் தான்! இலட்சியத்தையே காற்றில் பறக்கவிட்டு விடுவாளா? சரித்திரம் மறுபடியும் திரும்புகிறதா?

'வேண்டாம் மது! மயங்காதே!' வழக்கம் போல் அறிவு எச்சரித்தது. அவன் பேசியதால் ஏற்பட்ட திருப்தியோ? அல்லது அறிவின் எச்சரிக்கையின் விளைவோ? எந்த வித தவிப்பும் இன்று முழு மூச்சாக வேலையில் இறங்கினாள். மூன்று மாதத்தில் முழு வேலையையும் முடித்து விடும் அளவிற்கு உழைத்தாள். ஜப்பானியர்களின் வெற்றிக்கான பார்முலாவான குறை சொல்லாத குணத்தையும், அர்ப்பணிப்பையும் தன் தொழிலில் காட்டினாள். அவள் உழைப்பைப் பார்த்து விஸ்வா கூட அசந்து போனான். எதற்கு இந்தப் பெண் அசுர உழைப்பு உழைக்கிறாள்? யாருக்கு எதை நிரூபிக்க போகிறாள்? உடல்நலம் பாதிக்கப்படுமோ? எனக் கூட பயந்தான். அதை ரிஷியிடம் உடனே தெரிவிக்க.. அவன் மறைமுகமாய் சில ஏற்பாடுகளை செய்தான். அவள் உதவிக்கு இன்னும் இரண்டு பேரை அனுப்பினான். அஸீம், அமோஸை மாலையில் கூடுதலாக இரண்டு மணிநேரம் அவளுடன் இருக்கச் செய்து வேலையின் கடுமையில் இருந்து தளர்த்தினான். மனம் விரும்பிச் செய்யும் வேலையில் களைப்போ, சோர்வோ தெரிவதில்லை என்பது மற்றவர்களுக்கு புரியாது என்ற உணர்வோடு வேலையை தொடர்ந்தாள். அறிவியலும், கணிதமும், காமிக்ஸ் புத்தகங்களாக அழகாய் வடிவெடுத்தன. அவை ஸிடிக்களாக. டி.வி. டிக்களாக உருமாற இன்னும் மியூசிக் மற்றும் டப்பிங் வாய்ஸ் சேர்க்க வேண்டி இருந்தது. டப்பிங் தியேட்டருக்கு விகாஸுடன் சென்ற பொழுது தன்னை கடந்து சென்றவனை திரும்பிப் பார்த்தாள்.

"என்ன? அவர் உனக்கு தெரிந்தவரா? அவர் தான் புது தெலுங்கு நடிகர்."

"எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. ஒருவேளை டி.வியில் பார்த்திருப்பேனோ?"

"உனக்கு அதற்குக் கூட நேரம் இருக்கிறதா?"

"கிண்டல் செய்யாதே விகாஸ்."

எல்லா வேலைகளையும் முடித்து குறுந்தகடுகளைப் பார்த்த பொழுது அது மிக அற்புதமாய் வந்திருந்தது. அவளுக்கோ படைப்பாளியாய் மனம் நிறைந்திருந்தது.

காலையில் அழைப்பு மணியொலிக்க கதவைத் திறந்தால் ரிஷி பூங்கொத்தும், புன்னகையுமாய் அங்கே நின்றிருந்தான்.

## 30

அவனை அந்த காலை வேளையில் அவள் எதிர்பார்க்க வில்லை. அகமலர்ந்து முகம் மலர்ந்தாள்.

"வாழ்த்துக்கள் மது! நேற்று உன் ஸி.டியைப் பார்த்தேன். எக்ஸலண்ட்!" பூங்கொத்தை அவளிடம் நீட்டினான்.

"நன்றி! உள்ளே வாங்க!"

ராம்லால் மனைவியும் வெளியே வந்து ரிஷியை வற்புறுத்தி உள்ளே அழைத்துச் சென்றாள்.



"மதுமதியை வாழ்த்திவிட்டு போக வந்தேன். முக்கியமானவங்களை, பிடித்தமானவர்களை நேரில் வாழ்த்துவது தான் என் வழக்கம்!' ஊரிலிருந்து வந்த அரைமணியில் இங்கே கிளம்பி வந்துவிட்டேன்."

"அச்சா ஸாப்! உங்கள் பரபரப்பான வேலைகளுக் கிடையில் இங்கே வந்ததை பெருமையாய் நினைக் கிறோம்!" என ராம்லால் சந்தோஷப்பட,

"சரி! வருகிறேன். ஸீ.யூ மது" என்று அவன் கிளம்பினான். அவன் இருந்து ஐந்து நிமிட நேரம் தான் என்றாலும் மதுவிற்கு பேச்சு மறந்து போயிற்று!

துப்பட்டாவை சரி செய்து கொண்டு விழித்தவளை பார்த்து புன்னகைத்தான். அப்பொழுது தான் குளித்து வந்திருப்பாள் போல!

"முகத்தில் ஆங்காங்கே நீர்த்திவலைகள்! ரோஜாப் பூவில் பனித்துளிகள் போல' கூட வாசல் வரை நடந்தவளை பார்த்தவாறே "ட்யூ ட்ராப்ஸ் ஆன் த ரோஸ்" என பாடிக் கொண்டே காரை கிளப்பினான் ரிஷி!

மது யோசித்துக் கொண்டே நின்றாள். 'அன்றும் வாழ்த்தி மலர் கொத்து அனுப்பினான். இன்றும் வாழ்த்தி பூங்கொத்து கொடுக்கிறான். இரண்டுக்கும் இடையே என்ன வித்தியாசம்? ம்ஹூம் ஏதோ இருக்கிறது? என்ன சொன்னார்? முக்கியமானவர்களை இல்லையில்லை... பிடித்தமானவர்களை நேரில் வாழ்த்துவது தான் என் வழக்கம்! என்றானே? அப்படியென்றால்... அன்று அனுப்பியது அவனில்லையா? அல்லது.... இன்றைக்கு தான் அவள் பிடித்தமானவளாக இருக்கிறாளா?'

யோசிக்க யோசிக்க குழப்பம் தான் ஏற்படும் போலிருந்தது. 'அப்போது பூங்கொத்து, தந்தி இவன் அனுப்பவில்லை என்றால் அன்று டெலிபோனில் கேட்ட குரல் இவனது அல்லவா? மேலும் பரிசாய் வந்த விலையுயர்ந்த தங்கக் கடிகாரம்...

அவை எப்படி பொய்யாக முடியும்? இவற்றிற்கு அவன் விளக்கம் தான் என்ன? இருவரில் யார் பொய்யர்? அவனா? அவளா?

எது எப்படியோ இருந்துவிட்டு போகிறது! முதலில் சரஸ்வதி அம்மாவைப் பார்த்து நன்றி சொல்லவேண்டும். நினைத்த பொழுதே அவள் அலைப்பேசி ஒலித்தது. 'அட! அம்மா தான்'

''அம்மா! எப்படி இருக்கிறீர்கள்?'' என்றாள் உற்சாகக் குரலில்.

''ம்! சென்னையில் தான் இருவரும் இருக்கிறோம். ஆனால் பார்த்து மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஏன் போன் பேசி கூட எத்தனை நாட்கள் ஆகிவிட்டன?''

''இப்ப தான் உங்களை பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். நீங்கள் பேசிவிட்டீர்கள்! என்ன விஷயம் அம்மா?''

''நீ சொல்? எதற்கு என்னை பார்க்க வேண்டும் என்று நினைத்தாய்?''

''அம்மா என் கனவு நனவாகி விட்டது. ஸி.டிக்கள் தயார் ஆகிவிட்டன. இனி அவற்றை வெளியிட வேண்டியது தான். உங்களுக்கு நன்றி தெரிவிக்க நினைத்தேன்.''



''அம்மாவுக்கு நன்றி சொல்லக்கூடாது.''

''சரி அம்மா! உங்கள் ஆசீர்வாதம் வேண்டும்!''

''உனக்கு என்றைக்கும் என் ஆசீர்வாதம் உண்டு.''

''அம்மா என்ன சொல்ல வந்தீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள். பேச்சு சுவாரஸ்யத்தில் இருவரும் மறந்து விடப் போகிறோம்.''

''என் வீட்டிற்கு தான் வர மறுக்கிறாய். எங்கள் வீட்டில் முக்கியமான ஒரு விழா வருகிறது. அதற்காவது வருகிறாயா?''

''என்ன விழா? எங்கு அம்மா?''

''ஒரு குட்டி பாப்பாவின் பிறந்தநாள் விழா! ஹோட்டலில் தான் வைத்திருக்கிறோம். நீ அவசியம் வரவேண்டும் என்பது இந்த அம்மாவின் ஆசை! உன் விருப்பம் எப்படி?''

''சரி வருகிறேன் அம்மா.''

''இப்பொழுது தான் அம்மா மேல் உனக்கு இரக்கம் வந்திருக்கிறது.''

''போங்க அம்மா!''

''அடுத்த வெள்ளிக்கிழமை அவசியம் வந்துவிடு.'' இவர்கள் இங்கே பேசிக் கொண்டிருந்த பாவ்னா தன் அண்ணனிடம் ''அண்ணா! பாப்பா பிறந்த நாள் விழாவிற்கு நீ அண்ணியை அழைத்து வருகிறாயா? அல்லது நான் போய் அழைத்து வரட்டுமா?''

"இப்ப தான் உங்க அண்ணன் அவளுடன் கடலை போட ஆரம்பித்து இருக்கிறேன். அதற்குள் இங்கே அழைத்து வருவதென்றால்.... அவள் என்னை வறுத்துவிடப் போகிறாள்."

"நீ எப்பொழுது தான் அண்ணியிடம் மனம் திறந்து பேசப் போகிறாய்?"

"அவள் அமைதியான எரிமலை போல் இருக்கிறாள். கொஞ்சமாவது பழைய விஷயம் பேசினால் தானே? என்னைத் தேடி ஓடி வந்தவள் மாதிரியா இருக்கிறாள்? ஏதோ புது லோகப் பெண் போல, என்னை இப்பொழுது தான் அறிந்து கொண்ட மிகப் பிரபல (கம்பெனி) நிறுவன உரிமையாளர் போலவே பார்க்கிறாள்; நடந்து கொள்கிறாள். கொஞ்சமாவது உறவு காட்டுகிறாளா? தான் எடுத்துக் கொள்கிறாளா? எதுவுமில்லை. உரிமை சீற்றம் கட்டினால் கூட தேவலை என்று தோன்றுகிறது. கொஞ்சம் சீண்டினால் 'கப்' பென்று பிடித்துக் கொள்ளலாம் பார்."

"அண்ணா, மதுவை வாராதே! ஜெர்மனியிலிருந்து மணிகணக்கில் உப்பு சப்பில்லாமல் இருவராலும் பேச முடிகிறது. ஊரிலிருந்து வந்ததும், வராததுமாக பூங்கொத்துடன் தேவியின் திருமுகத்தை காண ஓட முடிகிறது. அங்கே அவளுக்கு உன் முகத்தை கண்கொட்டாமல், பேச்சு வராமல் பார்த்துக் கொண்டே இருக்க முடிகிறது! இதெல்லாம் அன்பில்லையா?"

"எங்கே இந்த விஸ்வா? காரில்தான் இருந்தான் என்று நினைத்தேன். எல்லாவற்றையும் போட்டுக் கொடுத்து விட்டானா?"



"என்ன செய்வது? அவனுக்கு ஒரே வருத்தம்! நம்ம பாஸ் இப்படி விவரம் தெரியாதவராய் இருக்கிறாரே, அவனவன் ஒன் அவரில் லவ்வை டெவலப் பண்ணி ஜாலியாய் கிளம்பிடுரான். இவர் என்னவோ எவரெஸ்ட் ரேஞ்சிற்கு இன்னும் யோசிச்சுக்கிட்டு ஜவ்வு மிட்டாய் கால்த்தில் இருக்கிறாரேன்னு கவலைப்படுகிறான்."

"இருக்கும்! இருக்கும்! இலட்சக்கணக்கில் அவனுக்கு சம்பளம் கொடுக்கும் முதலாளி ஏமாளி என்று இன்றைக்குத் தான் தெரிந்ததாக்கும்?"

பாவ்னா சிரிக்க, ரிஷியும் அவளுடன் சிரித்தான். ஸி.டி வெளியீட்டு விழா பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமை தாங்க, பத்திரிகை நண்பர்கள் புடை சூழ ரிஷி ஜமாய்த்து விட்டான். பள்ளி கல்வித்துறை அமைச்சர் முதல் ஸி.டியை பெற்று கொண்டு வாழ்த்தி பேசினார். கல்வித்துறையை சார்ந்தவர்கள் அனைவரும் வருகை புரிந்து இருந்தனர். வளமான வசதியுடைய பெற்றோர்கள், தம் பிள்ளைகள் கல்வியில் சிறக்க எவ்வளவு செலவு வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருந்தார்கள். ஆனால் மதுமதி கல்வி அனைவருக்கும் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் மிக குறைந்த விலையே சிறிய இலாபமே கிடைத்தால் போதும் என நிர்ணயித்து இருந்தாள். ஆனால் ஸி.டி வெளியிட்ட அன்றே பெருமளவு ஆர்டர்கள் குவிந்துவிட்டன. விழா மேடையில் அவள் ஒதுங்கி இருந்தாலும் படைப்பாளியாய் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது பல்வேறு ஒளி அலைகள் மின்னின. மறுநாள் செய்தித்தாள் மூலம் இந்த செய்தி கல்லூரியிலும், திருப்பூரிலும் பரவியது. கற்பகமும், கணேசனும் நிம்மதி

அடைந்தாலும் அவளை பார்க்க தவித்தனர். கிஷோர் செய்தித்தாளை வகுப்பின் முன்னால் நின்று தொலைக் காட்சி செய்தி வாசிப்பாளர் போல் எல்லோருக்கும் வாசித்து காட்டிக் கொண்டு இருந்தான்.

“நம்ம ஆள் தான் எங்கிருந்தாலும் கெட்டிக்காரின்னு நிரூபித்து விடுகிறாள். எத்தனை எத்தனை பழி போட்டு இங்கிருந்து துரத்துனீர்கள்! கடல்ல போட்டாலும், காட்டில் போட்டாலும் வெளியே வந்துருவோம்ல!” என வசம் பேசினான். ஸ்டீபன் தான் அவளுக்காக பணம் கட்டியவன் எனத் தெரிந்ததும் உமாவும் மிகவும் வருத்தப்பட்டாள். ஒவ்வொரு நாளும் ஸ்டீபன் எது தவறினாலும் மதுமதிக்காக எது தவறினாலும் பிரார்த்தனை பண்ண தவறவில்லை. மதுமதியின் மேல் கல்லூரி பணத்தை திருடியதாக பழி சுமத்திய விஷயம் தெரிந்ததும் கோபத்தில் பொங்கி கல்லூரி முதல்வரிடம் மாணவர்கள் முன் அவள்மேல் தவறு இல்லை என்பதை நிரூபித்தான். இன்று அவளைப் பற்றி அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவளுக்காக தான் செய்த பிரார்த்தனை வீண் போகவில்லை என்றும் அமைதி அடைந்தான். மாலினி விபத்து நடந்ததில் இருந்து கல்லூரிக்கு வருவதில்லை. அப்படித்தான் அவள் வீட்டில் சொல்லியிருந்தனர். ரேஷ்மா மட்டும் தன்னந்தனியாய் ஒற்றைப் பறவையாய் கல்லூரிக்கு சிரத்தையில்லாமல் வந்து கொண்டிருந்தாள். அவளும் செய்தி அறிந்து பெருமூச்சு விட்டாள்.

மதுமதிக்கு அன்றைக்கு தேதியை பார்த்ததுமே தனக்குத்தானேவாவது கொண்டாட வேண்டும் போ[illegible] தோன்றியது. பெரிய அளவில் சமைத்து அவ[illegible]



தோன்றியது. பெரிய அளவில் செய்யாவிட்டாலும் ரசித்து சமைக்க பழகி இருந்தாள். ஏனோ இன்றைக்கு தானே சமைக்க ஆசைப்பட்டாள். இராம்லால் வீட்டில் அனைவரும் உறவினர் திருமணத்திற்காக மும்பை சென்றிருந்தனர். பாசுமதி அரிசி, பாசிப்பருப்பு, சுண்டக்காச்சிய பால், நெய் - 100 கிராம், 25 கிராம், 1½ லி 100 கி மற்றும் 600 கி என சரியா அளந்து எடுத்துக் கொண்டாள். அவள் அறிவியல் மாணவி அல்லவா? இயற்பியல் தராசு மாதிரி துல்லியமாக எடை போட அல்லவா விரும்புவாள். பாசிப்பருப்பை வறுத்து கழுவி கொதிநீரில் போட்டு முக்கால் பகுதி வெந்ததும் அரிசியையும் கடைந்து போட்டு நன்கு வேகவிட்டாள். பிறகு பாலையும் ஊற்றி நன்கு குழைய வேகவிட்டாள். பின் பொடித்த வெல்லத்தைப் போட்டு நன்கு குழைய விட்டு இறக்கினாள்.

வறுத்த முந்திரி, திராட்சை, நெய் சேர்த்தாள். வாசனை வீடு முழுவதும் பரவியது. அஸீம், அமோஸ் கூட வீட்டில் இல்லாததால் செய்த இனிப்பு முழுவதையும் டிபன் பாக்ஸில் எடுத்து வைத்தாள். குளித்துவிட்டு பழக்கமில்லா வழக்கமாய் மெரூன் நிற கோட்டா புடவையும், அதன் டிசைனுக்கு பொருத்தமான டிசைனர் ப்ளவுஸுமாய் அலுவலகம் கிளம்பினாள். அவள் உள்ளே நுழையவும் ரிஷி எதிரே வரவும் சரியாய் இருந்தது. அவனையும் மீறி 'உய்' என்று மெலிதாய் விசிலடித்தான். அவளுக்கு வெட்கமாய் போய்விட தலையை குனிந்து கொண்டாள்.

“மது, உன்னிடம் ஒன்று சொல்லவேண்டும்; அடுத்த ஸி.டி. பிள்ளைகளுக்கு பொழுதுபோக்காய் சிறிய விமானம் செய்ய கற்றுக் கொடுத்தால் என்ன?”

''ம்! நல்ல யோசனை; செய்யலாம். அதைப்பற்றி குறிப்புகள் தயார் செய்ய வேண்டும். கோட்டூர்புரம் லைப்ரரிக்கு செல்ல வேண்டும்.'' இப்படியே பேசிக் கொண்டிருக்க இரண்டு முறை விஸ்வா ரிஷியை தேடிக் கொண்டு அங்கு வந்துவிட்டான். ரிஷியோ முக்கியமான விஷயம் இருப்பது போல் அவளிடம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். நான்காவது முறை அவனைத்தேடி விஸ்வா வந்த பொழுது ரிஷியிடம், ''பாஸ் நம்ம ஆபீஸை இப்படி இங்கே ஷிப்ட் பண்ணிட்டீங்களா?'' எனக் கேட்டான்.

'நேரம் காலம் தெரியாமல் வருகிறான் பார்' என எண்ணிக்கொண்டே

''பர்த்-டே பேபி இன்னிக்கு ஆபீஸ்உக்கு லீவ்'' என்றான்.

''வாழ்த்துக்கள் பாஸ்! இதை எப்படி பாஸ் இவ்வளவு ரகசியமாய் வச்சிருக்கீங்க?''

''நான் சின்ன வயதில் இருந்தே பிறந்தநாள் கொண்டாடுவது இல்லை. அம்மா கூட ரொம்ப ஆசைப்பட்டு இருக்கிறார்கள். எனக்கு தான் அதில் விருப்பமில்லை.''

''ஆகா! கேக் வெட்டாவிட்டாலும் அட்லீஸ்ட் ஸ்வீட், ஒரு சாக்லேட் கூட இல்லையே!''

சட்டென்று மதுமதி ஸ்பூனும், டிபன் பாக்ஸையும் ரிஷியிடம் நீட்டினாள். வாங்கித் திறந்தவன்,

''ம்மா! என்ன வாசனை?'' எடுத்து வாயில் போட்டான். சுவையில் சப்புக் கொட்டினான். ''ஆகா! ஓகோ! அக்கார வடிசலா? அக்கறை வடிசலோ? அருமையோ அருமை. என்



பிறந்தநாளை அற்புதமாய் இனிப்பு சாப்பிட்டு இதோ கொண்டாடிவிட்டேன்!''

''வாழ்த்துக்கள்'' என்றவளை நோக்கி கையை நீட்டினான். தயங்கிய கைகளை நானேப் பற்றி ''நன்றி'' என குலுக்கினான். குலுக்கிய பிறகும் அவனும் விடவில்லை. அவளும் ஒன்றும் சொல்லவில்லை.

''பாஸ்! நான் எஸ்கேப் ஆகிறது தான் நல்லதுன்னு தோணுது'' என விஸ்வா சொன்னபிறகே மதுமதி கைகளை உருவிக் கொண்டாள் சிவந்து போன முகத்துடன்!

## 31

தன் காலில் விழுந்து வணங்கியவனை அன்போடு உச்சி முகர்ந்து ஆசீர்வாதம் செய்தார்.

''இப்பொழுது தானப்பா, கோவிலுக்கு போய் உனக்கு அர்ச்சனை செய்துவிட்டு வருகிறேன். வீட்டில் இனிப்பு செய்ய சொல்லி இருக்கிறேன்.''

''ஏற்கனவே சார் இனியவர்களுடன் கொண்டாடி விட்டார்.''

''என்ன சொல்கிறாய் விஸ்வா?''

''இனிப்பு சாப்பிட்டு கொண்டாடியதை இப்படி சொல்கிறான் அம்மா!'' அவர் சிரித்துக் கொண்டே உள்ளே செல்ல,

''ச்சொ! என்ன சுவை! என்ன சுவை?''

''எது அண்ணா?''

''இன்றைக்கு அருமையான அக்காரவடிசல் உன் அருமை அண்ணி செய்து கொண்டு வந்திருந்தாள். என்ன சுவை தெரியுமா?''

''ஹேய்! எனக்கு கொஞ்சம் கொண்டு வந்திருக்கக் கூடாது?''

''நீங்க வேறு? பக்கத்தில் நின்று கொண்டிருந்த எனக்கு ஒரு ஸ்பூன் கூட கொடுக்கவில்லை.''

''அண்ணி சர்க்கரைக்கு பதிலாக உப்பை போட்டிருந்தால் கூட அண்ணன் அவர் முகத்தை பார்த்துக் கொண்டே விழுங்கியிருப்பார்!''

''ஒருவேளை அப்படியும் இருக்குமோ? மேடத்தின் கௌரவத்தை காப்பாற்றத்தான் எனக்கு ஒரு ஸ்பூன் கூட தரவில்லையோ?''

''என் ஆளைப்பற்றி மோசமாக பேசாதே! அவள் எல்லாவற்றிலும் கெட்டிக்காரியாக்கும்!''

''இனிமே அப்படித்தான் சொல்லிக் கொள்ள வேண்டுமாக்கும்.''

''நாளை உனக்கும் ஒருத்தி வருவாள். அப்பொழுது நான் வைத்துக் கொள்கிறேன்.''

அவன் சிரித்துக் கொண்டே செல்ல,

''ஏன் அண்ணா உன் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட மாட்டேன் என்கிறாய்?''



''என் பிறந்தநாளுக்கு அடுத்த நாள் அப்பா இறந்து போனார்? அப்பாவும், அம்மாவும் எப்படி வாழ்ந்தார்கள்? நமக்கு அவர்கள் அன்பும், பண்பும் நன்றாகத் தெரியும். அம்மா நமக்காக அத்தனை துக்கங்களையும், விழுங்கிக் கொண்டு தொழிலையும், வீட்டையும் கீழே விழுந்து விடாமல் தலைநிமிர்த்தினார்கள். அவர் உள்ளுக்குள் பற்றற்ற துறவி போல் வாழ்வது எனக்கு நன்றாகத் தெரியும். அப்பாவின் இழப்பை ஒருநாள் முன்னதாகவே என் பிறந்தநாள் நினைவுபடுத்துவதனால் நான் அதை கொண்டாடுவதே இல்லை.''

பாவ்னா நெகிழ்ந்து போய் அமர்ந்திருக்க, ரிஷி 'மூடு' மாற்றும் எண்ணமாய்.

''ஹேய்! வருண் என் மருமகள் பிறந்தநாளுக்கு சிங்கப்பூரிலிருந்து வந்துவிடுவான் அல்லவா?''

''முதல்நாளே வந்துவிடுகிறேன் என்றார். மாலினி தான் வரமாட்டேன் என அடம்பிடிக்கிறாள்.''

''அவளை கொஞ்சம் விட்டுப்பிடி! முகத்தில் தழும்புடன் வர அவளுக்கு விருப்பம் இருக்காது; வற்புறுத்தி மனத்தை சங்கடப்படுத்தாதே!''

''அவரும் அதையே தான் சொன்னார். மதுதான் உன்னிடம் நன்றாக பழகுகிறாளே? இப்பொழுதாவது விழாவிற்கு கூப்பிடேன்.''

''அவள் மனம் விட்டு ஒரு வார்த்தை சொன்னால் நான் அடுத்த நொடியே நம் வீட்டிற்கு அழைத்து வந்து விடுவேன்! அம்மாவிற்கு எப்படி அவளைத் தெரியும்

என்றும் தெரியவில்லை. கேட்டாலும் நாசுக்காய் நழுவி விடுகிறார்கள். ஒருவேளை அம்மாவை காப்பாற்றிய பெண் இவளாய் இருப்பாளோ?''

''இருக்காது அண்ணா! இருந்தால் நம்மிடம் மறைக்க வேண்டிய அவசியம் என்ன? மதுமதியைப் பற்றியும் எதுவும் தெரியாது என்று தான் நினைக்கிறேன். தெரிந்து இருந்தால் இந்நேரம் அவர்களே அவளிடம் பேசி உன் பிரச்சனையை தீர்த்து இருப்பார்கள். ராம்லாலுக்கு நண்பர் வீட்டுப் பெண்ணாக இருக்க அம்மா உதவ வேண்டும் என்று நினைத்து இருக்கலாம். அம்மாவின் இரக்க குணம் தான் உலகுக்கே தெரியுமே?''

''பொறுத்திரு! பார்ப்போம்.''

மதுமதி க்ரீம் கலரில் கருநீல பார்டரில் சரிகை வேலைப்பாடு செய்யப்பட்ட புடவை அதற்கு மிக பொருத்தமாய் சரிகை புள்ளியிட்ட கருநீல நீளக்கை ப்ளவுஸ், பின்பக்கம் ஸ்டிரிங் எனப்படும் குஞ்சம் வைத்து தைக்கப்பட்டிருந்தது. காதுகளில் காஷ்மீர் ஜிமிக்கி, கழுத்தில் அதற்கு பொருத்தமான பென்டண்ட்டுடன் கூடிய செயின் என விழாவிற்கு கிளம்பினாள்.

ஹோட்டலுக்குள் அவள் நுழையும் பொழுதே சரஸ்வதி பார்த்து அவளை நோக்கி விரைய...

''அம்மா'' என அவளும் அருகே சென்றாள்.

''என் கண்ணே பட்டுவிடும் போல் இருக்குடா'' என அவள் கண்ணத்தில் தட்டி உள்ளே அழைத்துச் சென்றார்.



''யார் இந்த பேரழகி?... ''என உறவுக்காரர்கள் வியக்க அந்த ஹோட்டலை ஒட்டியிருந்த ரெஸ்ட்டாரண்ட்டில் சாப்பிட வந்த அந்த இளைஞனும் அவளைப் பார்த்தான். 'மாடலிங் கேர்ளா? பாலிவுட் ஸ்டாரா?' என யோசித்தான்.

விஸ்வா மதுமதி சரஸ்வதியுடன் செல்வதைப் பார்த்தான். நேரே ரிஷியிடம் சென்றான்.

''பாஸ்! மேடத்தை வரச் சொன்னீர்களா? அம்மாவுடன் செல்கிறார்கள்.''

''இல்லையே! இதோ என் தேவதையை நான் போய் வரவேற்கிறேன்.''

எதிரே வந்த தாயிடம்,

''எங்கேம்மா மது?''

''சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள்.''

டைனிங் ஹால் செல்ல அவன் முற்பட,

''ஹலோ ரிஷி! எங்கே உங்களை பார்க்கவே முடியலை? எந்தத் துறையில் கால் பதிச்சாலும் ஜெயிச்சிடுறீங்க?'' என ஒருவர் பிடித்துக் கொண்டார்.

ஏதோ பதில் சொல்லிவிட்டு நழுவலாம் என்றாலோ மனிதர் விடுவதாய் இல்லை. அதற்குள் மதுமதியே டைனிங் ஹாலில் இருந்து வெளியே வந்துவிட்டாள்.

அலையாய் அலையாய் கூந்தல் முகத்தை வருட தென்றல் போல வந்தாள் இனிய நறுமணத்துடன். ரிஷி வைத்த கண்ணை எடுக்காமல் அவளை பார்த்துக்

கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் புன்னகையுடன் அவள் அருகே வர,

"ஹாய்."

"நீங்க எங்கே இங்கே?"

"உன்னை கூப்பிட்டவர்கள் என்னையும் கூப்பிட்டு இருக்கலாம் அல்லவா?"

"சரி சரி" என தலைசரித்து சிரித்தவளின் காதில் ஆடிய ஜிமிக்கிகளைப் பார்த்தான்.

அவன் மனசை கட்டி அல்லவா ஆடுகின்றன! எத்தனை நாடுகள் சுற்றியிருப்பான்? எத்தனை அழகிய பெண்களைப் பார்த்திருப்பான்? ஆனால் இவளிடம் மட்டும் அவன் மயங்கியது என்ன? இருவரும் சற்று ஒதுங்கி யார் பார்வையிலும் சட்டென படாதவாறு நின்றது அவன் மெய்மறந்து நிற்க வசதியாய் போயிற்று!

நெற்றியில் சுடர் போல் ஜொலித்த பொட்டு மேலும் அவளுக்கு அழகூட்டியது. ஜொலிக்கின்ற கண்களுக்கு இடையில் போட்டி போட்டுக் கொண்டு புன்னகையுடன் இதழ்களும் ஜொலித்தன. திருத்தவே வேண்டியிராத அழகான அளவான அடர்ந்த புருவம், எடுப்பான நாசி, அறிவுக்களை சொட்டும் அழகு முகம், நீண்ட அழகான விரல்கள்...

ஆகா! அத்தனைக்கும் மேலான அந்த அழகிய பாதங்கள்; அதை நடக்க நடக்க பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலிருந்தது!



அவன் கனிந்து பார்த்துக் கொண்டே இருக்க... அவளுக்கு மிகவும் கூச்சமாய் இருந்தது. அவன் பார்வையே அவளை சிவக்க வைத்தது. விலக நினைத்தாலும் கால்கள் நகர்ந்தால் தானே? அவள் காலிற்கு மனசு நகர்ந்து அவனை விட்டு விலக விடாமல் பசை போல் தரையில் ஒட்ட வைத்து விட்டதோ?

"நான் போகட்டுமா?"

"ம்ஹூம், இனி எங்கும் போக முடியாது!"

"ஏன்? இன்னும் பிறந்தநாள் பாப்பாவை பார்க்கவில்லை; பரிசு கொடுக்க போக... போக... வேண்டும்."

"கொடுக்கலாம், கொடுக்கலாம்" என அவன் சொல்லிக் கொண்டிருந்த பொழுது "ரிஷி, உன்னை கூப்பிடுகிறார்கள்" என ஒருவர் அழைத்தார். "வருகிறேன் மாமா" என்றானே ஒழிய நகரவில்லை.

முகத்தில் பறந்த கூந்தலை ஒதுக்க கையைத் தூக்கினாள். அப்போது தான் ரிஷி அந்த இடது கையில் அணிந்திருந்த கடிகாரத்தை பார்த்தான்.

"இது.... இது... எப்படி இவள் கையில்? என அவன் யோசிக்க அவன் கண்கள் எதை பார்க்கின்றன? என்பதை அவளும் அறிந்தாள். அவனைத் தேடி வந்த அன்று கூட அதை அணிந்திருக்கவில்லை. இன்றைக்கு தான் முதன்முதலாய் இனிய கனவுகளுடன் அணிந்து வந்திருக் கிறாள். இதை எதேச்சையாய் இன்று அவன் பார்த்து விட்டான். இதை பார்த்ததும் கூட அவளை அன்று அவனுக்கு தெரியாது! அவள் மேல் நேசமில்லை!' என

மறுப்பானா? அவள் ஆசையில் மண் விழுவதைப் போல் அவன் கேட்டான்.

''மதும்மா! இது... இந்தக் கடிகாரம்... உனக்கு எப்படி கிடைத்தது?''

''ம்; திருடினேன்'' என பட்டென்று வெடித்தாள். அவள் நெஞ்சம் வலித்தது, 'இந்தப் பரிசை அனுப்பி அவள் வீட்டில் பூகம்பம் வெடிக்கச் செய்துவிட்டு... எப்படி கிடைத்ததாம்? கேள்வியைப் பார்?'

மேலும் தாங்காமல்,

''நன்றாக தெரிந்து கொள்ளுங்கள்; சுவர் ஏறி குதித்து உங்கள் வீட்டில் திருடினேன்! ஏற்கனவே எனக்கு நிறைய பட்டங்கள் படிக்காமலே கிடைத்துவிட்டன. மோசமான வள், நடத்தைக்கெட்டவள், நம்பிக்கைத்துரோகி, ஏமாற்றுக்காரி இப்படி பல! அதில் இந்த திருடி பட்டம் ஒன்று புதிது அல்ல! 'பொக்கே' அனுப்பி வாழ்த்து கூறி, சந்திக்க அலைய வைத்து போனில் மது டார்லிங் என கொஞ்சி கனவை வளர்த்து பரிசு கொடுத்து நம்பிக்கைத் தந்து ஆதரவை தேடி, ஓடி வரச் செய்த முட்டாள் பெண்ணல்லவா? அவளையே உங்களுக்கு தெரியாத பொழுது அவள் நேசமா உங்களுக்கு புரியும்? என்ன செய்வது? எனக்குத் தெரியாதே?'' என வெடித்தாள்.

''உஷ்! மதும்மா!...'' அவன் சொல்ல முற்படுவதற்குள்,

''ரிஷி சீக்கிரம் வா! கேக் வெட்ட வேண்டும்'' என சரஸ்வதி தேடிக் கொண்டு வர கூடவே வருணும்...



மேலே எதுவும் பேச முடியாமல் ''வா... மது!'' என அவள் கைப்பற்றி முயற்சிக்க,

கையை உதறிக்கொண்டு முன்னே நகர்ந்தாள். இருவரும் பேசிக் கொண்டிருந்ததை யாரும் பார்க்கவில்லை; ஒருத்தியைத் தவிர. 'வரமாட்டேன்' என அடம் பிடித்துக் கொண்டிருந்த மாலினி கடைசி நேரத்தில் முடிவை மாற்றிக் கொண்டு கிளம்பி வந்துவிட்டாள். 'இனி ரிஷி தனக்குத்தான்' என்ற கனவை ஆசிட் ஊற்றியவன் பாதி கெடுத்தான்; இதோ முழுவதும் கெடுக்க மறுபடியும் இவள் வந்துவிட்டாள். இவள் மட்டும் ஒழியவே மாட்டாளா?

மதுமதி கேக் வெட்டும் இடத்திற்கு சென்ற பொழுது பாவ்னா, தன் கண்மணியுடன் பட்டுப்புடவையில் நிற்க, வருண், மாலினி, சரஸ்வதி, ரிஷி எல்லாரும் சூழ்ந்திருக்க...

பாவ்னா கேக்கை வெட்டி ''அப்பாவுக்கு கொடு, அம்மம்மாவிற்கு கொடு, மாமாவிற்கு கொடு'' என்ற பொழுது

மதுமதிக்கு பல விஷயங்கள் புரிந்து போயிற்று! ரிஷியை அம்மம்மா சென்னையில் பார்த்ததாக சொன்னது உண்மை; பாவ்னாவின் பாசமிகு அண்ணன் ரிஷி! சரஸ்வதி அம்மாவின் அன்பு மகன் ரிஷி! ஆனால் அவளுக்கு மட்டும் அவன்...

எல்லா உறவுமுறையும், உண்மை நிலையும் தெரிந்து போயிற்று! மாலினி எப்படி அன்று ரிஷி வீட்டில் இருந்தாள் என்பதும் நன்றாகவே புரிந்தது.

'இங்கிருந்து உடனே சென்று விட வேண்டும்' எனத் தோன்ற சட்டென திரும்பினாள்.

''மதும்மா, மது டார்லிங்' ரிஷி குரல் அழைத்தது.

'இன்னும் என்ன மது டார்லிங் வேண்டி கிடக்கு!' என எரிச்சலுடன் நகர...

''மது டார்லிங் இங்கே பாருடா!''

'இதென்ன இப்படி சத்தமாக கூப்பிடுகிறான்? அவளைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அவள் பட்டதெல்லாம் போதாதா?' என வேகமாக திரும்ப,

அவன் பாவ்னாவின் மகளை கொஞ்சிக் கொண்டிருந்தான். ''மதிமலர்! அம்மம்மா பாரு!'' என யாரோ ஒருவர் சொல்ல...

''மது கண்ணே!'' என சரஸ்வதி கொஞ்சினார்.

உண்மை விளங்க விளங்க மதுமதிக்கு தலைசுற்ற ஆரம்பித்தது. வராண்டாவை நோக்கி நடந்தவள் கால்கள் பின்ன மேலே நடக்க முடியாது போல தோன்றவே சன்னலை ஒட்டிக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

'மது டார்லிங்! என ரிஷி அழைத்தது தன்னை இல்லையா? தங்கை மகள் மதிமலரையா? ஆம்! அனைறக்கு கடலில் இறங்கிய தருணத்தில் ''மது! என் கண்ணே!'' என சரஸ்வதி கூப்பிட்டது தன் அருமை பேத்தி மதிமலரை! என் அம்மம்மாவை அந்த கனிவும், அழைப்பும் நினைவுப்படுத்தியது என்றால் அது அவரது தவறல்லவே?''

''பாவ்னா! நான் ஜெர்மனியிலிருந்து மதிமலர் பிறந்த பொழுது உனக்கு பரிசுகள் அனுப்பினேனே நினைவு இருக்கிறதா?''



''எப்படி அண்ணா இல்லாமல் போகும்? நீதான் எக்கச்சக்கமாய் பரிசுகள் அனுப்பி திக்குமுக்காட செய்துவிட்டாயே? இப்பொழுது ஏன் அதைப் பற்றி கேட்கிறாய்?''

''அதை பிறகு சொல்கிறேன். கடிகாரம் உனக்கு பிடித்திருக்கிறதா? என்று கேட்டேனே! நீ கூட ரொம்ப பிடித்திருக்கிறது என்றாயே! அது நினைவு இருக்கிறதா?''

''ஆமாம் அண்ணா! ஆனால் நான் அன்று அந்த கடிகாரத்தையே பார்க்கவில்லை; நீ கேட்டதும் உன் மனதை ஏமாற்றக்கூடாது என்று பிடித்திருக்கிறது என்றேன். பின் அதை பாப்பாவை கவனிக்கும் குஷியில் மறந்தே போனேன். மாலினி தான் எல்லா பரிசு பொருள்களையும் எடுத்து வைத்தாள்.''

உள்ளே இருந்த ரிஷிக்கு மட்டுமல்ல; வெளியில் கேட்டுக் கொண்டிருந்த மதுமதிக்கும் கடிகாரம் எப்படி தன் கைக்கு வந்தது என புரிந்து போயிற்று!

''சீ! உன் வீட்டு மாலினி இத்தனை மட்டமானவளா?'' என ரிஷி கொதிக்க

''என்ன அண்ணா ஆச்சு?''

''அவள் போனில் யாரோ போல என்னுடன் மட்டமாய் பேசியதை கூட என்னால் மன்னிக்க முடிந்தது. ஆனால் இதை மன்னிக்கவே முடியாது. ஒரு அப்பாவி பெண்ணிற்கு என் பெயரில் வாழ்த்து, பூங்கொத்து அனுப்பி அவள் மனதில் ஆசை வளர்த்து நம் வீட்டு பதிவு செய்யப்பட்ட டெலிபோன் பேச்சை அலைபேசி மூலம் நான் பேசுவ

போல் அந்தப் பெண்ணிடம் 'செட்டப்' செய்து எல்லா வற்றிற்கும் மேலாக நான் உனக்கு அனுப்பிய பரிசைத் திருடி என் பெயரில் அந்த ஏமாளி பெண்ணுக்கு அனுப்பி....

சே! சே! பெண்ணா இவள்?''

''ஐயோ! ஏன் அண்ணா இப்படி செய்தாள்? இதனால் இவளுக்கு என்ன இலாபம்?''

''என்ன இலாபமா? அவள் என்னை திருமணம் செய்து கொள்ளத்தான்! வீட்டு ஓடிவரும் பெண்ணை நான் வெறுப்பேனே! அதனால்தான்! அவளை என் மேல் பைத்தியகாரியாக்கி... ஓடி வர... வைத்து... அதற்கு மேல் மதுமதியால் கேட்க முடியவில்லை. அங்கிருந்து விரைந்தாள். அவள் மட்டுமா அதைக் கேட்டாள்?

வருணும் அல்லவா?

ரிஷி கோபமாய் பேச.. பேச,

மாலினியை ஏறக்குறைய (இழுக்காத குறையாய்) பிடித்துத் தள்ளிக்கொண்டு வருண் உள்ளே நுழைந்தான்.

''போதும் ரிஷி! இவளை'' என மாலினியை அடிக்க கையை ஓங்க,

பாவ்னா அவன் கரங்களை பற்றிக் கொண்டாள். மாலினி வடித்து, வெதும்பி அழுதாள்.



## 32

வருண் பிறந்தநாள் விழா முடிந்த மறுநிமிடமே தன் தாயுடன் மாலினியை அழைத்துக் கொண்டு ஊருக்கு கிளம்பி விட்டான். அவனுக்கு ரிஷி முகத்தில் விழிக்கவே வெட்கமாயிருந்தது. பாவ்னா அவனை சமாதானப்படுத்தி னாள். இதுபற்றி அத்தைக்கு எதுவும் தெரிய வேண்டாம் என எச்சரித்து மாலினியை கடுமையாக கண்டிக்க வேண்டாம் என்றும் திரும்ப திரும்ப எடுத்துச் சொல்லி அனுப்பி வைத்தாள். ஆனால் அங்கிருந்து கிளம்பும் முன்னரே தன் தாயிடம் நடந்த விஷயத்தை வருண் சொல்லி விட்டான். சிறு சுணக்கம் கூட தாயின் கண்களுக்கு தப்புவதில்லை. என்னவோ பிரச்சனை என்று புரிந்ததுமே ஊருக்கு போகலாம் என வருணை கிளப்பியவரே அவர் தான். மற்றவர் கண்டிப்பிற்கும் தாய் கண்டிப்பிற்கும் வித்தியாசம் இருக்கும். தாயின் கண்டிப்பு தன்பிள்ளை உயர வேண்டும்; நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் அமையும். மற்றவரைப் போல் குறை சொல்லி மட்டம் தட்டுவதாய் அமைவதில்லை. பாவ்னா அருமை அத்தையின் மனது நோக வேண்டாம் என மறைக்கச் சொன்னாலும் வருண் ''என்ன விஷயம்?'' என்று கேட்டதுமே எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். மிகவு மனம் வருந்தியவர் இனி அவளை சீர்படுத்தி ந வழிப்படுத்துவதையே முழு நேர வேலையா

தீர்மானித்தார். ரிஷிக்கு தான் மனது ஆறவே இல்லை. அதுவும் மதுமதி 'சுவர் ஏறி குதித்து திருடினேன்' என கொதித்து பேசிய பிறகு - அவள் பட்ட காயங்களையும், அவமானங்களையும் நேரிலேயே சென்று அறிந்து வந்தவன் அல்லவா?

ஆளாளுக்கு அவரவர் பொறாமை உணர்ச்சியால் ஒரு தவறுமே செய்யாமல் அந்தப் பெண் அனுபவித்த எவையும் இல்லாமல் போய்விடுவதில்லையே? தான் சாதாரணமாய் யாரோ ஒரு பெண்ணை நினைத்து சொன்ன வார்த்தைகள் கூட அவளை எவ்வளவு ஆழமாய் பாதித்து இருக்கிறது என்பதை உணர்ந்து மிக வருத்தப்பட்டான். சரஸ்வதியிடம் பாவ்னா நடந்தது அனைத்தையும் கூற மகளுடன் மகனைத் தேடி வந்தார்.

"வருத்தப்படாதே ரிஷி! நாம் நல்லதை மட்டுமே செய்து நல்லதையே நினைத்து வந்திருக்கிறோம். நல்ல எண்ணத்திற்கு நல்ல விளைவு தான் ஏற்படும். உங்களுக்கு தெரியாத ஒரு விஷயத்தை நான் சொல்லட்டுமா? மதுமதி அன்று நம் வீட்டிலிருந்து எங்கே சென்றாள் தெரியுமா?"

"எங்கே அம்மா?"

"தன் உயிரை விட கடலில் இறங்கினாள்."

இருவரும் இணைந்த குரலில் "ஆ!" என்றனர்.

"ஆமாம் அப்பா! அவளுக்கு ஏதாவது நேர்ந்து இருந்தால் அந்த பாவத்தை யார் சுமப்பது? அந்த 'வாக்கிங்' சென்றிருந்த எனக்கு நெஞ்சுவலி வந்து விட அவளை தடுக்கவோ, என் உதவிக்கு கூப்பிடவோ முடியவில்லை.



சரி அவ்வளவு தான் என போகும் முன் நம் கண்மணி மதிமலரை நினைத்துக் கொண்டேன். 'கண்மணி கண்ணே மது' என்று வாய்விட்டே சொன்னேன். அவள் பாட்டிற்கு தண்ணீரில் போய் கொண்டிருந்தவள் திரும்பினாள்; அலை அடித்தாற் போல் பாய்ந்து வந்து என் உயிரை காப்பாற்றினாள். நான் எவ்வளவு கேட்டும் தன் பெயரைத் தவிர எதையும் கூறவில்லை. நான் யாரென்று தெரியாமலே வற்புறுத்தி அழைத்தும் வீட்டிற்கு வர மறுத்துவிட்டாள். அவள் தற்கொலை எண்ணத்தை மாற்ற வேண்டிய அவசியம். இருந்தது இந்த அளவிற்கு காயம்பட்டவளின் அனுமதி இல்லாமல் உங்களிடம் கூட அவளைப் பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை," என்றவர் தொடர்ந்து,

"ஆமாம், மது எங்கே? இருட்டில் தனியாகவா சென்றாள்? என்னிடம் சொல்லக் கூட இல்லையே?"

பாவ்னா மாலினி செய்தவற்றை மட்டும் தான் தாயிடம் சொன்னாள். தன் அண்ணனிடம் அவள் பொங்கி கொதித்து கொட்டியதை அவளே அறியாத பொழுது எப்படி தாயிடம் சொல்வாள்?

"கடிகாரம் பற்றி விசாரித்தேன் அம்மா! கோபித்துக் கொண்டு போய்விட்டாள் போல."

"என்னப்பா இது?"

"இல்லையம்மா! அவள் பாதுகாப்பிற்கு நான் ஏற்பாடு செய்து விடுகிறேன். பத்திரமாக இருப்பாள்; பயப்பட வேண்டாம்."

"நீ அவளை சமாதானப்படுத்தி இருக்கக்கூடாதா? வாழ்க்கையில் அப்புறம் செய்து கொள்ளலாம் என தள்ளிப் போடும் கணங்களில் சிலவற்றை நாம் இடித்து விடுகிறோம். நமக்கு ஆயிரம் காரணம் இருக்கலாம். அவள் பாதிக்கப்பட்டவள்; இதை எல்லாம் யோசிக்க அவளால் முடியாது. ஏற்கனவே மரணத்தின் விளிம்பின் வரை சென்று வந்தவள் வேறு."

"கவலைப்படாதீர்கள் அம்மா! நானே போய் பார்த்து வருகிறேன்."

"நானும் உடன் வரட்டுமா?"

"வேண்டாம் நீங்கள் அலைய வேண்டாம்; நானே அவளை அழைத்து வருகிறேன்."

அப்போது ரிஷியின் அலைபேசி ஒலித்தது. எடுத்து பேசியவன் முகம் மாறினான்.

"என்னாச்சுப்பா? மதுவிற்கு ஏதாவது..."

"அம்மா நீங்கள் பதற்றப்படாதீர்கள்! அவளுக்கு எதுவும் நேராது. அன்று நம் வீட்டிற்கு முதன் முதலில் வந்து மதுவுக்கும் இன்றைய மதுவுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அப்பொழுது அவள் தோற்கடிக்கப்பட்ட பெண்; இன்று இருப்பவள் வாழ்வில் ஜெயித்து காட்டியவள். நடை பயிலும் குழந்தைக்கும், காரோட்டும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம். அவள் ஆசைப்பட்ட படிப்பு, உற்றார், உறவினர், நண்பர் இப்படி எதுவுமே இல்லாமல், ஏன் வானமே கூரையாக பூமியில் நிற்கின்ற இடம்கூட சொந்தமில்லாமல் - ஆர்வம், தன்னம்பிக்கை,



நேர்மறை எண்ணம், எந்தப் பிரச்சனையும் எதிர் கொள்ளும் திடம், ரிஸ்க் எடுக்கும் துணிச்சலுடன் திட்டமிட்டு கடுமையாக உழைத்து வென்றவள் தவறான முடிவிற்கு போகமாட்டாள். எனக்கு 24 மணி நேரம் கொடுங்கள். அவளை உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன்" எனக் கூறிவிட்டு கிளம்பினான்.

'மதுமதியை காணவில்லை' என்ற செய்தி அவனையும் மிக பதட்டப்படுத்தியது. ஆனாலும் தன் தாயிடம் அதை காண்பித்துக் கொள்ள விரும்பவில்லை. தாய்க்கு சமாதானம் சொல்வது போல் தனக்கும் சொல்லிக் கொண்டான்.

ஹோட்டலில் இருந்து கிளம்பியவளை,

யாரோ காரில் ஏற்றிச் சென்றதாகவும், அந்தக் காரை தொடர்ந்து சென்று சிக்னலில் நின்ற பொழுது அது எங்கு சென்று மறைந்தது என்று தெரியவில்லை' என விஸ்வா தெரிவிக்க,

'கண்டிப்பாக மதுமதிக்கு தெரிந்த ஆள்தான் காரில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மறுப்பின்றி காரில் ஏறியிருக்க மாட்டாள். யாராவது தெரிந்தவரா? ஒருவேளை உறவினர் எவராவது?... கணேசன்?'

உடனே கணேசனை தொடர்பு கொண்டான்.

"மதுவை பார்க்க என்றைக்கு நாங்கள் வரலாம்?" என அவன் கேட்க அவர்களிடம் விஷயத்தை சொல்லி கலவரப் படுத்தாமல் சாதாரணமாய் பேசி அலைப்பேசியை அணைத்தான். போலீஸ் உயர் அதிகாரிக்கு தகவல் கொடுத்தான். ராம்லால் வீட்டிற்கும் அவள் செல்லவில்லை

என அறிந்த பிறகு எல்லா இடங்களிலும் தேடுவதற்கு நம்பகமான ஆட்களை ஏற்பாடு செய்தான். ராம்லால் வீட்டிலிருந்து ரிஷிக்கு அழைப்பு வந்தது.

ராம்லால் மனைவி கண்ணீரோடு நிற்க, அவர் பதட்டத்தோடு அவள் அருகில் வந்தார். ''ரிஷி சார்! என் பையன்களை காணவில்லை. அஸீம், அமோஸ் இருவரும் வீடு திரும்பவில்லை. பள்ளி முடிந்து மியூசிக் கிளாஸ் போனவங்க காணாமல் போய்விட்டார்கள். பள்ளி மியூசிக் வகுப்பு அவன் நண்பர்கள் எல்லாரையும் விசாரித்து விட்டோம். யாருக்கும் அவர்களைப் பற்றி தெரியவில்லை. எங்கே பார்த்தாலும் குழந்தைகள் கடத்தலாய் இருக்கிறதால் என் மனைவி மிகவும் பயந்து போய் இருக்கிறாள்.''

ரிஷி உடனே இந்த விஷயத்தையும் போலீஸ் உயர் அதிகாரிக்கு தெரிவித்தான். 'மதுமதி காணாமல் போனதற்கும், இதற்கும் தொடர்பு இருக்குமோ?' என யோசித்தான்.

அவன் யோசித்தது சரிதான். ஹோட்டலை விட்டு வெளியே வந்த பொழுது... மனசு அதிர்ந்து போயிருந்தாள் மதுமதி. ஏன் மாலினி என் வாழ்வுடன் இப்படி விளையாடினாய்? நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன். உன்னை நான் தோழியாக கருதியது, புழுகியது என் தவறா? நீ நன்றாக வாழ நினைத்தது தவறில்லை. ரிஷி மேல் ஆசைப்பட்டதும் தவறில்லை. ஆனால் என்னை ஏன் உன் விளையாட்டு பொம்மை ஆக்கினாய்? என் ரிஷி... இல்லையில்லை. இந்தியாவின் சக்திமிகு மனிதர், இளைஞர்... அவரை நான் தவறாக எண்ணினேனே! என்



மனதில் எழுந்த ஆசைக்கு அவர் எப்படி பொறுப்பேற்க முடியும்? சூரிய ஒளிக்கதிரை எல்லாராலும் நெருங்க முடியாது. யார் வேண்டுமானாலும் அவர் மேல் ஆசைப்படலாம். ஆனால் அவர் விரும்புகிறவரைத்தான் மணந்து கொள்வார்.

வீணான கனவும், எட்ட முடியாத ஆசையும் உனக்கெதற்கு மதுமதி? உனக்கு அவர் செய்தது பெரிய உதவி. அவள் அம்மா உன் உயிரை காப்பாற்றினார் என்றால் அவரோ உன் வாழ்வு வளமாக வழிகாட்டினார். இனி உன் நேசம் உன் நெஞ்சுக்குள் மட்டும்தான். மறந்து போய் கூட வெளியே காண்பிக்காதே. உன் ரிஷி துருவ் உன் இதயத்திற்கு மட்டும் சொந்தக்காரனாய் இருக்கட்டும். நேசிப்பவர் நன்றாக இருக்க விரும்புவது தான் நல்ல பண்பு. இதுவரை பட்ட அவமானங்களும், வேதனைகளும் போதும். இனி வாழ்வு சாதனையை நோக்கி மட்டும் இருக்கட்டும்'' என எண்ணியவாறே நடந்த பொழுது...

''ஸோனு தீதி! சோர்! சோர்!'' என குரல் கேட்டது.

அஸீம் குரல் கேட்கிறது என திடுக்கிட்டு அவள் பார்க்க... சட்டென மூடிய கார் சன்னல் கதவால் அவளால் மற்றவர்களை பார்க்க முடியவில்லை. ஆனால் அஸீம், அமோஸ் இருவரும் இருந்ததை மட்டும் பார்த்தாள்.

அவர்களுக்கு ஆபத்து; சட்டென கார் நம்பரை செல்லால் படம் பிடித்தாள். உடனே செய்தியை அவள் எஸ்.எம்.எஸ் செய்த பொழுது அவளருகில் மற்றொரு கார் வந்து நின்றது

''சீக்கிரம் ஏறுங்கள்! அவர்களைப் பிடிக்கலாம்.''

அவள் யாரென்று சுஆரிப்பதற்குள் உள்ளே இழுத்து தள்ளப்பட்டாள். நாசி ஏதோ வாசனையை நுகர மயக்கமானாள்.

விகாஸ் ராம்லால் வீட்டிற்கு வந்துவிட்டிருந்தான்.

''தீதி, கவலைப்படாதீர்கள்! அஸீம், அமோஸை எல்லோரும் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். எப்படியும் கண்டுபிடித்து விடலாம். அவர்கள் புத்திசாலி பிள்ளைகள்!'' என ஆறுதல் கூறிக் கொண்டிருந்தான்.

அப்போது அலைப்பேசியில் குறுஞ்செய்தி வந்தது.

'கார் நம்பருடன் சேவ்-தெம்- அஸீம், அமோஸ்' யார் அனுப்பியது? என்று பார்த்தான்.

அனுப்பியது - ''மதுமதி.''

ரிஷியிடம் தொடர்பு கொண்டு விஷயத்தை சொன்னான். உடனே ரிஷி அந்த கார் நம்பரை காவலதிகாரிக்கு தெரிவிக்க அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்தக் காரின் உரிமையாளர் முகவரி கிடைத்தது. அப்போது ராம்லால் வீட்டிற்கு மர்ம போன் வந்தது.

''உங்கள் பிள்ளைகள் அஸீம், அமோஸ் உயிரோடு வேண்டுமென்றால் 4கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். எங்கு, எப்பொழுது பிறகு தொடர்பு கொள்கிறேன்'' என தொடர்பு விட்டு போனது.

இரவில் அவர்களை பிடிக்க இரகசிய திட்டம் தயாரானது. உடனே நடவடிக்கையில் இறங்க சற்று யோசித்தனர். பிள்ளைகள் பாதுகாப்பு மிக முக்கியம். அவர்களுக்கு எந்த



சேதமும் ஏற்பட்டு விடக்கூடாது. கோவை நிகழ்ச்சி பற்றி எதுவும் தெரியவில்லை. மதுமதிக்காக 4 கோடி என்ன? நாற்பது கோடி தரக் கூட ரிஷி தயாராக இருந்தான். ஆனால் அவர்கள் நிலையை அறிந்து கொள்ள துடித்தான். சாதாரண உடையில் காவல் துறையை சேர்ந்தவர்கள் அந்த வீட்டை நோட்ட மிட்டபடி இருந்தனர். சந்தேகத்திற்கு உரிய மாதிரி யாரேனும் வருகிறார்களா? என உற்று கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் அங்கு இயல்புக்கு மாறி எதுவும் நடப்பதாக தெரிய வில்லை. அக்கம்பக்கத்தில் இருந்த வீடுகளிலோ அல்லது அந்த வீட்டிலோ புது நடமாட்டங்கள் எதுவும் தெரியவில்லை. ராம்லாலிடம் திரும்ப போன் வந்தால் அழுது புலம்பும் படியும் அவ்வளவு பணம் தரமுடியாது என்று பேரம் பேசும்படியும் கூறி இருந்தனர். வீடுகளில் விளக்கு அணைத்து விட்டிருந்தனர். அமைதியாக இருந்தது அந்த இடமே! ஒரு மணி நேர இடைவெளியில் வேறு வேறு எண்களில் இருந்து மர்ம போன் வந்து கொண்டிருந்தது; பேரம் தொடர்ந்து கொண்டிருந்தது. விடிகாலை வேளையில் 1 கோடியில் பேரம் முடிவுற்றது. ரிஷி அந்த பணத்தை கொடுக்க தயாராய் இருந்தான். எங்கு பணத்தை கொடுக்க வேண்டும்? எத்தனை மணிக்கு என்பதை அவன் கூற...

எல்லாரும் ஒரு வினாடி திகைத்தனர்.

மக்கள் பரபரப்பாக இயங்கும் சாலையில் அதுவும் பீக் அவரில் பணத்தை கொடுக்கும்படி தெரிவித்து இருந்தனர். அதுவும் அந்த எண்ணுள்ள காரையும் எங்கு காணவும்

முடியவில்லை. வேறு எங்காவது சென்றுவிட்டதா? சரி; பணத்தை கொடுத்து முதலில் அவர்களை மீட்டு விடலாம். பின் பணத்தை மீட்பதைப் பற்றி யோசிக்கலாம் என முடிவு செய்தனர்.

## 33

மதுமதி கண் விழித்த பொழுது தான் எங்கிருக்கிறோம்? என அறிய முயன்றாள். நினைவு வந்து கண் திறந்தும் எதையும் பார்க்க முடியவில்லை. கை கால்களை அசைக்க முடியவில்லை. இறுக கட்டப்பட்டிருந்தது. ஒரே கும்மிருட்டாக இருப்பதால் தான் கண்ணை திறந்தும் கண்ணை மூடியிருப்பதும் போன்று உணர்வே இருக்கிறது என உணர்ந்தாள். நிமிர்ந்தால் தலையில் ஏதோ இடித்தது. எதற்குள்ளோ அடைபட்டிருக்கிறாள் என புரிந்தது. மூச்சை உள்ளே இழுத்து கைகளை வளைத்து 'யோகா' செய்தாள். கை கட்டுகள் சிறிது தளர்ந்தன. முதுகை வளைத்து முகத்தை கையருகே கொண்டு சென்று பற்களால் முடிச்சை அவிழ்க்க முயற்சி செய்தாள். திரும்ப, திரும்ப இடைவிடாமல் முயற்சி செய்து... ஏறக்குறைய என்ன? முழுதுமே பிரித்து விட்டாள். கால் கட்டையும் தடவி தடவி பார்த்து பிரித்தாள். நிமிர்ந்து உட்கார முடியாமல் இடிப்பது எதுவென கைகளால் தடவினாள். அது இரும்பாலான பொருள்... என்ன அது?



வேகமாக தட்ட... இலேசாய் திறந்தது. கார் டிக்கியினுள் அடைபட்டிருப்பதை புரிந்து கொண்டாள். மூச்சு விட காற்றுக்காக அது இலேசாய் மூடப்பட்டிருந்ததால் அவள் தட்டியதும் திறந்து கொண்டது. டிக்கியை திறந்து கொண்டு வெளியே வந்தாள். அங்கும் ஒரே இருட்டு. கார் கதவைப் பிடிக்க அது திறந்து கொண்டது. உள்ளே ஏதாவது தட்டுப்படுகிறதா? என பார்த்தாள். காலில் தட்டுப்பட்டதை எடுக்க... அவள் கைப்பை. உள்ளே அவள் அலைபேசி பத்திரமாக இருந்தது. அவளை கடத்தியவன் அவள் கைப்பை காரினுள் விழுந்ததை கவனிக்கவில்லை போலும்! அலைப்பேசி அணைத்து வைக்கப்பட்டிருந்ததால் அவளுக்கு எந்த அழைப்பும் வரவில்லை. அதனால் அதை கவனிக்கவும் நேரவில்லை. செல்லின் ஒளியால் எங்கிருக்கிறோம்? எனப் பார்த்தாள். அது ஒரு கார் ஷெட்! இரும்பு ஷட்டரால் வெளியே பூட்டப்பட்டிருந்தது. பக்கத்தில் இன்னொரு கார் நின்று கொண்டிருந்தது. அதனருகே சென்றாள்.

அது அஸீம், அமோஸ் கடத்தி செல்லப்பட்ட கார்! ஊகத்தில் அந்த கார் டிக்கியை திறக்க அஸீமும், அமோஸூம் ஏறக்குறைய மயக்க நிலையில் கிடந்தனர். கட்டுகளை அவிழ்த்தாள். அசைவில்லாமல் அவர்கள் கிடந்ததால் பதறி போய் காரின் உட்புற லைட்டை போட்டு உள்ளிருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து அவர்கள் முகத்தில் தெளித்தாள். மெல்ல இருவரும் கண்களை திறந்தனர். தீதி என அவளை கட்டிக்கொண்டன

"தீதி! எங்களுக்கு பயமாய் இருக்கிறது. இங்கிருந்து அவன் வர்றதுக்குள்ளே ஓடி போயிடணும்; சீக்கிரம்!"

"எப்படிடா அமோஸ் போறது? வெளியே பூட்டியிருக்கு!"

"ஐயோ! நாம செத்து போக வேண்டியது தானா? அவன் அப்பவே சொன்னான்; இவன் அப்பன் கிட்டே பணத்தை வாங்கி கிட்டு கதையை முடிச்சிட வேண்டியது தான்னு! கோயம்புத்தூர் குழந்தைகளை கொன்ன மாதிரி எங்களையும் கொன்னுடுவாங்களா?"

"பயப்படாதே! தைரியம் தான் எந்த சூழ்நிலையிலும் செயல்பட வைக்கும். சத்தமாய் பேசாதே. கை கால்களை அசைத்து நீட்டி விரித்து வலி இல்லாமல் வைத்து கொள்ளுங்கள். தப்ப என்ன வழின்னு யோசிக்கலாம்."

"தீதி! என்னால் ஓட முடியாதே!"

"கவலைப்படாதே கண்ணா! உன்னை விட்டுட்டு நான் போகமாட்டேன். உன்னை கண்டிப்பாய் காப்பாற்றுவேன். தப்பிக்க முடியும் என உறுதியாக நம்புங்கள். விகாஸ் இந்நேரம் உங்களை கடத்திய காரை தேடிக் கொண்டிருப்பான். இரு செல்லில் தகவல் கொடுக்கலாம்."

ஆனால் அவர்கள் போதாத வேளை அலைபேசியில் சார்ஜ் தீர்ந்து போயிருந்தது. வேறு என்ன செய்வது? என யோசித்தாள். கண்டிப்பாக பிள்ளைகள் இருக்கும் காரை எடுத்துக் கொண்டு அவன் வெளியில் சுற்ற மாட்டான். ஷெட்டினுள் கார் டிக்கிதான் அடைத்து வைக்க அவனுக்கு பாதுகாப்பாய் பட்டிருக்கும். பணத்தை வாங்கிக் கொண்டு



பிள்ளைகளை கொன்றுவிடும் திட்டத்தில் இருப்பவன் கண்டிப்பாய் காரை வெளியில் எடுக்க மாட்டான். என முடிவுக்கு வந்தாள். எனவே தான் இருந்த கார்டிக்கிக்கு மாற்ற முடிவு செய்தாள்.

"அமோஸ், செல்வதை கவனமாக கேள். இந்தக் காரைதான் எடுத்துக் கொண்டு, வெளியில் செல்வார்கள். நீங்கள் இதில் இருப்பதை அறியமாட்டார்கள். எங்காவது கார் நிற்கும் பொழுது முதலில் அஸீமை இறக்கி விடு. பின் அமோஸ் நீ இறங்கு. மாட்டிக் கொள்ளும் நிலைமை வந்தால் வேறு திசையை நோக்கி ஓடு. அஸீமால் ஓடி வர முடியாது. எனவே அவன் இருக்கும் திசைக்கு எதிர் திசையில் ஓடு. உங்களை நம்புங்கள்! நிச்சயம் இங்கிருந்து உயிருடன் தப்பிக்க முடியும்."

"தீதி நீ?"

"உங்களை காப்பாற்றும் என்னால் என்னை காப்பாற்றிக் கொள்ள முடியாதா? என்னைப் பற்றி கவலைப்பட வேண்டாம். இன்னும் விடிவதற்கு சற்று நேரம் தான் இருக்கிறது. ஆளரவம் கேட்கிறது. சீக்கிரம் டிக்கியினுள் உட்காருங்கள். கார் வெளியே சென்ற பிறகு கொஞ்சம் டிக்கியை தூக்கி விட்டு கொள்ளுங்கள்;" டிக்கி மூடும் இடைவெளியில் வைத்துக் கொள்ளுமாறு சிறுகுச்சி ஒன்றையும் கொடுத்தாள். அமோஸ் உட்கார்ந்த பிறகு அஸீமை தூக்கி உட்கார வைத்து மூடினாள். ஷட்டர் திறக்கும் சத்தம் கேட்டது. கார் லைட்டை அணைத்து விட்டு பிள்ளைகள் கடத்தப்பட்ட காரின் பின்ஸீட்டில் மறைந்து கொண்டாள்.

வந்தவன் அவசரமாக இப்பொழுது பிள்ளைகள் மறைந்திருந்த காரை அவர்கள் இருப்பது அறியாமல் வெளியே எடுத்தான். மதுமதியின் யூகம் பலித்தது. செல்லும் பொழுது அருகில் இருந்த காரை தட்டி, ''பசங்களா! உங்களுக்கு இங்கேயே சமாதி தாண்டா!'' என கூறிவிட்டு ஷட்டரை பூட்டிவிட்டு புறப்பட்டான். மதுமதி அவனைப் பார்த்தாள். இவன்... இவன்.. தெலுங்கு நடிகர் என்று விகாஸ் சொன்னானே? ஆனால் இவனை எங்கோ நான் பார்த்து இருக்கிறேன். எங்கே? மூளையை கசக்கிக் கொண்டாள். இருந்தும் நினைவிற்கு வரவில்லை. அவன் சொன்ன இடத்தில் ராம்லால் பணப்பெட்டியுடன் நின்றிருந்தார். அவனுக்கு உற்சாகமாய் இருந்தது ஒரு கோடி ரூபாயை பெற்றுக் கொண்டு தன் காரில் அடை பட்டிருக்கும் தேவதையுடன் இங்கிருந்து தப்பிவிட வேண்டும். வீட்டுகாரன் வந்து பார்க்கும் பொழுது நாற்றமடித்த உடல் தான் இருக்கும். அதை வைத்துக் கொண்டு கோர்ட், கேஸ் என்று அலையட்டும். தன்னைத் தேடி வந்தவளைப் பற்றி நினைத்துக் கொண்டான். 'ஹேய்! நான் மாறிவிட்டேன். ஆனால் நீ இன்னும் பழைய பஞ்சாங்கமாய் இருக்கிறாய்! பணம் தான் வாழ்க்கை; அதை வைத்துக் கொண்டு வாழ்க்கையை உல்லாசமாய் அனுபவிக்க வேண்டும். எங்கப்பன் சம்பாரிச்சேன், சம்பாரிச்சேன்னு மதிப்பில் எங்கேயோ ஏமாந்து நொடிச்சு போனான். அவன் நஷ்டத்தை ஈடுகட்ட பெரிய தயாரிப்பாளர் வீட்டு பொண்ணுன்னு பார்க்க சதிக்காத ஒருத்தியை என் தலையில் கட்டினான். அவளுக்கோ நான் நின்றால் சந்தேகம்; நடந்தால் சந்தேகம்; உட்கார்ந்தால்



சந்தேகம். கையில் பரம் பைசா தரமாட்டேன் என்கிறாள். உல்லாசமாய் வாழ்ந்த என்னால் சிறை வாழ்க்கை வாழ முடியாது. இந்த நேரத்தில் பள்ளித்தோழி; முன்னாள் காதலி வந்து மாட்டினாள். அவளால் இன்று எனக்கு வசந்தம் வந்திருக்கிறது. கிளம்பும் பொழுது அவளிடம் ஒரு வார்த்தை போனில் சொல்லிவிட வேண்டும்; முடிந்தால் நீயும் தப்பிவிடு என்று!'

ராம்லால் நிற்பதைப் பார்த்தான். ஆனால் உடனே அவனை நெருங்கிடவில்லை. சுற்றிலும் நோட்டம் பார்த்தான். யாரும் காவலர் சீருடையில்லாமல் நிற்கிறார்களா? என ஊன்றி கவனித்தான். விகாஸ் அங்கே சற்று தள்ளி நிற்பதை பார்த்துவிட்டான். 'இவன் எங்கே இங்கே வந்தான்? இவன் விவகாரம் பிடித்தவன் ஆயிற்றே?'

ராம்லாலை நெருங்கி அவன் ஏதோ சொல்வதையும் பின் அவன் நகர்ந்து சென்று இன்னொருவரிடம் பேசுவதையும் கவனித்தான்.

'ஆகா! வச்சிட்டாங்கடா ஆப்பு! பணத்தை பெற்றுக் கொண்டு ஓடிவிட வேண்டும். இதே காரில் தப்பிக்க முடியாவிட்டால்....? யோசித்தான். சட்டென அலைப் பேசியை தட்டி வேறு ஏற்பாடு செய்தான். பின் ராம்லால் செல்லுக்கு தகவல் அனுப்பினான். காரை சிக்னலுக்கு நிறுத்துவது போல் நிறுத்திவிட்டு தாடி மீசையுடன் மெதுவாய் அருகே சென்றான்.

''பணம் தயாரா?'' பிள்ளைகள் எங்கே?''

வந்தவன் அவசரமாக இப்பொழுது பிள்ளைகள் மறைந்திருந்த காரை அவர்கள் இருப்பது அறியாமல் வெளியே எடுத்தான். மதுமதியின் யூகம் பலித்தது. செல்லும் பொழுது அருகில் இருந்த காரை தட்டி, “பசங்களா! உங்களுக்கு இங்கேயே சமாதி தாண்டா!” என கூறிவிட்டு ஷட்டரை பூட்டிவிட்டு புறப்பட்டான். மதுமதி அவனைப் பார்த்தாள். இவன்... இவன்.. தெலுங்கு நடிகர் என்று விகாஸ் சொன்னானே? ஆனால் இவனை எங்கோ நான் பார்த்து இருக்கிறேன். எங்கே? மூளையை கசக்கிக் கொண்டாள். இருந்தும் நினைவிற்கு வரவில்லை. அவன் சொன்ன இடத்தில் ராம்லால் பணப்பெட்டியுடன் நின்றிருந்தார். அவனுக்கு உற்சாகமாய் இருந்தது ஒரு கோடி ரூபாயை பெற்றுக் கொண்டு தன் காரில் அடை பட்டிருக்கும் தேவதையுடன் இங்கிருந்து தப்பிவிட வேண்டும். வீட்டுகாரன் வந்து பார்க்கும் பொழுது நாற்றமடித்த உடல் தான் இருக்கும். அதை வைத்துக் கொண்டு கோர்ட், கேஸ் என்று அலையட்டும். தன்னைத் தேடி வந்தவளைப் பற்றி நினைத்துக் கொண்டான். ‘ஹேய்! நான் மாறிவிட்டேன். ஆனால் நீ இன்னும் பழைய பஞ்சாங்கமாய் இருக்கிறாய்! பணம் தான் வாழ்க்கை; அதை வைத்துக் கொண்டு வாழ்க்கையை உல்லாசமாய் அனுபவிக்க வேண்டும். எங்கப்பன் சம்பாரிச்சேன், சம்பாரிச்சேன்னு மதிப்பில் எங்கேயோ ஏமாந்து நொடிச்சு போனான். அவன் நஷ்டத்தை ஈடுகட்ட பெரிய பணக்காரிப்பாளர் வீட்டு பொண்ணுன்னு பார்க்க சதிக்காத சொத்தியை என் தலையில் கட்டினான். அவளுக்கோ நான் நின்றால் சந்தேகம்; நடந்தால் சந்தேகம்; உட்கார்ந்தால்



சந்தேகம். கையில் பரம் பைசா தரமாட்டேன் என்கிறாள். உல்லாசமாய் வாழ்ந்த என்னால் சிறை வாழ்க்கை வாழ முடியாது. இந்த நேரத்தில் பள்ளித்தோழி; முன்னாள் காதலி வந்து மாட்டினாள். அவளால் இன்று எனக்கு வசந்தம் வந்திருக்கிறது. கிளம்பும் பொழுது அவளிடம் ஒரு வார்த்தை போனில் சொல்லிவிட வேண்டும்; முடிந்தால் நீயும் தப்பிவிடு என்று!’

ராம்லால் நிற்பதைப் பார்த்தான். ஆனால் உடனே அவனை நெருங்கிடவில்லை. சுற்றிலும் நோட்டம் பார்த்தான். யாரும் காவலர் சீருடையில்லாமல் நிற்கிறார் களா? என ஊன்றி கவனித்தான். விகாஸ் அங்கே சற்று தள்ளி நிற்பதை பார்த்துவிட்டான். ‘இவன் எங்கே இங்கே வந்தான்? இவன் விவகாரம் பிடித்தவன் ஆயிற்றே?’

ராம்லாலை நெருங்கி அவன் ஏதோ சொல்வதையும் பின் அவன் நகர்ந்து சென்று இன்னொருவரிடம் பேசுவதையும் கவனித்தான்.

‘ஆகா! வச்சிட்டாங்கடா ஆப்பு! பணத்தை பெற்று கொண்டு ஓடிவிட வேண்டும். இதே காரில் தப்பிக் முடியாவிட்டால்....? யோசித்தான். சட்டென அலை பேசியை தட்டி வேறு ஏற்பாடு செய்தான். பின் ராம்லா செல்லுக்கு தகவல் அனுப்பினான். காரை சிக்னலு நிறுத்துவது போல் நிறுத்திவிட்டு தாடி மீசையு மெதுவாய் அருகே சென்றான்.

“பணம் தயாரா?” பிள்ளைகள் எங்கே?”

"பணம் தந்தால் பிள்ளைகள்! இல்லாவிட்டால் நான் சென்று விடுவேன். நாளைக்கு பார்சலில் உடல் உறுப்புகள் வரும். என்னை நம்பித்தான் ஆகவேண்டும்."

ராம்லால் வேறுவழியின்றி பணப்பெட்டியைத் தர, பிள்ளைகள் கிடைக்கும் வரை எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என காவலர்கள் காத்திருக்க... சிக்னல் மாற மின்னல் வேகத்தில் முன்னால் நின்ற காரில் ஏறி அவன் தப்பித்தான்.

அவன் வந்த கார் அப்படியே வழியில் நிற்க...

அதன் டிக்கியை திறந்து அமோஸ் வெளியே குதிக்க, காவலர்கள் அதனை சூழ்ந்தனர், அஸீமை உள்ளிருந்து தூக்கினர். அதே சமயத்தில் தப்பிச் சென்றவன் தன் பள்ளித் தோழிக்கு போன் செய்தான். "நீ தப்பி போய்விடு. போலீஸ் மோப்பம் பிடித்து விட்டது."

அவள் கொஞ்சம் பயந்தாள். அவள் அவனிடம் செய்ய சொன்னது என்ன? அவன் செய்தது என்ன? கோபத்துடன் அவனிடம் பேசிக்கொண்டே ஷட்டரைத் திறந்தாள். "காஞ்சிபுரத்தில் நடந்ததற்கு பழிவாங்க குழந்தைகளை கடத்தி அவள்மேல் பழி போடச் சொன்னால்... நீங்க என்ன செய்தீர்கள்? எதுவும் யோசனையுடன் செய்ய மாட்டீர்களா?"

'காஞ்சிபுரம்' என்றதும் மதுமதிக்கு ஞாபகம் வந்தது. அவன் யாரென்று புரிந்து போயிற்று. பாட்டியும், தானும் காஞ்சிபுரம் கோவிலுக்குச் சென்ற பொழுது ஏ.டி.எம் சென்டரில் அவளிடம் தவறாக நடக்க பேரம் பேசியவன்; காவல் நிலையத்தில் புகார் செய்ததும் அடுத்து அவர்களை



கைது செய்து செய்தியை அறிந்ததும் தெளிவாய் நினைவில் ஓடியது.

அப்படியானால் எல்லாமே திட்டமிட்ட சதியா? போன் பேசும் குரலும் அவள் கேட்ட குரல் போல் இருந்தது. யாரென்று பார்க்க மெதுவாய் தான் கதவைத்திறந்தாள். அந்த ஒலி கூட அவள் செவியை எட்டி விட்டது. இவள் வெளியே வர.. அவளும் திரும்பி இவளைப் பார்த்து திகைத்தாள். மது அவளைப் பார்த்து "நீயா?" என்றாள்.

அவள் அலைப்பேசியில் ஏதோ கேட்டு பதட்டமானாள்.

"ஏய்! என்னாச்சு? ஐயோ...." என துடித்தாள்; பின் வெறியானாள். சுற்றிலும் பார்த்தாள். இரண்டடி நீளமுள்ள இரும்புக்குழாய் ஓரமாய் கிடப்பதைப்பார்த்து, அதை பாய்ந்து எடுத்தாள்.

"உன்னால் தான்டி! என் வாழ்க்கையே வீணாய் போச்சு! அன்று நீ மட்டும் காஞ்சிபுரத்தில் உன் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டு போயிருந்தால், நானும், அவரும் திருமணம் செய்து கொண்டிருப்போம். அவர் எண்ண திசை மாறி போயிருக்காது. உன்னால் நாங்கள் எத்தனை அவமானம் பட்டோம் தெரியுமா? போலீஸ் ஸ்டேஷனி ஒருநாள் முழுவதும் இருந்தோம். பத்திரிகைகளி புகைப்படம் தான் வரவில்லையே தவிர எங்களை ப கேவலமாக எழுதி இருந்தார்கள். நான் கல்யாணம் செ கொள்ள முடியாமல் செய்து விட்டாய். அவர் தந் செல்வாக்கை பயன்படுத்தி எங்களை மீட்டு எடுத்தா எங்களை பிரித்து விட்டார். அவருக்கு பிடிக்க

கல்யாணம்; நொடித்துப் போன தொழில் எல்லாவற்றிற்கும் காரணம் நீ தான்! ஊரை திருத்த நீ யார்? மனசுக்குள் பெரிய மகாத்மா என்று நினைப்பா?'' அவள் கோபமாய் பேச பேச மதுமதி அதிர்ந்து போனாள்.

''இல்லை ரேஷ்மா! நீ என் தோழி....'' என அவள் ஆரம்பிக்கும் பொழுது,

''என்ன தோழியா? நீ என்றைக்கும் என் தோழியாக இருந்து இருக்கிறாய்? உன்னால் எனக்கு இடையூறும், பிரச்சனைகளும் தான் முளைத்தன. உன் அழகும், அறிவும் என்னை ஒன்றுமில்லாதவள் ஆக்கிவிட்டன. எனக்கு கிடைக்க வேண்டிய மரியாதை, பெருமையெல்லாம் உன்னால் தட்டிப் பறிக்கப்பட்டன.

ராணியாக வலம் வந்தவள் உன்னால் சேடியாகிப் போனேன். உன்னை அழிக்க மாலினி போட்ட திட்டத் திற்கு உதவினேன். ஆனால் அவளுக்கு கூட என் எண்ணம் எதுவும் தெரியாது. 'ப்ரெண்ட்ஸ் கிளப்' பணத்தை நான் தான் எடுத்தேன். உன்னை திருடியாக்கி போலீஸ் ஸ்டேஷனில் ஒருநாளாவது வைத்திருக்க வேண்டும் என நினைத்தேன். ஆனாலும் அதில் கூட தப்பித்துவிட்டாய். இன்றைய திட்டமும் பாழாகிவிட்டது. இனி நீ என்னிடம் இருந்து தப்பிக்க முடியாது.'' என ஆவேசத்துடன் இரும்புக்குழாயுடன் அவள் மேல பாய...

மதுமதி வெளியே ஓட எத்தனித்தாள். இடையே கிடந்த ட்டுமுட்டு சாமான்கள் அவள் ஓட்டத்தை தடுக்க, ட்டரை மேலே தூக்கியவள் கால் தடுக்கி தடுமாற...



ஓங்கிய குழாய் அவள் தலையில் இறங்கு முன் ரிஷி அவளைப் பற்றி இழுத்தான். பிள்ளைகள் காப்பாற்றப்பட்ட உடனே மதுமதி இருக்குமிடம் தெரிந்து விட செயலில் இறங்க, ரிஷி அவர்களைத் தேடி விரைந்து வந்துவிட்டான். சுற்றிலும் சீருடை இல்லாத காவலர்கள் அவளை சூழ்ந்தனர்.

''எல்லாம் போச்சு! அவனும் விபத்தில் மாட்டிக்கிட்டான். நானும் உன்னை அழிக்காமல் போலீஸ் கிட்டே மாட்டிக்கிட்டேன். உனக்கு அதிர்ஷ்டம் இருக்கு!''

''இது அதிர்ஷ்டமல்ல. தர்மத்தின் வெற்றி. வினை விதைத்தவன் வினையைத்தான் அறுப்பான்'' எனக் கூறிய ரிஷி மதுமதியை இழுத்துக்கொண்டு தன் காருக்குச் சென்றான். ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசவும் இல்லை; பிடித்த பிடியை விடவும் இல்லை. வீட்டின் முன் காரை நிறுத்தினான்.

பாவ்னா ஆரத்தி தட்டுடன் வந்து நின்றாள்.

''வலது காலை எடுத்து வைத்து உள்ளே வாங்க அண்ணி''

''அண்ணியா?'' வாய் விட்டே சொல்லிவிட்டாள் மதுமதி.

''ஆமாம் ரிஷி மதுவுடன் சேர்ந்து நில்'' என சரஸ்வதி கூற அவளுடன் இணைந்து நின்றான். ஆலம் சுற்றி பொட்டிட்டு திருஷ்டி கழித்து உள்ளே அழைத்து வந்தனர்.

''கையை விடுங்கள் முதலில்'' மெல்ல முணுமுணுத்தாள் மதுமதி.

"கையை விடுவதா? விடுவதற்கா உன்னை கஷ்டப் பட்டு தேடி இழுந்து வந்தேன். உன்னை புகைப்படத்தில் பார்த்தே மயங்கி போனவன் அல்லவா?"

"விழிக்காதே அண்ணி! அண்ணன் சொல்வது உண்மை தான். அண்ணன் மட்டுமல்ல எங்க குடும்பமே உன்னிடம் மயங்கி போய் தான் கிடக்கிறது! உன்னை முதன் முதலாய் பார்த்து நான் மயங்கினேன். பின் என் அண்ணன், அப்புறம் எங்கள் அம்மா, அவர்களும் உன்னை எங்கள் அண்ணனுக்கு திருமணம் செய்ய ஆசைப்பட்டார்கள். எங்க அண்ணன் போட்டோ ஸ்டாண்டை போய் பாரேன்; உன் போட்டோவை பின்னால் வைத்துக் கொண்டிருக் கிறான். உன் படம் வந்த பத்திரிகையை என் கண்ணிலேயே காட்டாமல் தான் மட்டும் இரகசியமாய் வைத்துக் கொண்டு கனவு கண்டு கொண்டிருந்தான். உன்னை சந்திக்கத் தான் முடியாமல் பல்வேறு வேலைகள் அவனுக்கு."

"அதுதான் உன்னருமை நாத்தனார், என்னுடைய மதுமதியை இணைக்கும் வேலையை அருமையாக பார்த்து விட்டாளே!"

"விடு அண்ணா; அவள் பிரிக்க நினைத்து எதை செய்திருந்தாலும் விதி வேறு மாதிரி இருந்திருக்கிறது. அதனால் தான் மதுமதியின் அன்பையும், அருமையும் உணர முடிந்தது."

"ஒரு நல்ல தலைமுறை உருவாக நல்ல பெண் தான் முக்கிய காரணம். எங்கம்மா அருமையான பெண்மணியாக இருந்ததால் தான் நாங்கள் இப்படி உருவாக முடிந்தது. என்



மனைவியும் அப்படி அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதன்படியே நீ கிடைத்துவிட்டாய். அன்றைய பேச்சு உன்னை வாழ்வின் விளிம்பு வரை விரட்டியதற்கு மன்னித்துவிடு."

"ம்ஹூம்! அப்படி சொல்லாதீர்கள். உங்கள் மேல் எந்த தவறும் இல்லை என நான் புரிந்து கொண்டேன். சுற்றிலும் இருப்பவர்கள் இயல்பாய் மனதில் எழுந்த கனவைத்தூண்டி ஆசையாக்கி விட்டார்கள்!"

"அது இருக்கட்டும்! இனி ஆசையை துறந்துவிடாதே; ஆபத்தாகிவிடும்."

"ஆசை நேசமாகி, நேசம் ஆலமரமாகி விழுதுகள் விட தயாராகி விட்டதை என் மருமகள் முகத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா?"

ரிஷி - துருவ் மதுமதி திருமணம் மிக கோலாகலமாய் நடந்தேறியது. நகரத்தின் மிகப் பெரிய மண்டபத்தின் இரண்டு ஹால்களும் விருந்தினர்களாலும், முக்கிய பிரமுகர்களாலும் நிறைந்திருந்தன. இளம் பெண்களை உற்சாகப் படுத்த ஒரு புறம் மெஹந்தி போட்டு விடும் விழாவே நடந்தது. இன்னொரு புறம் குழந்தைகள் குதூகலிக்க பல்வேறு ஏற்பாடுகள் - கோமாளி முதல் உஞ்சல், இராட்டினம், பலூன், சாக்லேட், ஐஸ்கிரீம், வளையல், வாட்ச் நெக்லஸ் டிசைன்களை பிள்ளைகள் விருப்பப்படி செய்து அவர்கள் கையில் ஒட்டும் ஜவ்வு மிட்டாய் என ஜமாய்த்துவிட்டனர். அறுசுவை நடராஜன் குழுவினர் சமையலில் அசத்தி கலக்க...

''வண்ணச்சீரடி மண்மகள் அறிந்திலள்.''

என நினைவூட்டும் மதுமதியின் பூப்போன்ற பாதங்களில் மெட்டி அணிவித்து மெல்ல வருட மதுமதி சிலிர்த்தாள்.

உலகின் மிக உயர்ந்த காரான - 16 கோடி மதிப்பிலான 'புகாட்டி வெய்ரோன்' - ஐ திருமண பரிசாக ரிஷி மதுமதிக்கு அளித்தனர்.

''இவ்வளவு விலையுயர்ந்தது எதற்கு?''

''அண்ணி, உன்னை காப்பாற்ற அண்ணன் எவனுக்கோ 40 கோடி ரூபாய் கொடுக்க தயாராக இருந்தான். இது உனக்கு பரிசு அண்ணி! இதில் என்ன கஞ்சத்தனம்?''

''என் துருவை விட உயர்ந்த பரிசு ஏதாவது இருக்க முடியுமா?'

''அப்படிப் போடு!''

மாலினி திருமணத்திற்கு வந்திருந்தாள். வருணை மதுமதிதான் சமாதானப்படுத்தினாள். ''நடந்தது எல்லாம் போகட்டும். இனி மாலினியை தண்டிக்க வேண்டாம்;'' என்றவளிடம் மாலினி ''ஒரு மனிதனுக்கு ஒழுக்கம் தான் முதலில் தேவை. அது தான் அவனை மனிதனாக காட்டும். பணம், புகழ், செல்வாக்கு எல்லாம் இருந்தாலும் ஒழுக்கம் இல்லாவிட்டால் அவை செல்லாகாசாகிவிடும். எண்ணம், சொல், செயல் எல்லாவற்றிலும் நல்ல நடத்தை இருப்பது தான் ஒழுக்கம். உன்னை ரிஷி விரும்பும் வாய்ப்பு இருந்தது.



நீ அழகி; நல்ல குடும்பம், படிப்பு இருந்தும் அதை உன் குணத்தால் கெடுத்துக் கொண்டது நீ தான். அந்தப் பெண் ரேஷ்மாவைக் கூட தண்டனையிலிருந்து காப்பாற்றி மன்னிப்பை விட பெரிய தண்டனை கிடையாது என மதுமதி கூறிவிட்டாளாம். அதனால் அந்த நல்ல பெண் மதுமதிக்கு நீ செய்தது பச்சை துரோகம் என்று என் அம்மா சொன்னார்கள்! அது எவ்வளவு உண்மை என்று இப்பொழுது எனக்குப் புரிகிறது! என்னை மன்னித்து விடு!''

''ச்சூ! விடு!''

''ஹேய் கண்ணம்மா! என்ன பக்கத்தில் நான் இருக்கும் பொழுது கனவு காண்கிறாய்?''

''ஒன்றுமில்லை.''

''என்னருமை மச்சானுக்கு பரிசு எதுவும் கிடையாதா?'' என வருண் மதுவை சீண்ட,

''என்ன வேண்டும்?''

**''உச்சிதனை முகந்தால் கருவம், ஓங்கி வளருதடி!**
**மெச்சியுனையூரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி!''**

என கொஞ்ச உன்னைப் போல ஒரு சின்ன கண்ணம்மா வேண்டும்!'' என ரிஷி கூற,

''என்ன அண்ணா, அண்ணியிடம் தனியாக கூற வேண்டியதை இப்படி மேடையில் கூறுகிறாய்?''

மதுமதி சிவந்து போனாள். அடடா! அவள் தான் எத்தனை அழகு!

ட்விட்டரில் ‘அம்மம்மா! நான் சந்தோஷமாய் இருக்கிறேன். நன்றி’ என எழுதினாள் மதுமதி.

‘மதுகுட்டிக்கு என் ஆசீர்வாதங்கள். வாழ்க வளமுடன் என உடன் ட்விட்டரில் பதில் வர திரும்பிப் பார்த்தாள்.

மடிகணினியை வைத்துவிட்டு அவளருகில் மன நிறைந்த புன்னகையுடன் வந்தான் அவள் துருவ்.